Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16+24 | விலை 40 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :287 ஆவணி 27 ஆம் நாள் சனிக்கிழமை 12 செப்ரெம்பர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## தெல்லிப்பழையில் வீடு புகுந்து தாக்குதல்

யாழ்ப்பாணம், செப். 12

தெல்லிப்பழை, துர்க்காபுரத்தில் வீடொன்றுக்குள் புகுந்த கும்பல் வீட்டிலிருந்த பொருள்களை அடித்து நொருக்கி விட்டுத் தப்பிச் சென்றுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 15

# 20ஆவது திருத்தச்சட்டமூலம் 22இல் சபையில் முன்வைப்பு

## நீதிமன்றத்தைநாட பல அமைப்புகள் முடிவு

கொழும்பு, செப்ரெம்பர் 12

அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டமூலம் எதிர்வரும் 22ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என அறியமுடிகின்றது.

அரசமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டத்தை இல்லாதொழித்து, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி வசம் அதிகாரங்களைக் குவிக்கும் விதத்திலான '20'ஆவது திருத்தச்சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. 15

## ஹெரோய்னுடன் ஐவர் கைது!

யாழ்ப்பாணம், செப். 12

யாழ்ப்பாணம் கோண்டாவில் மேற்குப்பகுதியில் ஹெரோய்ன் போதைப் பொருளை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கோப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து கோண்டாவில் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனையிலேயே மேற்படி நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள் 15

## மக்கள் போராட்டத்தின் மூலம் அரசைக் கவிழ்த்தே தீருவோம்

### சூளுரைக்கின்றார் சஜித்



கொழும்பு, செப். 12

'மக்கள் போராட்டத்தின் மூலம் ராஜபக்ச அரசின் கொட்டத்தை அடக்குவோம்; ஆட்சியைக் கவிழ்த்தே தீருவோம்' இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று 15

முச்சந்தி முரளி



“பதவியை மற்றவை பிடுங்கமுதல் தானே விலகிறது புத்திசாலித்தனம் கண்டியளோ!”

## 20ஐ திருத்தமின்றி நிறைவேற்றுவோம்

### மஹிந்த விடாப்பிடி

கொழும்பு, செப். 12

'அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அதனைத்திருத்தமின்றி நிறைவேற்றுவோம். 15

### தமிழ் அரசுவின்

## பொதுச்செயலர் பதவியை துறந்தார் துரைராசசிங்கம்

*தேசியப் பட்டியல் சூழ்ச்சி விவகாரத்தில் கட்சிக்குள் எழுந்த எதிர்ப்பா காரணம்?*



மட்டக்களப்பு, செப். 12

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலர் கி.துரைராசசிங்கம் தனது பதவியைத் துறப்பதாக கட்சியின் தலைவர் சோ.சேனாதிராசா மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் 15

## தவறான முடிவெடுத்த யுவதி உயிரிழப்பு!

கிளிநொச்சி, செப். 12

கிளிநொச்சி - அம்பாள் நகரைச் சேர்ந்த 15 வயதான யுவதியொருவர் தவ 15

### இலங்கையின்

## பொறுப்பற்ற தன்மையே நீதிக்குத் தடையானது!!

*ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் குற்றச்சாட்டு*

கொழும்பு, செப். 12

இலங்கையின் இடைமாறுகாலகட்ட நீதிப் பொறிமுறைக்கு பெரும் தடையாக இருப்பது அரசின் அக்கறையீனமே என ஐ.நா மனித உரிமைகள் 15

## சபாநாயகர் செயல் அரசமைப்பு மீறலே

### 'குட்டிமணியின்' கதையைக்கூறி சபையில் சஜித் கடும் வாதம்

கொழும்பு, செப். 12

தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஒருவருக்கு நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் 15

## மயானத்தில் மருத்துவக் கழிவுகள் ஏ-9 வீதியை மறித்துப் போராட்டம்!



யாழ்ப்பாணம், செப். 12

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மருத்துவக் கழிவுகள் நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட செம்மணி சிந்துபாத்தி இந்து மயானத்தில் கொட்டப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து உள்ளூராட்சி மன்ற மக்கள் 15

# இந்தியாவை தூக்கியெறிந்துவிட்டு 13ஆவது திருத்தத்தை உடன் நீக்குக!

## அரசுக்கு அழுத்தம் கொடுக்கின்றது தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியம்

கொழும்பு, செப்.12

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவதற்கு இந்தியாவின் அனுமதியைப் பெறவேண்டியதில்லை. சுயாதீன இறைமைமிக்க நாடு என்ற அடிப்படையில் இலங்கையால் அதனைச் செய்யமுடியும் என்று கடும் போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புகளின் கூட்டணியான 'தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியம்' தெரிவித்துள்ளது.

இந்தியாவின் அனுமதியின்றி அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை நீக்கமுடியாது என்று தமிழ் அரசியல்வாதிகளால் விடுக்கப்படும் அறிவிப்பு தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே மேற்படி ஒன்றியத்தின் இணைப்பாளரும், தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவருமான கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

13ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்தினால் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உத்தரவாதத்தை இந்தியா வழங்கியது. ஆனால், அந்த உறுதிமொழி மீறப்பட்டது. எனவே, மீறப்பட்டதொரு உடன்படிக்கையாகவே 13 இருக்கின்றது.

இலங்கை நாடாளுமன்றமே சட்டம் இயற்றும் சபை. அதன் ஊடாக 13ஐ மாற்றலாம். இந்தியாவின் அனுமதி எல்லாம் வேண்டியதில்லை. புதியதொரு அரசமைப்பைக் கொண்டுவந்தால் 13, 19 என்று எவ்வித பிரச்சினையும் ஏற்படாது. எமது நாட்டுக்கே உரிய அரசமைப்பை உருவாக்கக்கூடிய சூழ்நிலை தற்போது உதயமாகியுள்ளது. 1972இல் சிறிமா புதிய அரசமைப்பைக் கொண்டு வந்தபோது முன்பிருந்த விடயங்கள் பற்றி கவனம் செலுத்தவில்லை. அதனால்தான் புதியதொரு அரசமைப்பு ஊடாக மேற்படி பணிகளை முன்னெடுக்குமாறு கோருகின்றோம், என்றார்.

(மஓ,5,44)

# சடலத்தை நல்லடக்கம் செய்ய கல்லறை அமைத்ததால் குழப்பம்

## மன்னாரில் சம்பவம்

மன்னார். செப். 12

மன்னார் பெரிய கரிசலில் கத்தோலிக்க சேமக்காலையில் மூதாட்டி ஒருவரின் சடலத்தை அடக்கம் செய்யும் நோக்குடன் அதற்குக் கல்லறை கட்ட முற்பட்டபோது இரு சமூகங்களுக்கிடையில் முறுகல் நிலை தோன்றியுள்ளதால் காலை முதல் நண்பகல் வரை அப்பகுதியில் சற்று பதற்றநிலை தோன்றியது. மன்னார் பொலிஸார் மற்றும் தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்கள அதிகாரி மற்றும் மன்னார் பிரதேச செயலக அதிகாரிகளின் வருகையைத் தொடர்ந்து பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

மன்னார் சின்னக்கரிசல் பகுதியில் அ.ஞானப்பு (வயது 80) என்ற மூதாட்டி நேற்று முன்தினம் வியாழக்கிழமை இறந்துள்ளார். இவரை நல்லடக்கம் செய்வதற்காக சுமார் முன்னூறு வருடங்கள் பழமைவாய்ந்த கரிசல் கத்தோலிக்க சேமக்காலையில் நேற்றுக் காலை கல்லறை அமைத்து மூதாட்டியை நல்லடக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அப்பொழுது அங்கு வாழும் சிலர் அவ் இடத்தில் கத்தோலிக்கரை அடக்கம் செய்ய, கட்டடம் அமைக்க முடியாது என்று தடைவிதித்தனர். கத்தோலிக்க சேமக்காலை இடமானது தொல்பொருள் திணைக்களத்துக்கு சொந்தமானது, அவர்களின் அனுமதியின்றி அங்கு எதையும் செய்வதற்கு அனுமதிக்க மாட்டோம் எனக் கோரியே அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். சம்பவ இடத்துக்குச் சென்ற மன்னார் உதவி பொலிஸ் அத்தியட்சகர், மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, மன்னார் தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்கள அதிகாரி, பிரதேச செயலகத்தின் அதிகாரிகள் மற்றும் தோட்டவெளி பங்குத் தந்தை ஆகியோர் இரு தரப்பினரையும் சமரசம் செய்தனர். குறித்த நிலம் தொல்பொருள் திணைக்களத்துக்கு உரியது அல்ல என்று அதிகாரிகள் தெரிவித்ததை அடுத்து பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

கல்லறை கட்டுமானப்பணி உடன் ஆரம்பிக்கப்பட்டுடன் மூதாட்டியின் சடலம் அவ்விடத்தில் அடக்கம் செய்வதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன. (ப-60)




தேவை

வடிவமைப்பாளர்
Graphic designers

Indesign
Adobe photoshop
Corel draw
என்பவற்றில்
வடிவமைப்பு அனுபவம்
கொண்டவர்களுக்கு
உடனடி வாய்ப்பு

IT Administrator

Manage electronic equipment
Install network and computer system
Maintain, repair and upgrade the operating system including hardware and software
Monitor the performance of existing computer systems and IT infrastructures

முன்னனுபவம் விரும்பத்தக்கது

நீங்கள் பொருத்தமானவரா?
சுயவிவரக் கோவையை
உடனே அனுப்புங்கள்.



சுயவிவரக் கோவைகளை அனுப்ப வேண்டிய முகவரி
மனிதவள முகாமையாளர்,
361, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
info@uthayan.com





# கழிவுகள் சேகரிப்பு நிலையம் சாவகச்சேரியில் திறப்பு

சாவகச்சேரி, செப்.12

உக்காத கழிவுகள் சேகரிப்பு வள நிலையம் நேற்றுமுன்தினம் சாவகச்சேரியில் திறந்து வைக்கப்பட்டது. இந்த வள நிலையத்தினை சாவகச்சேரி நகரசபையின் தவிசாளர் சிவமங்கை இராமநாதன் திறந்து வைத்தார்.

பின்லாந்து, இந்தோனேசியா, இலங்கை நாடுகளின் நிதிப் பங்களிப்புடன் வேள்ட் விஷன் நிறுவனத்தினால், வத்தளை, யா.எல, சாவகச்சேரி ஆகிய இடங்களிலேயே இந்த நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நேற்றுமுன்தினம் நிலையத்துக்கு உக்காத கழிவுப் பொருள்களை வழங்கியவர்களுக்கு அதற்கான அட்டைகள் வழங்கப்பட்டன.

மக்கள் தமது காணிகளில், வீடுகளில் சேரும் கடதாசிகள் பொலித்தீன்கள், பாவனையற்ற பிளாஸ்டிக் பொருள்கள், வெற்றுக் கண்ணாடிப் போத்தல்கள் மற்றும் மென்பானம் மற்றும் குடிதண்ணீர்ப் போத்தல்கள், காட்போட் அட்டைகள் போன்றவற்றை இங்கு வழங்கலாம் எனவும், உக்காத கழிவுப் பொருள்களை வழங்குபவருக்கு அதற்குரிய ஆயிரம் சதுரங்கள் அடங்கிய அட்டை வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த அட்டையின் சதுரங்கள் முழுமையாகப் பூர்த்தியடைந்ததும் அவரது வங்கிக் கணக்குக்கு ஆயிரம் ரூபா வழங்கப்படும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-9,159)

## நிலையான அபிவிருத்தி நோக்கங்கள்: அறிக்கை பிரதமரிடம்

கொழும்பு, செப்.12

நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் குறித்த ஐவர் கொண்ட குழுவின் அறிக்கை, பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் உறுப்பினர்களினால் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் வைத்தே இந்த அறிக்கை பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் கையளிக்கப்பட்டது. வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனவின் ஆலோசனையின் பேரில் 2030 ஆம் ஆண்டு உலகளாவிய நிலையான அபிவிருத்தி இலக்கை கருத்திற்கொண்டு, இலங்கையின் நிலையான அபிவிருத்தி நோக்கங்களை ஆராய்வதற்கு இந்த ஐவர் கொண்ட குழு நியமிக்கப்பட்டிருந்தது. வெளிவிவகார அமைச்சின் ஆலோசனையின் பேரில் நியமிக்கப்பட்ட இந்த ஐவர் கொண்ட குழுவின் தலைவராக வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளர் அஹமட் ஜாவிட் செயற்படுகின்றார். (ற-இ)



## மீள்சுழற்சிக்கு 1,000போத்தல்கள் சாவகச்சேரி வாசி கையளிப்பு

சாவகச்சேரி, செப். 12

உக்காத பொருள்களை மீள்சுழற்சிக்காக கொள்வனவு செய்யும் நடவடிக்கை சாவகச்சேரி நகரசபையினால் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது இதன்போது ஆயிரத்துக்கும் மேற்பட்ட வெற்றுப் பிளாஸ்டிக் தண்ணீர்ப் போத்தல்களை ஒருவர் கையளித்துள்ளார். இதனை அங்குள்ள இயந்திரத்தினால் நசித்து நிறை மேற்கொண்ட பின்னர் அவருக்கு உரிய அட்டையில் பெறுமதிக்கான புள்ளிகள் இடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

மக்கள் தமது காணிகள் மற்றும் வீடுகளில் காணப்படும் உக்காத பொருள்களான வெற்றுப் போத்தல்கள், மதுபான ரின்கள், பாவனைக்கு உதவாத பிளாஸ்டிக் பொருள்கள், தகரங்கள், ஒருநாள் குவளைகள் போன்றவற்றை ஒப்படைத்து அட்டையினைப் பெற்று தொடர்ந்து உக்காத பொருள்களை ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலேயே இந்த நபர் இதனைக் கையளித்துள்ளார். (ற-9)

# வீதி புனரமைப்பு பணிகள் ஆரம்பம்

மட்டக்களப்பு, செப்.12

மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட புதுநகர் 6ஆம் குறுக்கு வீதியை புனரமைக்கும் பணிகள் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மக்களின் வரிப்பணத்தினை மக்களுக்கே கொண்டு செல்வோம் எனும் கருத்திட்டத்தில் இவ் வீதி கொங்றீட் வீதியாக செப்பனிடப்படவுள்ளது. மாநகர சபையின் 2020ஆம் ஆண்டுக்கான பாதீட்டு நிதி ஒதுக்கீட்டின் ஊடாக 400 மீற்றர் நீளத்தில் மேற்கொள்ளப்படவுள்ள இந்த வீதியின் அபிவிருத்திப் பணிகளை மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன், மாநகர சபையின் உறுப்பினர் இரா.அசோக், மாநகர பொறியியலாளர் சித்திரதேவி லிங்கேஸ்வரன் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர். (வ-இ)







# பாரதியாருக்கு நினைவேந்தல்

யாழ்ப்பாணம்,செப்.12

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 99 ஆவது ஆண்டு நினைவு தினம், நல்லூரில் அமைந்துள்ள பாரதியாரின் நினைவுத் தூபியில் நேற்று வெள்ளிக்கிழமை கடைப்பிடிக்கப்பட்டது.

இந்திய துணைத் தூதுவர் கே.பாலசந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பாரதியாரின் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதுடன், மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், முன்னாள் வடக்கு மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன், யாழ்.மாநகர முதல்வர் இமானுவேல் ஆனல்ட், வடக்கு அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (க-20)

## வவுனியாவில்.....






வவுனியா,செப்.12

மகாகவி பாரதியாரின் 99ஆவது நினைவு தின நிகழ்வு வவுனியா நகரசபையின் உபதலைவர் சு.குமாரசாமி தலைமையில் குருமன்காட்டிலுள்ள அவரது உருவச்சிலைக்கு முன்பாக இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பாரதியாரின் உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து பாரதியாரின் தமிழ் பற்று மற்றும் சுதந்திர வேட்கை தொடர்பான கருத்துரைகளை மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.ஸ்ரீனிவாசன் பகிர்ந்துகொண்டார். (வ-110)

## பணி நயப்பு நிகழ்வு

கரணவாய், செப்.12
உடுப்பிட்டி அ.மி. கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற முன்னாள் அதிபர். கிருஷ்ணகுமாரின் பணி நயப்பு நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கல்லூரியின் திறந்த வெளியரங்கில் இடம்பெறவுள்ளது.
கல்லூரியின் பணியாளர் நலன் புரிச் சங்கத் தலைவர் க.தர்மதேவன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் வரவேற்புரையை கல்லூரியின் ஆசிரியை திருமதி ஞா.வாசுகியும் ஆசியுரைகளை வல்லை முத்துமாரியம்மன் பிரதம குரு சிவஸ்ரீ தண்டாயுதபாணி தேசிக குருக்கள் மற்றும் உடுப்பிட்டி தென்னிந்திய திருச்சபை பங்குத் தந்தை செ.துரைரத்தினம் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (ப-108)

## ஓய்வு பெறுகிறார் கிராம அலுவலர்

சாவகச்சேரி,செப்.12
தென்மராட்சி பிரதேச செயலக பிரிவில் கிராம அலுவலராகக் கடமையாற்றிய வீரகத்தி சிவசுப்பிரமணியம் தனது 38 வருட அரச சேவையிலிருந்து இன்று இளைப்பாற உள்ளார்.
கிராம அலுவலராக நியமனம் பெற்ற இவர் தென்மராட்சி, தீவகம் போன்ற பிரதேச செயலக பிரிவுகளில் கடமையாற்றி. அதிசிறப்புத் தரத்திற்கு பதவியுயர்வு பெற்று தீவகப் பிரதேச செயலகத்திலும், அதன் பின்னர் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கடந்த மூன்று வருடங்கள் கடமையாற்றியுள்ளார்.
இவரது சேவையைப் பாராட்டி பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தினர் சேவை நலன் பாராட்டு விழாவை நடத்தவுள்ளனர். (ப-9)




## இடரால் பாதிக்கப்பட்ட 11 பேருக்கு காசோலை

முல்லைத்தீவு, செப்.12
கடும் காற்று மற்றும் மழை காரணமாக பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட 11 குடும்பங்களுக்கு முற்பணக் கொடுப்பனவு மாவட்ட தேசிய இடர்நிவாரண சேவைகள் நிலையத்தால் வழங்கப்பட்டுள்ளது.
மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் ஏற்பாட்டில் கடந்த புதன்கிழமை காலை கரைதுறைப்பற்று பிரதேச செயலக பயிற்சி மண்டபத்தில் பிரதேச செயலாளர் திருமதி.க.உமாமகள் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.
மாவட்டச் செயலர் க.விமலநாதன் கலந்துகொண்டு முள்ளிவாய்க்கால் மேற்கைச் சேர்ந்த 9 குடும்பங்கள், முள்ளிவாய்க்கால் கிழக்கு மற்றும் வடக்கைச் சேர்ந்த தலா ஒவ்வொரு குடும்பங்களுமாக பாதிக்கப்பட்ட 11 வீடுகளுக்கான காசோலைகளை வீட்டு உரிமையாளர்களிடம் வழங்கினார். (ப-222)

### இடமாற்றத்தை எதிர்த்து

# கொடிகாமம் சந்தை அங்காடி வியாபாரிகள் கடையடைப்பு

கொடிகாமம் செப் 12
கொடிகாமம் பொதுச் சந்தையில் அங்காடி வியாபாரம் இடமாற்றம் செய்யப்பட்டதை அடுத்து பாதிப்புக்குள்ளான அங்காடி வியாபாரிகள் நேற்று தமது அங்காடி நிலையங்களைப் பூட்டி கடையடைப்பில் ஈடுபட்டனர்.



இது தொடர்பில் வியாபாரிகள் தெரிவித்ததாவது;
கொரோனா நோய் ஆரம்பித்த பின்னர் எமது அங்காடி வியாபாரம் இடமாற்றம் செய்து நான்கு மாதங்கள் ஆகிவிட்டன. ஆனால் எமக்கு ஒதுக்கித் தரப்பட்ட இடத்தில் வியாபாரம் செய்ய முடியாதுள்ளது. எமக்கென ஒதுக்கப்பட்ட இடம் சுகாதாரமற்ற நிலையில் உள்ளது. நாம் முதலீடுகளைச் செய்த போதிலும் அதற்கான வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது.
இதனால் எமது குடும்பங்களின் வாழ்வாதாரங்களை முன்னெடுக்க முடியாதுள்ளது. இது தொடர்பாகப் பல தடவைகள் நேரடியாகக் கதைத்த போது பிரச்சினைகளைச் சரி செய்வதாக பிரதேச சபையினால் தெரிவிக்கப்பட்டும் இதுவரை இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாத காரணத்தால் நாம் எல்லோரும் கடை அடைப்பில் ஈடுபட்டு பிரதேசசபை செயலாளரிடம் கடிதத்தை சமர்ப்பித்துள்ளோம். தவிசாளருடன் கலந்துரையாடிய பின் நாளை மறுதினம் திங்கட்கிழமை அங்காடி வியாபாரிகளை அழைத்து கலந்துரையாடி தீர்வு தருவதென செயலாளர் உத்தியோகத்தர்களூடாக எமக்குத் தகவல் வழங்கியுள்ளார். தொடர்ந்து நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொல்கிறார்கள் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை.
திங்கட்கிழமையும் இதற்கான தீர்வு தரவில்லை என்றால் கொரோனாவுக்கு முன்னர், நாம் வியா பாரம் செய்த தேங்காய்ச் சந்தை, மீன் சந்தை மற்றும் சந்தை நுழைவாயில் அருகாமை ஆகிய பகுதிகளில் எமது அங்காடி வியாபா ரத்தை மேற் கொள்வோம் - என்றனர். (ப-159)

## கலந்துரையாடல்

சாவகச்சேரி,செப்.12
இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தால் கொரோனாத் தொற்றுக் காலத்தில் மாநகர சபைகள் மற்றும் நகர சபைகள் எதிர்நோக்கிய சவால்கள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நடத்தப்படவுள்ளது.
ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட பங்களிப்பில் எதிர்வரும் 28 ஆம் திகதி கண்டியில் இந்தக் கலந்துரையாடலை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
கலந்துரையாடலில் வடக்கு,கிழக்கு, ஊவா மற்றும். வடமத்திய மாகாணங்களின், மாநகர சபைகள் நகர சபைகளின் முதல்வர்கள் தவிசாளர்கள், ஆணையாளர்கள் மற்றும் செயலாளர்கள் அழைக்கப்பட்டுள்ளனர் என்று சம்மேளனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஹேமந்தி குணசேகர தெரிவித்தார். (ஐ-9)

## உறுப்பினர்களின் தீர்மானத்தை மீறியுள்ளது மன்னார் நகரசபை

### அதன் உறுப்பினர் சபா மைக்கல் கொலின் குற்றச்சாட்டு

மன்னார், செப்.12
மன்னார் நகர சபையின் கடந்த 30 ஆவது அமர்வின் போது நகர சபைக்குட்பட்ட இடங்களில் அத்துமீறி அமைக்கப்பட்டுள்ள கட்டடங்களை அகற்றக் கோரி சபையின் உறுப்பினர்களால் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதும் அந்தத் தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று குற்றஞ்சாட்டிய நகர சபை உறுப்பினர் சபா மைக்கல் கொலின் நகர சபைக்கு உட்பட்ட பல்வேறு வர்த்தகர்கள், மன்னார் நகர சபையின் அனுமதியின்றித் தமது வர்த்தக நிலையங்களில் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டுள்ளனர் என்றும் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
மேலும் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த அன்றாட வாழ்வாதாரத்திற்கு என சிறு வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பாமர மக்களின் வியாபாரத் தளங்களை அகற்றும் செயற்பாட்டில் ஈடுபடும் மன்னார் நகர சபை மன்னார் மாவட்டத்தைச் சேராத செல்வந்தர்களுக்கு தன்னிச்சையாகக் கடைகளை வழங்கிறது, இவ்வாறான தன்னிச்சையான செயற்பாடுகள் தொடரும் பட்சத்தில் மன்னார் நகர சபையின் அடுத்த அமர்வில் குறித்த விடயம் தொடர்பாக சபையில் தெரிவித்து நாங்கள் வெளிநடப்புச் செய்வோம். நகர சபை பிரிவில் சபை அனுமதியின்றி அதிகளவான கடைகள் வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கும், தனி நபர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. இது தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் - என்றார். (ப-56)

## வீட்டின் மீது தாக்குதல்: சீனியர் லேனில் சம்பவம்

யாழ்ப்பாணம், செப். 12
யாழ்ப்பாணம் சீனியர் லேன் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் இனந்தெரியாத நபர்களினால் வீட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த 4 பேர் கொண்ட குழுத் தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளது. தாக்குதல் நடத்தப்பட்ட போது வீட்டில் மூதாட்டி ஒருவர் மாத்திரமே இருந்துள்ளார். வீட்டின் ஜன்னல்கள் சேதப்படுத்தப்பட்டமையுடன், தொலைக்காட்சிப் பெட்டிக்கும், வீட்டில் நின்றிருந்த மரங்களுக்கும் தீ வைக்கப்பட்டுள்ளது.
சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேற்றிரவு 9 மணியளவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என வீட்டின் உரிமையாளர் தெரிவித்தார். (ஓ.5,25,159)

## வரணி மருத்துவமனை விடுதிகளை திறவுங்கள்

### பிரதேச மக்கள் கோரிக்கை

தென்மராட்சி, செப். 12
வரணிப் பிரதேச மருத்துவமனையில் மூடப்பட்டுள்ள விடுதிகளை மீண்டும் திறக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வரணிப் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.
வரணிப் பிரதேச மருத்துவமனையின் பொறுப்பதிகாரியாக மருத்துவர் ப.அச்சுதன் பொறுப்பேற்ற பின்னர் மருத்துவமனையில் பல்வேறு கிளினிக்குகளை ஆரம்பித்து மருத்துவ நிபுணர்கள் மூலம் சிகிச்சை வழங்கி வருகின்றார்.
இதனால் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் அங்கு சிகிச்சைகளைப் பெற முடிகிறது. இதனால், பிரதேச மக்கள் சாவகச்சேரி மற்றும் மந்திகை மருத்துவமனைகளுக்குச் செல்கின்றமை பெருமளவில் குறைந்துள்ளது. ஊரில் சிறப்பான மருத்துவ சேவை மக்களுக்குக் கிடைக்கின்ற போதிலும் அங்குள்ள விடுதிகள் மூடப்பட்டு இருப்பதால் விடுதியில் தங்கிச் சிகிச்சை பெற வேண்டிய நோயாளர்கள் சாவகச்சேரி மற்றும் மந்திகை மருத்துவமனைகளுக்குச் செல்ல வேண்டியுள்ளது. இதனால் மூடப்பட்டுள்ள விடுதிகளை மீண்டும் திறந்து பிரதேச மக்கள் ஊரில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.
எனினும், மருத்துவமனையில் இரவுக் கடமைக்கு மருத்துவர் இல்லை. விடுதிகள் செயற்படத் தொடங்கினால் 24 மணித்தியாலங்களுக்குத் தாதியர் சேவை தேவை. குடும்ப நல சேவையாளர்கள் மூலம் நோயாளர்களுக்கு மருந்துகள் வழங்க முடியாது. எனவே மருத்துவர்கள் மற்றும் தாதியர்களை வழங்கினால் உடனடியாக விடுதிகளை ஆரம்பித்து நோயாளர்களுக்குச் சேவைகளை வழங்க முடியுமென மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன. (ப-9)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# உலர வைக்கப்பட்ட 3,128 முகக் கவசங்கள்

## பொது சுகாதாரப் பரிசோதகரால் பறிமுதல்

**கொழும்பு,செப்.12**

**கொழும்பு சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்துக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், மீண்டும் பயன்படுத்த முடியாத 3 ஆயிரத்து 128 முகக்கவசங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.**



கொழும்பு, கோட்டை நான்காம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள கட்டடமொன்றில் முகக் கவசங்கள் உலர வைக்கப்பட்டிருந்தன.

புறக்கோட்டை பொலிஸாருடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், ஆயிரக்கணக்கான முகக் கவசங்கள் உலர வைக்கப் பட்டிருந்தன என்று கோட்டை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எம்.பீ.லால் தெரிவித்தார்.

மழையில் நனைத்த காரணத்தால் முகக் கவசங்களை உலர வைத்ததாக உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

எனினும், சந்தேகத்தின் பேரில் புறக்கோட்டை பொலிஸ் நிலைய அதிகாரிகளின் உதவியுடன் உரிமையாளர் கைது செய்யப்பட்டார்.

முகக்கவசங்கள் சுகாதார அதிகாரி அலுவலகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன. (க-இ)

# பேரினவாதத் தீ!

இனத் துவேசக் கருத்துக்களும், இனக் குரோதங்களும், இனவாதச் சீண்டல்களும் இலங்கையில் நாளுக்குநாள் வேகமெடுக்கின்றன. வடக்கு - கிழக்கு தொடர்பான காழ்ப்புணர்வுக் கருத்துக்கள் கோத்தாபய அரசின் உறுப்பினர்களால் அள்ளி வீசப்படுவது தொடர்கதையாகிக் கொண்டிருக்கின்றது. இதன் தொடர்ச்சியாக, வடக்கில் உள்ள மக்கள் நாகரிகமயப்படாதவர்கள் மற்றும் கலாசாரம் அற்றவர்கள் என்று பொரிந்து தள்ளியுள்ளார் இராஜாங்க அமைச்சர் ரியல் அட்மிரல் சரத் வீரசேகர.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற சுங்கம், துறைமுகம் மற்றும் உற்பத்தி வரித் திருத்தங்கள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். வடக்கிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் எந்த நேரத்திலும் சிங்கள பௌத்த மக்கள் தொடர்பாக மற்றும் பௌத்த பிக்குகளுக்கு எதிரான கருத்துக்களையே கூறி வருகின்றார். பௌத்த பிக்கு ஒருவர் விவசாயம் செய்ய இடமளிக்கவில்லை என்று தெரிவித்துள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரனையும் ஒரு பிடிபிடித்துள்ளார் வீரசேகர.

நாடாளுமன்றத்தின் உறுப்பினர் என்ற வகையில், தான் சார்ந்த சமூகத்தின் பெருமைகளை மன்றில் முன்வைப்பதற்கு வீரசேகரவுக்கு முழு உரிமையும் உண்டு. விக்னேஸ்வரனின் கருத்துக்கள் தொடர்பில் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தவும் அவர் உரித்துடையவர். இதை மறுப்பதற்கில்லை. ஆனால், விக்னேஸ்வரன் என்ற தனிநபருக்குப் பதில் தருகின்றேன் என்ற போர்வையில் முழுத் தமிழ்த் தேசத்தின் மீதும் சேற்றை வாரி இறைப்பதையும் காறி உமிழ்வதையும் இம்மியளவும் ஏற்றுக்கொள்ள முடியாது. சிங்களவர்களின் பெருமையைப் பறைசாற்றுதல் என்பது வேறு, தமிழர்களைக் காறி உமிழ்வது என்பது வேறு. இரண்டும் ஒன்றென வீரசேகர தவறாகப் பொருள்கொண்டுள்ளார்.

தமிழர்களின் தொன்மையையும் நாகரிகத்தையும் வீரசேகரவோ அல்லது இலங்கை நாடாளுமன்றமோ தான் உறுதிப்படுத்த வேண்டும் என்ற எந்த அவசியமும் கிடையாது. இந்தத் தனித்தன்மைச்சிறப்புக்களை முழு உலகும் நன்கறியும். தமிழ்நாட்டின் கீழடியில் தற்போது மேற்கொள்ளப்பட்டுக்கொண்டிருக்கும் அகழ்வாய்வுகள் தமிழர்கள் எத்தகைய வரலாற்றுச் சிறப்பையும் தொன்மைத் தன்மையான நாகரிகத்தையும் கொண்டிருந்தனர் என்பதை தெட்டத்தெளிவாகப் புடம்போட்டுக் காட்டும் ஆகப்பிந்திய சான்றுகள். இந்த அகழ்வாய்வுகள் இலங்கையில் தமிழர்கள் செறிந்துவாழும் வடக்குக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையில் அக்காலத்தில் இருந்திருக்கக்கூடிய வர்த்தகத் தொடர்புகளையும் கட்டியம் சொல்கின்றன என்று தமிழகத்தின் முழுப்பெரும் அகழ்வாய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இவ்வாறிருக்கையில் வீரசேகரவின் கருத்தை தமிழர்கள் சட்டைசெய்யத் தேவையில்லை. அதேநேரம் எவ்விதத் துலங்கலையும் வெளிப்படுத்தாமல் கடந்து செல்வதும் தவறாகும்.

ஒரு நாட்டின் உயர் சபையில், முழு நாட்டுக்குமான மக்கள்பிரதிநிதிகள் என்றவகையில் கூடியிருப்பவர்கள் தத்தம் பொறுப்புக்களை உணர்ந்து செயற்பட வேண்டும். வாக்கு வங்கிகளை மட்டும் இலக்குவைத்து முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைத்து வில்லங்கத்துக்கு வேட்டையாடுவதால் எவருக்கும் எவ்விதப் பயனும் இல்லை. இவ்வாறான நகர்வுகள் செயற்பாடுகள் இலங்கையில் இன ஒற்றுமையையும் கலாசாரம் மற்றும் பண்பாடுசார் நெறிகளையும் குழிதோண்டிப் புதைப்பதாகவே அமையும். ஏற்கனவே இங்கு இடம்பெற்ற குருதிச் சகதி இன்னமும் முழுமையாகத் துடைக்கப்படவில்லை என்பது அனைவருக்கும் புரியட்டும். அதேநேரம் வடக்குத் தமிழர்கள் தம் தொன்மையை இலங்கைக்கு வெளியிலும் நிரூபிக்கலாம் என்பது வீரசேகரவுக்கும் உறைக்கட்டும்.

# '20' இல் திருத்தம் முன்வைக்கிறது சஜித்தின் பங்காளிக் கட்சி

கொழும்பு, செப். 12

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட வரைவு தொடர்பில் அரசிடம் முன்மொழிவை முன்வைப்பதற்கு சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் பங்காளிக் கட்சியான தமிழ் முற்போக்கு கூட்டணி தீர்மானித்துள்ளது. அரசமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டத்தை இல்லாதொழிப்பதற்காக அரசால் முன்வைக்கப்பட்டுள்ள '20' ஆவது திருத்தச்சட்ட வரைவு தொடர்பில் ஆராய்ந்துவரும் தமிழ் முற்போக்கு கூட்டணி, அது தொடர்பில் மலையக புத்திஜீவிகள் மற்றும் சட்டநிபுணர்களின் ஆலோசனைகளையும் உள்வாங்கி வருகின்றது.

'20' எவ்வாறு அமையவேண்டும், அதில் எவ்வாறான மாற்றங்கள் கொண்டுவரப்படவேண்டும் போன்ற விடயங்களையே கூட்டணி, முன்மொழிவாக முன்வைக்கவுள்ளது.

அதேவேளை, மலையக மக்கள் தொடர்பில் சில விசேட கோரிக்கைகளையும் அரசிடம் முற்போக்கு கூட்டணி முன்வைக்கவுள்ளது. இவற்றுக்கு அரசு வழங்கும் பதில்களை அடிப்படையாகக்கொண்டே '20' தொடர்பில் கூட்டணியின் அரசியல் உயர்பீடம்கூடி இறுதி முடிவை எடுக்கும் என்று அக்கட்சி வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. (ஒ.5,44)

# ஆலயத்தில் திருட்டு

யாழ்ப்பாணம், செப். 12

யாழ்.நெடுங்குளத்தில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை திருட்டு இடம்பெற்றுள்ளது.

ஆலயத்தின் பொருள்களை களஞ்சியப்படுத்தி வைக்கும் அறையை உடைத்த திருடர்கள் பொருள்களை களவாடிச் சென்றுள்ளனர் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது என யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்தனர். (ஒ.5,159)

# நாடாளுமன்ற பார்வையாளர் பகுதிக்கு பூட்டு

கொழும்பு,செப்.12

நாடாளுமன்ற பார்வையாளர்கள் பகுதியை தற்காலிகமாக மூடுவதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

கொவிட் 19 அச்சம் காரணமாக சுகாதார அதிகாரிகள் பிறப்பித்த வழிகாட்டல்களுக்கு அமைவாக, மேலதிக அறிவிப்பு வரும் வரையில் பார்வையாளர்கள் பகுதியை மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

# குண்டுச் சத்தங்களால் அதிர்ந்தது யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம், செப். 12

பழுந்தடைந்த ஷெல்களை இராணுவத்தினர் நேற்று மதியம் வெடிக்கச் செய்தனர். இதன் காரணமாக யாழ்ப்பாண நகரப் பகுதிகளில் அதிர்வுடன் பெரும் சத்தங்கள் கேட்டன. திடீர் சத்தம் காரணமாக பொதுமக்கள் அதிர்ச்சியடைந்தனர்.

அராலிப் பகுதியில் கொப்பேகடுவ சிலைக்கு அண்மையாகவுள்ள வெளியில் வைத்து, மதியம் ஒரு மணியளவில் இராணுவத்தினர் இவற்றை வெடிக்கச் செய்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

# கனடா முதலீட்டாளர்கள் மஹிந்தவுடன் சந்திப்பு

கொழும்பு,செப்.12

கனடா தமிழ் முதலீட்டாளர்கள், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை, அலரிமாளிகையில் நேற்றுச் சந்தித்தனர். வடக்கு, கிழக்கில் இருக்கக்கூடிய முதலீடுகளை ஊக்குவித்தல் மற்றும் மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நோக்குடன் சந்திப்பு இடம்பெற்றது.



சந்திப்பில் கனடா முதலீட்டாளர்களான சுகந்தன் சண்முகநாதன் மற்றும் சதீஸ் ராஜலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பனை அபிவிருத்தி நிறுவனத்துடன் இணைந்து சில வேலைத்திட்டங்களை செய்து வரக்கூடிய, இரண்டு முதலீட்டாளர்களும், வடக்கு, கிழக்கு மக்களை தொழில் ரீதியாக உள்ளவாங்கிய மைக்குப் பிரதமர் பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

"வடக்கு கிழக்குப் பகுதியில் தங்களின் முதலீடுகளை ஊக்கப்படுத்தி, அங்கு இருக்கக்கூடிய மக்களுக்குத் தொழில் வாய்ப்புகளை அதிகரித்துக் கொடுப்பதனூடாக, அந்தப் பகுதிகளில் தனியார் நிறுவனங்களை வெகுவிரைவில் அதிகரிக்க வேண்டும். அதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவேன்" என்று பிரதமர் உறுதியளித்தார் என்று ஊடகப்பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# வீட்டுத் திட்டத்தில் அமைக்கப்பட்ட 2,681 வீடுகள் முழுமைபெறவில்லை

## நிதியை வழங்குமாறு பயனாளிகள் கோரிக்கை

வவுனியா,செப்.12

**கடந்த ஆட்சிக்காலத்தில் வீடமைப்பு நிர்மாண அமைச்சராக இருந்த சஜித் பிரேமதாசவால் அனைவருக்கும் வீடு எனும் தொனிப்பொருளில் வவுனியாவில் முன்னெடுக்கப்பட்ட மாதிரி வீட்டுத்திட்டங்களில் 2ஆயிரத்து 681 வீடுகள் இன்னும் கட்டிமுடிக்கப்படாது அரைகுறையாக உள்ளன என்று பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்தனர்.**

வவுனியா மாவட்டத்தில் பிரதேச செயலக ரீதியாக கடந்த, 2017, 2018, 2019ஆம் ஆண்டுகளில் தேசிய வீடமைப்பு அதிகார சபையூடாக 140 மாதிரிக் கிராமங்களுக்காக 4ஆயிரத்து 167 பயனாளர்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கான வீடுகள் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. 2017ஆம் ஆண்டில், 15 மாதிரிக் கிராமங்களுக்கும், 2018ஆம் ஆண்டு 68 மாதிரிக் கிராமங்களுக்கும், 2019ஆம் ஆண்டு 58 மாதிரிக் கிராமங்களுக்கும் அடிக்கல் நடப்பட்டிருந்தது. இந்த நிலையில் அடிக்கல் நடப்பட்ட வீடுகளில் ஆயிரத்து 486 வீடுகளின் பணிகளே பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. 2ஆயிரத்து 681. வீடுகள் முழுமைப்படுத்தப்படாத நிலையில் உள்ளன. ஆட்சி மாற்றம் இடம்பெற்று மாதங்கள் பல கடந்த நிலையிலும் வீட்டுத்திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கான மிகுதிப் பணம் இதுவரை மக்களுக்கு வழங்கப்படவில்லை. முழுமைப்படுத்தப்படாத வீடுகளில் மழை காலங்களில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். எனவே மக்களின் நிலையைக் கருத்தில் கொண்டு முன்னைய அரசால் உருவாக்கப்பட்ட குறித்த திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பாக வீடமைப்பு அதிகாரசபையின் வவுனியா மாவட்ட முகாமையாளர் வி.எம்.வி.குருஸிடம் கேட்டபோது;

வவுனியாவில் இதுவரை பூர்த்தி செய்யப்படாத குறித்த மாதிரிக் கிராமங்களுக்கு அண்ணளவாக ஆயிரத்து 246 மில்லியன் ரூபா பணம் இன்னும் தேவைப்படுகிறது. இது தொடர்பாக தலைமை அலுவலகத்திற்குத் தெரியப்படுத்தியுள்ளோம். அவர்களால் நிதி வழங்கப்படும் பட்சத்தில் குறித்த திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்படும் -என்றார். (ப-110)

# வீட்டுத்திட்டப் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்க வேண்டும்

## மஸ்தான் எம்.பி. அவசர கோரிக்கை

வவுனியா, செப்.12

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டப் பிரச்சினைகள் உடன் நிவர்த்திக்கப்பட வேண்டும் என்று வீடமைப்பு இராஜாங்க அமைச்சரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் மஸ்தான் அவசர வேண்டுகோள் ஒன்றை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பில் அவரது ஊடகப் பிரிவு அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் உள்ளதாவது;

வன்னி மாவட்டத்தில் கடந்த காலங்களில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால்ஆரம்பிக்கப்பட்டு இதுவரை காலமும் பூரணப்படுத்தப்படாமலும் மற்றும் கொடுப்பனவுகள் பூரணமாக வழங்கப்படாமையினாலும் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள வீடுகள் தொடர்பான பிரச்சினைகளை வெகுவிரைவில் முடிவுக்கு கொண்டுவருவதற்கான அவசர வேலைத்திட்டமொன்று வன்னி மாவட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ளது. இந்த விடயம் தொடர்பாக ஆராய்வதற்கு கிராமிய வீடமைப்பு பிராந்திய உறவுகள் நடவடிக்கைகள் இராஜங்க அமைச்சர் இந்திக அனுருந்தவுடன் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் அண்மையில் கலந்துரையாடினார். இதன்போதே நாடாளுமன்ற உறுப்பினர் குறித்த கோரிக்கையை முன்வைத்தார்.

இதனடிப்படையில் அதனோடு தொடர்புபட்ட அனைத்துத் தகவல்களையும் தமக்கு அனுப்பி வைக்குமாறும், எதிர்வரும் நாள்களில் குறித்த பகுதிக்கு வருகை தந்து பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக இராஜாங்க அமைச்சர் உறுதியளித்துள்ளார். என்றுள்ளது. (ப)

# நாகதம்பிரான் ஆலய அலங்கார உற்சவம்

வடமராட்சி,செப்.12

நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவ திருவிழா எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 11 தினங்கள் இடம்பெறும் திருவிழாக்களில் எதிர்வரும் முதலாம் திகதி வியாழக்கிழமை பாம்பு திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை கப்பல் திருவிழாவும் இடம்பெறும்.

எதிர்வரும் 3 ஆம் திகதி சனிக்கிழமை வேட்டை திருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை சப்பறத் திருவிழாவும் இடம்பெறும்.

எதிர்வரும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை சமுத்திர தீர்த்தத் திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை கேணித் தீர்த்த திருவிழாவும் இடம்பெறும். அடியார்கள் அனைவரும் ஆசார சீலர்களாக சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடித்து ஆலயத்துக்கு வருகை தருமாறு பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (சு-159)

# சுகாதார நடைமுறைகளை மீறினால் தனிமைப்படுத்தல்

சாவகச்சேரி, செப் 12

கொரோனாத் தொற்று நோய் பரவாதிருக்க அரசால் விதிக்கப்பட்டிருந்த சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத அனைவரும் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள் ளது.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட ஆலயங்கள், திருமண மண்டபங்கள் போன்றவற்றில் சுகாதார மருத்துவ அறிக்கை பெறாத பலர் சமையலில் ஈடுபடுகின்றமை அவதானிக்கப் பட்ட நிலையிலேயே இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரப் பகுதியினர் கொரோனாத் தொற்று தொடர்பான நடைமுறைகளில் சிறிது தளர்வு வழங்கிய நிலையில் ஆலயத்தினரும் திருமண மண்டபங்களை நடத்துவோரும் முன்னெச்சரிக்கை யின்றிச் செயற்படுகின்றனர் என்று சுட்டிக்காட்டப்படுகிறது. ஆலயங்களில் அன்னதானம் வழங்குவோர் பந்தியில் அடியார்களை இருத்தி, உணவு வழங்குவதைத் தவிர்க்குமாறும் கூடுமானவரை. பார்சல் கட்டி அடியார்களுக்கு வழங்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர் அவ்வாறே திரு மண மண்டபங்களிலும் சமூக இடைவெளிகளை கடைப்பிடிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இதனை மீறி தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டால் பங்குபற்றும் அனைவரும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-9)




வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் நானாட்டான் பிரதேச செயலகம் ஏற்பாடு செய்த திருவள்ளுவர் விழா நேற்றுமுன்தினம் மாலை நானாட்டான் பிரதேச செயலகத்தில் சிறப்பாக இடம் பெற்றது. பிரதேச செயலாளர் எம்.சிறிஸ்கந்தகுமார் தலைமையில் இடம்பெற்ற விழாவில் திருக்குறள் பற்றிய சிறப்புரை,நடன நிகழ்வுகள் இடம் பெற்றதோடு, நிகழ்வுகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. (ப-56)

# மக்கள் சந்திப்பு

கொடிகாமம்,செப்.12

சாவகச்சேரி பிரதேச சபையின் ஐந்து உப அலுவலகங்களிலும் மக்கள் சந்திப்புக்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 15 ஆம் திகதி நாவற்குழி உப அலுவலகத்திலும், 22 ஆம் திகதி சரசாலை உப அலுவலகத்திலும், 29 ஆம் திகதி வரணி உப அலுவலகத்திலும், ஒக்ரோபர் 6 ஆம் திகதி மிருசுவில் உப அலுவலகத்திலும், ஒக்ரோபர் 13 ஆம் திகதி கைதடி உப அலுவலகத்திலும் மக்கள் சந்திப்பு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் ஏனைய வெளிக்கள அலுவலர்களும் கடமையாற்றுவார்கள் எனவே மக்களின் பிரச்சினைகள் உடனடியாக ஆராயப்பட்டு உடனுக்குடன் தீர்வு காணப்படும் என்று பிரதேச சபைத் தவிசாளர் அறிவித்துள்ளார். (ஜ-159)

# வாக்காளர் இடாப்பில் பெயரைப் பதியுங்கள்

## மக்கள் மறுமலர்ச்சி முன்னணி வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செப். 12

18 வயதைக் கடந்த ஒவ்வொருவரும் தங்கள் பெயரை வாக்காளர் இடாப்பில் இடம்பெறச்செய்வதற்கு கிராம உத்தியோகத்தரிடம் இருக்கும் வாக்காளர் விண்ணப்பத்தைப் பெற்று தவறாது இம்மாதம் நடுப்பகுதிக்குள் பூரணப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று யாழ், கிளிநொச்சி மாவட்டங்களின் மக்கள் மறுமலர்ச்சி முன்னணியின் தலைவர் மௌலவி சுப்யான் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

பிள்ளைகளை பாடசாலைகளில் சேர்ப்பது முதல் அரச தொழில், அரச உதவிகள் எல்லாவற்றிற்கும் இன்று வாக்காளர் இடாப்பில் பெயர் இருக்க வேண்டியது முக்கியமாகும். தேர்தல் காலத்தில் நமது பிரதிநிதியைத் தெரிவு செய்வதற்கும் வாக்காளர் இடாப்பில் எமது பெயர் இருக்க வேண்டும். நாம் வாக்கைப் புதுப்பித்துப் பதிவதில் அலட்சியமாக இருந்தால் நாம் விரும்பும் அரசியல் வாதியைத் தேர்ந்தெடுப்பதில் மாத்திரமல்ல எல்லாவற்றிலும் கைசேதப்பட வேண்டி வரும். உங்கள் பெயரை வாக்காளர் இடாப்பில் பதிவு செய்வதை தவற

# நியமனக் கடிதம் பெறாத 26 பேர்

தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு நியமிக்கப்பட்ட பட்டதாரி பயிலுநர்களில் 26 பேர் இன்னமும் நியமனக் கடிதங்களும் பெறவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் பயிலுநர்களாக நியமிக்கப்பட்ட 308 பேரில் 282 பேர் மட்டுமே நியமனக் கடிதங்களைப் பெற்றுள்ளனர். இவர்களுக்கு 5 வகையான பயிற்சிகள் சுழற்சி முறையில் வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (சு-9)



## மண் கடத்தல் முறியடிப்பு: வாகனங்களுடன் மூவர் கைது

வவுனியா,செப்.12
சட்டவிரோத மணல் கடத்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் உழவு இயந்திரங்களுடன் மூவர் கைது செய்யப்பட்டனர். மாங்குளம் பனிக்கன்குளம் கனகராயன் ஆற்று பகுதியில் வைத்து கடந்த புதன்கிழமை இரவு இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

வனவள பாதுகாப்புத் திணைக்கள உத்தியோகத்தர்களுடன், மாங்குளம் பொலிஸார் மேற்கொண்ட கூட்டு நடவடிக்கையின் போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் மாங்குளத்தைச் சேர்ந்த 19, 31, 33 வயதுக்குட்பட்டவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப் படவுள்ளனர் மாங்குளம் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-110)

## ஆவணக் காப்பகத்தின் 74ஆவது நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், செப். 12
சமகாலக் கலை, கட்டடக்கலை, மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகத்தின் 74 ஆவது நிகழ்வு 'யாழ்ப்பாணத்தில் சமூக மாற்றமும் சனரஞ்சக வெளிப்பாடும் திருமண மண்டபங்களும்' எனும் தொனிப்பொருளில் இடம்பெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை, காலை 10.00 மணி தொடக்கம் 12.00 மணி வரை இல.199, கோவில் வீதி, நல்லூரில் உள்ள சமகாலக் கலை, கட்டடக்கலை, மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகத்தில் இடம்பெறவுள்ளது.

காண்பியக் கலைஞரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறையைச் சார்ந்த கலைவரலாற்றாசிரியருமான கலாநிதி. தா. சனாதனன் 'யாழ்ப்பாணத்தில் சமூகமாற்றமும் சனரஞ்சக வெளிப்பாடும் திருமண மண்டபங்களும்' எனும் தொனிப்பொருளிலான கலந்துரையாடலை நிகழ்த்துவார். நிகழ்வில் கலை ஆர்வலர்கள் அனைவரும் தவறாது கலந்து பயன்பெறுமாறு காப்பகத்தின் முகாமையாளர் ஸ்ரிபன் கனகலிங்கம் கேட்டுக்கொண்டுள்ளார். (ப)

### இரணைமடுவில்

# சட்டவிரோத மண் அகழ்வை கட்டுப்படுத்த இராணுத்தினர்

## மாவட்டச் செயலர் தகவல்

கிளிநொச்சி, செப். 12
**இரணைமடுவில் சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்த இராணுவத்தினரும், சிறப்பு அதிரடிப் படையினரும் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.**

இரணைமடு விவசாய சம்மேளன அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விவசாயக் குழுக் கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுப்படுகின்றவர்கள் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர். அவர்கள் எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் இனம் காணப்பட வேண்டும். அத்தோடு சமூக மட்ட அமைப்புகள் இந்த விடயத்தில் மிகுந்த அக்கறை செலுத்த வேண்டும் - என்றார்.





இந்த விவசாயக் குழு கூட்டத்தில் இரணைமடு குளத்தின் கீழான காலபோக நெற்செய்கை தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. நீர் விநியோகம், கால்நடை கட்டுப்படுத்தல் போன்ற விடயங்களும் ஆராயப்பட்டன. இந்த விவசாயக் குழுக் கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள், கிளிநொச்சி மாவட்ட விவசாய திணைக்கள அதிகாரிகள், மாவட்ட கமநல சேவைத் திணைக்களத்தின் அதிகாரிகள், மாவட்ட விவசாய உற்பத்தி ஆராய்ச்சித் திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலர்கள் மற்றும் விவசாயிகள் என பலர் கலந்து கொண்டனர். (ம-6,222-14)

## இசை வகுப்பு மீள ஆரம்பம்

நல்லூர்,செப்.12
நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தால் நடத்தப்பட்டு வந்த இசை வகுப்புக்கள் கொரோனா காரணமாக நிறுத்தப்பட்ட நிலையில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டது.

வாய்ப்பாடு, நடனம்,மிருதங்கம், வயலின் ஆகிய வகுப்புக்கள் சனி மற்றும் ஞாயிறு ஆகிய இரு நாள்கள் இலவசமாக நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தென்மராட்சி சந்தைகளில் அதிகளவு பனாட்டுக்கள்

சாவகச்சேரி, செப்.12
தென்மராட்சி பிரதேச சந்தைகளில், அதிகளவு பனாட்டுத் தட்டுகள் பனாட்டு உற்பத்தியாளர்களால் கொண்டு வரப்படுகின்றன. பனாட்டுத் தட்டு ஒன்று 100 ரூபாவாகவும், கிலோ 400 ரூபாவாகவும் விற்கப்படுகிறது.

ஜூலை மாதத்தில் வீழ்ந்த பனம்பழங்களிலிருந்து தயாரிக்கப்பட்ட பனாட்டுக்களே இவ்வாறு சந்தைக்குக் கொண்டு வரப்படுகின்றன. தற்போது அதிக அளவில் பனம்பழம் வீழ்வதால் அடுத்த வாரங்களில் பனாட்டின் விலையில் வீழ்ச்சி ஏற்படலாம் என்றும் வியாபாரிகள் தெரிவித்தனர். (ற-9)

# வாக்காளராகப் பதிவதை தவறவிடாதீர்கள்!

## சுரேஸ் பிறேமச்சந்திரன் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 12
2020ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பதிவு நடவடிக்கையில் வாக்காளர்களாகப் பதிவு செய்யத் தகுதியுடைய அனைவரும் தம்மை பதிவு செய்து கொள்ளுமாறு ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் தலைவர் சுரேஸ் பிறேமச்சந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார். வாக்காளர் பதிவை மேற்கொள்ளாத பட்சத்தில் பல்கலைக் கழகத்தில் நுழையும் மாணவர் எண்ணிக்கை, தேர்தல்களில் ஆசன எண்ணிக்கை என்பன வீழ்ச்சியடையுமென்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2020 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் பதிவுகள் தேர்தல் திணைக்களத் தால் முன்னெடு க்கப்பட்டுள்ளன. வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் போர், இடப்பெயர்வு, புலம்பெயர்வு போன்ற காரணிகளாலும் முப்படை களின் ஆக்கிரமிப்புக்கள் காரண மாகவும் மீள் குடியேற்றம் இன்னும் முழுமையடைய வில்லை. மேற்கண்ட காரணங்களால் வடக்கு மாகாண சனத்தொகை என்பது பெரிய வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது. ஏறத்தாழ 15 லட்சம் மக்கள் வெளிநாடுகளில் வாழ்கின்றனர் எனச் சொல்லப்படுகின்றது.

நடந்து முடிந்த போரில் இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது. இதன் காரணமாக எமது சனத்தொகை பெரிய வீழ்ச்சியைக் கண்டுள்ளது. இந்தக் குடிசன தொகையின் வீழ்ச்சி காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்துக்கு கிடைக்க வேண்டிய பத்து நாடாளுமன்ற ஆசனங்கள் ஏழாக சுருங்கியிருக்கின்றது. தமிழ் பிரதேசங்களில் இருந்து பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்களுடைய தொகையிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இவை ஒருபுறமிருக்க ஒவ்வொரு வருடமும் தேர்தல் இடாப்புக்களில் பதிவுகள் இடம்பெறும் பொழுது வாக்களிக்கத் தகுதியுடைய 30 தொடக்கம் 40 ஆயிரம் பேர் வரையில் விடுவிக்கப்படுகின்றனர் எனவும் அறிகின்றோம். தமிழ் மக்களின் இந்த குடிசன வீழ்ச்சியை அனைத்து கிராம அலுவலர்களும் புரிந்திருக்கின்றார்கள். இந்தப் பதிவுகளை மேற்கொள்ளும் பொழுது வாக்களிக்கும் வயதெல்லை உடைய அனைவரையும் பதிவுசெய்ய கிராம அலுவலர்கள் முழுமையான கவனம் செலுத்த வேண்டும் எனக் கோருகின்றோம்.

ஒவ்வொரு குடும்பத்தினரும் தங்களது பிள்ளைகள் வெளிநாட்டில் இருந்தாலும் அவர்கள் இலங்கைக் கடவுச்சீட்டைக் கொண்டவர்களாக அல்லது இரட்டை குடியுரிமை கொண்டவர்களாக இருப்பின் அவர்களது பெயர் விவரங்களையும் பதிவு செய்யுமாறு வேண்டுகின்றோம். இந்தப் பதிவுகளை மேற்கொள்வதில் ஏதாவது சங்கடங்கள் இருப்பின் நீங்கள் விரும்பிய கட்சித் தலைமைகளுடன் தொடர்புகொண்டு அவர்களூடாக பதிவு தொடர்பாக ஏற்படக்கூடிய பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியும்.

இந்தப் பதிவுகளை சரியான முறையில் செய்யாது விடுவோமாக இருந்தால் எதிர்காலத்தில் நாடாளுமன்ற, மாகாணசபை பிரதிநிதித்துவங்கள் இன்னும் குறைந்து போகலாம். ஏற்கனவே 2020 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பதிவுகள் ஆரம்பமாகி இருப்பதனால் பொதுமக்களும் கிராம அலுவலர்களும் இதில் கூடுதலான கரிசனை எடுத்து இந்த பதிவுகளை மேற்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்- என்றுள்ளது. (ஒ.5)

# த.வி.கூட்டணியின் உப தலைவர் கட்சியிலிருந்து விலகவேண்டும்

## அந்தக் கட்சியின் செயலாளர் நாயகம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.12

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உப தலைவர் ச.அரவிந்தன் கட்சியை விட்டு வெளியேற வேண்டும் என செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பத்திரிகை ஒன்றிற்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது;

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஸ்ர உப தலைவர் என பாவிக்க வேண்டாம் என அவரிடம் பல முறை எடுத்துக் கூறியிருந்தேன். ஆனால் அவர் தொடர்ந்தும் அப்படிக் கூறியே துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டு வருகின்றார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் உப தலைவர் அரவிந்தன், என்னுடைய ஜென்ம எதிராகிய மாவை சேனாதிராஜாவின் மகனாகிய கலையமுதனுடன் எமது அலுவலகத்தில் வைத்து இரகசிய சந்திப்பு ஒன்றினை மேற்கொண்டுள்ளார். இந்த நாடு இவ்வளவு மோசமான நிலைக்குச் சென்றதில் மாவை சேனாதிராஜாவுக்கு பெரும் பங்கு உண்டு. அப்படியானவரின் மகனுடன் இரகசிய சந்திப்பு நடத்த வேண்டிய தேவை ஏன் அவருக்கு உருவாகியது? தமிழர் விடுதலைக் கூட்டணியை என்னுடைய சொந்த நிதியில் வளர்த்துள்ளேன். தேர்தல் செலவுகளுக்காகக் கட்சி அலுவலகக் காணியை ஈடுவைப்பது தொடர்பிலும் அரவிந்தன் என்னுடன் கலந்துரையாடினார். அப்படியானவரிடம் பொறுப்புக்களை கொடுத்தால் அனைத்தும் முடிந்துவிடும். அவர் தானாகவே கட்சியின் உறுப்புரிமையில் இருந்து விலக வேண்டும் என்றார் (ப)

## வவுனியா நகரசபையில் வியாழன்று விசேட அமர்வு



வவுனியா, செப்.12

வவுனியா நகரசபையின் சுகாதார ஊழியர்கள் பலர் மூன்று கோரிக்கைகளை முன்வைத்து, புதிய அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் சார்பில் போராட்டம் ஒன்றை முன்னெடுத்து வருகின்றனர். இந்த நிலையில் வவுனியா நகரசபையில் இதற்கான விசேட அமர்வு ஒன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

தவிசாளர் கௌதமன் தலைமையில் வியாழன் காலை 9.30 மணிக்கு இந்த விசேட அமர்வு இடம் பெற்றது.

நகரசபையின் விசேட அமர்வின் பின் ஊடகங்களுக்கு தவிசாளர் கருத்துத் தெரிவித்தார்.

இதன்போது அவர் தெரிவித்ததாவது:

இந்தப் போராட்டத்தை நடத்தும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளை அழைத்துக் கலந்துரையாடியிருந்தோம், போராட்டகாரர்களின் மூன்று கோரிக்கைகளையும் ஏற்றுக்கொண்டு அவற்றுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தீர்மானிக்கப்பட்டதுடன், அறிவுறுத்தல்களை மீறி போராட்டம் மேற்கொண்ட ஊழியர்களிடம் விளக்கம் கோரி விசாரணைக் குழுவொன்றை அமைக்கவுள்ளதாகவும் அதில் முன்னிலையாகி தமதுபக்க நியாயத்தை ஊழியர்கள் முன்வைக்க முடியும்.

அத்துடன் குறிப்பிட்ட சிலரே போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஏனையோர் தமது கடமைகளைத் தடையின்றி மேற்கொள்கின்றனர் எனவும் இந்தப் போராட்டத்தினால் திண்மக் கழிவுகளை அகற்றும் நடவடிக்கைகள் பாதிக்கப்படவில்லை எனவும் போராட்டம் தொடரும் பட்சத்தில் பணிபுரியும் ஊழியர்களின் பணிச்சுமையை குறைப்பதற்கான மாற்று நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்படும் என்றார். (ற-110)

# கள்ளத் தோணிகள் அல்லர் நாமே இலங்கையின் மூத்த குடி!

## அடித்துக் கூறினார் விக்னேஸ்வரன் எம்.பி.



**யாழ்ப்பாணம், செப்.12**

**நாங்கள் கள்ளத்தோணிகள் அல்லர், நாமே இலங்கையின் மூத்த குடி என நிரூபிக்கக் கூடிய ஆதாரங்கள் என்னிடமுள்ளன என நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

சிங்கள ஊடகமொன்றிற்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அதில் மேலும் உள்ளதாவது;

பல அறிஞர்களுடன் கலந்துரையாடி, புத்தகங்களைப் படித்து ஆய்வு செய்தே நாடாளுமன்றத்தில் நிலவுரிமை குறித்துப் பேசினேன். இலங்கையின் ஆதிக் குடிமக்கள் பேசியது தமிழ் மொழிதான் என நிரூபிக்க என்னிடம் ஆதாரங்கள் உண்டு. கள்ளத்தோணிகள் நாமல்லர். நீங்கள் எம்மைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டும். பாதுகாப்பு வலயம் என்று கூறப்பட்ட முள்ளிவாய்க்காலில் தான் அதிகளவிலான பொதுமக்கள் கொல்லப்பட்டனர். எமக்கு இழைக்கப்பட்ட அநீதியை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே நான் எனது முதலாவது நாடாளுமன்ற அமர்வின்போது முள்ளிவாய்க்கால் நினைவிடத்திற்குச் சென்றிருந்தேன். வன்னியில் இருந்தவர்கள் ஒருபோதும் பயங்கரவாதிகள் அல்லர். அனைவரும் அப்பாவிப் பொதுமக்களே. வயதானவர்கள் நாடாளுமன்றத்திற்கு சென்று என்ன செய்தார்கள் எனக் கேள்வி எழுப்பப்படுகிறது. இளைஞர்கள் இவ்வளவு காலமும் நாடாளுமன்றம் சென்று என்ன செய்தார்கள்? அங்கஜனுக்கு என்னைவிட விருப்பு வாக்குகள் அதிகம் கிடைக்கக் காரணம், அவரைப் போன்று நான் மதுபானம், பணம், வேலை வாங்கித் தருவேன் என வாக்குறுதி கொடுத்து வாக்குக் கேட்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து பயணிப்பது தொடர்பில் செல்வம் அடைக்கலநாதன் அண்மையில் என்னுடன் பேசியிருந்தார். நான் அவருக்கு பதிலளிக்கையில் தீர்வு என்று ஒன்றுக்குள் கட்சி இறங்கும் போது அனைவரும் ஒன்றிணைவோம் என்று கூறினேன். நான் எனது சம்பந்தியுடன் இணைந்து அரசாங்கத்தின் உதவியுடன் வடக்கில் அபிவிருத்திகளையும் செய்ய எப்பொழுதும் தயாராய் உள்ளேன்- என்றார் என்றுள்ளது. (ப)

## தென்மராட்சியில் தொழிற் சந்தை

சாவகச்சேரி செப் 12

தென்மராட்சி பிரதேசத்தில் க.பொ.த. சாதாரண தரம் சித்தி பெறாத தொழில் வாய்ப்பற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதற்கான தொழில் சந்தை ஒன்று நேற்று தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது,

யாழ்.மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் தென்மராட்சி பிரதேச செயலகத்தின் பங்களிப்புடன் நடத்தப்பட்ட தொழில் சந்தையில் எட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் பங்கு பற்றி வேலை வாய்ப்புக்கான நேர்முகத் தேர்வுகளை நடத்தினர். (ப-9)

## லலித் ஜெயசிங்க பணியில் இணையார்

கொழும்பு,செப்.12

இடைநீக்கம் செய்யப்பட்ட வடக்கு மாகாண முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர், லலித் ஜெயசிங்க மீண்டும் பணியில் அமர்த்தப்பட மாட்டார் என்று தேசிய பொலிஸ் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

லலித் ஜெயசிங்க தான் பதவியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டதற்கான அரசியல் பழிவாங்கல் தொடர்பாக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார். இது தொடர்பான விசாரணையின் போதே மேற்படி தகவல் தெரிவிக்கப்பட்டது. (ஐ-இ)

# நகர சபை ஊழியர் மூவர் நேற்று கைது

வவுனியா,செப்.12

வவுனியா நகரசபையில் பணியாற்றும் சில ஊழியர்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாட்டின் காரணமாக வவுனியா பொலிஸாரால் மூவர் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா நகரசபையில் இரு தொழிற்சங்கங்கள் செயற்பட்டுவரும் நிலையில் இருதரப்பையும் சேர்ந்த சில ஊழியர்களுக்கிடையில் நேற்றுக் காலை முரண்பாடு ஏற்பட்டது.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது. அதன் அடிப்படையில் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் நகரசபை ஊழியர்கள் மூன்று பேர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டனர். (ப-110)

# மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு கூட்டமைப்பு கைகொடுக்கும்

## செல்வம் எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, செப்.12

மலையக மக்களின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்துவதற்காக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழு ஒத்துழைப்பை வழங்கும் என்று செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அமரர் ஆறுமுகன் தொண்டமானுக்கு அனுதாபம் தெரிவித்து உரையாற்றும்போதே இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

தேசிய இனமான மலையகத் தமிழர்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காகவும், அரசியல் உரிமைகளுக்காகவும் சௌமியமூர்த்தி தொண்டமானும், நண்பன் ஆறுமுகன் தொண்டமானும் சிறந்த அரசியல் தலைமைத்துவத்தை வழங்கினர். நண்பர் ஆறுமுகன் தொண்டமானை நாம் இழந்துள்ள நிலையில் இவ்விருவரினதும் வழியில் தம்பி ஜீவன் தொண்டமான் பயணிக்கவேண்டும். தம்பி ஜீவன் தொண்டமானிடம் பொறுப்பு, சுமை ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனை புனித செயலாகக் கருதிப் பயணிக்குமாறும், மலையக மக்களுக்காக உங்களுடன் இணைந்து சுமைகளைத் தாங்குவதற்கு வடக்கு, கிழக்கு மக்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களும் தயாராகவே இருக்கின்றோம். மலையக மக்களுக்கு பிரச்சினையென வருகின்றபோது நாம் அவர்களுடன் நிற்போம், அநீதிக்கு எதிராக குரல் கொடுப்போம், இணைந்து பயணிப்போம் என்பதையும் கூறிக்கொள்கின்றோம் - என்றார். (ப-44)

# தேசியப் பாடசாலைகளை ஆயிரமாக அதிகரிப்பதற்கு ஜனாதிபதி தீர்மானம்

கொழும்பு, செப்.12

**தேசியப் பாடசாலைகளின் எண்ணிக்கையை ஆயிரமாக அதிகரிப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். இராஜாங்க அமைச்சர்களுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானத்தை ஜனாதிபதி எடுத்துள்ளார்.**

ஆசிரியர் இடமாற்றம் மற்றும் மாணவர்களை பாடசாலைகளுக்கு உள்வாங்குதல் தவிர்ந்த பாடசாலை கட்டமைப்பின் முன்னேற்றத்துக்கு காரணமாக அமையக்கூடிய அனைத்து செயற்பாடுகளுக்கும் பங்களிக்கக்கூடிய சந்தர்ப்பம் அரசியல்வாதிகளுக்கு உள்ளது. அது பொது நலனை நோக்கமாகக்கொண்டதே தவிர அரசியல் தலையீடு அல்ல எனவும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்துள்ளார். இக் கலந்துரையாடலில், பாடசாலை கட்டமைப்பின் முன்னேற்றத்திற்காக மாவட்ட கல்விக் குழுவொன்றை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. வலயக் கல்வி காரியாலயங்கள் மற்றும் கோட்டக் கல்வி காரியலயங்களுக்கிடையில் தொடர்பை பலப்படுத்துவதற்கும் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டில் பாடசாலைகளில் உள்ள அதிபர் பற்றாக்குறையை நிரப்புவதற்காக பதில் அதிபர்களை நியமிப்பது தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது. ஆசிரியர் யாப்புக்கமைய ஒவ்வொரு வருடமும் ஆசிரியர் பரீட்சைகளை நடத்த வேண்டும். பாடசாலைகளில் இருக்கின்ற திறமையான மற்றும் அனுபவம் கொண்ட ஆசிரியர்களை பதில் அதிபர்களாக நியமிப்பதற்கு உள்ள வாய்ப்புக்களை கண்டறிய வேண்டும் எனவும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. (வ-இ)



சாவகச்சேரி வெங்கடாசல ஆலயப் பெருந்திருவிழா இடம்பெற்று வந்த நிலையில், அதன் தீர்த்தோற்சவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. (ற-159)

## மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இதன்படி நாளை ஞாயிறு காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ்.மாவட்டத்தில்** சம்பந்தர்கடையடி, கரவெட்டி, சாமியன் அரசடி, நெல்லியடி கொடிகாமம் வீதி, கிழவிதோட்டம், இந்திர அம்மன் கோவிலடி, தாமரைக்குளத்தடி, கலிகை, வெலிக்கந்தோட்டம், துன்னாலை, யாக்கரு, நுணாவிலிலிருந்து அரசடி வரை, சாவகச்சேரி ரயில் நிலையம் , சாவகச்சேரி நகரம், சங்கத்தானை, சாவகச்சேரி வைத்தியசாலை, சாவகச்சேரி நீதிமன்ற கட்டடம், பலாலி வீதி வேம்படி சந்தியிலிருந்து முலவைச் சந்தி வரை, ரயில் நிலைய வீதி, மார்டின் வீதி, யாழ். 1ம், 2ம், 3ம், 4ம் குறுக்கு தெருக்கள்,பாடசாலை, பஸ்ரியன் சந்தி, மடம் வீதி, வேம்படி வீதியின் ஒரு பகுதி, மார்டின் வீதியின் ஒரு பகுதி, ஓடக்கரை வீதி, டேவிட் வீதி, சென் பற்றிக்ஸ் வீதி, கிறீன் கிறாஸ் விடுதி, யாழ். ரயில்நிலையம், ஆகிய இடங்களிலும், **வவுனியா மாவட்டத்தில்** வவுனியா நகரம் ஒருபகுதி, பஸார் வீதி, 1ம் குறுக்குத் தெரு, 2ம் குறுக்குத் தெரு, இலுப்பையடி, சூசைப்பிள்ளையார்குளம், கொறவப்பொத்தானை வீதி, றம்பைக்குளம், எஸ்.வி.ஆர். அரிசி ஆலை, இராணி அரிசி ஆலை, லங்கா அரிசி ஆலை ஆகிய இடங்களிலும், மன்னார் மாவட்டத்தில் எழுத்தூரிலிருந்து தலைமன்னரர் வரை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் வைத்தியசாலை ஆகிய பிரதேசங்களிலும்,மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார்.

## குருந்தூர் மலைக்கு சென்றார் ரவிகரன்

முல்லைத்தீவு, செப்.12

முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்றுமுன்தினம் குருந்தூர் மலைக்குச் சென்றார்.

முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு பகுதியில் அமைந்துள்ள தமிழர்களின் பூரவீக குருந்தூர்மலை ஐயன் கோவிலில் நிறுவப்பட்டிருந்த திரிசூலம் அண்மையில் விஷமிகளால் உடைக்கப்பட்டமை தொடர்பில் அவருக்கு தெரியப்படுத்தப்பட்டது அதை அடுத்து அவர் நேற்று குருந்தூர் மலைக்கு சென்றுள்ளார்.

அவர் குமுழமுனைப் பகுதி இளைஞர்கள் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் ஆகியோருடன், அங்கு சென்று நிலைமைகளைப் பார்வையிட்டதுடன், திரிசூலம் உடைக்கப்பட்டதற்கு, தனது கடுமையான கண்டனத்தையும் தெரிவித்துள்ளார். (ற-246)



## வீடு புகுந்து தாக்குதல்: குடும்பத்தில் மூவர் காயம்

சாவகச்சேரி செப்.12

வீடு புகுந்து தாக்கியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் காயமடைந்துள்ளனர். நாவற்குழி தெற்கில் நேற்றுமுன்தினம் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் காயமடைந்த தந்தை, தாய், மகள் ஆகியோர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பான விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (வ-9)

## இன்றைய நாள்

**மேடம்:** வேலை தேடும் முயற்சியில் வெற்றி கிட்டும் நாள். பிள்ளைகள் வழியில் சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகலாம். தொழில் வளர்ச்சிக்கு முக்கியப் புள்ளிகளைச் சந்தித்து முடிவெடுப்பீர்கள்.

**இடபம்:** கல்யாண வாய்ப்புக் கைகூடும் நாள். பழுதாகிக் கிடந்த வாகனத்தை புதுப்பிக்கும் எண்ணம் ஏற்படும். கடிதம் மூலம் சுபச் செய்திகள் வந்து சேரலாம். நண்பர்கள் தக்க சமயத்தில் கை கொடுத்துதவுவர்.

**மிதுனம்:** புதிய நண்பர்கள் மூலம் பொருளாதார நிலை உயரும் நாள். குடும்ப முன்னேற்றம் கருதி புதிய திட்டமொன்றை தீட்டுவீர்கள். நீண்ட நாளையப் பிரச்சினையொன்று பேச்சு மூலம் முடிவிற்கு வரும்.

**கடகம்:** நட்பு வட்டம் விரிவடையும் நாள். உத்தியோகத்தில் உயர்ந்த நிலையடைய சந்தர்ப்பம் கைகூடி வரும். குடும்பத்திற்குத் தேவையான விலையுயர்ந்த பொருள்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும்.

**சிம்மம்:** பணவரவு திருப்தி தரும் நாள். அலுவலகப் பணிகள் துரிதமாக நடைபெறும். ஆற்றல்மிக்கவர்களின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கன்னி:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள். கடின முயற்சிக்குப் பின்னால் காரியங்களில் வெற்றி கிடைக்கும். கொடுக்கல்–வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்ள முன்வருவீர்கள். பத்திரப் பதிவில் இருந்த தடைகள் அகலும்.

**துலாம்:** சச்சரவுகள் அகன்று சமாதானம் ஏற்படும் நாள். வரவு திருப்தி தரும். இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறிகள் தோன்றும். தொழில் வளர்ச்சி திருப்தி தரும்.

**விருச்சிகம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள். வருமானம் இருமடங்காகும். வளர்ச்சிக்கு உறவினர்களும், நண்பர்களும் கைகொடுத்து உதவுவர். பொருளாதார முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும்.

**தனுசு:** விருப்பங்கள் நிறைவேற விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை வைக்கும் நாள். பணப்பற்றாக்குறை அகலும். உதாசீனம் செய்தவர்கள் உங்களின் செயல்பாடுகளைக் கண்டு பெருமை அடைவர். உடல்நலம் சீராகும்.

**மகரம்:** மகிழ்ச்சி கூடும் நாள். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். வரன்கள் வந்து வாயிற்கதவைத் தட்டும். எதையும் நிதானமாகச் செய்வது நல்லது.

**கும்பம்:** விருப்பங்கள் நிறைவேற விட்டுக்கொடுத்துச் செல்ல வேண்டிய நாள். வேலையாள்களால் பிரச்சினைகள் ஏற்படலாம். ஆரோக்கியத்தில் அச்சுறுதல்கள் உருவாகும்.

**மீனம்:** நன்மைகள் நடைபெறும் நாள். கைமாத்தாக, கொடுத்த தொகை திரும்பக் கிடைக்கும். நிர்வாகத் திறமைகள் பளிச்சிடும். உறவினர்கள் மதிக்கும்படி நடந்து கொள்வீர்கள்.

# அரச காணிகளில் வசிப்போர் ஆவணங்களை பெற வாய்ப்பு

### சந்தர்ப்பத்தை விடாது விண்ணப்பிக்க அறிவுறுத்தல்

**கொடிகாமம், செப்.12**
**ஆவணங்கள் இன்றி அரச காணிகளை அபிவிருத்தி செய்துள்ள அல்லது அவற்றில் குடியிருக்கும் மக்களுக்கு அந்தக் காணிகளுக்கான சட்ட ரீதியான ஆவணங்களை வழங்குவது தொடர்பான அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.**

இந்தத் திட்டம் கம்பஹா மற்றும் கொழும்பு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இந்தத் திட்டத்துக்கு விண்ணப்பிப்பதற்கான மாதிரி விண்ணப்பப்படிவம் மற்றும் வழிகாட்டுநெறிகளை உள்ளடக்கிய வர்த்தமானி அறிவித்தல் காணி ஆணையாளர் நாயகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் இந்த மாதம் 30ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.
பயனாளிகளைத் தெரிவு செய்வதற்கான காணிக் கச்சேரி எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதியிலிருந்து நவம்பர் மாதம் 21ஆம் திகதிக்கு இடையே பிரதேசத்தின் பிரதேச செயலாளர் தீர்மானிக்கின்ற திகதியில் நடத்தப்படும் எனவும் வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் சமூக மட்டத்தில் செயற்பட்டுவரும் பொது நிறுவனங்கள் மற்றும் கிராம அபிவிருத்தி சங்கங்கள், விண்ணப்பிக்க தகுதியுடைய மக்களை அறிவூட்டுவது அவசியம் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## குழுக்களாக வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு முக்கியத்துவம்

*அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு*

கொழும்பு, செப்.12
சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்குள் அனுமதித்த பின்னர் குழுக்களாக வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு முக்கியத்துவம் வழங்க அரசு தீர்மானித்துள்ளது. சுற்றுலா பயணிகளை குழுக்களாக நாட்டுக்கு அழைத்து வருவதற்கான நடைமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன என சுற்றலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். இலங்கையில் உள்ள மாலைதீவு தூதுவர் ஓமார் அப்துல் ரசாக்குடன் நடைபெற்ற கலந்துரையாடலில் அமைச்சர் இந்த விடயத்தை குறிப்பிட்டார். இந்த பேச்சுவார்த்தையின் போது விமான நிலையங்களை எப்போது திறப்பதற்கு எதிர்பார்த்துள்ளீர்கள் என்று மாலைதீவு தூதுவர், அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவிடம் கேட்டிருந்தார். இதற்குப் பதிலளித்த அமைச்சர் கட்டுநாயக்கா மற்றும் மத்தள விமான நிலையங்களை விரைவாக சுற்றுலாப்பயணிகளுக்காக திறப்பதற்கு எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார். (வ-இ)

## மோட்டார் சைக்கிள் சில்லுக்குள் பாவாடை சிக்கி மூவர் காயம்

சாவகச்சேரி, செப். 12
மோட்டார் சைக்கிள் சில்லுக்குள் பாவாடை சிக்கியதில் அதில் பயணித்த மூவர் காயமடைந்துள்ளனர். இச் சம்பவம் நேற்று ஏ. 32 வீதியில் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-
சிறுமிக்கு பல்வலி ஏற்பட்டதையடுத்து பல் பிடுங்கிக்கொண்டு சிறுமியும் பெற்றோரும், மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளனர். காற்று வேகமாக வீசியதில் தாய் அணிந்திருந்த பாவாடை சில்லுக்குள் சிக்கியுள்ளது. இதனால் மூவரும் தூக்கி வீசப்பட்டு காயமடைந்தனர். அதையடுத்து மூவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். சம்பவத்தில் நாவற்குழி தெற்கைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் பாலதாசன்(வயது43) அவரது மனைவியான சயந்தினி (வயது 38) மகளான அபிஷா (வயது14) என்போரே காயமடைந்துள்ளனர். (வ-9)

## யானை தாக்கி மாணவன் உயிரிழப்பு

கொழும்பு, செப்.12
கிருந்துருகோட்டை பகுதியில் காட்டு யானை தாக்கியதில் மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் நடந்துள்ளது. 16 வயது மாணவன் ஒருவரே உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். அதே வேளை, இலங்கையில் மனிதருக்கும் யானைகளுக்கும் இடையேயான மோதல் காரணமாக ஆண்டுதோறும் சுமார் 300 யானைகள் உயிரிழப்பதுடன், 100 மனிதர்களும் இறக்கின்றனர் என்று புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. (எ-இ)



## இனந்தெரியாத கும்பலால் மோ.சைக்கிள்கள் தீக்கிரை

*சுண்டுக்குழியில் அடாவடி*

யாழ்ப்பாணம், செப். 12
சுண்டுக்குளி குருசோர் வீதியில் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேற்று அதிகாலை 1.40 மணியளவில் இனந்தெரியாத கும்பலால் தீயிட்டு கொளுத்தப்பட்டுள்ளதோடு வீட்டின் கண்ணாடிகளும் அடித்து நொருக்கப்பட்டுள்ளன. வீட்டின் கதவும் வாளால் வெட்டப்பட்டுள்ளது. வீட்டிலிருந்தவர்கள் உறக்கத்தில் இருந்த வேளை இனந்தெரியாத குழு இந்த அட்டகாசத்தை மேற்கொண்டுள்ளது. மோட்டார் சைக்கிள்கள் இரண்டுக்கு தீ வைத்தபோதிலும் ஒரு மோட்டார் சைக்கிள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. மற்றைய மோட்டார் சைக்கிள் சிறியளவில் எரிந்துள்ளது. மோட்டார் சைக்கிள்களுக்கு வைக்கப்பட்ட தீயின் காரணமாக வீட்டிலிருந்த தளபாடங்களும் எரிந்து நாசமாகியுள்ளன.
சம்பவம் தொடர்பில் வீட்டு உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ஒ.5.111)

## ரஷ்ய நவீன ஆயுதங்கள் விரைவில் இலங்கைக்கு

கொழும்பு, செப்.12
ரஷ்யாவிடம் இருந்து இலங்கை இராணுவத்தளபாடங்களைக் கொள்வனவு செய்யவுள்ளது. ரஷ்யாவுக்கான இலங்கை தூதுவர் எம்.டி லமாவன்சவைச் சுட்டிக்காட்டி ஸ்பூட்னிக் செய்தி சேவை இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது.
கொழும்புக்கு விரைவில் புதிய உபகரணங்களை அனுப்பமுடியும் என்று ரஷ்யா எதிர்பார்த்துள்ளது. மிகக் குறுகிய காலத்திற்குள் சில இராணுவத் தளபாடங்களை பெற்றுக்கொள்ளும் திட்டம் உள்ளது. ஏற்கனவே செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையும் தற்போது நடைமுறையில் உள்ளது.
அது முடிந்ததும், ஒரு புதிய ஒப்பந்தம் விவாதிக்கப்பட்டு பேச்சு நடத்தப்படும் என்று லமாவன்ச குறிப்பிட்டுள்ளார். பல ஆண்டுகளாக ரஷ்யா இலங்கைக்கு வழங்கிய தொழில்நுட்பங்கள் மற்றும் உபகரணங்கள் இலங்கைக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கின்றன.
நாட்டில் ஐக்கிய நாடுகளின் அமைதிப் பணிகளின் நடவடிக்கைகளை செயற்படுத்த இலங்கைக்கு முக்கியமாக உபகரணங்கள் தேவை என்று தூதுவர் தெரிவித்துள்ளார் என்று ஸ்பூட்னிக் செய்திச்சேவை தெரிவித்துள்ளது. (எ-இ)

## தேசிய பாதுகாப்புத் தொடர்பில் அதிக கவனம் செலுத்தவேண்டும்

*இராணுவத் தளபதி தெரிவிப்பு*

திருகோணமலை, செப்.12
தேசிய பாதுகாப்பு தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். திருகோணமலையிலுள்ள 22ஆவது படைப் பிரிவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
இலங்கையின் பொருளாதாரத்திற்கு வரலாற்று முக்கியத்துவத்தை ஒன்று சேர்க்கின்ற பிரதேசம் திருகோணமலை. 30 வருட போர் நிலைமைகளில் இருந்து இந்தப் பிரதேசத்தை பாதுகாக்க முப்படையினரும் சிறப்பாகச் செயற்பட்டனர். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலைப் போல இனிமேலும் எமது நாட்டில் நடைபெறாமல் இருப்பதற்கு முப்படையினர் பல ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். இராணுவத்தினர் பொது மக்களின் நன்மை கருதி பலர் சமூக சேவைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். கொவிட் 19 தனிமைப்படுத்தல் விடயத்திலும் பெரும் சேவைகளை செய்கின்றனர் எனத் தெரிவித்தார். (வ-இ)

## அதிகாரிகளின் வெளிநாட்டு பயணங்கள் ரத்து

கொழும்பு, செப்.12
அரச அதிகாரிகளின் வெளிநாட்டுப் பயணங்கள் அனைத்தும் உடனடியாக நடைமுறைக்கு வரும்வகையில் இடைநிறுத்தப்படவுள்ளன.
நிதியமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிக்கல இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார். தற்போது சர்வதேச ரீதியில் பரவி வரும் கொரோனா தொற்றுப் பரவலை அடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. மறு அறிவித்தல் வரை இந்தத் தடை நடைமுறையில் இருக்கும் என்று அமைச்சுக்கள், ராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் நிறுவனங்களின் தலைவர்களுக்கு நிதி அமைச்சு அறிவித்துள்ளது. (எ-இ)

# வெளிநாட்டு மோகத்தை விடுத்து உற்பத்தியாளர்களாக மாறுங்கள்

## தெங்கு பயிர்ச் செய்கை சபையின் முகாமையாளர் கோரிக்கை

கொடிகாமம், செப்.12

**வெளிநாட்டு மோகத்தில் உள்ள மக்களுடைய மனநிலை மாறவேண்டும். அசாதாரண மான, மாயையான அதனைக் களைந்து அவர்களை உற்பத்தியாளர்களாக மாற்ற வேண் டும் என்று தெங்குப் பயிர்ச் செய்கை சபையின் பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தெரிவித்தார்.**


தென்மராட்சியில் அண்மையில் இடம்பெற்ற தென்னை தின விழாவும் கற்பகதரு சங்கங்களின் ஒன்றுகூடல் நிகழ்விலும் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவித்ததாவது;

அரசியலுக்கு மேலாக மக்களின் தேவைப்பாடு இருக்கிறது. அரசியல் எமது தார்மீகக் கடமை 30 வருடமாக அரசியல் கதைத்து கதைத்து உரிமையை இழந்துவிட்டோம் அதற்காக உரிமைகளை விட்டுக் கொடுக்க முடியாது. எமது நாட்டில் பிள்ளைகள் இருந்தால் தான் கதைக்கலாம் வெளிநாடு சென்றால் எப்படி உரிமைகளைக் கதைப்பது எங்களுடைய உரிமை பிரச்சினைக்கு சமாந்தரமாகப் பொருளாதாரப் பிரச்சினையை முன்னுக்கு எடுக்க வேண்டும். தென்னை, பனை, கடல் வளம் விவசாயம் ஆகிய நான்கும் மிகவும் முக்கியமானவை உற்பத்தி செய்வதற்கான விதைகளை வெளி மாவட்டத்தில் இருந்து கொண்டு வரவேண்டும். என்று சொல்கிறார்கள் இங்கே உற்பத்தி செய்ய யாரும் யோசிக்கவில்லை, நிவாரணத்தை வழங்காது வாழ்வாதாரத்தை வழங்கி முன்னேற்ற வேண்டும். உற்பத்தியாளனாக மாற்ற வேண்டும். மக்கள் மனநிலை மாற வேண்டும். மக்கள் வெளிநாட்டு மோகத்தில் இருக்கின்றனர். அசாதாரணமான, மாயையான அதனைக் களைய வேண்டும். தொழில் உற்பத்திக் கல்வித் துறையைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். வட மாகாணத்தைப் பொறுத்தவரை யாழில் தென்னைப் பயிர்ச் செய்கை செய்ய யாழ். மாவட்டச் சங்கங்களுக்கு மக்களின் ஒத்துழைப்புத் தேவை. புலம்பெயர் உறவுகள் நிவாரணம் கொடுப்பதைத் தவிர்த்து தொழிற்சாலையைக் கட்டச் சொல்லுங்கள்.

வட மாகாணம் தென்னையால் நிரம்ப வேண்டும். யாழ்ப்பாணத்தில் அரைவாசிக் காணிகள் இராணுவத்திடம் இருக்கின்றன. அங்கும் தென்னைப் பயிர்ச் செய்கை செய்வதற்காக வழங்குகிறோம் என்றார்.

(ஐ-159)



## ஒருங்கிணைப்புச் செயலராக சங்கரலிங்கம் நியமனம்

வவுனியா,செப்.12

நீர் வழங்கல் வசதிகள் அமைச்சின் வன்னி மாவட்ட ஒருங்கிணைப்புச் செயலாளராக எஸ்.சங்கரலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

நீர் வழங்கல் வசதிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவால் தனது அமைச்சின் வன்னி மாவட்டத்தின் ஒருங்கிணைப்புச் செயலாளராக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பிலுள்ள அமைச்சில் வைத்து இந்த நியமனக் கடிதம் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது.

வன்னி மாவட்டத்தில் நடைபெறும் அபிவிருத்திக் குழு கூட்டங்களில் அமைச்சின் சார்பாக கலந்து கொள்வதற்கும் அமைச்சரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.


(ஐ-110)



யாழ்ப்பாணம் திறந்த பல்கலைக்கழகத்தில் 2020-2021 கல்வியாண்டின் சிறு வணிக முகாமைத்துவ கற்கை நெறிக்கு புதிய மாணவர்களை இணைக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

பல்கலைக்கழக பணிப்பாளர் (உதவி) கே. கந்தவேள் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் 11 மாணவர்கள் இந்தக் கற்கைநெறியில் இணைந்துள்ளனர்.

(ஐ-50)



மறவன்புலவு வடக்கு பொன்னம்பலம் வீதியின் சீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் நிதி ஒதுக்கீட்டில் முதற்கட்டமாக 400 மீற்றர் வீதி சீரமைக்கப்பட்டு வருகிறது.

(ஐ-159)

## குற்றச்செயல்களை கட்டுப்படுத்த ஒத்துழையுங்கள்

### பொலிஸார் வேண்டுகோள்

வவுனியா,செப்.12

குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த உடனடியாகத் தொடர்புகொள்ளுமாறும், பொதுமக்கள் ஒத்துழைப்புக்களை வழங்குமாறும் வன்னி பிரதிப் பொலிஸ்மா அதிபர் தம்மிக்க பிரியந்த கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் மேலும் உள்ளதாவது;

சிறுவர் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான தகவல்கள், சட்டவிரோதமான மதுபானம், போதை வஸ்து , தேசிய பாதுகாப்புக்குப் பாதகம் விளைவிக்கக்கூடிய செயற்பாடுகளை மேற்கொள்ளல், வன அழிப்பு, மண் அகழ்வு, வனவிலங்கு அழிப்பு, தேசிய மரபுரிமைக்குச் சொந்தமான உடைமைகளை அழித்தல், விபத்துக்கள் மற்றும் அச்சுறுத்தல் விடுத்தல், பொலிஸாரால் வழங்கப்படும் சேவைகள் மற்றும் சட்டவிரோத பொருள்கள் மற்றும் ஆள்கடத்தல் தொடர்பான தகவல்களை 076 622 4949 , 076 622 6363 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தெரியப்படுத்தி முறைப்பாடுகளை மேற்கொள்ளும்போது இவ்வாறான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியும். அவற்றுக்கு உடனடியாகத் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படுவதுடன் தகவல்கள் தொடர்பான இரகசியத் தன்மையும் பாதுகாக்கப்படும் என றுள்ளது.

(110)

## 11வயதுச் சிறுமியின் துணிச்சலான ஆசை



ஆறாம் தரத்தில் கல்வி கற்கும் சிறுமி ஒருவர் தனக்கு சாதாரணதர பரீட்சையில் தோற்ற சந்தர்ப்பம் வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார். தன்னால் ஒன்பது பாடங்களிலும் ஏ சித்தி பெற முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். பொலனறுவை அரலகன்வில விலயாய வித்தியாலயத்தில் கல்வி கற்கும் வெனுலி லெஹென்சா என்ற மாணவியே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். அவர் முதலாம் தரத்தில் இணைத்துக்கொள்ளப்பட்ட போது ஆங்கில மொழியை மிகச் சரளமாகப் பேசும் திறமையைப் பெற்றிருந்தார். சிங்கள மொழியில் கல்வி கற்கும் அவரின் ஆங்கில புலமை வியப்பைத் தருவதாக ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். கணிதப் பாடத்திலும் அதி திறமை கொண்டுள்ள மாணவி லெஹென்சா, பல்வேறு போட்டிகளில் இலங்கைக்காக வெற்றிகளை ஈட்டித்தர முடியுமென குறிப்பிட்டுள்ளார்.

(வ-இ)

## இரு படகுகள் விபத்து மீனவர்ஒருவர்காயம்;

முல்லைத்தீவு, செப். 12

இரண்டு படகுகள் மோதி விபத்துக்குள்ளானதில் மீனவர் ஒருவர் காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை, முல்லைத்தீவு நாயாற்றுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

தொழில்நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள கறுக்குப்பனையைச் சேர்ந்த மீனவர்களின் படகு மீது கொக்குளாய் முகத்துவரப்பகுதியினைச் சேர்ந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மீனவர்களது மீன்பிடிப் படகு மோதித்தள்ளியதிலேயே விபத்து இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

(ம-ப19)

## வேளாங்கண்ணி திருவிழா

முகமாலை அன்னை வேளாங்கண்ணி மாதா தேவாலய வருடாந்தத் திருவிழா எதிர்வரும் 17 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 19ஆம் திகதி நிறைவு பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

போர்காலத்தில் ஆலய கட்டடம் அழிவடைந்தது. ஆலய கட்டடம் மீள சீரமைக்கப்பட்டு முடிவடையும் நிலையில் இவ் வருட திருவிழா பங்கு மக்களால் நடத்தப்படவுள்ளது.

(ஐ-9)

## கலந்துரையாடல்

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவில் உள்ள வட்டுவாகல் தற்காலிக பெண்கள் பாதுகாப்பு இல்லத்தின் செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

மாவட்டச் செயலாளர் க.விமலநாதன் தலைமையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இதன்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

(ஐ-222)

# மலையக மக்களுக்குநிபந்தனையற்ற ஆதரவு

## கஜேந்திரகுமார் தோழமைக்கரம்



கொழும்பு, செப். 12

மலையகத் தமிழர்களின் அடிப்படை உரிமை மற்றும் அன்றாட வாழ்வியல் கோரிக்கைகளுக்கு நாம் எப்போதும் நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவோம் என்று தெரிவித்தார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

மறைந்த ஆறுமுகம் தொண்டமானின் அஞ்சலி பிரேரணையின்போதே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மலையகத் தமிழர்களின் அரசியல் உரிமைகளுக்காக தொடக்கத்திலிருந்தே செயற்பட்ட தொண்டைமான் குடும்பத்தினரின் பங்களிப்பு மிகக் கனதியாக இருந்திருக்கின்றது. மலையகத்தமிழ் மக்கள், தமது இரத்தத்தையும் வியர்வையும் கண்ணீரையும் உழைப்பையும் அர்ப்பணித்து இந்த நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கிய போதும் அந்த மக்கள் இந்த் நாட்டினால் மிக மோசமான முறையிலேயே நடத்தப்பட்டார்கள். அந்த மக்களின் குறைகள் தீர்க்கப்படவில்லை.

மூத்த தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானால் கட்டியெழுப்பப்பட்ட தொழிற்சங்கமும், அதன் தொடர்ச்சியாக கட்டியெழுப்பப்பட்ட அரசியல் பாதையும், தொடர்ந்தும் மறைந்த ஆறுமுகம் தொண்டமானால் சரிவர முன்னெடுக்கப்பட்டிருந்தது.

கடந்த தடவை நான் நாடாளுமன்ற உறுப்பினராக அங்கம் வகித்த 2001 - 2010 வரையான காலப்பகுதியில் மறைந்த ஆறுமுகம் தொண்டமானுடன் பல தடவைகள் கலந்துரையாடியிருக்கின்றேன். குறிப்பாக தமிழ் மக்களின் மிகத் துயரமான நாட்களாக இருந்த 2005ஆம் ஆண்டில் அமைதியாகவும் கனதியாகவும் அரசுக்குள் இருந்தபடி அவர் செயற்பட்டிருந்தார்.

அந்த வகையில் மறைந்த ஆறுமுகம் தொண்டமானை மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனையகட்சிகளைச் சேர்ந்தவர்கள் மற்றும் ஆறுமுகம் தொண்டமானுடன் மாற்றுக் கருத்துக்கள் கொண்டவர்கள் கூட, தனது மக்களுக்கு உண்மையற்றவராக அவர் இருந்தார் என சொல்லமாட்டார்கள். அந்தளவுக்கு உன்னதமானவராக அவர் இருந்தார்.

இங்கு அஞ்சலி உரையாற்றிய பலர் மறைந்த ஆறுமுகம் தொண்டமான் அவர்கள் ஈழப்போராட்டத்தை வெறுத்தார் என்பதாக கருத்தை பதிவுசெய்திருந்தார்கள். அது பொய்யான தகவலாகும். அவர்கள் இருவரும் எமது ஈழப்போராட்டத்தோடு தொடர்ச்சியாக தம்மை அடையாளப்படுத்தி இணைந்து நின்றார்கள். ஈழப்போராட்டத்தில் 1972 ஆம் ஆண்டு தமிழர் ஐக்கிய முன்னணி தோற்றம் பெற்ற போது அன்றைய தமிழர் கூட்டமைப்பில் சௌமியமூரத்தி தொண்டமான் அவர்களும் அதன் ஆரம்பகர்த்தாவாக இணைந்து நின்றார். எனினும் 1976 இல் நிறைவேறிய ஈழத்தமிழ் மக்களின் தனிநாடு நோக்கிய வட்டுக்கோட்டைத் தீர்மானமானமானது, மலையகத் தமிழர்களின் அரசியல் உரிமைக்கான போராட்ட தளத்தை வேறுபடுத்தியிருந்தது. அதன் காரணமாக தமிழர் விடுதலைக்கூட்டணியில் இருந்து அவர் கட்டமைப்பு சார்ந்து விலகியிருக்க நேர்ந்தது.

மலையகத் தமிழர்களின் உரிமைகளுக்காக வேறான தளத்தில் செயற்பட்டபோதும் எப்போதுமே எமது ஈழ விடுதலைப் போராட்டம் பற்றிய நியாயப்பாடுகளை மறுதலித்தவராக மறைந்த சௌமியமூர்த்தி தொண்டமானோ அல்லது மறைந்த ஆறுமுகம் தொண்டமானோ ஒருபோதும் செயற்படவில்லை. அது போல இந்த நாடாளுமன்றில் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருக்கும் அனைத்து மலையகத் தலைவர்களும் வடக்கு கிழக்கு தமிழ் மக்களிற்கான ஆதரவை எப்போதும் தெரிவித்தே வந்திருந்தார்கள்.

அந்தவழியில் இப்போது அவர்களின் பணியை பொறுப்பெடுத்துள்ள ஜீவன் தொண்டமானுக்குப் பெரும் பொறுப்பு இருக்கின்றது. மறைந்த ஆறுமுகம் தொண்டமானின் இறுதிக்கிரியைகளில் என்னால் கலந்துகொள்ள முடியாமல் பொலிஸாரின் தடைகள் இருந்தன. எனினும் இச்சந்தர்ப்பத்தில் எமது அஞ்சலியைப் பதிவு செய்வதில் நிறைவு கொள்கின்றோம் என்றார். (ம26)


**சேல்ஸ் வாகனம் வாடகைக்கு**
டாட்டா சுப்பர்ஏசி
வாடகைக்கு
071 403 3903, 077 925 4050

**வாடகைக்கு**
Townக்கு அண்மையாக இராசாவின் தோட்ட வீதியில் கீழே 3 கடைகளும் மேலே வீடும் வாடகைக்கு
தொடர்பு:- 077 5594 179

**ஊர்க் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு**
ஒருநாள் வயதுடைய குஞ்சுகள் விற்பனைக்கு.
077 3322 433
இடம் : பண்ணாகம். சுழிபுரம்.

**சிறுநீரகம் தேவை**
சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு B+ இரத்த வகையை சேர்ந்தவரின் சிறுநீரகம் தேவைப்படுகிறது. 45 வயதிற்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்
077 104 1558, 077 316 9948

**மணிவிழா வாழ்த்து**


வீரகத்தி
சிவசுப்பிரமணியம்
சேவை விபரம்
கிராம உத்தியோகத்தர்
10.02.1982-28.01.2006
நிர்வாக கிராம உத்தியோகத்தர்
29.01.2006-12.09.2020
மனமார்ந்த சேவைக்கு உளமார விடை கொடுக்க மனை நோக்கி செல்லும் எமது நிர்வாக கிராம உத்தியோகத்தர் அவர்களின் மாண்புறு சேவையை வாழ்த்துகின்றோம். வாழ்க பல்லாண்டு.
வாழ்த்துவோர்
தென்மராட்சி பிரதேச செயலக
கிராம உத்தியோகத்தர்கள்

**கேள்வி அறிவித்தல்**
**யாழ்ப்பாணம் மாநகரசபை**
யாழ். மாநகரசபை ஆளுகைக்குட்பட்ட இருநூற்றைம்பதுக்கும் (250) அதிகமான தனியார் கடைகள். விடுதிகள் ஆகியவற்றிலிருந்து தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளை (உணவுக் கழிவுகள். உக்கக்கூடியவை. பொலித்தீன். பிளாஸ்ரிக். கண்ணாடி) மக்களுக்கு இடையூறு இல்லாமல் மூடிய வாகனத்தில் பாதுகாப்பான முறையில் அகற்றி காக்கைதீவு மற்றும் கல்லுண்டாயில் அமைந்திருக்கும் கழிவு சேர் நிலையத்திற்கு கொண்டு செல்வதற்கான கழிவு அகற்றும் சேவை வழங்குனரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர்கள் விண்ணப்பங்களை யாழ். மாநகரசபை, பொறியியலாளர் பகுதியில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்,
கேள்விப் படிவங்களை 14.09.2020 - 24.09.2020 வரையான காலப்பகுதியில் கடமை நாள்களில் பி.ப.3.00 மணிவரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1.000.00 மற்றும் வரிகளைச் செலுத்திப்
பெற்றுக்கொள்ளலாம் இத் தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
கேள்விப் படிவங்களை 25.09.2020 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு முன்னர் **ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு விடையளிக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும். அல்லது பிரதம பொறியியலாளர் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியினுள் இடுதல் வேண்டும்.
கேள்வி திறத்தல் 25.09.2020 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு கேள்விதாரர் அல்லது பிரதி நிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
**குறிப்பு** - குறித்த கழிவகற்றல் சேவை தொடர்பான முறைமையும் விளக்கங்களும் அடங்கிய ஆவணத்தினை 25.09.2020 பி.ப.2.00 மணிவரை கடமை நாட்களில் யாழ் மாநகரசபை. பொறியியலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
**ஆணையாளர்,**
**யாழ்ப்பாணம் மாநகரசபை.**
**12.09.2020**

**வேலைக்கு ஆள் தேவை**
பான்சி கடை ஒன்றிற்கு கணனி அறிவுள்ள பெண்கள் வேலைக்கு தேவை. இடம் : திருநெல்வேலி.
தொடர்புகளுக்கு:
0777480357


**மணமகள் தேவை**
யாழ் இந்து கௌரவ, 40 வயது, சொந்தமாக தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்ப்பில்லை.
தொடர்புகளுக்கு:
077 905 8615 (வைபர் & வட்ஸ்ஆப்)

**பணிப்பெண் தேவை**
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, ஆனைப்பந்தி ஆகிய இரு இடங்களில் சமையல் செய்வதற்கு பெண்கள் தேவை.
சம்பளம் 20000 - 25000 வரை
076 407 0657


**PHYSICS CLASS**
A/L - 2021, A/L - 2022
மாணவர்களுக்கான
தனிப்பட்ட மற்றும் குழு வகுப்புகள்
ஆரம்பம்
076 643 9400

**வேலைக்கு ஆட்கள் தேவை**
கோப்பாய் தெற்கு, பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள **"அனுமன் சூப்பர் சிற்றி"** எனும் வியாபார நிலையத்திற்கு வேலைக்கு பணியாளர்கள் தேவை. ஆர்வம் உடையவர்கள் நேரில் வரவும். (இருபாலாரும்)
(சனி மற்றும் ஞாயிறு 9.00-1.00 மணி வரை)
077 358 0922

**பெயர்மாற்றம்**
மருதங்குளம் வீதி, மட்டுவில் தெற்கு சாவகச்சேரியில் வசித்துவரும்
**திருமதி சின்னத்தம்பி பொன்னி**
என்னும் எனது பெயரை
**திருமதி சின்னத்தம்பி மகேஸ்வரி**
என பெயர்மாற்றம் செய்கின்றேன். இனிவரும் காலங்களில் எவ்வகை ஆவணத்திலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என தெரியப்படுத்துகின்றேன்.
சி. மகேஸ்வரி

**மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி**
**க.பாலசிங்கம்**

உதிப்பு 12 . 06 . 1957
உதிர்வு 15 . 09 . 2017
திதி: 12.09.2020
எங்கள் குடும்பத்தின் ஆணிவேரே
கண்மூடி முழிக்கு முன்னே
எம்மைவிட்டு சென்று மூவாண்டானதே
காலன் உங்களைக் காலத்தால் அழைத்த வேளை
அத்துன்பத்தை ஏற்றுக்கொள்ள எம் மனத்தால் முடியவில்லை
எம் இதயத்தில் என்றும் நீங்கள் குடியிருப்பீர்கள்
எழுதுமட்டுவாழ் தெற்கு. மனைவி

## மரண அறிவித்தல்



தோற்றம் 02 . 09 . 1955

மறைவு 09 . 09 . 2020

### கனகரட்ணம் இராசரட்ணம்

யாழ். காரைநகரைப் பிறப்பிடமாகவும் வேலணை மேற்கு 6 ஆம் வட்டாரத்தை, கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரட்ணம் இராசரட்ணம் அவர்கள் 09.09.2020 புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரட்ணம் - பாக்கியம் தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற நாகலிங்கம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பத்மராணியின் அன்புக் கணவரும், சர்மிளா, பத்மலோஜன் (ரூபன்), விஜிதரன் (விஜி), சங்கீதா, மேனகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரமணன், சிவப்பிரியா, மௌலிகா, செல்வமுருகன், சுரேந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமனும், சுந்தரலிங்கம், பரமேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பத்மாவதி (இந்திரா), துரைராஜசிங்கம், சண்முகராசன், பத்மநாதன் (இராசன்), உதயகுமாரி, லிங்கராஜன் (லிங்கம்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், திருஞானசம்பந்தர் (சம்பந்தன்) அவர்களின் அன்புச் சகலனும், லோகா, சித்ரா ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும், கிரிஷா, வருணன், கோடிஸ், தர்மிக், கஷ்வின், சாத்விக் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.09.2020 அன்று கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :

க.சுந்தரலிங்கம் (077 440 7616)
ச. புவனேஸ்வரி (077 531 4944)
து.பரமேஸ்வரி

அன்னை திரேசா லேன்,
கோப்பாய்தெற்கு,
கோப்பாய்.

## கிராம அலுவலர்களுக்கு பயிற்சி வகுப்புக்கள்


யாழ்ப்பாணம், செப். 12

கிராம அலுவலர் சேவையின் இரண்டாம் வகுப்பு அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடை தாண்டல் பரீட்சைக்கான விசேட பயிற்சிவகுப்பு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகிறது.

யாழ். பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் காலை 10.30 மணிக்கு இந்த பயிற்சி வகுப்பு ஆரம்பமாகவுள்ளது. மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்த அனைத்து கிராம அலுவலர்களும் இப்பயிற்சி வகுப்பில் பங்குபற்றி பயன்பெறலாம்.

முற்றிலும் இலவசமாக நடாத்தப்படும் இந்த பயிற்சி வகுப்பை யாழ். மாவட்ட கிராம உத்தியோகத்தர் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது. மேற்படி சங்கத்தில் அங்கத்துவம் இல்லாவிட்டாலும், வெளிமாவட்ட அலுவலர்களாக இருந்தாலும் இந்த பயிற்சி வகுப்பில் பங்குபற்றி பயன் பெறலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம121)

## 25 ஆம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் மழலையாய் 12 . 06 . 1979

விண்ணில் தெய்வமாய் 12 . 09 . 1995

### செல்வன் சிறிஸ்கந்தராஜா றமேஷ்குமார்


யா/ யூனியன் கல்லூரி ஆண்டு 11 மாணவன்

ஆண்டுகள் இருபத்தைந்து ஆனதுவோ றமேசா
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்திருந்த உத்தமனே
வானுயர் தெய்வத்துள் நீயன்று ஒன்றானாய்
நாம் விதியென்போமா? விழி நீர் சிந்தி நிற்போமா?
நேரில் வந்து ஒரு வார்த்தை கூறாயோ?
கொடியவன் குண்டு மழையால் கொன்றொழித்தானோ உன்னையன்று
பார்க்கும் இடமெல்லாம் உன்முகம் பார்த்தபடி பரிதவிக்கும்

என்றும் உன் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

## மரண அறிவித்தல்



அன்னை மடியில் 23 . 10 . 1949

இறைவன் அடியில் 08 . 09 . 2020

### ராசையா ஜெயாநிதி (கனடா)

யாழ். அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் அரியாலை, கனடா மொன்றியலை வதிவிடமாகவும் கொண்ட ராசையா ஜெயாநிதி கடந்த (08.09.2020) செவ்வாய்க்கிழமை சிவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ராசையா-ராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் (பிரபல கட்டட ஒப்பந்தகாரர்) பறுவதம் தம்பதியரின் அன்பு மருமகனும், கலைமணியின் அன்புக் கணவரும், துஸ்யந்தி, நிமலன், சுமன், டார்வின் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிறிகாந்த், மையூரி, ஜெயந்தி, சோபனா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெயமலர் மற்றும் காலஞ்சென்ற சிறிமதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான செல்வராணி (வில்வம்), மணிவாசகம் மற்றும் சண்முகநாதன், ஆனந்தி, குகானந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெனீபர், ஜெறோம், டிவேனா, நேகன், நிவின், ஜேடன், சானிக்கா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.09.2020) ஞாயிற்றுக் கிழமை பி.ப. 2.30 மணியளவில் கனடா மொன்றியலில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: த.சுரேஸ்கரன் (சுபா)
(பெறாமகன்)
077 446 9320

36, கனகரத்தினம் வீதி,
அரியாலை.

## மரண அறிவித்தல்



பிறப்பு 1934 . 04 . 17

இறப்பு 2020 . 09 . 11

### திருமதி இராசரத்தினம் கனகமணி

வீமன்காமம் தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும் கந்தரோடை (கந்தையா உபாத்தியாயர் வீதி) சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசரத்தினம் கனகமணி (11.09.2020) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பையா தெய்வானைப்பிள்ளையின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவரான சுப்பையா இராசரத்தினத்தின் அன்பு மனைவியும், சதானந்தன், கிருபானந்தன், செல்வானந்தன் (NSB திருநெல்வேலி) ஆகியோரின் அன்புத்தாயாரும், சிசிலியா, ராகினி, சுதந்தினி (NSB சுன்னாகம்) ஆகியோரின் மாமியாரும், றெஜின்-அனிலோறி, அஜிகரன், கபிசன், கரிசன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை (13.09.2020) முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கந்தரோடை சங்கப்புலம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு
077 962 1700, 021 224 0330

தகவல்:
மகன்(தயா)
கந்தரோடை.

# மண் கடத்தலில் ஈடுபட்டமைக்காக சாரதிக்கு ரூபா 2 லட்சம் தண்டம்!

கொடிகாமம், செப். 12
கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட எழுது மட்டுவாழ் பகுதியில் அனுமதிப் பத்திரம் இன்றி வெள்ளை மணல் ஏற்றிவந்த டிப்பர் சாரதிக்கு 2 லட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. கைப்பற்றப்பட்ட டிப்பரும் விடுவிக்கப்பட்டது.
கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் அவரை முற்படுத்திய போது குறித்த நபருக்கு 2 லட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ம159)

# பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு தொண்டமான் ஆதரவளித்தார்

## பிரதமர் மஹிந்த தெரிவிப்பு



கொழும்பு, செப். 12
நாட்டைப் பிரிக்கும் சக்திகளுக்கு எதிராகச் செயற்பட்ட ஆறுமுகம் தொண்டமான் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் பயங்கரவாதத்தை ஒழிக்க அரசாங்கத்திற்கு ஆதரவளித்தார் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற ஆறுமுகன் தொண்டமானின் அனுதாபப் பிரேரணை மீதான விவாதத்தின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார் என்று அவரது ஊடகப்பிரிவு அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதில் மேலும் உள்ளதாவது:
ஆறுமுகம் தொண்டமானின் மறைவு அனைத்து பெருந்தோட்ட மக்களுக்கும் போன்றே தனிப்பட்ட ரீதியில் எனக்கும் ஆழ்ந்த துயரத்தை ஏற்படுத்திய சம்பவமாகும். அவரது உயிர் பிரிவதற்கு ஒரு சில மணிநேரங்களுக்கு முன்புகூட என்னைச் சந்தித்தார். குறித்த சந்திப்பின்போதும் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வளர்ச்சி மற்றும் அவர்களின் இடர்களைக் கலைவது தொடர்பிலேயே கலந்துரையாடியிருந்தார். ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக தனது வாழ்நாளை அர்ப்பணித்த ஆறுமுகம் தொண்டமான், தோட்ட மக்கள் இடையே பயங்கரவாதச் சித்தாந்தங்கள் தோற்றம் பெற இடமளிக்கவில்லை. முப்பது ஆண்டுகாலப் போரை நிறைவுசெய்யும் மனிதாபிமானப் போராட்டத்திற்கு அது பெரும் ஆதரவாக அமைந்தது என்றார். (ப)

# குடும்ப வன்முறையில் ஈடுபட்டவர் கைதானார்





கொடிகாமம், செப். 12
கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் தொடர்ச்சியாக குடும்ப வன்முறையில் ஈடுபட்ட நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
குறித்த நபர் தொடர்ச்சியாக குடும்ப வன்முறையில் ஈடுபட்டு வந்துள்ளார். இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் மனைவி முறைப்பாடு செய்த போது பொலிஸாரால் அவர் ஏற்கனவே எச்சரிக்கை செய்து விடுவிக்கப்பட்டிருந்தார். எனினும் அவர் தொடர்ந்தும் குடும்ப வன்முறையில் ஈடுபட்டதை அடுத்து கைதுசெய்யப்பட்டார். அவர் எதிர்வரும் 25ஆம் திகதிவரை மறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ம-159)

# சனசமூக நிலையத் திறப்பு விழா

கொடிகாமம், செப். 12
கச்சாய் வடக்கு கொடிகாமம் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட ஒட்டங்கேணி சனசமூக நிலையத்திற்கான பால் காய்ச்சி படம் வைக்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 10.35 மணிக்கு இடம்பெறவுள்ளது.
ஒட்டங்கேணி பிள்ளையார் ஆலயத்தில் காலை பூஜை ஆராதனையுடன் ஆலயத்திலிருந்து படம் எடுத்து வரப்பட்டு மங்களகரமான நிகழ்வுகள் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-159)

# 9/11 நினைவலைகள்!














2001ஆம் ஆண்டு அமெரிக்காவின் இரட்டைக் கோபுரமும் அந்த நாட்டின் இராணுவத் தலைமையகமான பென்டகனும் அல் குவைதா அமைப்பால் தாக்கப்பட்டன. சுமார் 3 ஆயிரம் பேர் வரையில் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டனர். பல பில்லியன் டொலர் இழப்பை அமெரிக்கா சந்தித்தது. இந்தத் தாக்குதலின் 19ஆவது ஆண்டு நினைவஞ்சலி அமெரிக்காவில் நேற்று உருக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. (ம)

## ஹெரோய்னுடன்...

அவர்கள் உடைமையில் வைத்திருந்த ஹெரோய்ன் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டு மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-20)

## தவறான...

றான முடிவெடுத்து உயிரிழந்தார்.
இந்த யுவதியின் வீட்டுக்குச் சென்ற குழுவொன்று அவரைப்பற்றி தவறாகப் பேசியதை அடுத்து மனமுடைந்து அவர் தவறான முடிவெடுத்துள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது. கடந்த 27ஆம் திகதி எரிகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் நேற்று முன்தினம் நள்ளிரவு உயிரிழந்தார். (ம-26)

## பொறுப்பற்ற...

பேரவையின் சிறப்பு அறிக்கையாளர் அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.
உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீண்டும் நிகழாத உத்தரவாதங்களை மேம்படுத்துவது தொடர்பான முன்னாள் சிறப்பு அறிக்கையாளர் பப்லோ டி கிரேப் மனித உரிமைகள் பேரவையில் இந்த அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளார். இலங்கையில் இடைமாறுகாலகட்ட நீதித் திட்டத்திற்கு அரச பங்களிப்பின் பற்றாக்குறையைத் தவிர வேறு எதுவும் தடையாக இல்லை என்று அந்த அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.
ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் செப்ரெம்பர் அமர்வு, வரும் திங்கட்கிழமை ஆரம்பிக்கவுள்ளது. இதன்போது, இந்த அறிக்கை விவாதிக்கப்படும். இடைமாறு காலகட்ட நீதி முறையை வடிவமைத்தல் மற்றும் செயல்படுத்துவதில் இலங்கை அரசு மெதுவாக மட்டுமல்லாமல், அதை முறையாக செயற்படுத்தாமல், இறுதியில் இந்த செயல்முறையின் முழு பொறுப்பையும் எடுக்கத் தவறிவிட்டது என்று பப்லோ டி கிரேப் குறிப்பிட்டார்.
உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீண்டும் நிகழாத உத்தரவாதங்களை மேம்படுத்துவது தொடர்பான சிறப்பு அறிக்கையாளராக, பப்லோ டி கிரேப் 2017 ஒக்டோபர் 10 முதல் 23 வரை இலங்கைக்கு விஜயம் செய்தார். அரசின் அழைப்பின் பேரில், உண்மையைக் கண்டறியும் பொறிமுறையில் அரசு செய்த முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்ய, நீதி, இழப்பீடு மற்றும் மீண்டும் நிகழாத உத்தரவாதங்கள் மற்றும் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்குதல், கடந்த பெரிய மொத்த மீறல்கள் மற்றும் முறைகேடுகளுக்கு தீர்வு காணும் முயற்சிகளில் இலங்கை சமூகத்தின் செயற்பாட்டை மதிப்பிடல் அவரது நோக்கமாக இருந்தது.
தனது மதிப்பீடுகளின் அடிப்படையில் தான் தயாரித்துள்ள அறிக்கையில், இலங்கையில் இடைமாறுகாலகட்ட நீதியைப் பற்றி விவாதிக்கும் போக்கையும், மோதலால் சிங்கள மற்றும் தமிழ் சமூகங்களை மட்டுமே பாதித்தது போலவும் விவாதிக்கும் போக்கு உள்ளதாகவும், அவ்வாறு செய்வது மோதலால் பாதிக்கப்பட்டுள்ள முஸ்லிம் மற்றும் பிற மத சமூகங்களை கணக்கிலெடுக்காமல் விடும் தன்மையை ஏற்படுத்துவதாகவும் அவர் தெரிவித்தார். '1990ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதையும், அவர்களிடம் தலைமுறைகளாக இருந்த நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டதையும், பெரும்பான்மை சமூகத்திடமிருந்து அவர்கள் பெற்ற மந்தமான அரவணைப்பையும் நினைவுபடுத்த வேண்டும்' என்றும் அவர் கூறினார். பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ரத்து செய்யுமாறு அவர் பல முறை அழைப்பு விடுத்தார், உடனடியாக அதை சர்வதேச பயங்கரவாத நடைமுறைகளை கடைப்பிடிக்கும் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்துடன் மாற்றினார். சட்டத்தின் கீழ் நிலுவையில் உள்ள நீண்டகால வழக்குகளையும் அரசாங்கம் உடனடியாகக் கையாள வேண்டும் என்றும், குற்றம் சாட்டப்பட்டவரின் வாக்குமூலத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தண்டனைகளை மறுஆய்வு செய்வதற்கான ஒரு நடைமுறையை அமல்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார். (ம)

## 20 ஐ...

எதிரணிகளின் கூச்சல்களுக்கெல்லாம் வளைந்து கொடுக்கமாட்டோம் இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார். நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
'நாம் ஆட்சிக்கு மீண்டும் வந்தால் அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நீக்குவோம் என்று வாக்குறுதியளித்திருந்தோம். அந்த வாக்குறுதிக்கமைய மக்கள் எமக்கு ஆணை தந்து எம்மை ஆட்சிப்பீடத்தில் ஏற்றியுள்ளார்கள். எனவே, மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நாம் நிறைவேற்றியே தீருவோம். 19ஆவது திருத்தச் சட்டத்தால்தான் நல்லாட்சி அரசு ஓரணியில் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டது. மைத்திரி, ரணில் என இரண்டு அணிகள் ஒன்றுடன் ஒன்று முட்டி மோதி இறுதியில் அந்த ஆட்சியும் கவிழ வேண்டி வந்தது. இதை சஜித் அணியினர் எளிதில் மறந்திருக்க மாட்டார்கள். 20ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கு எதிராகக் கருத்துக்களை வெளியிட்டு வரும் சஜித் அணியினர், 19ஆவது திருத்தச் சட்டத்தால் நாட்டுக்கும் மக்களுக்கும் ஏற்பட்ட பாதகங்களையும் பகிரங்கமாகச் சொன்னால் நல்லதாக இருக்கும். எக்காரணம் கொண்டும் 20ஆவது திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்றும் தீர்மானத்திலிருந்து நாம் பின்வாங்க மாட்டோம். திருத்தங்கள் எதுவுமின்றி அதை நிறைவேற்றுவோம்' என்றார். (ம-22)

## 20 ஆவது...

இந்நிலையில் 20ஆவது திருத்தத்தில் உள்ள சில சரத்துகளுக்கு எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன. குறிப்பாக இரட்டைக்குடியுரிமை தொடர்பில் ஆளுங்கட்சிக்கு சார்பான அமைப்புகள்கூட விசனம் வெளியிட்டுள்ளன. இவ்வாறான விடயங்களை நாடாளுமன்றத்தில் குழுநிலை விவாதத்தின்போது அரசு திருத்தக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
செப்ரெம்பர் மாதத்துக்கான இரண்டாவது நாடாளுமன்றக் கூட்டத்தொடர் எதிர்வரும் 22ஆம் திகதி ஆரம்பமாகின்றது. அன்றைய தினமே நீதி அமைச்சரால் முதலாம் வாசிப்புக்கென '20' சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.
அதன்பின்னர் '20' திருத்தத்தை சட்டரீதியாக சவாலுக்கு உட்படுத்துவதற்கு ஒரு வார கால அவகாசம் வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. அதேவேளை, அரசியலமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட மூலத்திலுள்ள சில சரத்துகளை சட்டரீதியாக உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்துவதற்கு சில சிவில் அமைப்புகளும், அரசியல் கட்சிகளும்தீ ர்மானித்துள்ளன. (ம-44)

## மக்கள்...

ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு ஊற்றினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
'அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கு எதிரான எமது போராட்டத்தை மாதுலுவாவே சோபித தேரருடைய நினைவுத் தூபிக்கு முன்னால் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பித்திருக்கின்றோம். இனிவரும் நாட்களில் இந்தப் போராட்டம் மக்களை அணிதிரட்டி நாடெங்கும் முன்னெடுக்கப்படும்.
மூன்றிலிரண்டு பெரும்பான்மை என்ற மமதையுடன் ஆட்சி அதிகாரத்திலிருக்கும் ராஜபக்ச அரசு மக்கள் ஆணைக்கு மதிப்பளித்து நடக்க வேண்டும். ஜனநாயகத்துக்கு முரணான செயற்பாடுகளிலிருந்து உடனடியாகத் திருந்தி நடக்க வேண்டும். இல்லையேல் மக்கள் போராட்டத்தின் மூலம் இந்த அரசின் கொட்டத்தை அடக்குவோம்; ஆட்சியைக் கவிழ்த்தே தீருவோம்.
ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத்தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணைக்கு மாறாக இந்த அரசு செயற்படுகின்றது. அதில் ஒன்றுதான் அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டமூலம். இதற்கு எதிராக நீதிமன்றத்தையும் நாம் நாடவுள்ளோம். இந்தத் திருத்தச் சட்டமூலத்துக்கு எதிராக பௌத்த சிங்கள அமைப்புகளும் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன. எனவே, 20ஆவது திருத்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் முன்வைக்கும் திட்டத்தை இந்த அரசு உடன் வாபஸ் பெற வேண்டும்' என்றார். (ம-22)

## தெல்லிப்பழையில்...

நடந்துள்ளது.
முகங்களை மூடியவாறு பட்டா ரக வாகனத்தில் வந்த கும்பலே தாக்குதல் நடத்தியுள்ளது. வீட்டின் யன்னல் கண்ணாடிகள், வீட்டிலிருந்த தொலைக்காட்சி உள்ளிட்ட பொருள்கள், மோட்டார் சைக்கிள் என்பவற்றை அடித்து நொருக்கிய கும்பல் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக தெல்லிப்பழை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. தெல்லிப்பழை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (எ-26)

## மயானத்தில்...

பிரதிநிதிகளால் ஏ9 வீதியை மறித்து நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
நல்லூர் பிரதேச சபையின் அமர்வு முடிவடைந்த பின்னர் செம்மணி சிந்துபாத்தி இந்து மயானத்துக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் தவிசாளருடன் சென்று பார்வையிட்டனர். கிடங்குகள் வெட்டப்பட்டு மருத்துவக் கழிவுகள் அங்கு கொட்டப்பட்டிருந்தன. அரச இலட்சினையும் காணப்பட்டது.
இதனையடுத்து இதற்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி ஏ 9 வீதியில் செம்மணி வரவேற்பு வளைவுக்கு அண்மையாக வீதியை மறித்து உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். வீதியின் ஊடான போக்குவரத்து முடக்கப்பட்டது. சில நிமிடங்களில் அங்கு வந்த பொலிஸார், போராட்டக்காரர்களை பலவந்தமாக அப்புறப்படுத்தி வீதியின் ஓரத்தில் நின்று போராடப் பணித்தனர். 30 நிமிடங்கள் வரையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
சம்பவ இடத்துக்குச் சென்ற சட்டத்தரணி மணிவண்ணன், இது தொடர்பில் நல்லூர் பிரதேச சபைக்கு சட்ட உதவி வழங்கத் தயார் என்று தெரிவித்தார். (ம-ஒ,5)

## பொதுச்...

தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஓர் தேசியப் பட்டியல் ஆசனம் கிடைக்கப் பெற்றிருந்தது. அந்த ஆசனத்தை, கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடாமல், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவருக்கே தெரியாமல், சூழ்ச்சியான முறையில் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த கலையரசனுக்கு வழங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. இந்த விவகாரத்தை முன்னிறுத்தி, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டு இறுதியில் கண்டனத் தீர்மானமாக மாற்றப்பட்டு நிறைவேற்றப்பட்டிருந்தது. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே அவர் தனது பதவி விலகலை அறிவித்துள்ளார்.
கடந்த 9ஆம் திகதியிடப்பட்டு எழுதப்பட்ட கடிதத்தில், நான் கடந்த 2014ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளராகச் செயற்பட்டு வந்துள்ளேன். எனது செயற்பாடுகளுக்கு சகல வகையிலும் ஒத்துழைப்பு வழங்கிய உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.
என்னுடைய தனிப்பட்ட காரணங்களுக்காக இந்தப் பதவியை தொடர்ந்தும் வகிக்க முடியாதுள்ளேன் என்பதனைத் தெரிவித்துக் கொள்வதோடு, நான் இந்தப் பதவியை இன்றிலிருந்து துறக்கின்றேன் என்பதனையும் தங்களுக்கு அறியத் தருகின்றேன். எனவே, எனது இந்தப் பதவி துறப்பை ஏற்றுக் கொண்டு இது தொடர்பான ஏனைய விடயங்களை உரியவாறு கையாளுமாறு தங்களை மிக அன்புடன் வேண்டுகின்றேன், என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ,5)

## சபாநாயகர்...

செய்வ தற்கு அனுமதி வழங்கியதன் ஊடாக சபாநாயகர் அரசமைப்பை மீறிவிட்டார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று சபையில் சுட்டிக் காட்டினார்.
நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. அதில் ஒழுங்குப்பிரச்சினையொன்றை எழுப்பிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, '1982இல் ரெலோவின் தலைவரான குட்டி மணி என்றழைக்கப்படும் செல்வராஜா யோகச்சந்திரனின் பெயர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு பரிந்துரைக்கப்பட்டது. அவரின் பெயரை தேர்தல் ஆணையாளர் வர்த்தமானியிலும் அறிவித்தார். அது தொடர்பில் நாடாளுமன்ற செயலாளருக்கும் கடிதம் அனுப்பட்டிருந்தது.
பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் தடுத்துவைக்கப்பட்டிருந்த குட்டி மணிக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த நிலையில் அதற்கு எதிராக அவர் மேன்முறையீடும் செய்திருந்தார். எனினும், அவர் நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்வதற்கான வாய்ப்பை அப்போதைய சபாநாயகர் பாக்கீர் மாக்கார் வழங்கவில்லை. அரசமைப்பின் 89 மற்றும் 91 வது சரத்துகளுக்கமையவே அன்று சபாநாயகர் கொள்கை அடிப்படையில் இந்த முடிவை எடுத்து சிறந்த முன்னுதாரணத்தை வழங்கினார்.
இவ்வாறு வழங்கப்பட்டிருந்த முன்னுதாரணத்தையும், அரசமைப்பின் 89 மற்றும் 91 ம் சரத்துகளையும் மீறியே நீங்கள் (சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன) அண்மையில் தீர்மானம் எடுத்துள்ளீர்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களின் உரிமைகளை பாதுகாக்க வேண்டிய அதேவேளை அரசியலமைப்பை பாதுகாக்க வேண்டிய கடப்பாடும் சபாநாயகருக்கு இருக்கின்றது.என்றார். இதற்கு பதிலளித்த சபாநாயகர், 'மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்மானத்தின் பிரகாரமே நாம் செயற்பட்டோம்' என்றார். எனினும், நீதிமன்றம் தீர்ப்பு வழங்கினாலும் சுயாதீனமாக முடிவெடுக்கும் அதிகாரம் சபாநாயகருக்கு இருக்கின்றது என சஜித்தும், லக்ஷ்மன் கிரியல்லவும் சுட்டிக் காட்டினர். சபாநாயகராக இருந்த அனுர பண்டாரநாயக்கவால் எடுக்கப்பட்ட தீர்மா





# பசுமைக் கிராம வேலைத்திட்டம்

முல்லைத்தீவு,செப்.12
முல்லைத்தீவு மாவட்ட பசுமை இல்லம் அமைப்பின் ஊடாக பசுமை கிராம வேலைத்திட்டம் ஒன்று கேப்பாபிலவு பிலாக்குடியிருப்பு கிராமத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.
கிராம மக்களின் பொருளாதாரத்தை உயர்த்த வீட்டுத்தோட்ட செய்கையை ஊக்குவிக்கும் முகமாக மக்களுக்கு பயன்தரு பழமரக் கன்றுகள் வழங்கப்பட்டன.
பசுமை இல்ல இணைப்பாளர் கரிஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் பூ.உகநாதன், மாவட்ட விவசாய பணிப்பாளர் ஆர்.கோகுலதாசன், கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் க.தவராசா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஐ-19)

# தொழில் தகைமை பெற்ற 55 பேருக்கு சான்றிதழ்



முல்லைத்தீவு,செப்.12
நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையால் முன்னெடுக்கப்பட்ட தொழில் தகைமைச் செயற்றிட்டத்தில், மேசன் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.
NAITA மற்றும் NHDA ஆகியவற்றின் அனுசரணையில் முன்னெடுக்கப்பட்ட செயற்றிட்டத்தில் 55 பேர் NVQ Level சான்றிதழ்களைப் பெற்றுள்ளனர்.
நிகழ்வில் 15 பேர் தமக்கான சான்றிதழ்களைப் பெற்றுள்ளனர். ஏனையவர்களுக்கான சான்றிதழ்கள் கிராமசேவகர் ஊடாக வழங்கப்படவுள்ளன. (க-19)

# வறுமைக்கு எதிரான போரில் மீண்டெழுகிறது முல்லைத்தீவு

## பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் உலகநாதன் தெரிவிப்பு

**முல்லைத்தீவு,செப்.12**
**கொரோனா வைரஸ் காரணமாக எமது நாட்டிலும் ஏனைய நாடுகளிலும் வறுமை தாண்டவமாடக்கூடிய நிலையில், ஜனாதிபதியின் பணிப்பில் இந்த நாட்டில் வறுமைக்கு எதிரான ஒரு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அந்தப் போராட்டத்தின் மூலம் முல்லைத்தீவு மாவட்டம் மீண்டெழுகிறது என்று பிரதி மாகாண விவசாய பணிப்பளர் பூ.உலகநாதன் தெரிவித்தார்.**



முல்லைத்தீவு கேப்பாபிலவு பிலாக்குடியிருப்புக் கிராம த்தில் பசுமை இல்லம் அமைப்பால் முன்னெடுக்கப்பட்ட பசுமை கிராம வேலைத்திட்டத்தில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
முன்னர் நீர் நிறைந்த பசுமையான இடத்தில் வாழ்ந்த மக்கள் இன்று பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்து வந்தாலும் தற்போது வறுமையில் இருந்து விடுபட்டுக்கொண்டிருக்கின்றார்கள். இதற்குக் காரணம் அரசின் சௌபாக்கியா என்ற வீட்டுத்தோட்ட நிகழ்ச்சிதிட்டம். இதில் அதிகளவன மக்கள் பயனடைந்துள்ளனர்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் பத்தாயிரத்துக்கும் அதிமான வீட்டுத் தோட்டச் செய்கையாளர்களை உருவாக்கியுள்ளோம். அரசின் கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் சௌபாக்கியா உப உணவு உற்பத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 4500 விவசாயிகளுக்கு 48 மில்லியன் ரூபா பணத்தை அவர்கள் உபயோகிக்கப்பட்ட விதைக்காக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விரைவில் பணம் விவசாயிகளின் வங்கியில் வைப்பில் இட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் கொள்கைத்திட்டத்தின் அடிப்படையிலும் விவசாயத் துறைசார் மாவட்டம் என்ற அடிப்படையிலும் இந்த மாவட்டத்தின் தேவை கருதி பசுமை இல்லத்துக்கு உயிரூட்ட வேண்டிய தேவை உள்ளது. மக்களின் வருமானத்தை அதிகரிக்கவேண்டிய தேவை உள்ளது. இவற்றிள் ஊடாக முல்லைத்தீவு மாவட்டத்தை ஒரு பசுமை நிறைந்த மாவட்டமாக மாற்றுவோம்-என்றார்.
இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய மாவட்ட விவசாய பணிப்பாளர் ஆர்.கோகுலதாசன் தெரிவித்ததாவது;
2006 ஆம் ஆண்டிற்கு முன்பு சுயசார்பு பொருளாதாரம் படிப்படியாகக் கட்டி எழுப்பப்பட்டு வந்தது. அது உருக்குலைந்து போனது. தற்போது நாட்டில் ஜனாதிபதி பதவி ஏற்றதன் பின்னர் நாட்டில் சுயசார்புப் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பவேண்டும் என்று செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார். அதற்கமைய பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன-என்றார்.
(ஐ-19)



அம்பு எய்தல் விளையாட்டின் அறிமுக நிகழ்வு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றது. இதில் 400 க்கும் அதிகமான மாணவர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றினர்.
(ஐ-222)

**கடை வாடகைக்கு**
119, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மூன்று மாடிக் கட்டடம் வாடகைக்கு உண்டு.
021 205 1131, 077 546 1693

**மேல் வீடு விற்பனைக்கு/வாடகைக்கு**
யாழ். கடற்கரை வீதி, தொழில்நுட்பக்கல்லூரிக்கு அருகில் மேல் வீட்டுடனான ஆதனம் விற்பனைக்கு/ வாடகைக்கு உண்டு. அளவு 2 பரப்பும் 6 குளியும்
தொடர்பு: 077 691 7030
(காலை 9 - 12 வரை, மாலை 6 - 9 மணிவரை)

**Win Repair**
பல விதமான குளிர்சாதனப் பெட்டிகளும் A/C களும் உங்கள் வீட்டிற்கே வந்து திருத்திக் கொடுக்கப்படும்.
தொடர்பு:077 964 8942

**தாதிய உதவியாளர் தேவை**
**சன்றைஸ் பற்சிகிச்சை**
நிலையத்திற்கு பெண் உதவியாளர் தேவை. 17.09.2020 வியாழக் கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு நேரில் சமுகம் தரவும்.
077 934 7687,
021 320 9764

**PROCUREMENT NOTICE**
Ministry of Skills Development and Vocational Training
Sri Lanka German Training Institute – Kilinochchi
Invitation for Bids (IFB)

The Chairman of the Procurement Committee on behalf of Director principal of Sri Lanka German Training Institute (SLGTI) now invites sealed bids from eligible and qualified bidders for construct the fence in SLGTI – Kilinochchi

| Description | Qty | Non-Refundable fee |
|---|---|---|
| 1. Fencing the SLGTI Premises | 1100 lm | Rs. 1000.00 |

1. Bidding will be conducted through Reginal Competitive Bidding (RCB)
2. Interested eligible bidders may obtain further information from the office of the Director Principal, Sri Lanka German Training Institute (SLGTI), Ariviyal Nagar, Kilinochchi, and inspect the bidding documents at the address given above from 12/09/2020 up to 28/09/2020 during 09:00 hrs on to 15:00 hrs on working days. Tel: 021/2060137, Fax: 021-2060138.
3. Requirements are included in the Bidding Documents.
4. A complete set of Bidding Documents in English language for each tender may be purchased by interested Bidders on submission of a written application to Accountant, Sri Lanka German Training Institute (SLGTI), Ariviyal Nagar, Kilinochchi from 12/09/2020 up to 28/09/2020 during 09:00 hrs on to 15:00 hrs on working days upon payment of a non-Refundable fee.
5. Sealed Bids for each tender shall be delivered separately in ORIGINAL and COPY address to the Chairman Department Procurement Committee, Sri Lanka German Training Institute (SLGTI), Ariviyal Nagar, Kilinochchi on or before 2.00pm on 28/09/2020. Bids will be opened soon after the closing in the presence of the bidder/ bidders' representatives who choose to attend. Late Bids will be rejected and not accepted.
6. The Bids shall be valid until 30/11/2020.
7. Procurement Committee has the right to reject all the bids, part of the bids or cancel the entire tender. Further, they reserve all the rights with respect to the procurement.

**Director/Principal,**
**Sri Lanka German Training Institute (SLGTI),**
**Ariviyal Nagar, Kilinochchi**


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.09.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Registered as a Newspaper
பக்கங்கள்: 24

# சஞ்சீவி

கொல் மனிதரை; கொளுத்து கோயில்களை; இன்னுமிருக்கும்
நல் காடுகளை வெட்டியெறி; கொலையாளிக்கு மகுடமிடு— வல்லசுரராகி
ஓடாக உழைப்போர் குருதி குடி; நாட்டையே விற்றுத் தொலை பின்னும்
மாடெங்கள் மாடே மற்றெல்லாம் மயிரே என்று கூவிடு!
— ஓட்டுக்குழச் சுவாமிகள்

மலை 33: | வள்ளுவர் ஆண்டு : 2051 | ஆவணி 27 | சனிக்கிழமை (12.09.2020) | சிகரம் : 13



# தலைவர் ஒருபோதும் அஞ்சியதில்லை

## புலிகளின் தலைவர் பிரபாகரனின் மெய்ப்பாதுகாவலரின் வாக்குமூலம்

**விடுதலைப்புலிகள் அமைப்பின் தலை வர் பிரபாகரனது முக்கிய பாதுகாப்புப் போராளியாக நீண்ட காலம் செயற்பட்ட ரகு என்ற இயக்கப் பெயர் கொண்டவர் செல்வராஜா தேவகுமார். இவர் வன்னியில் இடம்பெற்ற இறுதிப் போரின்போது அங்கிருந்து வெளியேறி, அரசின் இடம்பெயர்ந்தோர் முகாமில் சாதாரண பொதுமகன் போன்று மறைந்திருந்தாலும், கடைசியில் அரச புலனாய்வுப் பிரிவினால் பிடிக்கப்பட்டு, புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டவர். 'லங்காதீப' சிங்களப் பத்திரிகையின் ஊடகவியலாளர் ஸ்ரீநாத் பிரசன்ன ஜயசூரியவுக்கு அவர் வழங்கிய நேர்காணலின் தமிழாக்கத்தின் முதற்பகுதி கீழே தரப்படுகிறது.**

தமிழில் வீ.எஸ்.ரீ.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் தமது பாதுகாப்புக்காக தமக்கு விசுவாசமான, பயிற்சி பெற்ற விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களை நியமித்திருந்தார். தமது தலைவருக்கான பாதுகாப்புத் தொடர்பில் அவர்கள் மிகுந்த அக்கறையும் அவதானமும் காட்டிச் செயற்பட்டு வந்தனர். விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிராக அரசின் பாதுகாப்புப் படையினர் தமது செயற்பாடுகளைத் தீவிரப்படுத்தியதைய டுத்து பிரபாகரனது பாதுகாப்புக்கென ஆயிரம் பேர் வரையிலான விசேட பாதுகாப்புப் பிரிவொன்று விடுதலைப் புலிகள் அமைப்பில் உருவாக்கப்பட்டிருந்தது. அந்த அணியினர் கொமாண்டோப் பயிற்சி பெற்றிருந்தனர். பிரபாகரனது தனிப்பட்ட பாது காப்புக்கென விசேடமாக உருவாக்கப்பட்டிருந்த அந்த பிரிவுக்கென அந்தந்த வேளை களில் வெவ்வேறு தலைவர்களும் செயற்பட்டிருந்தனர்.



### மிதிவெடியால் வந்த வினை

அந்த வகையில் பிரபாகரனது தனிப்பட்ட பாதுகாப்புப் போராளியாகச் செயற்பட்டு , பின்னர் 1996ஆம் ஆண்டு முதல் 2007ஆம் ஆண்டுவரை அந்தப் பாதுகாப்பு அணிக்கு தலைமைத்துவம் வழங்கிச் செயற்பட்டு வந்தவர் செல்வராஜா தேவகுமார் என்ற விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினராவார். அவர் ரகு என்ற இயக்கப் பெயரால் அடையாளப்படுத்தப்பட்டு வந்தார். மிதிவெடியொன்றில் அகப்பட்டு காலின் கீழ்ப் பாதத்தை இழந்து அங்கவீனராக நேர்ந்ததையடுத்து பிரபாகரனது பிரத்தியேக பாதுகாப்பு அணியின் தலைவர் பொறுப்பிலிருந்து விலக வேண்டிய நிலை தேவகுமாருக்கு ஏற்பட்டது. ஆயி னும் விடுதலைப் புலிகள் அமைப்பில் தொடர்ந்தும் அவர் செயற்பட்டு வந்தார்.



வன்னியில் அரச படையினருக்கும் விடுத லைப்புலிகளுக்கும் இடையேயான கடைசிப் போர் வேளையில் தேவகுமார் சாதாரண பொதுமக்களுடன் சேர்ந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழைந்து விட்டார். தான் பிரபாகரனது மெய்ப்பாதுகாவலராகச் செயற்பட்ட போராளி என்பதை மறைத்து தன்னைச் சாதாரண பொதுமக்களில் ஒருவராகக் காட்டிக் கொண்டு வவுனியா இராமநாதன்புர இடம்பெயர்ந்தோர் முகாமில் தேவகுமார் இடம்பிடித்துக் கொண்டார். ஆயினும் அவ்வேளையில் வடமாகாண சிரேஷ்ட உதவிப் பொலிஸ்மா அதிபர் நிமல் ஹேவகே யின் கீழ் செயற்பட்ட புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் உத்தியோகத்தரான ஏ.ஜே.சுல்பிகாரினால் தேவகுமார், விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனது தனிப்பட்ட பாதுகாப்புப் பிரிவில் செயற்பட்ட ஒருவரென அடையாளம் காணப்பட்டார்.

### மீட்கப்பட்ட ஆயுதங்கள்

அது குறித்து சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு தகவல் வழங்கிய பின்னர், தேவகுமாரை பொலிஸ் தரப்பினர் கைது செய்தனர். அதனையடுத்து பிரபாகரன் தொடர்பாக பல்வேறு தகவல்களைத் தேவகுமார் மூலம் பொலிஸ் தரப்பினரால் பெற்றுக் கொள்ள முடிந்ததோடு, விடுதலைப் புலிகளால் வெவ்வேறு இடங்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் மற்றும் வெடி பொருட்கள் குறித்த தகவல்களையும் பொலிஸ் தரப்பினர் கறந்து கொண்டனர். பொலிஸார் ரகுவிடம் (தேவகுமார்) மேற்கொண்ட விசாரணைகள் மூலம் கிடைத்த தகவலின் அடிப்படையில்




புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

விடுதலைப் புலிகளால் மறைத்து வைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான ஆயுதங்களையும் பொலிஸ் தரப்பினரால் கைப்பற்ற முடிந்தது. இதில் சிரேஷ்ட உதவிப் பொலிஸ்மா அதிபர் நிமல் ஹேவகே குறிப்பிடத்தக்க அளவு பங்களிப்பு வழங்கியிருந்தார். தமது 40 ஆண்டுகால பொலிஸ் சேவையில், ஏறக்குறைய 30 ஆண்டுகள் காலம் விடுதலைப் புலிகளது பயங்கரவாத செயற்பாடுகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் செலவிட்ட நிமல்ஹேவகே தற்போது சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

**பிரபாகரனின் பிஸ்டல்**

(பிரபாகரனது முக்கியமான பாதுகாப்புப் போரா ளியாகச் செயற்பட்ட ரகு (தேவகுமார்) குறித்த ஓய்வு பெற்ற சிரேஷ்ட உதவிப் பொலிஸ்மா அதிபர் நிமல் ஹேவகே தெரிவித்த கருத்துக்கள் இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன.)

"ரகுவை நாம் பொறுப்பேற்ற வேளையில் பிரபாகரன் உயிருடன் இருந்தார். இதனால் நாம் ஆளில்லாத விமானத்தைப் பயன்படுத்தி வானத்தில் இருந்து எடுத்த புகைப்படத்தை ரகுவிடம் காட்டி பிரபாகரன் மறைந்திருக்கும் இடத்தை அடையாளம் கண்டுபிடிக்க கடும் முயற்சி மேற்கொண்டோம். கடும் பாதுகாப்பு ஏற்பாடுகளின் மத்தியில் பிரபாகரன் மறைந்து வாழ்ந்து வந்ததால் ரகுவால் அந்த இடத்தை அடையாளம் காண முடியாது போய்விட்டது. கடைசியில் இறுதிப் போரில் பிரபாகரன் உயிரிழக்க நேரிட்டமை யாவரும் அறிந்த தொன்றே. ஆயினும் பிரபாகரனது முக்கிய பாதுகாப்புப் போராளி ரகு தெரிவித்த தகவல்கள் பிரகாரம் விடுதலைப் புலிகளால் வெவ்வேறு இடங்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான ஆயுதங்களை எம்மால் கைப்பற்ற முடிந்தது. இவற்றில் 'M 16' ரக கைத்துப்பாக்கி (பிஸ்டல்)மற்றும் குண்டு துளைக்காத மேலங்கி ஆகியவை முக்கியமானவையாகும். 004 என அடையாளமிடப்பட்டிருந்த M 16'ரக கைத்துப்பாக்கி முள்ளிவாய்க்கால் பகுதியில் நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது. அது ஒரு அமெரிக்க தயாரிப்பு கைத்துப்பாக்கியாகும். அதே போன்று பிரபாகரனால் பயன்படுத்தப்பட்ட குண்டு துளைக்காத மேலங்கி பிரபாகரனுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட, உறுதி மிக்க மேலங்கியாகக் கருதப்பட்டது.

**இரு வெள்ளை நிறவான்கள், மற்றுமொரு பஜீரோ ரக ஜீப் என்பவை பிரபாகரனது போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்பட்டன. இம்மூன்று வாகனங்களும் ஒரே நேரத்தில் ஒன்றன்பின் ஒன்றாக பயணம் மேற்கொள்வதோடு, அவற்றில் எந்த வாகனத்தில் தான் பயணிப்பது என்பதை பிரபாகரன் கடைசி நிமிடத்திலேயே முடிவு செய்வார். எங்கு போகிறோம் என்பதை அவர் ஒருபோதும் எம்மில் எவரிடமும் தெரிவிப்பதில்லை. தனது பாதுகாப்புக் குறித்து அவர் மிகுந்த அவதானம் செலுத்தினார். தனது பாதுகாப்புக்காக மற்றவர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை அவர் ஒருபோதும் அனுமதிப்பதில்லை.**



தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்படும் 88 மேலங்கிகளும் எம்மால் கைப்பற்றப்பட்டன. இறுதிப் போரின் போது அரச படைகளின் கைகளில் உயிருடன் பிடிபடாது தம்மைத் தாமே வெடிக்கவைத்து தற்கொலை செய்து கொள்ளவதற்காக அவை புலிகளது சிரேஷ்ட உறுப்பினர்கள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததாக ரகு தெரிவித்தார். அவை மட்டுமன்றி அதி சக்திவாய்ந்த இரண்டாயிரம் கிலோ வரையிலான வெடிமருந்துகளும் அங்கிருந்து பாதுகாப்புப் படையினரால் கைப்பட்டிருந்தன."

**பழிவாங்கவே புலியானேன்**

(ஓய்வு பெற்ற சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிமல்ஹேவ கேயின் தொடர்புபடுத்தலூடாக முல்லைத்தீவு பகுதியில் வைத்து ரகு என்ற அந்த முன்னாள். போராளியை சந்தித்துப் பேச சந்தர்ப்பம் வாய்த்தது.

"ரகு" பிரபாகரனது மூக்கிய பாதுகாப்புப் போராளியாக பல வருடங்கள் செயற்பட்டிருந்தாரேயொழிய,. அவர் சாதாரண பொதுமக்களையோ அல்லது இராணுவ வீரரெவரையோ படுகொலை செய்வதில் சம்பந்தப்பட்டிருக்கவில்லை. யாழ்ப்பாணப் பகுதியில் மரக்கறி விற்பனை நிலையமொன்றை நடத்தி வரும் ரகு, தமது மனைவி மற்றும் இருபிள்ளைகளுடன் மிகுந்த பொருளாதார சிரமங்கள் மத்தியில் வாழ்க்கையை ஓட்டி வருகிறார்.)

"நான் பாடசாலை சென்ற காலகட்டத்தில், யாழ் மாவட்டம் இந்திய இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது. நான் இந்திய இராணுவத்தினர் நிலை கொண்டிருந்த முகாமொன்றைக் கடந்தே பாடசாலைக்குச் சென்றுவர வேண்டியிருந்தது. தினமும் அந்த முகாமைக் கடக்கும் போது, இந்திய இராணுவ வீரர்கள் நான் அதே வழியில் மறுநாள் வரும் போது தமக்குச் சிகரட் வாங்கி வந்து தரவேண்டுமென வற்புறுத்துவர். அவ்விதம் வாங்கிச் செல்லாவிட்டால் அடித்து உதைத்து துன்புறுத்துவர். சிகரெட்டுக்காகப் பணமும் தரமாட்டார்கள். காசு கொடுத்து வாங்கிச் செல்ல எனது குடும்பத்தில் நிதி வசதியும் கிடையாது. என்னைப் போன்று பாடசாலை செல்லும் பல சிறுவர்களது நிலையும் அது தான். அந்த முகாமூடாகச் செல்லாமல் பாடசாலை செல்ல வேறு பாதையும் கிடையாது. இத்தகைய சிக்கலால் ஏழாம் வகுப்புடன் எனது பாடசாலைக் கல்விக்கு முற்றுப் புள்ளி வைக்க நேர்ந்தது. இதனால் இந்திய இராணுவத்தினர்மீது எனக்கு கடும்வெறுப்பும், கோபமும் உண்டாயின. பாடசாலைக்குச் செல்லாமல் வெறுமனே வீட்டில் பொழுதைப் போக்கிக் கொண்டிருந்த எனக்கு வாழ்க்கையே வெறுத்தது போன்ற உணர்வு. அந்தவேளையில் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஆட்களைச் சேர்க்கிறார்கள் என்ற செய்தியைக் கேள்விப்பட்டு பெற்றோருக்குத் தெரியாமல் வீட்டை விட்டு வெளியேறி புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்டேன். சந்தர்ப்பம் வாய்த்தால் இந்திய இராணுவத்தினரைப் பழி வாங்க வேண்டும் என்ற மனக்குரோதத்துடன் தான் நான் புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்டேன்.

**கொமாண்டோ அணிக்கு தெரிவு**

விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்து கொண்ட எனக்கு 'ரகு' என இயக்கப் பெயர் வைக்கப்பட்டது. அன்று முதல் ரகு என்ற பெயரில்தான் நான் அழைக்கப்பட்டேன். பயிற்சியின் பின்னர் விடுதலைப்புலிகளது முகாம்களுக்கான காவல், பதுங்குகுழிகள் வெட்டுதல், விடுதலைப்புலிகளது முகாம்களில் இருக்கும் போராளிகளுக்கு உணவு எடுத்துச் சென்று வழங்குதல் போன்ற சிறு சிறு பணிகளிலேயே நான் ஈடுபடுத்தப்பட்டேன்.

சில ஆண்டுகளின் பின்னர் புலிகளின் கொமாண்டோப் போராளிகளுக்கான பயிற்சிக்கு நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். அந்தப் பயிற்சி மிகச் சிரமமானதொன்று. நான்கு மாதங்கள் காலப் பயிற்சியின் முடிவில் புலிகளின் தலைவர் பிரபாகரனது பாதுகாப்பு அணிக்கான பயிற்சிக்காக 750 பேர் வரையிலான போராளிகளைத் தேர்ந்தெடுத்தனர். கொமாண்டோ அணியில் திறமை காட்டியவர்களைத்தான் வி.ஐ.பி பயிற்சிக்குத் தேர்ந்தெடுப்பர். நானும் அந்தப் பயிற்சிக்குப் தெரிவாகி நான்கு மாத கால பயிற்சியை நிறைவு செய்தேன். அந்தப் பயிற்சியிலும் திறமை காட்டிய நூறு பேரையே தலைவரின் தனிப்பட்ட பாதுகாப்பு அணியில் சேர்த்துக் கொண்டனர். அவர்களில் நானும் ஒருவனாகத் தெரிவானேன்.

**கடுமையான தண்டனைகள்**

பிரபாகரனது அந்த விசேட பாதுகாப்பு அணியில் தெரிவானோரது குடும்பப் பின்னணி குறித்து புலிகளது புலனாய்வுப் பிரிவு பரந்துபட்ட விதத்தில் தகவல்களைச் சேகரித்தது. எமது குடும்ப உறுப்பினர்களில் எவராவது வேறு தமிழ்ப் போராட்டக் குழுக்களுடன் தொடர்புகள் எவற்றையாவது பேணுகிறார்களா எனத் தீவிர விசாரணைகளை புலிகளது புலனாய்வுப் பிரிவு மேற்கொண்டது. எங்களது நடத்தைகள் குறித்தும் விரிவான தகவல்கள் திரட்டப்பட்டன. அதன் பின்னரே தலைவரது தனிப்பட்ட பாதுகாப்புப் பணியில் நாம் இணைத்துக்கொள்ளப்பட்டோம். எங்களது அணிக்கென கடும் சட்டதிட்டக் கட்டுப்பாடுகள் வகுக்கப்பட்டிருந்தன.

மதுபாவனை,புகைத்தல்,வெற்றிலை மெல்லும் பழக்கம் போன்றவை எமது அமைப்பின் போராளிகளுக்குத் தடை செய்யப்பட்ட பழக்கங்களாகும்.மதுபாவித்து அகப்பட்டுக் கொண்டால் நிச்சயம் மரண தண்டனைதான்.ஏனைய கெட்ட பழக்கங்களுக்கும் தண்டனையுண்டு.வன்னி இறுதிப் போர் ஆரம்பித்த பின்னர் 750 பேர் வரையிலான விசேட பாதுகாப்புப் பிரிவினர் பிரபாகரனது பாதுகாப்புக்காகப் பயன்படுத்தப்பட்டனர். அந்தப் படை யணியின் பொறுப்பாளனாக நான் செயற்பட்டேன்.

இரு வெள்ளை நிற வான்கள், மற்றுமொரு பஜீரோ ரக ஜீப் என்பவை பிரபாகரனது போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்பட்டன.

இம்மூன்று வாகனங்களும் ஒரே நேரத்தில் ஒன்றன் பின் ஒன்றாக பயணம் மேற்கொள்வதோடு அவற்றில் எந்த வாகனத்தில் தான் பயணிப்பது என்பதை பிரபாகரன் கடைசி நிமிடத்திலேயே முடிவு செய்வார். எங்கு போகிறோம் என்பதை அவர் ஒருபோதும் எம்மில் எவரிடமும் தெரிவிப்பதில்லை. தனது பாதுகாப்புக் குறித்து அவர் மிகுந்த அவதானம் செலுத்தினார். தனது பாதுகாப்புக்காக மற்றவர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை அவர் ஒருபோதும் அனுமதிப்பதில்லை.

**தீயில் எரிந்த தலைவரின் வாகனம்**

அதன் பின்னரான காலகட்டத்தில் பிரபாகரன் என்னைத் தனது முக்கிய பாதுகாப்பாளராக நிய மித்திருந்தார். என் மீது அவர் கடும் நம்பிக்கை வைத்தி ருந்தார். நான் அவருக்காக உயிரையும் கொடுப்பேன் என அவர் நம்பினார். எம்மிருவர் மத்தியில் நல்ல புரிந்துணர்வு நிலவியது. ஒரு சமயம் தலைவர் பயணித்த வாகனம் திடீரெனத் தீப்பற்றிக் கொண்டது. அவர் மயிரிழையில் உயிர்தப்பிய போதிலும் அந்தச் சம்பவத்தால் அவர் தடுமாற்றமோ ,அச்சமோ அடையவில்லை. அந்த அளவுக்கு அவரிடம் அச்ச உணர்வு ஒருபோதும் இருந்ததில்லை.

1987ஆம் ஆண்டில் வடமராட்சியில் புலிகள் மீதான தாக்குதலின்போது இலங்கை அரச படைகளிடம் தலைவர் பிரபாகரன் அகப்படவிருந்த நிலையில் இந்திய மத்திய அரசின் தலையீட்டினால் தன்னைப் படையினரால் கைது செய்ய முடியவில்லை என அவர் எம்மிடம் கூறியிருந்தார் 2001ஆம் ஆண்டில் இலங்கை அரசின் ஆழ ஊடுருவும் படையணி தலைவர் பிரபாகரனை இலக்கு வைத்து மேற்கொண்ட கண்ணிவெடித் தாக்குதலில் அவரது வாகனம் சேதமுற்றதுடன் அவரது பாதுகாப்புப் போராளியொருவரும் உயிரிழக்க நேரிட்டது. ஆயினும் குறித்த வாகனத்தில் அந்த வேளை தலைவர் பிரபாகரன் பயணிக்காததால் அவரது உயிருக்கு ஆபத்தேதும் ஏற்படவில்லை .

**நான் உண்ட பின்னே தலைவருக்கு உணவு**

தலைவர் பிரபாகரனது உணவைத் தயாரிக்க மூன்று சமையற்காரர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் தயாரிக்கும் உணவுகளில் சிறிதளவை முதலில் நானே உண்டு பரீட்சித்துப் பார்ப்பது நடைமுறையாயிருந்தது. அவரது உணவில் எவராவது விஷம் கலந்து விடக் கூடும் என்பதனாலேயே இத்தகைய முன்னேற்பாட்டு பாதுகாப்பு நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டது.

அரச படையினரது ஆழ ஊடுருவும் படையணி வன்னிப் பகுதிக்குள் ஊடுருவி தாக்குதல்களை மேற்கொள்ள ஆரம்பித்ததையடுத்து விடுத லைப் புலிகள் உஷாரடைந்தனர். எந்த வேளையிலும் அந்தப் படையணியினரால் தாம் தாக்குதல்களுக்கு உள்ளாகலாம் எனக் கருதி பிரபாகரன் உட்பட்ட விடுதலைப்புலிகளது உயர்மட்டத் தலைவர்கள் தமது போக்குவரத்துக்களை இயன்ற அளவுக்குக் கட்டுப்படுத்திக்கொண்டனர். (தொடரும்)

# இந்தியா பதின்மூன்றாவது திருத்தத்தை பாதுகாக்குமா?



○ நிலாந்தன்

நாடாளுமன்றத் தேர்தலுக்கு அடுத்த நாள் யாழ்ப்பாணத்தில் உள்ள தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் நானும் யாழ் பல்கலைக்கழக அரசறிவியல் துறைத் தலைவர் கலாநிதி கணேசலிங்கமும் கலந்து கொண்டோம். அதன்போது பதின்மூன்றாவது திருத்தத்தை அரசாங்கம் நீக்கினால் அதை இந்தியா தடுக்குமா என்று உரையாடப்பட்டது. அதற்கு கணேசலிங்கம், ஏற்கனவே இந்தியா வடக்கு கிழக்கு இணைப்பு பிரிக்கப்பட்ட பொழுது அதை எதிர்க்கவில்லை எனவே இனிமேலும் 13ஆவது திருத்தத்தில் கைவைத்தால் இந்தியா எதிர்க்கும் என்று எப்படி எடுத்துக் கொள்வது ?என்று கேட்டார்.

அரசாங்கம்13 ஆவது திருத்தத்தை அகற்றக் கூடும் என்ற பேச்சு பலமாக அடிபடுகிறது. ராஜபக்சக்கள் இந்தியாவுக்கான விசேட அந்தஸ்துடைய ஒரு தூதுவராக மிலிந்த மொரகொடவை நியமித்து இருக்கிறார்கள். இவர் தேர்தலுக்கு முன்னரே 13ஆவது திருத்தத்தை நீக்க வேண்டும் என்று கூறத் தொடங்கி விட்டார். மேலும், புதிய அமைச்சரவையில் மாகாணசபைகளுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டிருக்கும் அட்மிரல் வீரசேகர மாகாண சபை முறைமையை ஏற்றுக் கொள்ளாதவர். எனவே இந்த இரண்டு நியமனங்களுக்கு ஊடாகவும் பார்த்தால், ராஜபக்சக்கள் 13 இல் கை வைப்பார்களா என்ற சந்தேகம் எழுகிறது. அவ்வாறு அவர்கள் 13இல் கை வைத்தால் அதை இந்தியா தடுக்குமா?



கடந்த சுமார் 34 ஆண்டுகள் கால அனுபவத்தின் அடிப்படையில் பார்த்தால் இந்தியா அதை எதிர்க்கும் என்று நம்பத்தக்க நிலைமைகள் குறைவாகவே காணப்படுகின்றன. அந்த அனுபவங்களை இங்கு சுருக்கமாக தொகுத்து பார்க்கலாம்.

பதின்மூன்றாவது திருத்தம் இந்திய-இலங்கை உடன்படிக்கையின் பிரகாரம் உருவாக்கப்பட்டது. இந்திய இலங்கை உடன்படிக்கை எனப்படுவது இனப்பிரச்சினைக்குத் தீர்வாக உருவாக்கப்பட்டது என்று கூறப்பட்ட போதிலும், அதில் இனப்பிரச்சினையில் ஒரு முக்கிய தரப்பாகிய தமிழர் தரப்பு கையெழுத்திடவில்லை. அப்படி என்றால், அதை எப்படி இனப்பிரச்சினைக்கான ஒரு தீர்வு என்று எடுத்துக் கொள்வது? இவ்வாறு தமிழர்களை ஒரு தரப்பாகக் கொள்ளாமல் இந்தியாவும் இலங்கையும் மேற்கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் உருவாக்கப்பட்டதே யாப்பின் 13வது திருத்தம். அது மாகாண சபைகளை உருவாக்குவதற்கான திருத்தம் ஆகும்.

எனினும் இந்திய-இலங்கை உடன்படிக்கை எனப்படுவது பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் மட்டும் அல்ல அதற்கும் அப்பால் அந்த உடன்படிக்கையின் இதயமானது இரண்டு தலைவர்களுக்கும் இடையே பரிமாறப்பட்ட கடிதங்களில் தான் இருக்கிறது என்று கூறுவோரும் உண்டு. அந்த உடன்படிக்கையின் பின்னிணைப்பாக அக் கடிதங்கள் காணப்படுகின்றன. அக்கடிதங்களின் பிரகாரம் இந்தியாவின் நலன்களுக்கு விரோதமாக எந்த ஒரு தரப்பும் இலங்கைத் தீவைப் பயன்படுத்த முடியாது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த உடன்படிக்கை எழுதப்பட்ட காலம் கெடுபிடிப் போர் இருந்தது. கெடுபிடிப் போரின் இறுதிக் கட்டத்தில் எழுதப்பட்ட ஓர் உடன்படிக்கை. அது அரசுகளுக்கு இடையிலானது. எனவே அது நிரந்தரமானது என்று கூறுவோரும் உண்டு. ஆனால் 2009க்கு பின்னிருந்து இலங்கைத் தீவு வேகவேகமாக சீனமயப் பட்டு வருகின்றது. இதன் விளைவாக இப்பொழுது இச்சிறிய தீவின் வரைபடம் மாற்றப்பட்டு விட்டது. அதன் பாரம்பரிய அடையாளங்களுக்கு பதிலாக தாமரை மொட்டு கோபுரமே அதன் அடையாளமாக மாறியிருக்கிறது. அதாவது சீன மயமாதல் எனப்படுவது இலங்கைத்தீவின் வரைபடத்தையும் அதன் பாரம்பரிய அடையாளத்தையும் மாற்றி விட்டது. இச்சிறிய தீவின் வரலாற்றில் முன்னெப்போதும் இந்த அளவுக்கு சீனர்களின் பிரசன்னமும் செல்வாக்கும் காணப்பட்டதில்லை.அப்படி என்றால் இந்திய இலங்கை உடன்படிக்கையின் பிரகாரம் இது எவ்வாறு அனுமதிக்கப்பட்டது?

இங்கு இரண்டு கேள்விகள் எழுகின்றன. ஒன்று, இந்திய-இலங்கை உடன்படிக்கை காலாவதியாகி விட்டதா? இரண்டாவது கேள்வி சீனாவின் பிரசன்னத்தை இந்தியா தனது நலன்களுக்கு பாதகமானதாகப் பார்க்கவில்லையா?

எனவே கூட்டிக் கழித்துப் பார்த்தால் இந்திய-இலங்கை உடன்படிக்கையின் இதயமான பகுதி என்று வர்ணிக்கப்படும் கடிதங்களில் கூறப்பட்ட விடயங்களை மீறி இலங்கைத் தீவு சீனமயப்பட்டு விட்டது. இத்தகைய பொருள்படக் கூறின் இந்தியஇலங்கை உடன்படிக்கை காலாவதியாகி விட்டது என்று கூறலாமா? இன்னும் கூர்மையாகச் சொன்னால் அந்த உடன்படிக்கையின் ஒரே மிஞ்சியி ருக்கும் உயிருள்ள எச்சம் அல்லது பதாங்க உறுப்பு, மாகாணசபைகள்தான் எனலாமா? இது முதலாவது.

இரண்டாவது, அந்த உடன்படிக்கையின் பிரகாரம் உருவாக்கப்பட்ட மாகாண சபை இன்று வரையிலும் அதன் முழுமையான அதிகாரங்களைப் பெறவில்லை. அதற்குப் பின் தொடர்ச்சியாக வந்த எந்தவொரு அரசாங்கமும் மாகாண சபைகளுக்கு காணி பொலிஸ் அதிகாரங்களை வழங்கவில்லை. முதலாவது வடக்கு கிழக்கு இணைந்த மாகாண சபையின் முதலமைச்சராக இருந்த வரதராஜபெருமாள் ஒரு முறை சொன்னார் “இந்திய மாநில கட்டமைப்பை ஒத்த ஒரு மாகாண கட்டமைப்புத்தான் 13ஆவது திருத்தத்தில் உள்ளது” என்று. ஆனால் நடைமுறை அப்படியல்ல. தொடர்ச்சியாக வந்த அரசாங்கங்கள் மாகாணத்திலிருந்து அதிகாரங்களை எடுத்துக் கொண்டன. அதுமட்டுமல்ல உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விஷயங்க ளையும் கூட அதாவது, காணி பொலிஸ் அதிகாரங்களை அவர்கள் மாகாணத்துக்கு வழங்கவே இல்லை.

அதிலும் குறிப்பாக கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பின் இந்தியாவுக்கு மேற்கொண்ட முதலாவது விஜயத்தின் முடிவில் இந்தியாவில் வைத்து ஆணித்தரமாகச் சொன்னார் காணி பொலிஸ் அதிகாரங்களை வழங்கபோவதில்லை என்று. இந்தியா அது குறித்து கருத்து எதையும் கூறவில்லை. இவ்வாறு உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களையும் கடந்த 34 ஆண்டுகளாக தொடர்ச்சியாக வந்த அரசாங்கங்கள் நிறைவேற்ற தவறியமை குறித்து இந்தியா இலங்கை அரசாங்கங்களின் மீது எப்போதாவது ஏதாவது அழுத்தங்களைப் பிரயோகித்தி ருக்கிறதா? ஏன் பிரயோகிக்கவில்லை? இந்தியாவும் சேர்ந்து மாகாணக் கட்டமைப்பை கைவிட்டு விட்டதா? இத்தகைய பொருள்படக் கேட்டால், இந்திய-இலங்கை உடன்படிக்கை காலாவதியாகி விட்டதா?

மூன்றாவது கணேசலிங்கம் சுட்டிக்காட்டியது. வடக்கு- கிழக்கு இணைப்பை ஜேவிபி ஒரு வழக்குத் தொடுத்து பிரித்த போது அதையும் இந்தியா தடுக்கவில்லை. வடக்கு கிழக்கு இணைக்கப்பட்ட போது அமரர் ராஜீவ் காந்தி தமிழ் தலைவர்களுக்கு ஓர் உத்தரவாதத்தை வழங்கினார். இப்போதைக்கு அவை தற்காலிகமாக இணைக்கப்பட்டு பின்னாளில் அவை நிரந்தரமாக இணைக்கப்படும் என்று. ஆனால் இப்பொழுது ராஜீவ் காந்தியும் இல்லை வடக்கு கிழக்கு இணைப்பும் இல்லை. இத்தகைய பொருள்படக் கூறின் இந்தியஇலங்கை உடன்படிக்கை காலாவதியாகி விட்டது என்று எடுத்துக் கொள்ளலாமா?

(04ஆம் பக்கம் பார்க்க)

- மின்னல்

# திரடி அரங்கு



## எரியிற வீட்டில பிடுங்கிறாங்கள்...

எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம் என்பது போல அதிபர் சேவை நியமனத்தில் புறக்கணிக்கப்பட்டுள்ள தங்களிடம், பணம் வேறு பறிக்கிறார்கள் என்று விசனப்படுகின்றனர் ஆசிரியர்கள்.

கடந்த அரசின் ஆட்சிக்காலத்தில் இலங்கை அதிபர் சேவை தரம் 111க்கு நியமனம் வழங்கப்பட்டபோது தங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்று ஆசிரியர்கள் குற்றஞ்சாட்டி வருகின்றனர். 120 புள்ளிகளைப் பெற்றவர்களுக்கு நியமனம் வழங்க வேண்டும் என்று அவர்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச, கல்வி அமைச்சர் ஆகியோருக்கு மனுக்களை அனுப்பிவிட்டுப் பதிலுக்காகக் காத்திருக்கின்றனர்.

தாங்கள் நியமனம் கிடைக்கவில்லையே என்ற கவலையில் இருக்க, ஒருவர் இந்தப் பிரச்சினையைப் பயன்படுத்திக் காசு பார்க்கும் முயற்சியில் உள்ளார் என்று விசனிக்கின்றனர் ஆசிரியர்கள். வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர்தான் இந்தக் கைங்கரியத்தில் ஈடுபட்டுள்ளாராம்.

இவர் தன்னை வடக்கு மாகாண இணைப்பாளர் என்று கூறிக்கொண்டு, இந்த நியமன விவகாரத்தை அமைச்சர்களுடன் பேசச் செல்வதற்கான போக்குவரத்துச் செலவாக ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் தலா ஆயிரம் ரூபா தர வேண்டும் என்று வற்புறுத்துகின்றாராம். இதற்காக "வைபர் குரூப்" ஒன்றின் மூலமே அவர் இவற்றைக் கையாள்கின்றாராம். அவர் இந்தப் பணத்தைத் தனது தனிப்பட்ட வங்கிக் கணக்கிலேயே வைப்பிலிடுமாறும் கூறுகின்றாராம்.

இவர் எதற்கு வடக்கு இணைப்பாளர்?, இவரை யார் இணைப்பாளராக நியமித்தார்கள்? என்று தெரியாமல் ஆசிரியர்கள் விழித்துக் கொண்டிருக்கின்றார்கள். நியமன விடயத்தில் குழு ஒன்றை அமைத்துப் பேசுவோம் என்று ஆசிரியர்கள் கேட்டபோது, அதைத் தட்டிக் கழித்து வருகின்றாராம் அந்த "இணைப்பாளர்".

80க்கும் அதிகமான ஆசிரியர்கள் நியமனத்துக்காகக் காத்திருக்கும் நிலையில் பெருந்தொகையான நிதி, கணக்கு வழக்கு இல்லாது தனிநபரின் வங்கிக் கணக்குக்கு வைப்பிலிடுவது முறையில்லை என்று விசனிக்கின்றனர் ஆசிரியர்கள்.

இணைப்பாளர் என்று கூறிக்கொள்பவர் எந்த அமைச்சரைச் சந்திக்கின்றார் என்பதும் தெரியவில்லை, எப்போது சந்திப்பார் என்றும் தெரியவில்லை. அதிபர்கள், ஆசிரியர்கள் பிரச்சினைகளைக் கையாள பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் பல இருக்கின்றன. அவை இந்த விவகாரத்தைக் கையிலெடுக்க வேண்டும் என்கின்றனர் ஆசிரியர்கள்.

**ஆசிரியர்கள் சொல்வதும் நியாயம்தானே?**

# பேராசை பெருநஷ்டம்



ஒரு ஊரில் பாமினி என்ற ஏழைப் பெண்ணொருத்தி இருந்தாள். அவள் பால் விற்று தனது வாழ்க்கையை நடத்தி வந்தாள். அவளது வியாபாரத்தில் குறைந்த வருமானமே கிடைத்து வந்தது. அவள் ஒரு நாள் பாலில் தண்ணீரை ஊற்றி விற்றுவந்த ஒருவனை கண்டாள். அதைப் பார்த்த பாமினியின் மனதில் தானும் பாலில் தண்ணீரை ஊற்றி விற்றால் என்ன? என்ற எண்ணம் தோன்றியது. மறுநாள் அவளும் அப்படியே தண்ணீர் கலந்த பாலை விற்பனை செய்தாள். அப்போது பாமினிக்கு அதிகூடிய வருமானம் கிடைத்தது. அவள் தொடர்ந்தும் சில நாட்கள் தண்ணீர் கலந்த பாலை விற்பனை செய்ததால் குறுகிய காலத்திலேயே பெரும் பணக்காரி ஆகி விட்டாள். அதனால் ஆணவத்தின் உச்சியில் இருந்தாள். அந்த ஊரில் கடன்கேட்டு வந்தவர்களுக்கு வட்டிக்கு பணம் கொடுத்தாள். அந்த ஊரில் ஏராளமான நிலங்களை தன் பணத்தால் வாங்கிக்கொண்டாள். கடனைத்திருப்பிச் செலுத்த இயலாதவர்களை வற்புறுத்தி தன் நிலங்களில் வேலை வாங்கினாள்.

அவளது கொடுமையை தாங்கமுடியாத ஊர் மக்கள் குபேரன் என்பவனிடம் சென்றனர். அவன் நல்ல உள்ளம் கெண்டவன்;, ஏழைகளுக்கு உதவுபவன், புத்திசாலி .அவனிடம் பாமினியின் கொடுமைகளைச் சொல்லி அழுதார்கள். அவளின் ஆணவத்தை அடக்க அவனொரு திட்டம் போட்டான்.

அடுத்தநாள் காலையில் குபேரன் ஒரு மரத்தின் நிழலில் அமர்ந்து கொண்டு தங்கத்தை அரித்துக்கொண்டிருந்தான். அப்பொழுது பாமினி வந்துகொண்டிருந்தாள். "டேய்! இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று குபேரனை கேட்டாள்.

" அம்மணி, தங்கத்தை விதைப்பதற்காக அரித்துக்கொண்டிருக்கிறேன்" என்றான். அதற்கு பாமினி "என்னடா! உளறுகிறாய்?" என்று கேட்டாள். அப்போது குபேரன்

"உண்மையாகத்தான் கூறுகிறேன் . பத்து கிலோ தங்கம் விதைத்தால் நாளை நூறு கிலோ தங்கம் விளையும்" என்று கூறினான்;.

"அப்படியென்றால் சரி நிலத்தின் சொந்தக்காரருக்கே அதிக பங்கு கிடைக்க வேண்டும். அதனால் எனக்கு ஏழு பங்கு தங்கத்தை தர வேண்டும் மீதிப்பங்கை நீயே வைத்துக்கொள்" என்று கூறினாள். அவள் கூறியபடி அடுத்தநாள் அவன் ஏழு பங்கு தங்கத்துடன் வந்தான். இதனைப் பார்த்து பேராசை கொண்ட பாமினி தன்னிடம் இருந்த பணம் அத்தனைக்கும் இரண்டு பெட்டி தங்கத்தை வாங்கி அவனிடம் கொடுத்து "நாளை இருபது பெட்டி தங்கம் கொண்டு வரவேண்டும்" என்று கூறினாள். அவன் அதை எடுத்துக்கொண்டு சென்று ஊர் மக்களிடம் பகிர்ந்து கொடுத்துவிட்டான்.

அடுத்தநாள் காலையில் குபேரன் , பாமினி வீட்டுக்கு வந்தான். பாமினி ஆர்வத்துடன் காத்துக்கொண்டிருந்தாள். குபேரன் வெறும்கையோடு வருவதைப் பார்த்த பாமினி " எங்கே எனது தங்கம்?" என்று கேட்டாள். அதற்கு அவன் " மழை பெய்யாததால் தங்கம் காய்க்கும் செடிகள் அனைத்தும் கருகிஅழிந்துவிட்டன" என்று கூறினான். அதைக் கேட்ட பாமினி "ஐயோ என் தங்கமெல்லாம் போச்சே" என்று கதறி அழுதாள். பேராசை எம்மிடம் குடியிருந்து விட்டால் நாம் நாமாகவே இருக்க மாட்டோம் என்பதை உணர்ந்த பாமினி தனது பழைய பால் வியாபாரத்தை நேர்மையாக செய்ய முடிவெடுத்தாள்.

**ந.அபர்னன்,**
தரம் 6,
கொடிகாமம்

# இந்தியா...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனவே மேற் கண்டவற்றை தொகுத்துப் பார்த்தால் இனி வரும் காலங்களிலும் ராஜபக் ஷவின் அரசாங்கம் 13 ஆவதை நீக்கும் நடவடிக்கைகளை எடுத்தால் அதை இந்தியா தடுக்கும் என்று எப்படி எடுத்துக் கொள்வது? கொழும்பிலிருக்கும் இந்திய தூதரகத்தின் அதிகாரி ஒருவர் இது விடயத்தில் இந்திய தூதுவர் பதின்மூன்றாவது திருத்தம் நீக்கப்படுவதற்கு ஆதரவாக இருக்க மாட்டார் என்ற தொனிப்பட கருத்துத் தெரிவித்துள்ளார். ஆனால் விமல் வீரவன்சவும், வீரசேகரவும் அதற்கு எதிராகப் பதில் கூறி இருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு பின்னணியில் புதிய யாப்பு என்று ஒன்று உருவாக்கப்படுமாக இருந்தால் அதில் 13 இல் உள்ள அம்சங்கள் நீக்கப்படுமா ? என்ற சந்தேகங்கள் அதிகரித்து வருகின்றன. இங்கு முக்கியமாக ஒன்றை சுட்டிக்காட்ட வேண்டும். பதின்மூன்றாவது திருத்தம் என்று கருதப்படுவது இனப்பிரச்சினைக்கான தீர்வைத்தான்.இந்திய-இலங்கை உடன்படிக்கையின் பிரகாரம் இப்போதுள்ள யாப்பு 13ஆவது தடவையாக திருத்தப்பட்டது. ஒரு புதிய யாப்பில் திருத்தங்கள் இருக்காது அது இனப்பிரச்சினைக்கான தீர்வையும் உள்ளடக்கியதாக இருக்கும் என்று பார்த்தால் இனப்பிரச்சினைக்கான ஒரு தீர்வை அதில் ராஜபக்சக்கள் முன்வைக்க வேண்டி இருக்கும். அதற்குரிய நிலைமைகள் உண்டா? ஒரு புதிய யாப்பை உருவாக்குவது என்பது 19ஆவது திருத்தத்தைப் பலவீனமாக்கி 20 ஆவது திருத்தத்தை கொண்டு வருவதைப் போன்றது அல்ல. ஒரு புதிய யாப்பை மூன்றில் இரண்டு பெரும்பான்மை மூலம் மட்டும் உருவாக்கிவிட முடியாது. அதை பொதுசன வாக்கெடுப்புக்கு விட வேண்டியிருக்கும். தமிழ் மக்கள் அதற்கு எதிர்ப்பைக் காட்டும் நிலைமைகளும் இருக்கும். எனவே ராஜபக்சக்கள் இது விடயத்தில்' ரிஸ்க்' எடுப்பார்களா? அல்லது இப்போது இருக்கும் நிலைமையைத் தொடர்வதன் மூலம் சமாளித்துக் கொண்டு போகப் பார்ப்பார்களா? 20ஆவது திருத்தத்தின் பிரகாரம் அவர்களுக்கு உரிய அதிகாரம் கிடைத்து விடும். வம்ச ஆட்சிக்கு இருந்த தடைகள் நீங்கி விடும். எனவே இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து அவர்கள் சிந்திக்க வேண்டிய தேவை இருக்காது. தமிழ்த் தரப்பிலிருந்து கூர்மையான எதிர்ப்பு எதுவும் காட்டப்படாத வரை அவர்கள் அதைப்பற்றி யோசிக்கத் தேவையில்லை. அவ்வாறு காட்டக்கூடிய எதிர்ப்புக்களையும் புலிகளை மீள உருவாக்குகிறார்கள் என்று கூறி பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கையாளலாம் என்ற நிலைமை உள்ளவரை அவர்கள் இது விடயத்தில் அக்கறை காட்ட மாட்டார்கள். பதிலாக, இப்போது இருக்கும் கோறை ஆக்கப்பட்ட 13ஐத் தொடரலாம். அதுதான் அவர்களுக்கும் வசதியானது. ஏனெனில் காணி பொலிஸ் அதிகாரம் அற்ற பலவீனமான ஒரு மாகாண கட்டமைப்பை அப்படியே விடும்போது சர்ச்சைகளும் வராது. இந்தியாவோடு பிரச்சினை ஏற்பட வேண்டியும் வராது. இதற்குத் தேவையான கெட்ட முன்னுதாரணத்தை ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே காட்டியிருக்கிறார். அதன்படி நிலைமாறுகால நீதியைத் தொடர்ந்து முன்னெடுக்கப் போவதாக கூறிக்கொண்டே காலத்தைக் கடத்தலாம். மேலும் கால அவகாசத்தை கேட்கலாம். கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை நிர்மாணிக்கும் பணிகள் மற்றும் மன்னாரில் பியர் துறைமுகத்தை நிர்மாணிக்கும் பணிகள் போன்றவற்றை இந்தியாவுக்கு வழங்குவதன் மூலம் அவர்கள் இந்தியாவை சமாளிக்க எத்தனிப்பார்கள்.

கொவிட்19க்கு பின்னரான துருவ மயப்படும் உலகச் சூழலானது ராஜபக்சக்களை சீனாவின் செல்வாக்கு வலையத்துக்கு வெளியில் எடுக்க வேண்டிய ஒரு நிலைமையை ஏற்படுத்தினால் இந்தியாவும் உட்பட ஏனைய வெளித் தரப்புக்கள் தமிழ்த் தரப்பை கையாள்வது பற்றி சிந்திக்கக் கூடும். அதுவரையிலும் ரணில் விக்கிரமசிங்க காட்டிய வழியிலேயே ராஜபக்சக்களும் பயணிப்பார்களா ?

# சொற்சிலம்பம் போட்டி

12

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | 5 | | 6 |
| 7 | | | 8 | | | 9 | |
| | 10 | 11 | | | 12 | | |
| 13 | | | | 14 | | | |
| 15 | | | 16 | | | | |
| | | 17 | | | 18 | | 19 |
| 20 | 21 | | | | 22 | 23 | |
| 24 | | | | 25 | | | |

அனுப்புபவர் பெயர்:.......................................

முழுமையான தபால் விலாசம்: .............................

.......................................................

கையொப்பம்:.......................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. யாழ்ப்பாணத்துக்குச் சித்தர் இவர் 7. செதுக்கப்பட்ட உருவம். 8. இளைய பிள்ளையை இப்படியும் அழைப்பர். 10. ஒரு நோய். 12. அரிசி வகைகளுள் ஒன்று. 13. ஒரு வகை மீனினம். 14. பிஞ்சில் பழுத்தது. 15. கேடுவரும் என்பதற்கான அடையாளம். 17. தாண்டு. 20. சிரத்தை 22. தானிய வகைகளுள் ஒன்று. 24. நஞ்சு. 25. இதை எவராலும் மாற்ற முடியாது என்பர்.

## மேலிருந்து கீழ்

1. சிந்தி 2. பழம்பெரும் நடிகர் என என்.எஸ்.கிருஷ்ணனது பட்டப் பெயர். 3. நலம். 4. பருவப்பெயர்ச்சிக் காற்றுகளில் ஒன்று. 5. மிகுதி என்பது இப்படியும் சுட்டப்படும். 6. அன்பு காட்டுவதன் மூலம். 9. இது ஓர் உபஉணவு. 11. இறுமாப்பு. 13. இசைத்துறை தொடர்பான பட்டப் பெயர். 14. போதை 16. பாத்திர வகையொன்று. 18. விலங்குகளின் நிறத்தைச் சுட்டும் சொல். 19.பல பிரிவுகளின் ஒன்றிணைப்பு. 21. ஒரு திசையின் சுருக்கம். 23. சூரியன்.

### சொற்சிலம்பம் போட்டி 10 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1.சிவப்பு, 2.கமுகு, 7.கல, 8. திராவிடன், 10.ரம்மியம், 12.வறு, 13கைது, 14. நான், 15. சுப, 16. அடி, 18.ஆண்டவன், 19அர 20.கடல், 21. பகுபத, 23. வன்னியர்,

**மேலிருந்து கீழ்**

1.சிகரம், 2.வலம், 3.புதியது, 4.கவி, 5.முடவன், 6.குன்று, 9.ராம் 11.மிகைபடல், 14. நாடி, 15.சுண்டல், 16.அன்பன், 17.பரதர் , 18. ஆகம 19.அபய 22.குனி

சொற்சிலம்பம் போட்டி இல.12
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
18.09.2020 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக
தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

### போட்டி இலக்கம் 10இல் வெற்றி பெற்றோர் விபரம்

**1 ஆம் பரிசு**
ரா.ராஜசந்திரன்
கண்ணபுரம், நாவாந்துறை,
யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு**
தம்பையா.யோகராசா
சரசாலை தெற்கு, சாவகச்சேரி.

**3 ஆம் பரிசு**
த.கவின்
இல.40, மாட்டின் லேன்,யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு**
த.சிவநேசம்
அளவெட்டி கிழக்கு, அளவெட்டி

**5 ஆம் பரிசு**
என்.ஜெயகணேசன்,
காரை, வடகிழக்கு, காரைநகர்





○ மாயன்

இப்போதும் பரிவழுதி அசரவில்லை. தான் கிளியாக மாறப்போவதாக மற்றவர்கள் நினைத்தாலும் அவனுக்கு அதைப்பற்றிக் கவலையில்லை.

'பரவாயில்லை, என்னுடைய தியாகம் எஞ்சியவர்களைக் காப்பாற்றுமெனில் அதைச் செய்ய நான் தயார்' என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டான். பின்னர் மனதை ஒருநிலைப்படுத்தி, கடைக்காரப் பெண் சொன்னதை அசை போட்டான். கண்களை அங்குமிங்கும் உருட்டிக் கணக்குப் போட்டான். சிலகணங்களில் அவன் முகம் தெளிந்தது.

" சரி பெண்ணே, இந்தப் பழக்கூடைப் புதிருக்கு முதலில் விடை சொல்லட்டுமா?" என்று கேட்டுவிட்டு அவளின் பதிலுக்குக் கூட காத்திராமல் மளமளவென்று விடையைச் சொல்ல ஆரம்பித்தான்.

" ஒவ்வொரு விநாடியும் கூடையில் உள்ள பழங்கள் இரட்டிப்பாகின்ற என்றால், கூடையின் அரைவாசி நிரம்பிய அடுத்த விநாடி முழுக்கூடையும் பழங்களால் நிறைந்துவிடும். கூடை நிரம்புவதற்கு 2 நாழிகைகள் எடுத்ததாயின், அதற்கு ஒரு நிமிடத்துக்கு முன்னதாக அதாவது 1 நாழிகை 59 ஆவது விநாடி கூடையின் பாதிப்பாகத்துக்கு பழங்கள் வந்திருக்கும். சரியா?" எனக் கண்சிமிட்டினான் பரிவழுதி.



இளையசந்திரனுக்கோ வியப்பு. பரிவழுதியா இப்படி அலட்சியமாக ஒரு புதிரின் சிக்கலைத் தீர்க்கிறான் என்று அவனால் நம்பமுடியாமல் இருந்தது. ஆனால் கடைக்காரப் பெண் பரிவழுதி இதைச் சொல்வானென்று முதலே எதிர்பார்த்திருக்க வேண்டும். புன்முறுவலோடு " அடுத்த புதிருக்கான விடை இளவரசருக்குத் தெரியாதா?" என்று கொக்கி போட்டாள்.

அதற்கும் தாமதிக்கவில்லை பரிவழுதி.

" அது இதைவிடச் சுலபமான கேள்வி. ஐந்து முழக் கம்பத்தின் நிழல் 2 அடிக்குத்தான் தெரிகின்றது. அப்படியானால் 10 முழக் கம்பத்தின் நிழல் 4 அடி உயரத்துக்கு தெரியும். அதை பத்தால் பெருக்கினால் 100 அடிக் கோபுரத்தின் நிழலின் உயரம் தெரிந்துவிடும். நேரடியாகச் சொல்வதானால் 100 அடிக் கோபுர நிழலின் உயரம் 40 அடியாகத் தெரியும். சரியா பெண்ணே" என்று கேட்டான் பரிவழுதி.

" ஆமாம். விடைகள் சரிதான். வாருங்கள் எல்லோரும் . உங்கள் பசியைப் போக்கிக் கொள்ளுங்கள்" என அவள் அழைத்தாள். இளன்சந்திரனும், பரிவழுதியும் அவளின் அழைப்புக்கு இணங்கி உணவுண்ணச் சென்ற போதும், துவாரகனுக்கும், காக்கை குப்தனுக்கும் இன்னும் சந்தேகம் தீரவேயில்லை.

"முதலாவது புதிருக்கு பரிவழுதி தவறாகத்தானே பதில் அளித்திருந்தான். அப்படியிருக்கையில் இன்னும் ஏன் அவன் கிளியாக மாறவில்லை?" துவாரகனுக்கு இந்தச் சந்தேகம் துளைத்துக் கொண்டே இருந்தது. அவனது சந்தேகத்தை உணர்ந்து கொண்டவள் போல பார்த்தாள் கடைக்காரப் பெண்.

" துவாரகரே, என்ன இன்னும் பரிவழுதியார் கிளியாக மாறவில்லை என எண்ணுகிறீரா? சரியான விடை அளித்தால் ஏன் கிளியாக வேண்டும்,. முதல் புதிருக்கு அவர் கொடுத்த விடை சரியானதே. அந்தச் சங்கிலியில் எத்தனை வளையங்கள் இருக்க வேண்டும்?" என்று கேட்டாள்.

"மூன்று" இது துவாரகன்.


" ம்ம். அப்படியானால் ஒருவளையத்தை வெட்டி, இன்னொரு வளையத்தை வெட்டாமல் அதற்குள் செலுத்திய பின் ஒட்டலாம். இப்போது இரண்டு பொற்காசுகள் கொடுக்க வேண்டியிருக்கும். அதன் பின்னர் வெட்டாத வளையத்தை மையப்புள்ளியாக வைத்துக் கொண்டு எஞ்சி இருக்கும் மூன்றாவது வளையத்தையும் முதல் செய்ததைப் போல வெட்டி, வெட்டாத வளையத்துக்குள் செலுத்திய பின் ஒட்ட வேண்டும்.இதற்கும் இரண்டு பொற்காசுகள் போதும். இப்போது மூன்று வளையங்களும் ஒரு சங்கிலியாக மாறிவிடும். ஆக நான்கு பொற்காசுகளோடு சிக்கமான வேலையை முடித்துவிடலாம்" என்று நீட்டி முழக்கினாள் அந்தப்பெண்.

அதைக்கேட்டதும் நால்வருக்கும் ஆனந்தம் பெருக்கெடுத்தது.

'அப்படியானால் நம்மில் யாரும் கிளியாக மாறப்போவதில்லை' என்ற ஆனந்தத்தோடு, உணவருந்தத் தொடங்கினர். அப்போது, எங்கிருந்தோ ஒருவன் " ஐயோ, ஆபத்து தப்பி ஓடி விடுங்கள்" என்று அலறியபடி அவர்களை நோக்கி ஓடிவந்தான்.

( புதிர்கள் தொடரும்)

# அவர் அப்படித்தான்



சி.சிவச்சந்திரன்

பழைய ட்ரௌசர், பழைய வெள்ளைக்கலர் சேர்ட், பழசாகி நிறம் மங்கிப்போன பெல்ட் என எல்லாமே பழசாக இருந்தாலும் , கொஞ்சம்கூட அழுக்கில்லாமல் கழுவி ,சேர்ட்டை 'இன்' பண்ணி இருந்தார் அவர்.

தூரத்தில் வரும்போதே கண்டுபிடித்துவிட்டான் நிவாசன். அது சிறி சேர்தான். அப்போதெல்லாம் கொஞ்சம் புதிய ஆடைகளையே அணிந்து மிடுக்காக வருவார், இப்போ இப்படி பழசாகிப்போன உடுப்போடு இருக்கிறார்,அவ்வளவுதான் வித்தியாசம். மற்றப்படி அந்தக்காலத்தில் எப்படி இருந்தாரோ அப்படியேதான் இப்போதும் இருக்கிறார். எல்லோருக்கும் அவரை சிறி சேர் என்றுதான் தெரியும், அவரின் முழுப்பெயர் எவருக்குமே தெரியாது. எப்படியும் சிறிசேர் இப்போது ஓய்வு பெற்றிருப்பார். இது 2020. கந்தசாமி,ஆறுமுகம் என்கிற பெயருள்ளவர்கள் எல்லாம் ஓய்வுபெற்று கனகாலமாகிவிட்டது. இப்போ புதிய பெயர்கள் என தொண்ணூறின் குழந்தைகள் நினைத்துக்கொண்ட சிறி , மதன் போன்ற பெயரை உடையவர்கள் ஓய்வுபெறும் காலம்.

சிறி சேர் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் படிப்பித்துக்கொண்டிருந்த காலத்தில் படித்தவன் நிவாசன் .

தூரத்தில் சிறிசேரைக் கண்டவுடன் ஓடிப்போய் கட்டிப் பிடித்துவிட்டான்.

திடீரென யாரோ ஒருவர் ஓடிவந்து தன்னைக் கட்டிப்பிடித்ததால் திணறிப்போனாலும், அடுத்த கணமே சுதாகரித்து விட்டார் . தன்னிடம் படித்த மாணவர்களில் ஒருவனாகத்தான் இருக்க வேண்டும் என்று ஊகித்துக்கொண்டவர், கொஞ்ச நேரம் நிவாசனின் முகத்தை உற்றுபார்த்தவுடன் யாரென்றும் சரியாகக் கண்டுபிடித்துவிட்டார்.

" அட நீ நம்ம இராசமாணிக்கத்தின்ட பெடியன் நிவாசன் தானே?"

"ஓம் சேர் ,எப்படி இப்படி சரியாக் கண்டுபிடிச்சீங்க ? பத்து வருசத்துக்குப் பிறகுதான் இலங்கைக்கு வந்திருக்கிறன்,சொந்தக்காரங்களுக்கே என்னைச் சரியாத் தெரியல ,நீங்க மட்டும் எப்படி சேர்.....?"

சிலிர்த்துப்போனான் நிவாசன்.

இதுதான் சிறி சேர். அவரிடம் படிக்கிற ஒவ்வொரு பிள்ளையையும் தன்ர பிள்ளை போலதான் நடத்துவார். அதுதான் எத்தனை வருசத்துக்குப் பிறகெண்டாலும் கண்டவுடனேயே ஆள் ஆரெண்டு சரியாக் கண்டுபிடிச்சு, அவன் அப்பா அம்மாவின் பெயரையும் சரியாகச் சொல்லிவிடுவார்.

சிறிசேரிட்ட படிச்ச ஒவ்வொரு பிள்ளையின் அப்பா அம்மாவும் ஒரு தரமாவது கட்டாயம் சிறிசேரைச் சந்தித்து இருப்பார்கள். அந்தக்காலத்தில் பிள்ளைகளிடம் எவ்வளவு கண்டிப்பா இருப்பாரோ ,அதே அளவு கண்டிப்போடுதான் அந்தப் பிள்ளைகளின் அப்பா, அம்மாவுடனும் இருப்பார்.

ஒரு பிள்ளையை அப்பா, அம்மா ஒழுங்கா வளர்த்தால்தான் ,ஒரு ஆசிரியரால் அந்தப் பிள்ளையை படிப்பித்து உயர்த்திவிடலாம் என்று அடிக்கடி பெற்றோரிடம் சொல்லிக்கொண்டே இருப்பார். எப்போதுக் கையில் பிரம்புடனேயே இருப்பார், பிழைவிட்டால் முழங்காலுக்கு கீழே பிரம்பின் தழும்பு தெரியும் வரை அடிவிழும். எல்லாப் பிள்ளைகளுக்கும் சிறி சேர் என்றாலே நடுக்கம் வரும். உண்மையில் அந்த நடுக்கத்துக்குக் காரணம் எப்போதும் கையில் பிரம்புடன் ஐயனார் மாதிரி மீசை வைத்துக்கொண்டிருக்கும் அவரின் மிடுக்கான தோற்றமே . அப்படி இருந்தாலும் தேவையில்லாம கண்டதுக்கெல்லாம் அடிக்கமாட்டார். கணக்கு வாத்தியாரான அவர், ஒருபோதும் கணக்கிலே பிழை விட்டதற்காகவோ, புள்ளி குறைவாக எடுத்ததற்காகவோ பிள்ளைகளை அடித்ததில்லை. பிள்ளைகள் புள்ளி குறைவாக எடுத்தால் அது பிள்ளைகளின் பிழை இல்லை,படிப்பித்த தன்னுடையதும், கவனமாகப் பார்த்துக்கொள்ளாத அப்பா, அம்மாவினதும் பிழையே என்றுதான் சொல்லுவார்.

அதையும் தாண்டி ஒரு பிள்ளை ஒழுங்காகப்படிக்கவில்லை என்றால், அந்தப்பிள்ளைக்கு ஏதோ பிரச்சினை இருக்கு , அதற்கு அடி தீர்வல்ல என்பதுதான் அவரின் கொள்கை. அவர் அடிப்பதெல்லாம் , ஒழுக்கத்துக்காகத்தான். பள்ளிக்கு காரணமில்லாமல் வராமல் விடுதல், காரணமில்லாமல் பிந்தி வருதல் , சப்பாத்துப் போடாமல் வருதல் ,ரை கட்டாமல் வருதல் என எந்தப் பிழை விட்டாலும் அவரின் பிரம்பின் தடம் முழங்காலின் கீழே இருக்கும்.

இதுதான் சிறி சேர். அவரிடம் படிக்கிற ஒவ்வொரு பிள்ளையையும் தன்ர பிள்ளை போலதான் நடத்துவார். அதுதான் எத்தனைவருசத்துக்குப் பிறகெண்டாலும் கண்டவுடனேயே சரியாக் கண்டுபிடிச்ச ,அவன் அப்பா அம்மாவின் பெயரையும் சரியாகச் சொல்லிவிடுவார்.

சிறிசேரிடம் கதைத்துக்கொன்டிருக்கும்போது அவரைப்பற்றிய பள்ளிக்கால நினைவுகள் நிவாசனின் மனதில் ஓடிக்கொன்டிருந்தன.

"சேர் உங்களை நான் எதிர்பார்க்கவேயில்ல, வாங்கோவன் அப்படியே அந்தக்கடையில் ஒரு ரீ குடிச்சுக்கொண்டு கொஞ்ச நேரம் கதைப்பம்."

சிறிசேரின் நினைவுகள் நிவாசனின் மனதில் தொடர்ந்தது.

சிறிசேர் எந்த நேரமும் கையில் பிரம்புடன் இருந்தாலும், ஒழுக்கத்தில் பிழைவிடும் பிள்ளைகளுக்கு தழும்புவரும்வரை அடித்தாலும், எப்போதும் அவரிடம் ஒரு நியாயம் இருக்கும். அப்படித்தான் ஒரு நாள் நிவாசனின் வகுப்பில் படித்த ஒருவன் பள்ளிக்கு பிந்திவந்தபோது , "ஏனடா லேட்?" என்று சிறிசேர் கேட்க "எழும்ப லேட் ஆகிட்டு சேர் " என்று அவன் சொல்ல... அன்று அவன் காலில் தழும்பு விழுந்தது.

அடுத்த நாளும் அதே கேள்வி , அதே பதில் அதே தழும்பு. மூன்றாம் நாளும் பிந்திப்போக , அவனைத் தனியாகக் கூட்டிப்போய்,.

" சொல்லு உனக்கு என்ன பிரச்சினை ,ரெண்டு நாள் அடிவாங்கிய நீ இண்டைக்கும் லேட்டா எழும்பினது எண்டு சொல்றது பொய்யெண்டு தெரியும் ,உண்மையைச் சொல்லு" என்று கொஞ்சம் அக்கறையோடு அவர் கேட்டபோதுதான் அவன் " சேர் அம்மாவையும் என்னையும் விட்டுட்டு அப்பா இன்னொருத்தியோட ஓடிப்போயிட்டார், வீட்டில கஷ்டம் , பஸ்ஸுக்குக் கூட காசில்ல, நடந்து வர நேரமாகுது சேர் நாளைக்கு இன்னும் கொஞ்சம் நேரத்துக்கு முன்னர் எழும்பி வரப் பார்க்கிறன் சேர்" என்று அழுதுகொண்டே சொன்னான்.

"சரி சரி அழாதை , உனக்கு சீசன் ரிக்கெற் நானே ஒவ்வொரு மாசமும் எடுத்துத் தாறன் , இனி பஸ்ஸிலே வா..." என்று சொன்னவர், அதுக்கப்புறம் அவன் ஏ.எல் படிக்கும் வரை அவர்தான் மாசம் மாசம் சீசன் ரிக்கெற் எடுத்துக்கொடுத்தார்.

சப்பாத்துப் போட்டு வராத பிள்ளைகளுக்கு அடிக்க முதல், காரணம்கேட்பார் , வீட்டில் கஷ்டம் என்றால், தானே சப்பாத்து வாங்கிக்கொடுப்பார்.இப்படி நிறையப்பிள்ளைகளுக்கு எவ்வளவோ உதவிகள் செய்திருக்கிறா.

அவர் அடித்த பிள்ளை தழும்போட வீட்டுக்கு வந்தாலும் இந்தக்கால அம்மா ,அப்பா போல யாரும் பள்ளிக்குப்போய் அவருக்கு ஏசியதில்லை. அந்தக்காலத்தில் பிள்ளைகளைவிட பெற்றோருக்குத்தான் சிறிசேர் என்றால் அதிகபயம்.ஆசிரியர்களை சமூகம் மிக மரியாதையுடன் நடத்திய காலம் அது.

அந்தச் சிறிய தேநீர்க்கடையில் ஒரு மேசைக்குப் பக்கத்தில் இருவரும் அமர்ந்துகொண்டார்கள். சிறிசேரைப்பற்றி நிவாசன் நினைத்துக்கொண்டிருந்தானே தவிர அவரோடு பேச வார்த்தைகள் வரவில்லை. சிறி சேரைப்பார்த்ததும் அவனை அறியாமலேயே ஒரு மரியாதை, பவ்யம் அவனுக்குள் ஒட்டிக்கொண்டது. நிவாசன் இப்போது இப்படி இருந்தாலும், படிக்கும் காலத்தில் வேறு மாதிரி. சிறிசேரை ஒரு ரீச்சரோடு சேர்த்து கிசு கிசுவை சுவற்றில் எழுதியவன் நிவாசன். அந்தக்காலத்தில் எப்படிச் சொல்லிக் கொடுத்தாலும் நிவாசனுக்குக் கணக்கு வரவே வராது.

" இப்படியே போனா ஒருகாலத்தில நீ மாடுதான் மேய்ப்பாய் ..." என்று எல்லோருக்கும் முன்னால சொன்னதால ஆத்திரப்பட்டுத்தான் அப்படி எழுதினான். நல்லவேளை அதை எழுதினது அவன் தான் என எவரும் கண்டுபிடிக்கவில்லை. சிறி சேரில் எல்லோருக்கும் இருந்த நம்பிக்கையால் அது அவரைப் பெரிதாகப் பாதிக்கவும் இல்லை.

"சொல்லு தம்பி இப்ப என்ன செய்யிறாய்....?"

சிறிசேர்தான் ரெண்டுபேருக்கும் இடையே இருந்த மௌனத்தை உடைத்தார்.

"நான் நீங்க சொன்ன மாதிரி மாடுதான் மேய்க்கிறன் சேர்"

"என்னப்பா அந்தக்காலத்தில நீங்க படிக்க வேணும் எண்டதுக்காககச் சொன்னதை இன்னும் ஞாபகம் வைச்சிருக்கியா?"

"இல்ல சேர், உண்மையா மாடுதான் மேய்க்கிறன்,என்ன வெளிநாட்டில மேய்க்கிறன், அதுதான் கொஞ்சம் மரியாதையா இருக்கிறன்"

"ஓ...."

"சேர் , தோணியில அவுஸ்திரேலியா போய் , கடைசியில் நியூசிலாந்தில செட்டிலாகி அங்க ஒரு மாட்டுப் பண்ணையில் சேர்ந்து கொஞ்சம் கொஞ்சமா உயர்ந்து ஆரம்பத்தில மாடு மேய்ச்சவன் இப்போ மாடு மேய்ப்பவர்களை மேய்க்கும் சுப்பர்வைசரா இருக்கிறன் சேர்."

"தோணியில அவுஸ்திரேலியா போக வேண்டாம் என்டு ரேடியோ பேப்பர் எல்லாத்திலயும் சொல்றாங்களேப்பா"

"நான் போய் பத்து வருசமாச்சு சேர் ,அந்தக்காலத்தில் போனவங்களுக்கு அகதி அந்தஸ்து கிடைச்சுது, அப்படித்தான் நானும் அகதியாகப் பதிஞ்சு இப்போ நசனால்டியும் எடுத்திட்டன்,இப்ப போறவக்களுக்கு பிரச்சினைதான் சேர்"

வெளிநாட்டில் இருந்தாலும் , எவ்வளவு பெரிய மேலதிகாரியையும் சேர் என்று சொல்லாமல் மிஸ்டர் என்றே சொல்லிப் பழக்கப்பட்டவனென்றாலும் சிறி சேருடன் பேசும்போது மட்டும் வசனத்துக்கு வசனம் "சேர்" என்று சொல்லிக் கொண்டே இருந்தான் நிவாசன்.

இலங்கை ஆசிரியர்களுக்கு மட்டுமே கிடைக்கும் மரியாதை அது.

பேசிக்கொன்டிருக்கும்போதே சிறிசேர் கேட்ட சீனி போடாத பிளேன் ரீயும் ,நிவாசனுக்கு ரீயும் வந்து சேர்ந்தன.

சிறி சேரைப் பார்க்க , எடுக்கிற பென்சன் போதாமல் கஷ்டப்படுபவர் போலத்தான் இருந்தார். ஏதாவது உதவி செய்ய வேணும் போல இருந்தது. ஆனால் எப்படிச் செய்வது?

அவரிடம் கேட்கவும் சங்கடமாக இருந்தது.

"ஒன்று கேட்டா பிழையா நினைக்கமாட்டியா தம்பி.." சிறி சேரே கேட்டார்.

"கேளுங்கோ சேர்"

(09ஆம் பக்கம் பார்க்க)



# திலீபனுக்கான அஞ்சலி எது?



சிக்மலிங்கம் றெஜினோல்ட்

முப்பத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்பு (1987.09.15) இதே காலப்பகுதியில் ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து ஓர் இளைஞர் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார். அது சாகும்வரையிலான உண்ணாவிரதம். அவர் சொன்னதைப்போலவும், அவர் ஆரம்பித்ததைப்போலவும் அது "மெய்யான உண்ணாவிரதமாகவே" முடிந்தது. அதுவே பிறகு ஒரு வலிமிக்க, வலிய வரலாறு என ஆகியும் விட்டது.

அது "சொல் ஒன்று செயல் வேறொன்று" என்ற நாடகீயமான காலமல்ல. அப்படியான முரண்பாடுகளைக் கொண்ட மனிதர்கள் அரங்கில் தலையெடுத்திருக்காத காலம். அல்லது அப்படியானவர்கள் புறமொதுக்கப்பட்டிருந்த காலம். "சொல்லும் செயலும் ஒன்றே. செயலே சிறந்த சொல்" என்ற மகத்தான நிலைப்பாட்டைக் கொண்டிருந்த மனிதர்களால் நிறைந்திருந்த காலம். அதனால்தான் அந்த இளைஞர் சொன்னதைப்போல - அவர் மக்களுக்கு வாக்குறுதி அளித்ததைப் போல சாகும்வரையிலான உண்ணாவிரதத்தில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து வரலாறாகினார்.

இவ்வளவுக்கும், அவர் முன்வைத்திருந்த கோரிக்கைகள் ஒன்றும் இன்றைய நிலையில் பெரியவையல்ல. அந்தக் கோரிக்கைகள் இவைதான்.

1. மீளக்குடியமர்தல் என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் புதிதாகத்திட்டமிடும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவேண்டும்.
2. சிறைக் கூடங்களிலும், இராணுவ பொலிஸ் தடுப்பு முகாம்களி லும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்படவேண்டும்.
3. அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும்.
4. ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும்.
5. தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்படவேண்டும்.


அன்றைய சூழலில் இவை முக்கியமானவையாகத் தோன்றியிருக்கக் கூடும். அப்படித்தான் அவை உணரவும்பட்டன. முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் சிறியவையோ பெரியவையோ என்பது ஒரு பக்கமிருக்கட்டும். அவற்றை வலியுறுத்தி, அவற்றுக்காகத் தன்னை அர்ப்பணித்து சாகும்வரையிலும் ஒருவர் உண்ணாவிரதமிருந்தாரே, இறுதிவரையில் அந்தப் போராட்டத்தில் உறுதியாக இருந்து மரணத்தைத் தழுவிக் கொண்டாரே அதுவே முக்கியமானது. அந்த உறுதிப்பாடும், தான் முன்னெடுத்த போராட்டத்திற்கு அவர் அளித்த விசுவாசமும் நேர்மையுமே முக்கியமானவை. வரலாறு இதையே தன்னுடைய மனதில் எடுத்துக் கொண்டது. அதனால்தான் திலீபன் இன்றும் நினைவிலுள்ளார். அழியாத நினைவாக. அதனால்தான் வியத்தகு போராளியாக ஒளியைப்பெற்றார்.

இப்போது நாங்கள் திலீபனை நினைவு கூர்வதென்பது அவருடைய அந்த உறுதிப்பாட்டுக்கும் தியாகத்துக்கும் மதிப்பளிப்பதாகவே இருக்க வேண்டும். அதுவே மெய்யான அஞ்சலி. அதுவே மெய்யான மதிப்பளிப்பு. அதுவே அவருடைய போராட்டத்திலிருந்து நாம் படித்துக் கொள்ளவேண்டிய நமக்கான வரலாற்றுப்பாடமும், அரசியற் பாடமுமாகும். அதைச்செய்வதே திலீபனை நினைவு கொள்வதற்கான எம்முடைய தகுதியாக அமையும். இதே வேளை, இப்படி ஒவ்வொரு கோரிக்கைக்காகவும் இப்போதும் நாம் உயிரை ஈந்து கொள்ளத்தான் வேண்டுமா? அதைத்தவிர வேறு வழியே இல்லையா? என்று எவராவது கேட்கலாம். உயிரை மாய்த்துத்தான் போராட வேண்டும் என்றில்லை. ஆனால், குறைந்த பட்சம் நாம் முன்வைக்கும் கோரிக்கையை வென்றெடுக்க விசுவாசமான முறையில் போராட வேண்டும் என்பது அவசியமல்லவா? அப்படிச்செய்தால் மட்டுமே அந்தப் போராட்டங்களுக்குப் பெறுமதியிருக்கும். மதிப்பிருக்கும். அவற்றுக்குரிய வலிமை கிட்டும். திலீபனுக்கு முன்பும் பின்பும் எத்தனையோ உண்ணாவிரதப்போராட்டங்களை எத்தனையோ பேர் முன்னெடுத்திருக்கிறார்கள். மட்டக்களப்பைச் சேர்ந்த பூபதி அவர்களில் ஒருவர். இந்த இருவரையும் தவிர, ஏனையவை அத்தனையும் நாடகீயத்தனமான உண்ணாவிரதப் போராட்டங்களாகவே இருந்திருக்கின்றன.

திலீபன் உண்ணாவிரதம் இருந்த காலத்தில் இருந்தவர்களுக்கு இந்த நாடகீயத்தனங்களைக் காணும்போது ரத்தம் கொதிப்பேறுவதைத் தவிர்க்க முடியாது. அன்றைய நாட்களைத் தெரிந்தவர்கள் ஒரு கணம் நினைத்துப் பாருங்கள். எத்தகைய பெரிய மக்கள் எழுச்சியை, மக்கள் உணர்வை திலீபன் உருவாக்கினார் என்பதை. திலீபன் உண்ணாவிரதம் இருந்த இடத்தில் திரண்ட ஆயிரக்கணக்கான மக்கள் எத்தகைய உணர்ச்சிக் கொந்தளிப் போடிருந்தனர் என்பதை. அந்தப் பன்னிரண்டு நாட்களும் ஒவ்வொரு ஊர்களிலிருந்தும் திரண்டு நல்லூரை நோக்கி வந்து கொண்டிருந்த மக்கள். சிறியவர்கள், பெரியவர்கள். ஆண்கள், பெண்கள், முதிய தாய்மார், தந்தையர்கள், மாணவர்கள்....

மட்டுமல்ல, ஊர்களிலெல்லாம் அடையாள உண்ணாவிரதங்கள் நடந்தன. திலீபனுக்கு ஆதரவாக, அவர் முன்வைத்த கோரிக்கைக்கு ஆதரவாக. யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கடந்து வன்னி, கிழக்கு என அந்த நெருப்புப் பற்றிப் படர்ந்தது. அது ஒரு தியாகச் சுடராக எங்கும் எரிந்து கொண்டிருந்தது. திலீபனுடைய கோரிக்கைகள் அன்று நிறைவேறவில்லைத் தான். ஆனால், அன்றைய அரசியல் அதிகாரத் தரப்புகளின் மேலாதிக்கத் திரை அம்பலப்படுத்தப் பட்டது. இலங்கை - இந்திய உடன்படிக்கையின் சூக்சுமங்களில் புதைந்திருந்த சூழ்ச்சிகளும் நலனோக்குகளும் வெளிப்படுத்தப்பட்டன.

இதற்காக ஒரு உயிரைப் பலியிடலாமா? அதுவும் பசியினால் வதங்கி இப்படி அழியத்தான் வேண்டுமா என்ற வரலாற்றுக் கேள்வி அன்றும் இன்றும் உள்ளது. திலீபன் உண்ணாவிரதம் இருந்தபோதே இந்த விவாதங்கள் ஒரு பக்கத்திலிருந்தன. ஏன் விடுதலைப்புலிகள் இயக்கத்துக்குள்ளேயே இத்தகைய கேள்விகள் இருந்தன. விவாதங்கள் நிகழ்ந்தன. திலீபன் உண்ணாவிரதம் இருப்பதாகத் தீர்மானித்த போது இது நிச்சயமாக உயிரிழப்பில் தான் முடியும் என்றே புலிகளில் சிலரும் புலிகளுக்கு நெருக்கமாக இருந்த சிலரும் எச்சரித்திருந்தனர். இப்படியாகத்தான் முடிவு அமையும் என்று தெரிந்து கொண்டே திலீபன் தன்னுடைய போராட்டத்தை ஆரம்பித்தார். திலீபனின் இந்த முடிவு விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாரகனுக்குக் கூட ஆரம்பத்தில் ஏற்புடையதாக இருக்கவில்லை. ஆனால், அந்த முடிவைத் தடுக்கக் கூடிய சூழலும் புலிகளுக்கு அன்றிருக்கவில்லை என்பது புலிகளுடைய போராட்ட முறைமையோடும் அன்றைய அந்தக் களச்சூழலோடும் சேர்த்துப் புரிந்து கொள்ளப்பட வேண்டியது.



இன்று திலீபன் முன்வைத்த எளிய கோரிக்கைகளை விடவும் மிகப் பெரிய கோரிக்கைகள் விளைந்து போய்க்கிடக்கின்றன. அன்றைய நெருக்கடியை விடவும் மிகப் பெரிய நெருக்கடிகளை முறியடிக்க வேண்டிய நிலை உள்ளது. அதற்குப் பிறகான முப்பத்து மூன்று ஆண்டுகளும் மிக உக்கிரமானவை. அதிலும் முள்ளிவாய்க்கால் நெருக்கடி என்பது இதில் உச்சம். இருந்தும் அத்தகைய வலிமையான, உறுதியான போராட்டத்தை முன்னெடுக்கக் கூடிய வல்லமைகள் என எவரும் பின்வந்த நாளில் இருக்கவில்லை.

அன்று திலீபனுடைய போராட்டத்தைக் கண்ணால் கண்டவர்களும் அருகே கூட இருந்தவர்களும் இன்று செய்வது அறியாமல் வரலாற்றின் இடுக்கினுள் சிக்கியுள்ளனர். அன்றைய இளையோர் இன்று வளர்ந்து போராடும் நிலையில் உள்ளனர். ஆனாலும் எவருக்கும் எதை எப்படிச் செய்வதென்று தெரியாமலே உள்ளது. இது ஒரு கொடுநிலை.

இப்பொழுது நடந்து கொண்டிருப்பது அந்த நாட்களை நினைவு கூர்வது மட்டுமே என்றாகி விட்டது. அதிலும் கூட ஆயிரமாயிரம் சிடுக்குகள். சில்லெடுப்புகள். ஒரு போராட்டத்தை எப்படி முன்னெடுப்பது என்ற வழிமுறையைக் கூட கண்டறிய முடியாத அளவுக்கு நம்முடைய அரசியற் களம் சிதைந்து போய்க்கிடக்கிறது. இது தனியொருவருடைய குற்றமல்ல. வரலாற்று நெருக்கடிகளின்போது இவ்வாறான நிலைமைகள் ஏற்படுவதுண்டு. எதிர்ச்சக்திகள் இதையே செய்யும். நமக்கு நேர்ந்திருப்பதும் இதுதான். ஆனால், இதை நாம் கடந்து செல்ல வேண்டும். அதற்கான அறிவுக்கண் நமக்கு வேண்டும். அதற்கான திடகாத்திரமான சிந்தனை வேண்டும். திலீபன் அதையே நம்மிடம் கோருகின்றார். அவருடைய இந்த நினைவுக் காலம் அதையே நம்மிடம் வேண்டி நிற்கிறது. திலீபனை அறிந்தோரும், தெரிந்தோரும் அவரை மதிப்போரும் அவருடைய போராட்டத்தை அங்கீகரிப்போரும் செய்ய வேண்டியதெல்லாம், ஒரு விசுவாசமான மக்கள் அரசியற் போராட்டத்தை ஆரம்பிப்பதே. அதற்காகத் தம்மை அர்ப்பணிப்பதே. அதில் அவரைப் போல உறுதியோடு நிற்பதே. அதன் மூலம் எதிர்த்தரப்புகளுக்கு நெருக்கடிகளை உருவாக்குவதே. முன்னோடிகள் எப்போதும் நமக்கு சில வழிகளையேனும் காண்பிக்கிறார்கள். அதை நாம் நமக்கென வடிவமைக்கும்போதே அவர்களுக்கான மதிப்பை அளிக்க முடியும்.

வரலாற்றின் துயரத்தைப் பாருங்கள். திலீபன் அன்று முன்வைத்த ஐந்து கோரிக்கைகளில் ஊர் காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்பட வேண்டும் என்ற நான்காவது கோரிக்கை தவிர ஏனைய நான்கும் அப்படியேதான் உள்ளன. இதில் நான்காவதை இராணுவமுகாம்கள் என்று மாற்றிக் கொள்ள வேண்டும். இதை விட இன்னும் பல கோரிக்கைகளை நாம் இன்று சேர்த்துக் கொள்ள வேண்டியுள்ளது. காணாமலாக்கப்பட்டோர், போரினால் பாதிக்கப்பட்டோர், போர்க்குற்றவாளிகளை விசாரிப்பது, பௌத்த அடையாளங்களை வடக்குக் கிழக்கில் வலிந்து நிறுவுதல், கடலோரங்களை சிங்கள ஆதிக்கத்திலிருந்து பாதுகாப்பது எனப் பல. அத்தனையும் எரிதணல் போன்றவை.

**இதற்கெல்லாம் என்ன செய்யப்போகிறோம்?**

திலீபனை நினைவு கூர்வதென்பது, அவருடைய உறுதியோடு மக்களின் நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கான போராட்டங்களை, மக்கள் பங்கேற்போடு நடத்துவதேயாகும். அதுவே அவருக்கான மெய்யஞ்சலி. மாறாக வெறும் நடைபவனிகளோ, புகழுரைகளோ, தெருவிளக்கேற்றுவதோ மட்டுமல்ல. வரலாறும், இந்தக் காலமும் வேண்டுவது வேறு. அது திலீபன் காட்டிய தியாகச் சுடரேற்றுதலையே. ■

# மௌன மொழி 12 இற்கான கவிதைகள்

**பரிசு பெறும் கவிதை**

நொடிக்கொரு காயம் தன் மீது பட
நொறுங்கிப் போய் கிடக்கும்
தாயிவள்.
இருப்பினும் அவள் கண்ணீரோ
இளைய பிஞ்சுகளுக்காய் வடிந்தது
அவளை அணைத்த ஆறுதல்
முத்துக்கள்
ஆழமாய் பதித்தன ஓரிரு வரிகளை
'அம்மா, உனக்கு ஆயுள் பலகாலம்
அழியவிடாது இன்றைய எதிர்காலம்'

**திஷா ,**
**பளை.**



உருண்டோடும்
உலகைச்சுற்றும் சிறார்கள்
சுதந்திரமாய் பறவைகள் பறக்க
கையை விட்டால் எங்கு செல்வோம்
என்று தெரியாத சிறார்கள்
சிரித்துக் கொண்டு விளையாட.....
வானத்தாலும், பூமியாலும் அனர்த்தம்
அது இயற்கை அனர்த்தம்.

*சிவம் அபி*

**ஆடிப்பாடி**
**அடிமுடிதேடி**
**அனைவரும்..**
**பூமிப்பந்தின்**
**புகலிடம்நாடி**
**போகுமிடம்தான்**
**எங்கே...?**

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்.

ஏற்றத்தாழ்வுகள் எம்மிடமில்லை
சாதி மத பேதமற்ற சமத்துவ மலர்கள் நாம்
பூமித்தாயை பூஜித்து மகிழ்ந்திடப்
புறப்பட்டு விட்ட புஷ்பங்கள் நாம்
அன்புடன் நட்பும் அகிலத்தை ஆளும்
அதற்காய் நாமும் அணிவகுத்திடுவோம்

S.மதீஷன்,
தரம் 10, வித்தியானந்தா கல்லூரி.முள்ளியவளை.

**ஆழி சூழ்ந்த இப்பாரின்**
**அழகினை செயற்கை உருக்குலைக்க**
**வானில் வட்டமிடும் பறவைகளாய்**
**வண்ணப் பூமிப்பந்தை வட்டமிட்டு**
**நீங்கா வடுக்களுடன்**
**நிலைகுலைந்த எம் தாயை**
**காப்போம் எனக் கைகோர்த்து**
**கனவுகளை ஏந்தி நிற்கும் நீங்களும்**
**ஓர் வழிகாட்டிகளே!**

*துஸானி பரமானந்தம்*
*யா.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை*

**பூமிப் பந்தாம் இதுதன்னை**
**பாதுகாக்க ஒன்றானோம் நாம்**
**நலிந்து போன நற்பண்பையும்**
**நொடிந்து போன மகிழ்வதையும்**
**தொலைத்து நிற்கும் உன்னையினி**
**பரிதவிக்க விட்டிடாமல்**
**தாங்கிப் பிடிக்க ஒன்றானோம் நாம்**
**எமதாக்குவோம் பொன்னான பூவுலகை**

**வி.வசந்தா,மட்டுவில்**

பூமிப் பந்தினைப்
புதல்வர்கள் காத்திட
தம்மிரு கரங்களைத்
தயையுடன் கோர்த்தனர்
ஒற்றுமை ஒன்றினால்
உலகதைக் காத்திடும்
உயர்ந்த நல்லெண்ண
உணர்வுடன் கூடினார்

*சிவகாமி*
*ஏழாலை,*

**ஐக்கியப்பட்டால் காசினியும்**
**உங்கள் கரங்களில்**
**சர்வமும் வசமாக**
**எம் இனம் ஒன்றுபட**
**பாலகர்களே கரம் கோர்த்து**
**பாறையை அன்றி**
**சிகரத்தையும் புரட்டி**
**எடுத்துக்காட்டு ஆகுங்களேன்..**

*சி.உமாசிவம், வவுனியா.*

வாழ்க்கை என்ற வட்டத்திற்குள்
சங்கிலித் தொடர் போல் வாழ்ந்த
எம் இனிய வாழ்வு -இன்று
கொரோனா என்ற வட்டத்திற்குள்
சிக்கித் தவிக்கும் எம் துயர் வாழ்வு
எம் வாழ்வின் துயர் இல்லாது போக
சமூக இடைவெளியைப் பேணி
நம்மை நாமே பாதுகாப்போம்.

*க.மலர்,சிறுவர் இல்லம் திருநெல்வேலி.*

தீமை மிக்க மனிதரின்
கபடம் நிறை செயல்களால்
துவண்டு போன உலகினை
தூய்மை மிக்கதாக்கிட
துயரைத் தூர ஓட்டிட
துணிந்து துள்ளி எழுந்துநாம்
ஆர்வருடன் கற்றபின்
அணி திரள்வோம் தோழரே.

*பக்ஸ்ரன் டயஸ்,*
*இல.77, உப்புக்குள வீதி,மன்னார்.*

**திணிக்கப்பட்ட பொறுப்புக்கள்**
**திணறி நிற்கும் சிறு உலகம்**
**எதிர்கால வாழ்வதனை**
**கட்டிக்காத்திடும் ஓர்மமுடன்**
**இயங்கி நிற்குமெம்**
**இளம் பிஞ்சுகள்**

*க.தில்லை.மட்டுவில்.*

காத்திடுவோம் எமதுலகை
கரங்கொண்டு மனதில்
உரங்கொண்டு
வலிமையுடன்
திணிக்கப்பட்ட தீமைகளை
திடங்கொண்டு அழித்து
மீட்டிடுவோம்

*தி.பாரதி, நாவற்குழி.*

பழுதான உலகை சீராக்க
பாலர் நாம் பயணிப்போம்
விழுதென எம் விரல்களையாக்கி
வீழ்ந்து விடாமல் விரைந்தெழுவோம்

இயற்கையளித்த ஈகை மறவோம்
இடர் அகற்ற ஒன்றிணைவோம்
நஞ்சாகும் பூமிப்பந்தை
துஞ்சாது தூய்மை செய்வோம்.

*அ.இலக்கியா.பேசாலை.*

பிறக்கும் வரை தாயின் கருவறை
இறக்கும்வரை பூமி எனும் கருவறை
இரண்டையும் காத்தல்தான்
நம்வாழ்க்கையின் நடைமுறை

*ச.பிரியந்தி,10ஏ,கனகரத்தினம் மத்திய*
*மகாவித்தியாலயம்.*

அன்னை அவள் வயிற்றினுள்
அடங்கி ஒடுங்கிக் கிடந்த நாம்
உலகம் என்ற உருண்டையை
சுற்றி மகிழ்ந்து பாடுவோம்
துயரம் எங்கள் வாழ்வினில்
துளி அளவும் அணுகாது
அம்மை அப்பன் நீங்கள்தான்
ஆதரிக்கவேண்டுமே

**அ.வி.யேசுதாஸ்,**
இல 21/4அடப்பன் வீதி,
யாழ்ப்பாணம்.

**வான் பறவைகள்**
**இட்ட எச்சத்தின்**
**மிச்சத்தில் - உச்சி**
**விளையாடும் பட்சிகள்**
**நாளை(ய)உலகை**
**சுற்றும் சிற்பிகள்**

*விஜயராணி.அராலிமத்தி*
*வட்டுக்கோட்டை*

அழகான பூமியிது
அறிவியலால் அசிங்கமாச்சு
ஆக்கம் செய்ய அணிவகுத்தோம்
ஊக்கம் தர வாரீரே!
விடம் நிறைந்த பாரிலே
தடம் பதிக்க இஷ்டமில்லை
வடமாக கரம் கோர்த்து -புதுப்
படைப்பாக்க விரைகின்றோம்

***அ.இனியவன் மன்னார்.***

உலகமே உம்மதென்று
உயர்வான எண்ணங்களுடன்
உலாவரும் உங்களைப்போல்
ஒன்றுபட்டு ஓரணியானால்
அழிவிலிருந்து இனம் காத்து நாம்
அகிலத்தையே ஆண்டிடலாம்.

V.Pசிவேஸ்,தண்ணீரூற்று

பூமிப்பந்தே,பூமிப்பந்தே
இன,மொழி,பேத மேலீட்டால்
பொலிவிழந்து போய் விட்டாயே
சின்னம் சிறுவர் நாம் உன்னை
சீரழிய விடமாட்டோம்
வீர மறவர் நாமெல்லாம்
வீறு நடை போட்டெழுந்து
இன,மொழி பேதம் ஒளித்திடுவோம்

எம்.மான்சிக்கா, யாழ்ப்பாணம்.

# மௌன மொழி 13



**கவிதைக்கு பரிசு 1000/=**

**உங்கள் கவிதைகள் எங்கள்**
**கதவைத் தட்ட**
**வேண்டிய கடைசி நாள்:**
**18.09.2020**

இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனை யில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி அனுப்புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/பரிசாகக் காத்திருக்கிறது. பாராட்டுப் பெறும் ஏனையவை மௌனமொழி பகுதியில் பிரசுரமாகும்.

*அனுப்ப வேண்டிய முகவரி:*
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
மின்னஞ்சல் முகவரி: *uthayansanjeevi@gmail.com*

0773165555

இதுவரை பரிசுக்குரிய கவிதைகளை எழுதியோருக்கு பரிசில்கள் விரைவில்... உங்கள் பரிசை உறுதிப்படுத்த எமது தொலைபேசி எண்ணோடு தொடர்பு கொள்ளவும்.

# வன்மப்படுத்தல்



முன்னேற்பாட்டுடன் நடத்தும்
தாக்குதலைப் போன்று
திடீர் திடீரென என்னைச்
சுற்றி வளைக்கிறாய்
(எதிலும் முன்னேற விடாமல்)

நீ வஞ்சித்தவர்களை
மறந்து துரோகி என்கிறாய்
நீ குற்றவாளியாக இருந்து கொண்டு
என்னைத் தண்டிக்கிறாய்

நீ ஏவிய சூறாவளி
வெற்றிகரமாய் வீசி வீசி
என் தேசத்தையே
நாசப்படுத்தலாம்

உலகில்
ஒரே காலநிலை
ஒரே அதிகாரம்
நிலைத்திருப்பதில்லை என்பதை
நீ மறந்துவிட்டாய்

ம.பா.மகாலிங்கசிவம்

தமிழிலக்கிய உலகில் கடந்த சில தசாப்தங்களாக பெண்ணியம் பற்றிய சிந்தனைகள் முதன்மை பெற்று வருகின்றன. ஆணாதிக்கத்துக்கு உட்பட்ட பெண்களுக்குப் போதிய விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களை இயக்கமாக்கி உரிமைகளுக்காகப் போராடச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் பெண்ணிய இயக்கங்கள் செயற்பட்டன.
ஈழத்திலும் பெண்ணியம் சார்ந்து எழுதும் மிகப் புகழ்பெற்ற எழுத்தாளர்கள் பலர் இருக்கின்றனர். இவ்வரிசையில் அனார் குறிப்பிடத்தக்கவர்.1990 களில் இருந்து அனார் என்ற புனைபெயரில் எழுதி வரும் இஸ்ஸத் ரிஹானா முகம்மட் அஸிம்,கிழக்கிலங்கையில் உள்ள சாய்ந்தமருதில் பிறந்தவர். பெண்களுக்கு எதிராகப் பர்தா அணிதல் முதலிய கடுமையான நடைமுறைகளைக்கொண்ட இஸ்லாமியக் குடும்பத்தில் பிறந்தவர். இதனால் பெண் அடக்குமுறைக்கு எதிராகக் கவிதைகள் மூலம் மிகத் தீவிரமாகப் போராடி வருபவர்.
ஓவியம் வரையாத தூரிகை,எனக்குக் கவிதை முகம்,உடல் பச்சை வானம்,பெருங்கடல் போடுகிறேன். முதலிய கவிதைத் தொகுதிகளையும் 'பொடுபொடுத்த மழைத் தூறல்' என்னும் கிழக்கிலங்கை நாட்டார் கவிதைத் தொகுப்பையும் வெளியிட்டுள்ளார்.
"சொல்ல முடியாததைச் சொல்வதும் பகிர்ந்து கொள்ள முடியாததைப் பகிர்ந்து கொள்வதும் கவிதை" என்ற நம்பிக்கையுடனும் "நான் எழுதுகிறேன் என்பதற்கும் நான் வாழ்கிறேன் என்பதற்கும் வித்தியாசம் இருக்கக் கூடாது"என்ற பிரகடனத்துடனும் கவிதைத் துறையில் ஆழக் கால் பதித்துள்ளவர் அனார். அவரது 'ஓவியம் வரையாத தூரிகை' என்ற கவிதைத் தொகுப்பில் உள்ள கவிதை கீழே தரப்படுகிறது.

சுற்றி வளைத்து
வேலிகட்டி
அதற்குள் என்னைச்
சுவாசிக்க சொல்வதுதான்
நீ காட்டும் சுதந்திரம்

விரிந்தெழுகிற
என் தேடல்களைப் பரிசோதிக்க
உன் கையில் அதிகாரம்
அதனால் தான்
நினைத்தபடி
நீ சத்திர சிகிச்சை செய்ய
என் வாழ்க்கை
விபத்திலடிபட்ட பிராணியாகிவிட்டது

சுயத்தையெல்லாம்
ஒப்படைத்து விட்டு
வைக்கோல் பொம்மையாகி
உன் இழுப்புக்கு
ஆட வேண்டுமென்றே
நீ நினைக்கிறாய்

நீ சொல்வதுதான் வேதம்
நீ காட்டுவது தான் உலகமெனில்
எனக்கென்று
இதயமும் கண்களும் எதற்கு?

தமிழ்ப் பெண்களில் பெரும்பாலானவர்களின் வாழ்வியல் நிலையைச் சித்திரிப்பதாக இக்கவிதை அமைந்துள்ளது. பெற்றோருடனான வாழ்க்கைக் காலத்தில் மிகச் சிறந்த திறமைகளையெல்லாம் வெளிப்படுத்திச் சாதனைகள் படைத்த பலர், திருமணத்தின்பின் பெட்டிப்பாம்பாக அடங்கி,இல்லை இல்லை அடக்கப்பட்டுச் சுயம் இழந்து சோக வாழ்வைத் தொடர வேண்டியவர்களாக உள்ளனர். சங்கீதம்,நடனம்,கவிதை,சிறுகதை முதலிய துறைகளில் ஆற்றலை வெளிப்படுத்திய பெண்கள் திருமணத்தின் பின் குடும்பச் சுழியில் அகப்பட்டுக் கரையேறவே முடியாதவர்களாக ஆகினர். இத்தகைய பெண்களின் திறமைகள் கணவனின் "வன்மத்திற்கு முன்"எவ்வாறு காணாமற்போனதென இக்கவிதை விளங்குகிறது.

தேன் சுவை

"சுற்றி வளைத்து
வேலிகட்டி
அதற்குள் என்னைச்
சுவாசிக்கச் சொல்வதுதான்
நீ காட்டும் சுதந்திரம்"

எனப் பெண்களுக்கு ஆண்கள் பரிசளிக்கும் அடக்கு முறைக்கு உட்பட்ட சுதந்திரம் பற்றிக் கவிதை தொடங்குகிறது.

விரிந்தெழுகிற
என் தேடல்களைப் பரிசோதிக்க
உன்கையில் அதிகாரம்
அதனால்தான்
நினைத்தபடி
நீ சத்திரசிகிச்சை செய்ய
என் வாழ்க்கை
விபத்திலடிபட்ட பிராணியாகி விட்டது"



எனும் அடுத்த அடிகள் பெண் மேற்கொள்ளும் எந்தத் தீர்மானத்தையும் அதன்பின்னால் ஏதாவது தந்திரங்கள்,தவறுகள் மறைந்திருக்கிறதா என்று பரிசோதித்துப் பார்த்த பின்னரே அனுமதி வழங்கும் ஆண்மேலாதிக்கத்தை வெளிப்படுத்துகின்றன. பரிசோதிப்பதற்கான அதிகாரம் தாலி என்றும் வேலி வடியில் ஆண் கையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வாறான பரிசோதனை அதிகாரத்தைப் பயன்படுத்தி ('வீட்டோ அதிகாரம் போன்றது)ஆண் நினைத்தபடி யெல்லாம் பரிசோதனை செய்வதால் பெண்ணின் வாழ்க்கை வீறு நடை போட்டுச்செல்ல முடியாத விபத்திலடிபட்ட பிராணியின் நிலைக்குக் கீழிறங்கி விடுகிறது. பரிசோதிப்பதைச் சத்திரசிகிச்சை செய்வதாகவும் பெண்ணின் வாழ்க்கையை விபத்திலடிபட்ட பிராணியாகவும் காட்டும் படிமங்கள் கவிதைக்கு மேலும் அழகூட்டுகின்றன.

"நீ சொல்வதுதான் வேதம்
நீ காட்டுவதுதான் உலகம் எனில்
எனக்கென்று
இதயமும் கண்களும் எதற்கு"

என்னும் அடிகளின்பின் பெண்களின் ஆத்மாவை,உணர்வுகளை தனித்துவமான பார்வைகளை ஆண்கள் புரிந்துகொள்ளவில்லையே என்ற ஏக்கம் இழையோடுகின்றது.
மரவு வழி யாப்புக்களில் ஒன்றான வெண்பா யாப்பில் எழுந்த பாடல்களின் உயிர், பாடலின் ஈற்றடியிலேயே இருக்கும் என்றும் "பல்லியின் வால்போல் அது தனியாகப் பிரிந்து எடுக்கப்பட்டாலும் உயிர்ப் போடு துடித்துக்கொண்டிருக்கும் என்றும் கூறுவார்கள். அனாரின் கவிதைகளின் ஈற்றடிகளும் வாசகன் இதுவரை நடந்த தளத்திலிருந்து வேறொரு தளத்துக்குக் கொண்டு செல்பவையாக அமைந்திருக்கும்.

நீ ஏவிய சூறாவளி
வேகமாய் வீசி வீசி
என் தேசத்தையே
நாசப்படுத்தலாம்

உலகில்
ஒரே காலநிலை
ஒரே அதிகாரம்
நிலைத்திருப்பதில்லை என்பதை
நீ மறந்து விட்டாய்

எனக்கவிதை நிறைவு பெறுகிறது.

கவிதையின் இறுதியில் ஒரே அதிகாரம் உலகில் நிலைத்திருக்காது. காலம் மாறும், பெண்களுக்கு விடிவு கிட்டும் என்ற நம்பிக்கையைப் பெண்கள் மனதில் விதைத்து விடுவது கவிதையின் மிகப் பெரும் பலமாக அமைகின்றது.

# அவர் அப்படித்தான்

(06.ஆம் பக்கத் தொடர்ச்சி)

"உனக்கு கஷ்டமில்லாட்டி ஒரு இருபத்தையாயிரம் காசு குடுக்க ஏலுமா?"
எப்படி இருந்த மனிசன் ,இப்படி இருபத்தையாயிரம் கேட்கிற நிலைமையில் இருக்கிறாரே. எத்தனை பிள்ளைகள் நல்ல நிலைக்கு வரக் காரணமானவர் ....
ஆனால் அவர் அப்படியே அந்த நிலையிலேயே...
இல்லை இல்லை பென்சனுக்குப் பிறகு அதைவிட மோசமான நிலைக்குப் போயிட்டாரே, இலங்கையில் ஆசிரியர்களின் நிலைமை இதுதானா, நினைக்க கவலையாகத்தான் இருந்தது நிவாசனுக்கு. இருந்தாலும் சிறி சேருக்கு உதவி செய்ய ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கே என்று கொஞ்சம் ஆனந்தமாகவும் இருந்தது.
"கட்டாயம் சேர் , இப்போவே உங்களோடேயே வந்து ஏ.டி.எம் இல் எடுத்துத் தாறன் சேர்"
"நன்றியப்பா ,அவசரப்படாதை..."
பொக்கெற்றில் இருந்து ஒரு சின்ன நோர்ட் புக்கை எடுத்து அதில் இருந்த விபரத்தை ஒரு பேப்பரில் எழுதி.
"இந்தாப்பா ...இதில இருக்கிற எக்கவுண்டில போட்டு விடு. இந்தப் பெடியன் படுவாங்கரையில் இருந்து ஓ. எல் லிலை நல்லா பாஸ் பண்ணி எங்கட ஸ்கூலிலதான் பயோ படிக்கிறான். பாவம், அப்பா இல்லாத பெடியன், ஹொஸ்டல் காசுகூட இல்லாமல் அவதிப்படுறான் ,காசு போட்டுட்டு ஏலுமெண்டால் அப்படியே அதில இருக்கிற ஹொஸ்டல் நம்பருக்கும் கோல் பண்ணி அவனிட்டயும் சொல்லிவிடப்பா..."
சொல்லிக்கொண்டிருக்கும்போதே "சேர் நாப்பத்தியஞ்சு ரூபா" என்றான் ரீ கொண்டுவந்தவன்.
நிவாசன் பொக்கெற்றுக்குள் கையை விட,
"டேய் சும்மா இரு, நானே குடுக்கிறன்" சரியாக நாப்பத்தியெட்டு ரூபாயை எண்ணி "மிச்சத்தை நீயே வைச்சிரு" என்று கொடுத்தார்.
"டேய் சும்மா இரு நானே குடுக்கிறன்.." என்று சிறி சேரின் வார்த்தையில் பள்ளிக்காலத்தில் அவர் அதட்டும் அதே மிடுக்கு இருந்தது.
மீறிக் கதைக்க தைரியம் வரவில்லை நிவாசனுக்கு.

கணபதி சர்வானந்தா

# காசாகும் தண்ணீர்

## யாழ்ப்பாணத்தில் அனுமதியின்றி நடக்கும் தில்லுமுல்லுகள்!!

ஒரு காலத்தில் இலங்கையில் நீருக் கும் பஞ்சம் வருமானால் அது முத லில் வடபகுதியிலேயே நிகழலாம் என்று ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவிக் கின்றனர். அதற்கான அறிகுறிகள் தற் போதே தென்படத் தொடங்கிவிட்டன. ஆனால், அதனை எம்மவர்கள் கணக்கி லெடுப்பதாக இல்லை. நீர் முகாமைத்து வத்தில் மிகவும் பலவீனமானவர்களாக வட பகுதி மக்கள் இருப்பதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. தண்ணீர் ஒரு பொதுப் பொருள். அதனை மழை வரும் போது நிலத்துக்குள் சேமிப்பது என்ற வழி வகை தெரிந்தும், அதனைச் செய்ய முன் வராத மக்களை என்னவென்பது?
சுயநலமும், சுற்றாடல் பற்றிய எந்தவித பொறுப்பும், அக்கறையும் அற்றவர்க ளான எமது மக்கள் அடுத்த சந்ததி பற் றிய அக்கறையிலாவது நிலத்தடி நீரைத் தேக்கி வைக்கும் முயற்சியை முன்னெ டுப்பார்களா? மழை நீரை ஒரு வளமாக மாற்றும் நடவடிக்கை மாலைதீவுகளில் மகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வரு வது குறிப்பிடத்தக்கது.

**மறந்துபோனோமா?**

காணி, பூமி, வீடு, வளவு, நகை, நட்டு என்று எதிர் காலச் சந்ததியினருக்காகச் சேமிக்கும் எண்ணம் கொண்டவர்கள் எம்மவர்கள். ஆனால், அவர்கள் எதிர்கால நன்மை கருதி வளங்களையும் சேமித்து தம் சந்ததியினருக்கு வழங்க வேண்டும் என்ற பொறுப்பும் தமக்கு உண்டென்பதை மறந்துவிடு கின்றனர். ஒரு கோயிலைக் கட்டிக் கும்பாபிஷேகம் செய்து ஆண்டவனை அழகுபடுத்த விரும்புப வர்களும் கோயிலுக்கு அருகாமையில் உள்ள குளங்க ளையும் கேணிகளையும், ஏரிகளையும் மூடி இயற் கையை அசிங்கப்படுத்துவது ஏனோவென்று தெரி யவில்லை. உதாரணமாக மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்துக்குச் சொந்தமாக இருந்த குளம் இன்று மூடிமறைக்கப்பட்டு விட்டிருக்கிறது. இத னைக் கோயில் நிர்வாகமே செய்திருக்கிறது. அது போல, பல கோயில்க ளுக்குச் சொந்தமாக இருந்த நீர்த்தேக்கங்கள் இன்று அழிந்து போயிருப்பதற்கு காரணம் எங்கிருந்தோ வந்த அந்நியர்கள் அல்லர், மாறாக நாங்கள் தான். தேவையானவற்றை முன் வைத்துப் பேசாமல் தேவையற்ற விடயங்களில் அதிக கவனம் செலுத்திப் பேசிக் கொண்டிருக்கி றோம். தெற்கிலங்கையில் இருந்து தினமும் வந்து குவியும் குடிதண்ணீர்ப் போத்தல்களைக் கண்டதும் எம்மவர் பலரும் அதனைப் போல வட மாகாணத் துக்குள் ஒரு தொழிற்சாலையை நிறுவி தன்னீரை அடைத்து விற்றால் அதிக பணம் ஈட்டலாம் என்று களத்தில் இறங்கி அந்த அனுமதிக்காக முட்டி மோதி முயன்று பார்த்து தோற்றுப் போனார்கள்.

**யாருக்கும் அனுமதி கிடையாது**

குடிநீரை சுத்திகரித்து விற்பனை செய்ய யாழ்ப்பா ணக் குடாநாட்டுக்குள் அனுமதி வழங்கப்பட வில்லை. அது மட்டுமல்லாமல் வட பகுதி வறண்ட பிரதேசம் . எனவே யாழ்ப்பாண மக்கள் நிலத்தடி நீரையே நம்பியிருக்க வேண்டிய நிலை . அதுவும் சுமார் 30 அடிக்கு கீழுள்ள நீரையே அவர்கள் தமது குடிநீர் தேவைக்காகப் பெற்றுக்கொள்கிறார்கள். இப்படி மிக அருந்தலாக உள்ள நீர் வளத்தை பணம் பார்க்கும் பண்டமாக சில ர் மாற்ற நினைப்பது ஆபத்தானது என்கிறார்கள் சூழலியலாளர்கள்.
குடிதண்ணீரைப் போத்தலில் தானே அடைத்து விற்கத்தானே தடை. அதனால் யாழ்ப்பாணத்தில் பணம் பார்க்க நினைத்த சிலர் வேறுவகையில் அத னைக் கையாண்டனர். அதாவது இப்போது நீரைச் சுத்திகரித்து விற்பனை செய்யப் பல கடைகள் திறக் கப்பட்டிருக்கின்றன. நீரை நேரடியாக ஒரு விற்பனைப் பொருளாக மாற்றுவதற்குப் பல நடைமுறைகள் உண்டு. தென் இலங்கையில் தண்ணீர் பலவிதமான சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு, அனுமதி பெறப்பட்ட பின்பே விற்பனை செய்ய அனுமதிக் கப்படுகிறது. ஆனால் நீர் வளம் அருகிவரும் யாழ். குடாநாட்டில் தென்னிலங்கையைப் போன்று சுத்தி கரிக்கப்பட்ட தண்ணீரை வியாபாரப் பொருளாக்க அனுமதிக்கலாமா என்று கேள்விக்குரிய விடயமே!

**சட்டம் சொல்வதென்ன?**

மக்களின் குடிநீர்ப்பாவனைக்கு சுத்தமான தண்ணீர் அவசியம் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் அதனை வியாபார ரீதியாக விற்பனை செய்வதில் உள்ள அடிப்படை விதி முறைகள் சரிவரப் பின் பற்றப்படுகின்றனவா? என்று அவதானிக்கப்படுவது அவசியம்.
சட்டவிதிகளில் சொல்லப்பட்டபடி. குடிதண்ணீர் சுத்தகரிப்பு இயந்திரம் ஒன்றைப் பொருத்தி குடி தண்ணீர் வியாபாரம் செய்ய வேண்டுமெனில் அதற் காகப் பெறவேண்டிய அனுமதிகள் இவை.

1. சிறு கைத்தொழிலாகப் பதியப்படல். SSI Registration.
2. தரக் கட்டுப்பாட்டு சான்றிதழ் SSS Mark Certificate (BIS Registration)
3. சூழல் தொடர்பாக மாசு கட்டுப்பாட்டுச் சான் றிதழ் Pollution control certificate.
4. வடிகட்டுதலின்போது பெறப்படும் கழிவு அகற் றுவதில் முறையான முகாமைத்துவம் பின்பற் றப்படுகிறதா?
5. விற்பனைக்காக நீர் எடுக்கப்படுகின்ற கிணற்று நீர் பற்றிய தரச் சான்றிதழ். எங்கிருந்து நீர் எடுக் கப்பட்டுச் சுத்தகரிக்கப்படுகிறது? அதாவது கழிவு அகற்றப்படுகின்ற பிரதேசத்துக்கு அண் மையில், இடுகாடுகளுக்கு அண்மையில், மல சல கூடங்களை ஒட்டி இருக்கின்ற கிணறு



களில், கழிவு நீரோடைகளுக்கு அண்மையில், திண்மக் கழிவு அகற்றப்படும் பிரதேசங்களுக்கு அண்மையில் இருந்து நீர் பெறப்படவில்லை என்ற உறுதிச் சான்றிதழ். Every needed test reports of raw and pure water.
6. கிருமித் தொற்று நீக்கப்பட்ட சான்றிதழ் Pest control certificate.
7. மருத்துவச் சான்றிதழ் ChemistDegree and medical certificate & Microbiologist degree and medical certificate. என்று பல முன்னெடுப்புகள் அவசிய மாதென்று வரையறுக்கின்றன சட்ட திட் டங்கள்.

**மீறப்படும் விதிகள்**

தற்போது நடைபெறுகின்ற நீர் விற்பனை நிலையங் களில் இந்த விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றனவா? என்பது சந்தேகமே. கண்ட கண்ட இடங்களில் குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டு அதில் தாங் கிகளையும், சுத்திகரிப்புக் கருவிகளையும் பொருத்தி விட்டு நேரடியாகவே மக்களுக்கு தண்ணீர் விற் பனை செய்யப்படுகின்றது. இதைவிட நடமாடும் நீர் விற்பனை நிலையங்களும் செயற்படுகின்றன. ( வழமையாக விற்பனை செய்யப்படுகின்ற குடிதண்ணீர் போத்தல்களில் சுகாதாரத் திணைக்களத்தின் தரச் சான்றிதழ் இலக்கமும், நீர் எடுக்கப்படுகின்ற வழி பற்றிய விபரமும் குறிப்பிடப்பட்டிருப்பதை அவதானிக்கலாம்) நீரை விற்பனை செய்யும் கடைகளின் விளம்பரப் பலகையில் ஆங்கி லத்தில் Pure Drinking Water, Mineral Water எனவும் எழுதப்பட்டிருக்கிறது. Mineral Water எனச் சாதாரணமாக விளம்பரப்படுத்த முடியாது. அதற்குப் பல தரச் சான்றிதழ்களைப் பெற்றாக வேண்டும். எனவே இதுவும் மக்களை ஏமாற்றப் பயன்படுகிறதா? என்ற கேள்வியும் எழா மலில்லை.

**விழிப்புணர்வு அவசியம்**

இத்தகைய வியாபார நிறுவனங்களைத் தடைசெய்ய வேண்டும் என்ற அடிப்படையில் அது பற்றிய விட யங்களை இங்கு நாம் பேசவில்லை. மக்கள் நலன் கருதி , மக்கள் சுகாதாரப் பாதுகாப்புக் கருதி, வளங் களை அருகிவிடாது பாதுகாக்க வேண்டும் என்ற சமூகப் பொறுப்பின் அடிப்படையில் இவை பேசப் பட வேண்டும். பொறுப்புவாய்ந்த திணைக்களங்கள், அதிகார சபைகளினால் கண்காணிக்கப்பட வேண் டும் , இந்த விடயங்களைப் பொதுவெளிக்குக் கொண்டுவந்து மக்களிடையே உரிய விழிப்பு ணர்வொன்றைத் தோற்றுவிக்க வேண்டும் என்பதே கட்டுரையாளரின் நோக்கமாகும்.
அந்த அடிப்படையிலே இதுபோன்ற வியாபார ஸ்தலங்களுக்கு அனுமதி வழங்கும் உள்ளூராட்சி மன்றங்கள் மேற்குறித்த விதிகள் பற்றிக் கவனமெ டுத்தார்களா? அவர்கள் தமது ஆளுகைக்குட்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகரோடு கலந்து ஆலோ சித்து அனுமதி கொடுத்தார்களா? இது தொடர் பாக நுகர்வோர் அதிகார சபை என்ன நட வடிக்கை எடுத்துள்ளது? நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபை இது பற்றி என்ன செய்கிறது ? சுற்றுச் சூழல் அதிகார சபை இது பற்றி என்ன நினைக்கிறது? தண்ணீர் போன்ற மூல வளங்களைப் பாதுகாக்க வென நியமிக்கப்பட்ட அதிகாரசபை என்ன செய்யப்போகிறது? என்று பல கேள்விகள் சமூகப்பொறுப்பாளர்களிடம் உண்டு.

**சட்டத்தில் ஓட்டை**

முதலாவது இது போன்ற வியாபார நிறுவ னங்களுக்கான அனுமதியை நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையிடம் பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியம். அதற் கான பொறிமுறை ஒன்றை வழங்கும் பொருட்டு வேதநாயகன் அரச அதிபராக இருந்த காலத்தில் கலந்துரையாடப்பட் டிருப்பது தெரிகிறது. இப்படியான கடைகளுக்கு அனுமதியை எப்படி வழங்குவது என்ற சட்டம் இன்னும் வடமாகாணச் சட்டக்கோவையில் இல் லாதைத் தமக்குச் சாதகமாகக் கொண்டே ‘ தண்ணீர் வியாபாரக் கடைகள்’திறக்கப்படுவதாகத் தெரிகி றது.
ஆனால் இது போன்ற கடைகள் திறப்பதற்குரிய சட்டம் இன்னும் இயற்றப்படவில்லை என்பதை அடிப்படையாகக் கொண்டே “வழங்கக் கூடாது” என்று ஏன் அத்துறைசார்ந்தவர்கள் அர்த்தப்படுத்தி நடவடிக்கை எடுக்க முடியாது? மேற் சொன்ன திணைக்களங்களுக்கு, அல்லது துறைகளுக்குச் சென்று இது பற்றி விசாரித்தால் நிச்சயம் ஒவ்வொரு துறையினரும் “ இதற்கான அதிகாரம் எமக்கில்லை, அவர்களுக்குத்தான்” என்று பந்தை அடுத்த தரப்பி டம் எறியும் விளையாட்டையே செய்வார்கள். ஆனால் இது பற்றிய விடயங்களைக் கையாள , அதனைக் கட்டுப்படுத்த ஏதோ ஒரு திணைக்களத்தி டமோ அல்லது அதிகாரசபையிடமோ பொறுப் பும், அதிகாரமும் உண்டென்பது மறுக்கமுடியாது. எனவே அவர்களாக முன்வந்து மக்கள் நல மேம் பாட்டைக் கருத்தில் கொண்டு செயற்படுவார்களா? அல்லது எதுவேண்டுமானாலும் நடக்கட்டும் என்று கண்ணைமூடிக்கொண்டே இருப்பார்களா? சம்பந்தட்டோருக்கு இவையெல்லாம் சமர்ப்பணம்.

# கிராமத்து மனிதர்கள்... 3

**கந்தப்புவைத் தேடி வருபவர்கள் கல்வெட்டுப் பாடலுக்காக மட்டும் வருவதில்லை. நல்ல நாள், நல்ல நேரம் பார்ப்பிக்க வருபவர்களும் பலர். கந்தப்பு வீட்டில் பல்லாண்டு தொன்மையான பஞ்சாங்கங்கள் நிறைந்து கிடந்தன. ஊரிலுள்ளவர்கள் தங்கள் வீட்டில் ஏற்பாடு செய்யும் நிகழ்வுகளுக்கு நல்ல நாள் பார்ப்பதற்கும் விசேட தினங்களை அறிந்துகொள்வதற்கும் கந்தப்புவைத் தேடி வருவார்கள்.**

○ இராகன்

**கிராமத்து மனிதர்கள் என்ற இந்தத் தொடர் தனித்துவமான கிராமத்து மனிதர்களை மீள நினைவுபடுத்துவதன் மூலமாக அருகிப்போன கிராமத்து வாழ்வின் செழுமைகளையும் சிறப்புக்களையும் வெளிக்கொண்டு வருகின்றது.**

## கல்வெட்டுக் கந்தப்பு





பிறரது கவலைகளைத் தன் கவலையாகச் சுமந்து, அதற்காக இரங்கித் துயர் சுமந்து, அத்துயரை வெளிப்படுத்துவது சாத்தியம் குறைந்து போய்க் கொண்டிருக்கின்ற இன்றைய காலத்தில் இறந்து போன ஒருவருக்காக அவரது மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர் எல்லாரும் வேதனைப்பட்டுப் புலம்புவதாக பாவனை செய்து, பாத்திரவேறுபாட்டுக்கேற்ப இரங்கலின் பண்புகளை மாற்றி மாற்றிக் கற்பனை செய்து பாட்டெழுதுவதும், பின்னர் அந்தப் பாட்டை உணர்வு வெளிப்பாட்டுடன் பாடுவதும் சாதாரணமான காரியமல்ல. இந்த அசாதாரண காரியத்தை அளவுகடந்த பிரியத்துடன் ஆற்றி வருபவர்தான் "கல்வெட்டுக் கந்தப்பு".

தேகவியோகப் பாக்கள் எழுதுவதில் பேர்பெற்றவர். இறந்த ஒருவரின் அந்தியேட்டிக் கிரியையின்போது இறந்தவருக்காய் இரங்கும் உறவுகளின் புலம்பலாகவும், இறந்தவர் குறித்த மெய்க் கீர்த்திகளாகவும் எழுதப்பட்ட பாடல்களை பிரசுரமாக வெளியிட்டு, அவற்றை ஊனும் உளமும் உருகப்பாடுவதில் வல்லவர் என்பதால்தான் "கந்தவனம் கல்வெட்டுக் கந்தப்பு" ஆனார். கல்வெட்டுப் பாட்டுக்களை யாப்பு, அணி இலக்கணங்களோடு எழுதுவதில் மாத்திரமன்றி, உள்ளத்தை உருக்கும் இராகங்களோடு பாடுவதிலும் வல்லவர் என்பதால், ஊரில் அநேகமாக அந்தியேட்டி களில் அவர்தான் கல்வெட்டுப் பாட்டுக் காரர்.

சீர்காழி கோவிந்தராசனையும், ரீ.எம். சௌந்தரராசனையும் சரியான விகிதத்தில் கலந்து வார்த்த வெண்கலக் குரல் அவருக்கு. கல்வெட்டுப் பாடுவதற்கென்றே வனையப்பட்ட குரல்வளை. துயரைக் கவியவைக்கும் இராகங்களில் வெளிப்படும் பாவம் கேட்டுக்கொண்டிருப்பவர்களின் கண்ணீரைப் பெருக்கும். கூத்துகள் மேடையேற்றுவது குறைந்து போக, "ஆணழகி அரியத்தாரும்" கந்தப்புவுடன் சேர்ந்துகொண்டார். சுப்பிரபாதத்துக்குச் சூலமங்கலம் சகோதரிகள் என்றால், கல்வெட்டுப் பாடலுக்கு கந்தப்புவும் அரியமும் தான் பிராண்ட்".

ஊரவர் மாத்திரமன்றி வெளியூர்க்காரர்களும் கல்வெட்டு எழுதுவிக்க கந்தப்புவைத் தேடி வருவார்கள். ஊர்க்காரர் என்றால் பாட்டுக்கு தங்களைத்தான் கூப்பிடவேண்டும் என்ற நிபந்தனையை விதிப்பார். அதற்கான ரேட்டையும்" சொல்லி வைப்பார். வெளியூர்க்காரர் என்றால், பாட்டுக்கு யாரைக் கூப்பிட எண்ணியுள்ளார்கள் என்பதை அறிந்து, அதற்கேற்பவே பாட்டை எழுதத் தீர்மானிப்பார். தாங்கள் தான் பாடுவதாயின் பாட்டின் தரம் ஒன்றாயும், வேறு யாரும் பாடுவதாயின் பாட்டின் தரம் இன்னொன்றாகவும் அமையும்படிதான் எழுதுவார். பாட்டெழுதக் கேட்டு வருபவர்களிடம் முதலில் ஐந்நூறு ரூபாய் "அட்வான்சும்" ஒரு டசின் "புல்ஸ் காப்" தாளும் வாங்கிவிடுவார். பெற்றுச்செல்ல வரவேண்டிய திகதியையும், மீதி தரவேண்டிய தொகையையும் குறித்து கறாராகப் பேசி அனுப்பிவைப்பார். எழுதிய கல்வெட்டை எடுத்துச் செல்ல வரும்போது மீதிப் பணத்தை சரியாக வாங்கிக்கொண்டுதான் பாட்டெழுதிய புல்ஸ்காப் தாளைக் கொடுப்பார். அவ்வளவு தொழில் கண்ணியம்!

கந்தப்புவைத் தேடிவருபவர்கள் கல்வெட்டுப் பாடலுக்காக மட்டும் வருவதில்லை. நல்ல நாள், நல்ல நேரம் பார்ப்பிக்க வருபவர்களும் பலர். கந்தப்பு வீட்டில் பல்லாண்டு தொன்மையான பஞ்சாங்கங்கள் நிறைந்து கிடந்தன. ஊரிலுள்ளவர்கள் தங்கள் வீட்டில் ஏற்பாடு செய்யும் நிகழ்வுகளுக்கு நல்ல நாள் பார்ப்பதற்கும், விசேட தினங்களை அறிந்துகொள்வதற்கும் கந்தப்புவைத் தேடி வருவார்கள். அமாவாசை, பௌர்ணமி போன்ற சாதாரண நாட்களை அறியவும், காதுகுத்து, கடைத் திறப்பு முதலிய சடங்குகளுக்கு பொருத்தமான நாட்களை குறிக்கவும் வயல் விதைத்தல், அறுவடைசெய்தல் போன்றவற்றுக்கான உத்தம நாட்களை அறியவும், கந்தப்பரிடம் வருவார்கள். அந்த வேளைகளிலெல்லாம் ஒரு தேர்ந்த சோதிடர் போல பாவனை செய்வார் கந்தப்பர். அவர் பஞ்சாங்கம் பார்ப்பது ஒருவித பவனி! தேடி வந்தவர்களை காத்திருக்கவைத்துவிட்டு கை, கால், முகம் கழுவி, வெற்றிலை போட்ட வாயை கொப்பளித்து, சாமிப்படத்துக்கு முன்னே நின்று விபூதி தரித்து, சால்வையை எடுத்துத் தோளில் போட்டுக்கொண்டு வருவார். லீச்சாரில்"(ஈசி செயர்) படுத்தபடி பஞ்சாங்கத்தை விரித்து நல்ல நாள் பார்க்கத் தொடங்குவார். பஞ்சாங்கத்தில் நாள் பார்ப்பதற்கு இவ்வளவு பந்தாவா? என்று எண்ணத்தோன்றும். நாள் பார்க்க வருபவர்கள் இவற்றையெல்லாம் பொறுத்துச் சகித்து காரியத்தை முடித்துச் செல்வதற்கு ஒரே ஒரு காரணம், அவர்களிடம் ஒரு பஞ்சாங்கம் இல்லை என்பதைத் தவிர வேறில்லை!

கந்தப்பு ஒரு கலியாணத் தரகரும்கூட. எப்போதும் அவரது தோற்பையில் துணைதேடும் பெண்கள் மற்றும் ஆண்களின் புகைப்படங்களும் கிரகநிலை, நவாம்ச நிலைகளைக் காட்டும் "குறிப்புத் துண்டுகளும்" இருக்கும். சந்தர்ப்பம் வாய்க்கும்போதெல்லாம் விளம்பரப்படுத்திக்கொள்வார். அந்த விளம்பரத்துக்கான நேரம்தான் பஞ்சாங்கம் பார்க்க வருபவர் பொறுத்திருக்கும் காலம். தன்னிடமுள்ள தரமான "மாப்பிளை", பொம்பிளை"களின் ஜாதகக் குறிப்புகள் பற்றியும் அவர்களின் அழகு, அந்தஸ்து, குடும்பப் பின்னணிகள் பற்றியும் விலாவாரியாகச் சொல்லி விளம்பரம் செய்துவிடுவார். தான் செய்துவைத்த சம்பந்தங்களின் சிறப்புக்களை விரித்துரைப்பார். செய்துவைத்த சம்பந்தங்களில் தனக்குக் கிடைத்த புறோக்கர் பீஸ்" பற்றி பெருமையுடன் சொல்வார். இவ்வளவுக்கும் கந்தப்பர் இதுவரை ஒரு சம்பந்தத்தைக்கூட செய்துவைக்கவில்லை என்பது ஊரில் ஒரு கதை. அவர் ஒரு புழுகு மூட்டை! என்பார்கள்.

அந்தியேட்டிக் கிரியைக்காக அதிகாலை நான்கு ஐந்து மணிக்கே ஐயர் வந்துவிடுவார். ஐயருக்கு முன்னர் கந்தப்பர் வந்துவிடுவார். தூய வெண்ணிற வேட்டி இளமஞ்சள் நிறத்தில் நஷனல் தோளில் மடித்துப் போடப்பட்ட சருகைக் கரைவைத்த உத்தரியம், ஏறுநெற்றியில் திரிபுண்டரகமாகத் தரித்த விபூதியும் சந்தனப்பொட்டும், தோற்பை ஒன்றினுள் திருமுறைப் பாடல் தொகுப்பும் அன்றைய நாளில் பாடப்பட வேண்டிய கல்வெட்டுப் பாடல்களின் கையெழுத்துப் பிரதியும் அவருக்கு ஒரு பாகவதர்" தோற்றத்தைக் கொடுக்கும். கிரியை செய்யும் ஐயருக்கு எதிரே தனியான பாய் விரித்து முன்னே ஒலிவாங்கியையும் வைத்து ஐயரின் பணிப்புக்காகக் காத்திருப்பார். ஐயர் பணித்துவிட்டால் அந்தியேட்டியில் ஓர் அரிச்சந்திர மயானகாண்டமே அரங்கேறும்! அவலச்சுவை அழுகையை வர வைக்கும். கந்தப்பர் சுண்ணப்பாட்டுப் பாடுவதை மாணிக்கவாசகர் நேரில் வந்து கேட்பாரேயானால் திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார் என்பதன் உள்ளர்த்தத்தை அப்போதுதான் உணர்ந்து கொள்வார்!

கல்வெட்டுப் பாடல்களைப் பாடத் தொடங்கிவிட்டால் அந்தந்த உறவுகளுக்கு அந்தந்தப் பாவனை வெளிப்படும். கணவன் அல்லது மனைவி பிரலாபம், பிள்ளைகள் பிரலாபம், பேரப்பிள்ளைகள் பிரலாபம் என்று நீளும் பிரலாபங்களைப் பாடி இறந்தவரின் நினைவுகளில் அவர்களை முக்குளிக்க வைத்துவிடுவார். உருகிப் பாடும்போது உறவினர் எவராவது இறந்தவரை நினைத்து அழுவதைக் கண்டுவிட்டாரேயானால் போதும் பாட்டு உச்சத்தைத் தொடும். இடையிடையே அந்தியேட்டிக்கு வந்திருப்பவர்கள் தான் பாடுவதை இரசித்துக் கேட்டுக்கொண்டிருக்கிறார்களா என்று பாடிக்கொண்டே சுற்றிப் பார்த்து உறுதிப்படுத்திக் கொள்வார். இரங்கல் பாடல்களின் முடிவில் "பாடலாக்கம் - கவிஞர் காத்திப்பிள்ளை கந்தவனம்" என்று ஒலிபெருக்கி வாயிலாகத் தன்பெயரைத் தானே செல்லும்போது அவருக்குள் ஏற்படும் மிதப்பு அவரது கண்ணில் தெரியும்.

பாடி முடிந்ததும் சபையில் இருப்பவர்கள் தன்னைத் துலாம்பரமாக பார்க்கக் கூடியவாறு ஓரிடத்தில் கதிரைபோட்டு அமர்ந்துகொள்வார். சபையில் உள்ளவர்களில் எவராவது ஒருவர், அவரது பாடலின் பெருமையை தேடிவந்து நிச்சயம் சொல்வார் என்பது அவருக்குத் நன்கு தெரியும். அதற்காகவே காத்திருப்பார்!

கந்தப்பருக்குத் தன்னைக் கவிஞர் கந்தவனம்" என்று சொல்வதில் ஒருவித "கிக்". தன்னை ஒரு வரகவியாகவே எண்ணிக்கொள்வார். எப்போதெல்லாம் தனது பெயருடன் "கவிஞர்" பட்டத்தை ஒட்ட முடியுமோ ஒட்டிவிடுவார். கல்வெட்டின் முன் அட்டையில் இறந்தவரின் விபரங்களுக்குக் கீழே ஆக்கியோன் கவிஞர் காத்திப்பிள்ளை கந்தவனம்" என்று வரவேண்டும் என்பதை முன்கூட்டியே கண்டிப்பாகச் சொல்லி விடுவார். இவ்வளவு ஆர்ப்பாட்டங்களுக்குள்ளும் ஏற்கனவே எழுதிவைத்த பாட்டுக்களில் வரும் பெயர்கள், உறவு முறைகள், இடங்களை மாற்றி மாற்றி தன்னிடமுள்ள ஒரு சில பாடல்களையே புதுப்புது வடிவில் போட்டு அடிக்கிறார் என்ற ஒரு வதந்தியும் உள்ளது! எது எவ்வாறாயினும் பாடலும் ஆக்கமும் அவரே! ■

**கந்தப்பருக்குத் தன்னைக் கவிஞர் கந்தவனம் என்று சொல்வதில் ஒருவித 'கிக்'. தன்னை ஒரு வரகவியாகவே எண்ணிக்கொள்வார்.**

இதுவரை வெளிவராத திடுக்கிடும் உண்மைகள்!!

# நடுநிசியில் நெடுந்தீவு நிலா!

## அக்கா கணவரோடு தொடர்பில்லை: அப்படியானால் ஏன் கொலை?

**அண்மையில் மன்னார் உப்பளத்தில் கொலை செய்யப்பட்ட நெடுந்தீவைச் சேர்ந்தயுவதியின்ன் கொலை பற்றி எமது புலனாய்வுக்குழு, பொலிஸ் தரப்பு உள்ளிட்ட பலரிடம் திரட்டிய தகவல்களின் அடிப்படையில் கண்டறிந்த புதிய திடுக்கிடும் உண்மைகளை இங்கே வாசகர்களுக்காகத் தருகின்றோம்.**

உளவாளி




**நடுநிசிக் கொலை**

11. 08 2020

சத்தமிடாமல் மன்னாரை நள்ளிரவுப் பொழுது விழுங்க எத்தனித்துக் கொண்டிருந்தது.

இடையிடையே சில நாய்களின் குரைப்பொலி மட்டுமே. வேறெந்தச் சப்தமும் கிடையாது. அந்த நிசப்தத்தை ஊடறுத்தபடி , நான்கு உருவங்கள், ஆளரவமற்ற சவுத்பார் புகையிரதநிலைய வீதியால் நகர்ந்துகொண்டிருந்தன. உப்பு உற்பத்திக்காக கடல் நீர் தேக்கிவைக்கப்பட்டிருக்கும் உப்பளப் பாத்திப் பக்கமாக சென்று கொண்டிருந்த அந்த நான்கு பேரில் மூவர் பெண்கள், ஒருவர் ஆண்.

திடீரென ஒரு குழப்பம். அந்த நால்வரில் சற்றுத் தளர்வாக நடந்து கொண்டிருந்த பெண்ணை, எதிர்பாராத வகையில் அருகே சென்றுகொண்டிருந்த ஆண் கொலைவெறியோடு தாக்கத் தொடங்கினான். அந்தப் பெண் லேசான தடுமாற்றத்தோடு தப்பியோட முற்பட்டும் முடியவில்லை. அப்படியே அவளைக் கீழே விழுத்தி, அந்த ஆண் அவளது துப்பாட்டாவினால் கழுத்தை இறுக்கினான். ஏனைய இரு பெண்களும் அவளது கால்களை அசையவிடாமல் பற்றிப் பிடித்தனர். அந்தப் பெண்ணின் வெளிப்புற ஆடைகளைக் களைந்த அந்த ஆண் , தன்னுடைய ஆடைகளையும் களைந்துவிட்டு, கழுத்தை இன்னும் இறுக்கத் தொடங்கினான். தன்னால் இயலுமட்டும் அந்தப் பெண் உயிர் தப்பப் போராடினாலும், அவையெல்லாம் வீணாகிப் போயின.

மூச்சு வெளியே வரவேயில்லை.சில நிமிடங்களில் எந்த அசைவுமற்றுப் போனாள் அவள். ஏனைய மூவர் முகங்களிலும் பரம திருப்தி. உயிரிழந்த பெண்ணின் சடலத்தின் கண்கள் நிலைக்குத்தி நின்றன.

" நம்பிக்கை கொடுத்து கூட்டி வந்து இப்படித் துரோகம் செய்துவிட்டீர்களே" என்று அவள் கண்கள் சொல்வது போல இருந்தன.

ஆனால் அதையெல்லாம் கண்டுகொள்ளும் நிலையில் ஏனையோர் இல்லை. அவள் உயிரிழந்துவிட்டதை உறுதிப்படுத்திக் கொண்டு , அவசரத்தனத்தோடு அவள் உடலைத் தூக்கிச் சென்று உப்பளப் பாத்தி ஒன்றுக்குள் வீசிவிட்டு,அங்கிருந்து வெளியேறினர்.

மறுநாள் மதியம் வரை அந்தப் பெண்ணின் சடலம், உப்பு நீரிலும் அனலாகக் கொதிக்கும் வெயிலிலும் அநாதரவாகக் கிடந்தது.

அவள் உடல் கண்டெடுக்கப்பட்ட போதுகூட அந்தப் பெண் பாசத்துக்காக சிறுவயதில் இருந்தே ஏங்கித் தவித்தவள் என்றோ, அவள் பெயர் நிலா என்பதோ எவருக்குமே தெரிந்திருக்கவில்லை.

**அன்புக்காக அலைந்தவள் "நிலா "**

பெயருக்கேற்ப அமைதியானவள். எல்லோருடனும் அன்பாகப் பழகும் சுபாவமுடையவள். பூர்வீகம் நெடுந்தீவு . சிறு வயதிலேயே அவள் வாழ்வில் நிறையத் துன்பங்கள். குடும்ப முரண்பாடுகள் அதிகரித்ததால், அவளின் சின்ன வயதிலேயே பெற்றோர் பிரிந்துவிட்டனர்.அதனால் தாயைப் பிரிந்து, தந்தையோடு அவள் மன்னார் மாவட்டத்தின் வெள்ளாங்குளம் சென்றுவிட்டாள். அவளின் ஏனைய இரு சகோதரிகளும் தாயோடு வளர்ந்தார்கள். வெள்ளாங்குளம் சென்ற தந்தை இன்னொரு திருமணம் செய்ய, நிலாவை சித்திகாரியின் கொடுமை பீடித்தது. ஆனாலும் தந்தை நிலாவுக்கு ஆதரவாக இருந்தார். அந்த ஆதரவுக்கும் காலம் முற்றுப்புள்ளி வைத்தது. வனிப் போரில் எறிகணை ஒன்று அவள் தந்தையின் உயிரைக் குடிக்க, மீண்டும் சித்தியின் கொடுமைகள் உச்சம் பெற்றன. ஒருகட்டத்தில் அதனைத் தாங்க முடியாமல் அவள் , கிராம சேவையாளர் மூலம் , யாழ்ப்பாணத்தில் இயங்கும் திருக்குடும்ப கன்னியர் மடம் ஒன்றில் இணைந்துகொண்டாள்.

அந்தக் கன்னியர் மடத்தில் இருந்த காலம் தான் அவள் நிம்மதியாகவும், மகிழ்வாகவும் தன் வாழ்வை அனுபவித்த நாட்கள். நிலா இடையில் கைவிட்ட கல்வியைத் தொடர்ந்தாள். அவளின் பூப்புனித நீராட்டு விழாவையும் கன்னியர் மடமே நடத்தியது.

**எங்கே என் குடும்பம்?**

எவ்வளவு தான் சந்தோஷமாக இருந்தாலும், அன்புக்காகவும்,உறவுகளின் பாசத்துக்காகவும் அவள் தவிக்கத் தொடங்கினாள். தன் குடும்பத்துடன் சேர்ந்து, வாழவேண்டுமென பல வழிகளில் முயற்சிக்கத் தொடங்கினாள்.

கன்னியர் மடத்தில் தங்கியுள்ள ஏனைய சிறுமிகளைப் பார்க்க வருபவர்கள்,வேலைக்காக வந்து செல்பவர்கள் என்போரிடம் தன்னுடைய தாயார், சகோதரிகளின் விபரங்களைச் சொல்லி அவர்களைத் தேடித்தரும்படி கெஞ்சுவாள். அவளது தேடலுக்குப் பலன் கிடைத்தது. நிலாவின் பெரியம்மா( தாயாரின் மூத்த சகோதரி) வீட்டுக்கு அவளைப் பற்றிய தகவல் போய்ச் சேர்ந்தது. பின்னர் பெரியம்மா மூலம், நிலா தன் சகோதரிகளையும் கண்டுபிடித்தாள்.

நிலாவினுடைய தாயார் மத்திய கிழக்கு நாடொன்றுக்குச் சென்று, பணிபுரிந்து வருகின்றார் . நிலாவினுடைய இரண்டு சகோதரிகளும்பெரியம்மாவின் பொறுப்பிலேயே இருந்துள்ளனர். நிலாவின் இரு சகோதரிகளும் காதல் திருமணம் செய்திருந்தனர். ஒருவர் நெடுந்தீவு பகுதியிலும் மற்றொரு சகோதரி இஸ்லாம் மதத்துக்கு மாறி இஸ்லாமியர் ஒருவரை திருமணம் செய்து கொழும்பிலும் வசித்தனர். இந்த நிலையில் சாதாரண தர பரீட்சை முடிந்ததும் நெடுந்தீவில் வசித்து வந்த சகோதரி கன்னியர் மடம் சென்று நிலாவை தன்னுடன் வருமாறு அழைத்துள்ளார். அதன் பின்னர் காரியங்கள் மளமளவென்று நடந்தன. நீதிமன்றில் அவர்கள் தன்னுடைய உறவுகள் என நிலா தெரிவித்ததையடுத்து, அவர்களோடு அவள் வாழ அனுமதி வழங்கப்பட்டது. தன்னுடைய வாழ்வின் அடுத்த கட்டத்தில் நிலா காலடி எடுத்து வைத்தாள்.

**பெரியம்மா வீட்டில் வேலைக்காரி**

கன்னியர் மடத்தை விட்டு வெளியே வந்த நிலா உடனடியாக நெடுந்தீவிலுள்ள சகோதரியின் வீட்டுக்கு அழைத்துச் செல்லப்படவில்லை . நிலாவைக் கண்டுபிடித்து, அவளைக் குடும்பத்தோடு இணைய வைத்தவர் பெரியம்மாதான் . அவர் நிலாவைத் தன்னோடு அழைத்து வந்தார். அந்தச் சமயத்தில் தான் நிலாவின் பெரியம்மாவின் மகனுக்கு ( நிலாவின் ஒன்றுவிட்ட அண்ணன்) இரண்டாவது குழந்தை பிறந்திருந்தது. எனவே அந்தக் குழந்தையையும், அண்ணியையும் (ஒன்று விட்ட அண்ணனின் மனைவி) பராமரிக்கும் பொறுப்பு நிலாவிடம் வந்தது. ஒருவேளை அப்படி வேலை செய்விக்கத்தான் பெரியம்மா அவளை அவசரமாக கன்னி



இருந்து அழைத்து வந்தாரோ தெரியவில்லை.

**அண்ணனோடு காதல்**

அங்கிருந்த சமயத்தில் தான் ஒரு முறையற்ற காதல் முளைத்தது.சிறுவயது முதலே பாசத்துக்காக ஏங்கிய நிலா மீது பெரியம்மாவின் மகன் மிகுந்த அன்பாக நடந்து கொண்டான்,. அவள் ஆசைப்படுவதை வாங்கிக் கொடுத்தான் நாளடைவில் அது காதலாக மாற, பிரச்சினை வெடித்தது தன் கணவன் நிலாவுக்கு செல்போன், அழகுசாதன பொருட்கள் என்பவற்றை வாங்கிக் கொடுத்த விடயத்தை அண்ணி கண்டுபிடித்துவிட, தினமும் வீட்டி பூகம்பம் தான். இந்தச் சண்டைச் சத்தம் அக்கம், பக் மெல்லாம் கேட்கும். அதைக் கேட்டு எவராவது என் , ஏதென்று விசாரிக்கப் போனால், அவர்களின் முகத்தி அடித்தாற் போன்று , "இது எங்கள் வீட்டு பிரச்சினை நீங்கள் போங்கோ" என்று அண்ணிக்காரி சொல்லி னுப்புவது வாடிக்கையாகிப் போனது.

**எனக்கு நிலா வேண்டும்**


ஆனால் மறுபக்கத்தில் பித்துப்பிடித்தவனாக அண்ண மாறத் தொடங்கினான். எந்த நேரமும் நிலா நினைத்தான் "எனக்கு நிலா தான் வேண்டும்" என் அவன் வீட்டினருடன் தர்க்கம் புரிந்துமிருக்கிறான் இதனால் நிலாவைப் பழிவாங்க அவள் மீது அதி வேலைகள் திணிக்கப்பட்டன. எந்த நேரமும் அவளை வசவுச் சொற்களால் பெரியம்மா திட்டத்தொடங் னாள். எவ்வளவுநாள்தான் இதனை நிலா பொறுக் முடியும்? அவள் அந்த வீட்டை விட்டு வெளியேற மு வெடுத்தாள். ஆனால் அண்ணன் விடவில்லை. " போனால் நானும் வருகிறேன்" என்று அவனும் அவளோ கிளம்பிவிட்டான்.

கிட்டத்தட்ட 15 நாட்கள் அவர்கள் இருவரும் எங்கே ஒன்றாக இருந்தனர். பல இடங்களில் தேடியும் கண் பிடிக்க முடியவில்லை.இறுதியாக அவர்க டன் தொலைபேசியில் தொடர்புகொண் பெரியம்மாவும், அண்ணியும் " சரி நடந்த நடந்து விட்டது. வீட்டுக்கு வாருங்கள் பேசித் தீர்த்துக் கொள்வோம்" என்று அழைத் பின்னே நிலாவும், அண்ணனும் வீட்டுக் வந்தனர். நிலா இன்னொரு உறவினரின் வீட் டுக்கு அனுப்பப்பட்ட போதும், அவளை மீண்டும் தன் வீட்டுக்கே அழைத்து வந்தா அண்ணன்.

**தீராத சண்டை**

அதனால் வீட்டில் பழைய பல்லவி தொடர்ந்தது. அண்ணியும், பெரியம்மாவு அவளைப் பலவாறு இம்சித்தனர். கன்னியே

# ...ல் கொலையுண்ட




டுதான் நிலா தன் வாழ்வைத் தொடரவேண்டியிருந்தது. மீண்டும் நிலா அண்ணனோடு வீட்டை விட்டு வெளியேறினாள். உடனே பொலிஸ் நிலையம் சென்ற அண்ணி, " என்னுடைய கணவனை இழுத்துக் கொண்டு நிலா சென்றுவிட்டாள். அவளைக் கைது செய்யுங்கள்" என்று முறைப்பாடு செய்துள்ளாள். ஆனால் பொலிஸாரோ . "கைது செய்வதாயின் இருவரையும் தான் கைது செய்யவேண்டும்" எனக் கூறியதால், முறைப்பாட்டை மீளப்பெற்று, இருவரையும் வீட்டுக்கு அழைத்து வந்தாள் அண்ணி. ஆனாலும் சண்டை தீர்ந்தபாடில்லை. ஒரே வீட்டில் பஞ்சையும், நெருப்பையும்வைத்துக் கொண்டு பற்றியெரிகிறது என்று புலம்பிய கதையாக இந்தப் பிரச்சினை தொடர்ந்தது.

ஒருநாள் கோபத்தின் உச்சக் கட்டத்துக்குச் சென்ற பெரியம்மா "இவளைக் கொல்ல வேணும்... என்ர தம்பி வந்து நிக்கிறான் அவனிட்ட சொல்லிட்டன்.. கெதியில அவன் இவளின்ர கதையை முடிக்காமல் போக மாட்டன்" என்று கத்தியுள்ளார்.

## கொலையே தீர்வு

**இதனால் பிரச்சினைகளைத் தவிர்க்க வேறு உறவினர்களின் வீடுகளில் தங்கத் தொடங்கினாள். அப்படியும் அண்ணனோடு தொடர்பு இருப்பதாகக் கூறி, அவளை நெடுந்தீவில் வசிக்கும் சகோதரி (அக்கா) தன்னோடு அழைத்துச் சென்றாள். ஆனால் அங்கு சென்ற பின்னும் பிரச்சினை ஓயவில்லை. நிலா மீதுள்ள காதலால் நெடுந்தீவுக்கே சென்று அவளைப் பார்த்து வருவதை அண்ணன் வழக்கப்படுத்திக் கொள்ள, அவரைப் பின் தொடர்ந்து அண்ணியும் அங்கு செல்வதும், அங்கும் சண்டை வெடிப்பதும் தொடர்கதையானது. என்ன செய்தாலும் அவர்கள் இருவரும் பிரியப்போவதில்லை என்பதை உணர்ந்து கொண்ட , அண்ணியும், பெரியம்மாவும், அக்காவும் நெடுந்தீவில் வசிப்பவர்) நிலாவைக் கொல்வதென்று முடிவெடுத்தனர்.**

## மாமாவிடம் பொறுப்பு

வவுனியாவில் நிலாவின் மாமா ( தாயாரின் சகோதரன்) ஒருவர் வசித்து வருகின்றார். அவருடைய முதல் மனைவி பிள்ளைகளோடு இந்தியாவில் இருக்கையில், மாமனார் இரண்டாவது திருமணமும் செய்துகொண்டிருந்தார். அவர் லேசுப்பட்ட ஆள் கிடையாது. மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஆட்களை அனுப்பும் முகவராகச் ( ஏஜென்ஸி) செயற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கஞ்சா, ஹெரோயின் போன்ற போதைப்பொருள் பாவனையும் இவருக்கு இருக்கிறதாம். இந்த மாமாவே கொலைச் சதியின் சூத்திரதாரி. நிலாவைக் கொலும் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் முதல் வேலையாக நிலாவோடு சுமுக உறவொன்றை ஏற்படுத்தினார். அவளின் நலனில் அக்கறை இருப்பதாகக் காட்டிக் கொண்டார். நிலாவும் அவரை நம்பினாள்.

மறுபக்கமாக தங்கள் சண்டையைத் திடீரென நிறுத்தி அண்ணி நிலா மீது அக்கறை காட்டுபவள் போல நடக்கத் தொடங்கினாள்.

## ஆசைகாட்டிய அண்ணி

" ஏன் இங்க இருந்து பிரச்சினை தாறாய்? உன்னிலை எங்களுக்கு ஒரு கோபமும் இல்லை. அண்ணையை விட்டிட்டு எங்கையாவது போனால் போதும், வேணுமெண்டால் மாமாவிட்ட சொல்லி உன்னை நாங்களே வெளிநாட்டுக்கு அனுப்பிறம்" என்று அண்ணியும், அக்காவும் ஆசை காட்ட நிலாவும் சம்மதித்தாள்.

" நாங்கள் மன்னாருக்குப் போனால் அங்கயிருந்து கொழும்புக்கு கூட்டிக் கொண்டு போய் மாமா உன்னை வெளிநாட்டுக்கு அனுப்புவார்" என்று சொல்லி நிலாவை நெடுந்தீவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்தனர் அண்ணியும், அக்காவும்.

யாழ். தனியார் பஸ் நிலையத்தில் இறங்கியவர்களை எதிர்பார்த்து நின்ற நிலாவின் மாமா ,மூவருக்கும் நெக்ரோ சோடா வாங்கிக் கொடுத்தார். அதன் பின்னர் குழந்தைகளை பெரியம்மாவிடம் ஒப்படைத்து விட்டு மாலை தனியார் பஸ் ஒன்றில் நால்வரும்( நிலா, நிலாவின் அக்கா,அண்ணி,மாமா) பயணமாகினர்.

## கொலைப்பயணம்

பின் இருக்கைகளில் அக்காவும் அண்ணியும் இருக்க ,முன் இருக்கையில் மாமாவும் நிலாவும் இருந்துள்ளனர். நிலா இறங்கி ஓடிச் செல்லக்கூடும் என்ற சந்தேகத்திலேயே அவளுக்குப் பக்கத்தில் மாமா இருத்தப்பட்டுள்ளார். இரவு எட்டு மணியளவில் நால்வரும் மன்னாரை அடைந்துள்ளனர். அங்கு போனதும் "ஒரு இடத்திற்கு போய் வருகிறேன்" என்று கூறியபடி , அங்கிருந்து வெளியேறிய மாமனார். திரும்பி வந்த போது நிறைபோதையில் இருந்தார்.

அதற்கிடையில் "மாமா வரட்டும் இரவு தான் கொழும்புக்கு ரயில் உள்ளது" என நிலாவை ஏமாற்றி கதைத்துக்கொண்டிருந்தனர் அக்காவும், அண்ணியும். பின்னர் அருகில் இருந்த கடையொன்றில் மூவரும் தேனீர் அருந்திவிட்டு, மாமாவின் வருகைக்காக காத்திருந்தனர். .

சுமார் பதினொரு மணி யளவில் வந்த மாமனார் "வாங்கோ, ரயில் ஸ்ரேசனுக்குப் போவோம்" என மூவரையும் கூட்டிக் கொண்டு சவுத் பார் வீதியில் நடந்தார்.அப்படி அழைத்துச் சென்றுதான் உப்பளத்தில் வைத்தும், மூவரும் நிலாவைத் துடிக்கத் துடிக்க கொலை செய்துள்ளனர். நிலாவின் உடலை அவளது ஆடையை வைத்து எவரும் இனம்காணக்கூடாது என்பதற்காகவே அவளது ஆடையைக் களைந்துள்ளனர்.

கொலை செய்யும் போது , நிலா தன்னைப் பிடித்து ஆடைகள் கிழிந்து விடும் என்பதாலோ என்னவோ மாமாவும் தன் ஆடைகளைக் களைந்த பின்பே கொலை முயற்சியில் இறங்கியுள்ளார். ஆனால் கொலை செய்த பதற்றத்திலும், அங்கிருந்து வெளியேறும் அவசரத்திலும் மாமாவின் காலணி உட்பட சில தடயங்களை இந்தக் கொலைகாரர்கள் விட்டுச் சென்றுள்ளனர். அதுதான் பின்னர் அவர்களுக்கு ஆப்பாக மாறியது.

## யாழ்ப்பாணத்துக்கு ஓட்டோவில்....

பின்னிரவு 1.30 மணியளவில் மூன்று கொலைகாரர்களும் மன்னார் நகருக்கு வந்து சேர்ந்தனர். அங்கே தொடர்ந்து நிற்பது தங்களை பொலிஸில் மாட்டவைத்துவிடும் என்பதால் பெண்கள் இருவரும் அங்கிருந்து உடனடியாக யாழ்ப்பாணம் வர முற்பட்டனர். ஆனால் அவர்களின் துரதிர்ஷ்டம், யாழ்ப்பாணம் செல்ல எந்த பஸ்ஸும் அப்போது இல்லை. எனவே மாமனார் அங்கேயே நின்றுகொள்ள , அக்காவும், அண்ணியும் ஓட்டோ ஒன்றைப் பிடித்து யாழ்.நோக்கிப் புறப்பட்டனர்.

விடிகாலையில் அவர்கள் யாழ்.கச்சேரியடியை அண்மித்தனர். அப்படியே வீட்டுக்கு ஓட்டோவில் போய் இறங்கினால், தாம் இருக்குமிடம் ஓட்டோக்காரனுக்குத் தெரிந்துவிடும், சிலவேளைகளில் அவனைப் பொலிஸ் விசாரித்தால் அவன் தங்கள் வீட்டைக் காட்டிக் கொடுத்து தாங்கள் சிக்கிவிடலாம் என்பதால் இருவரும் கச்சேரியடியிலேயே இறங்கினர். ஆனால் ஓட்டோவுக்கு கொடுப்பதற்கு அவர்களிடம் போதிய பணம் அப்போதிருக்கவில்லை. எனவே அண்ணி, தன் மாமாவுக்கு( பெரியம்மாவின் கணவர்) போன் செய்தாள். அவர் உடனேயே சைக்கிளில் வந்து, ஓட்டோவுக்குரிய பணத்தைக்( 6 ஆயிரம் ரூபா) கொடுத்தார்.

## தடயங்கள் அழிப்பு

அவசர அவசரமாக ஈச்சமோட்டையில் உள்ள நிலாவின் பெரியம்மா வீட்டுக்குச் சென்று நிலா அணிந்திருந்த ஆடை உள்ளடங்கலான தடயப் பொருட்களை இருவரும் எரித்தனர். மறு நாள் அயலவர்கள் "நிலா எங்கே ?"எனக் கேட்ட போது "வெளிநாடு அனுப்புவதற்காக மாமனார் கூட்டிச்சென்றுவிட்டார்" என்றும் "நிலாவின் அம்மா ஏற்பாடு செய்த ஆளோடு வெளிநாடு செல்வதற்காக சென்றுவிட்டார்" என்றும் பெரியம்மா தெரிவித்ததாக சொல்லப்படுகிறது. மறு நாளே கொலைச்சூத்திரதாரியான மாமனாரும் ஈச்சமோட்டைக்கு வந்துள்ளார். அவரிடம்

"இங்க இருந்தால் பொலிஸ் பிடிச்சிடும். எங்கையாவது போங்கோ" எனக்கூறிய அண்ணி, பத்தாயிரம் ரூபா பணத்தையும் கொடுத்துள்ளாள்.

அன்று மாலை யாழின் புற நகர்ப் பகுதி ஒன்றில் வசித்துவரும் ஒன்றுவிட்ட சகோதரியை தொடர்புகொண்ட அண்ணி " நான் நெடுந்தீவில் இருந்து வந்து யாழ். பஸ் நிலையத்தில் பிள்ளைகளோடு நிற்கிறேன். உனது வீட்டுக்கு வரட்டா?"எனக் கேட்க சகோதரியும் சம்மதித்துள்ளார். அவரின் வீட்டிற்கு சென்ற அண்ணி "நான் இங்கே நிற்பதை எவருக்கும் சொல்லாதே, அவருக்குத் ( கணவனுக்கு) தெரிஞ்சால் சண்டை பிடிப்பார்" எனக் கூறியுள்ளார். ஆனால் மறு நாளே பொருட்களை எடுத்துக்கொண்டு வாடகைக்கு எடுத்த வீடொன்றுக்கு குடிபெயர்ந்துள்ளார் அண்ணி.



## தேடல் தொடங்கியது

ஒருபுறம் கொலையாளிகள் பொலிஸின் கண்ணில் மண்ணைத் தூவிக் கொண்டிருக்க மறு முனையில் நிலாவின் சடலம் அநாதரவாக உப்பளத்தில் கிடந்தது. 13 ம் திகதி . உப்பு உற்பத்திக்காக தேக்கி வைக்கப்பட்ட நீரின் அளவைப் பார்க்க வந்த உத்தியோகத்தர் ஒருவர் , வழக்கத்துக்கு மாறாக தண்ணீரில் ஏதோ மிதப்பதை அவதானித்தார். அருகே சென்று பார்த்

(மறுபக்கம் பார்க்க)







தபோது அவரது இதயமே நின்றுவிடுவது போல் படபடத்தது.அச்சம் நெஞ்சை அடைக்க உற்றுப் பார்த்தார் .
ஒரு பெண்ணின் சடலம்.
காட்டுத்தீ போல் பரவிய செய்தியால் மன்னார் முழுதும் பரபரப்பாகியது. விரைந்து வந்த மன்னார் பொலிஸார் சடலத்தை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பிவிட்டு தடயங்களையும்,கொலையாளிகளையும் தேடத் தொடங்கினர்.

**கெத்துக் காட்டிய பொலிஸ்**

உப பொலிஸ் பரிசோதகர்கள் ஆர்த்தனன் எனும் பொலிஸ் அதி காரியின் தலைமையில் சாஜண்ட் வரதன், பொலிஸ் உத்தி யோகத்தர் நிஷாந்தன், சிவ ராசா எனும் நான்கு பேர்கொண்ட விஷேட பொலிஸ் குழு நிலா கொலை தொடர்பான விசாரணையைத் தொடங்கியது. சடலமாக மீட்கப்பட்டவர் யார்? பெயரென்ன? ஊரென்ன ? ஏதுவுமே தெரியாத நிலை. கொஞ்சம் கொஞ்சமாக தடயங்களைத் தேடினர். ( முன்னர் ஊடகங்களில் வந்த செய்திபோல் இரகசியக் கமரா பதிவுகள் எதுவும் கொலையாளிகளை அடையாளம் காட்டவில்லை. அது வெறும் வதந்தியே)
ஆண் ஒருவரின் ஒரு சோடி செருப்பு, துணி போன்ற சில தடயப் பொருட்களை பொலிஸ் குழு மீட்டெடுத்தது. திக்குத் தெரியாத காட்டில் விட்டது போன்ற நிலை. எப்படி இந்தக் குற்றவாளிகளை கைது செய்ய போகிறோம் என்ற கேள்விகள். ஆனாலும் அந்தப் பெண்பிள்ளையின் சடலம் இருந்த கோலம் பொலிஸாரின் மனதில் எப்படியாவது குற்றவாளிகளைக் கைதுசெய்துவிட வேண்டும் என்ற உந்ததுதலைக் கொடுத்தது. கடைசியில் மனந்தளராத அவர்களது கடும் முயற்சி கைகூடியது. அவர்களை ஏற்றிச் சென்ற ஓட்டோ இனங்காணப்பட்டது. ஓட்டோச் சாரதியின் தகவலின்படி, கொலையாளிகள் யாழ்ப்பாணம், கச்சேரியை அண்மித்த பகுதியில் தான் பதுங்கியிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு பொலிஸார் வந்தனர். இந்த ஊகத்தின் அடிப்படையில் மன்னாரில் இருந்து வந்த விசேட பொலிஸ் குழு பரவலாகவும் இரகசியமாகவும் தேடுதலை மேற்கொண்டது.
கொலை நடந்த இடத்திலிருந்து கிடைக்கப்பெற்ற சில தடயங்களும், எதிர்பாராமல் கிடைத்த இரகசிய தகவலும் கொலையாளிகள் யாரென்பதை துல்லியமாக இனம் காட்டியது. அத்தோடு அவர்களின் வீடும் கண்டுபிடிக்கப்பட்டது. கடைசியாக 10 நாட்களாக பொலிஸாருக்கு 'டிமிக்கி' கொடுத்த கொலையாளிகளான நிலாவின் அக்காவும், அண்ணியும் ஒகஸ்ட் 22 ஆம் திகதிபொலி ஸாரால் கைதுசெய்யப்பட்டு மன்னார் கொண்டு செல்லப்பட்டனர்.

**மாமாவும் பிடிபட்டார்**

அக்காவும், அண்ணியும் கொடுத்த தகவலின் பேரில் மாமனாரை கைது செய்யப் பொலிஸார் சென்றபோது அவர் தலைமறைவாகியிருந்தார். பின்னர் பொலிஸ் குழுவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து பிரதான சந்தேகநபரான மாமனாரும் கைதுசெய்யப்பட்டார்.
" நிலாவின் அக்காவும், அண்ணியும் கேட்டதாலேயே அவர்களோடு சேர்ந்து கொலை செய்ய ஒப்புக்கொண்டேன்.
நிலாவை அழைத்து வரும் போது மாம்பழ யூஸ் ஒன்றில் மயக்க மருந்து கலந்து கொடுத்தோம்" என அவர் சொல்லியுள்ளார். அந்த மருந்தினை நிலாவினது பெரியம்மாவின் கணவரது சகோதரி ஒருவர் தந்ததாகவும் அவர் வைத்திய சாலை ஒன்றில் தாதியாக கடமையாற்றுவதாகவும் மாமனார் தெரிவித்துள்ளார்.
பொலிஸார் குறித்த தாதியை அழைத்து விசாரணை செய்த போது "நான் எந்த மருந்தும் வழங்கவில்லை" எனத் தெரிவித்துள்ளார்.
" மேலதிக பரிசோதனைக்காக நிலாவின் உடல் உறுப்புகள் அனுப்பப்பட்டுள்ளன. அதன் முடிவு வந்தால் தான் உண்மை தெரியவரும்" என்கின்றனர் பொலிஸார்.
கொலைசெய்யப்பட்ட நிலாவினது சடலத்தை தாயாரின் மற்றொரு சகோதரியும் , அக்காவின் கணவரும் , அண்ணனுமே , பொறுப்பெடுத்து மன்னார் மகளிர் அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவுடன் அடக்கம் செய்துள்ளனர்.
அயலவர்களின் தகவல்கள் (உறுதி செய்யப்பட்டவை அல்ல) நிலா கர்ப்பமாக இருந்தார். அதனால் தான் கொலை திட்டமிட்டு கொலை நடந்துள்ளது.
பெரியம்மாவின் மகன் நிலாவினுடைய படத்தை பார்த்து அழுவதாகவும் நிலா நெடுந்தீவில் இருந்தபோது தொலைபேசியில் தொடர்புகொண்டு "என்னை கொலை செய்துவிடுவார்களோ என பயந்ததாக உறவினர் ஒருவரிடம் சொல்லி அழுதுள்ளார்.
நிலா கொல்லப்பட்ட பின்னர் நிலாவை நன்னடத்தை இல்லாதவராக காட்டுவதற்காக அவருடன் தொடர்பு,இவருடன் தொடர்பு என போலிக் கதைகளை பெரியம்மா குடும்பம் பரப்பி வருகின்றது.

## எனக்கும் நிலாவுக்கும் தொடர்பில்லை கதறும் அக்காவின் கணவர்

" எனக்கும் கொலைசெய்யப்பட்ட நிலாவுக்கு மிடையில் தொடர்பு இருந்ததாகவும், அதனால் தான் என்னுடைய மனைவி திட்டமிட்டுஅவளைக் கொலை செய்ததாகவும் செய்திகள் வந்தன. அது முற்றிலும் பொய். நிலா மிருசுவிலில் விடுதியில் இருந்த போது எங்கள் குடும்பத்தாருடன் இணைந்த பிறகு கல்விக்காக தொடர்ந்தும் விடுதியிலேயே தங்கியிருந்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சென்று நிலாவைப் பார்த்து வருவேன். அப்போது அவளுக்குத் தேவையானவற்றை வாங்கிக் கொடுப்பேன். என்னுடைய மனைவியின் சகோதரி அநாதை போல் விடுதியில் இருக்கின்றாளே என்ற பரிதாபத்தில் தான் அப்படி உதவிகள் செய்தேன். அதனைத் தான் மனைவி பொலிஸாரிடம் சொல்ல , அதை ஊடகங்கள் திரிவுபடுத்தி, எனக்கும் நிலாவுக்கும் தவறான உறவு இருந்ததாக எழுதியுள்ளன." என்று உடைந்த குரலில் சொல்கிறார் நிலாவின் அக்காவின் கணவர்.
உண்மையில் நிலா கொலை செய்யப்பட்ட பின்னரே "அக்காவின் கணவரோடும் தொடர்பு"என பெரியம்மா குடும்பத்தினரால் சொல்லப்பட்டு அயலவர்களுக்கு தெரியுமே தவிர முன்பு இவ்வாறான தகவல் எவருக்கும் தெரியாது.



### பிற்குறிப்பு -01

கொலைச் சந்தேக நபர்கள் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் வழங்கியதை அடுத்து அனுராதபுரம் சிறைக்கு அனுப்பப் பட்டுள்ளனர். வழக்கு விசாரணைகளுக்காக மன்னார் அழைத்துவரப்படுவார்கள். சிறையிலிருந்து கடந்த வாரம் நிலாவினது அக்கா, கடிதம் ஒன்றை பெரியம்மாவின் வீட்டுக்கு அனுப்பியுள்ளார். தங்களை விரைவாக வெளியில் எடுக்குமாறு அதில் எழுதியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதே போல் சில நாட்களுக்கு முன்பு அண்ணியும் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அதில் தங்களை விரைந்து வெளியில் எடுக்குமாறும் தங்களது பிள்ளைகள் சிறுவர்கள் என்பதால் அதனை தெரிவித்து சிறுவர்கள் தொடர்பான திணைக்களங்களில் கடிதங்கள் வாங்கி விரைந்து தங்களை வெளியில் எடுக்குமாறும் அவர் எழுதியுள்ளாராம்.
அதேவேளை, அண்ணியின் கடிதம் வந்த பின்னர் ஒரு தொகை காகிதாதிப் பொருட்கள் ( வேறு ஏதேனும் இருந்ததோ தெரியவில்லை ) பெரியம்மா குடும்பத்தினரால் எரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

### பிற்குறிப்பு -02

கொல்லப்பட்ட நிலாவிற்கு வேறு யாரும் இல்லாத நிலையில் அவர். தரப்பில் வழக்கு விசாரணைகளைக் கண்காணிக்க மாதர் சங்கங்களோ அல்லது அரசியல் கட்சிகளோ சமூக சேவைச் செயற்பாட்டாளர்களோ, முன்வந்து வஞ்சகமாக கொல்லப்பட்ட பெண்ணுக்கு நீதியைப் பெற்றுத்தர முன்வர வேண்டும் என்பதே அனைத்து மக்களினதும் எதிர் பார்ப்பு ஆகும்.

**"**

**உப்பு உற்பத்திக்காக தேக்கி வைக்கப்பட்ட நீரின் அளவைப் பார்க்க வந்த உத்தியோகத்தர் , வழக்கத்துக்கு மாறாக தண்ணீரில் ஏதோ இருப்பதை அவதானித்தார். அருகே சென்று பார்த்தபோது அவரது இதயமே நின்று விடுவது போல் படபடத்தது.அச்சம் நெஞ்சை அடைக்க உற்றுப் பார்த்தார் . ஒரு பெண்ணின் சடலம்.**

# யாழ்ப்பாணப் பதிப்புத்துறை 4

## 1990 - 1995

இலங்கையில் நாளிதழாக வெளிவந்த முதலாவது பிரதேசப் பத்திரிகை ஈழநாடு என்ற பரவலான கருத்து உண்டு. ஆனால் 1915இல் ஆரம்பித்த பாலபாஸ்கரன் யாழ்ப்பாணத்தின் முதலாவது நாளிதழ் ஆகும். இது சில மாதங்களே வெளியானதாக அறிய முடிகிறது. அதில் சிலகாலம் மாலை இதழாகவே பால பாஸ்கரன் வெளியானது. அவ்வகையில் யாழ்ப்பாணத்தின் முதல் நாளிதழும் முதல் மாலை நாளிதழும் இதுவே.



பாலபாஸ்கரன்

O தில்லைநாதன் கோபிநாத்

**1905** அளவில் யாழ்ப்பாணத்தில் எட்டுப் பத்திரிகைகள் தொடர்ச்சியாக வெளியாகிக் கொண்டிருந்தன. உதயதாரகை, இலங்காபிமானி, கத்தோலிக்கப் பாதுகாவலன் (ஆங்கிலம்), இந்து சாதனம் (ஆங்கிலம்) ஆகியவை வார இதழ்களாகவும் இந்து சாதனம் (தமிழ்), கத்தோலிக்கப் பாதுகாவலன் (தமிழ்), சுதேச நாட்டியம் ஆகியவை இரு வார இதழ்களாகவும் சன்மார்க்க போதினி மாத இதழாகவும் வெளியாகின. உதயதாரகை, இலங்காபிமானி, கத்தோலிக்கப் பாதுகாவலன், சன்மார்க்க போதினி, இந்துசாதனம் வரிசையில் யாழ்ப்பாணத்தில் இருந்து நீண்டகாலம் வெளியான இன்னொரு பத்திரிகை சுதேச நாட்டியம் (19021947) ஆகும். இதன் ஆசிரியர் கல்லடி வேலன்.

1901-1930 காலத்தில் 20க்கும் அதிகமான பத்திரிகைகள் தோன்றி மறைந்தன. விவேகானந்தன், சண்முகநாதன், ஞானசித்தி, விச்சுவகர்மன், பால பாஸ்கரன், கத்தோலிக்க தூதன், மேல் நோக்கம், தமிழர் போதினி, கலிகால தீபம், சோதிட பிரபாலினி, பஞ்ச சக்தி போன்றவை அவற்றில் சில. இவை பெரும்பாலும் சமய இதழ்களாக இருந்தன.

இலங்கையில் நாளிதழாக வெளிவந்த முதலாவது பிரதேசப் பத்திரிகை ஈழநாடு என்ற பரவலான கருத்து உண்டு. ஆனால் 1915இல் ஆரம்பித்த பாலபாஸ்கரன் யாழ்ப்பாணத்தின் முதலாவது நாளி




தழ் ஆகும். இது சில மாதங்களே வெளியானதாக அறிய முடிகிறது. அதில் சிலகாலம் மாலை இதழாகவே பால பாஸ்கரன் வெளியானது. அவ்வகையில் யாழ்ப்பாணத்தின் முதல் நாளிதழும் முதல் மாலை நாளிதழும் இதுவே.

1927 முதல் சாதிய ஒடுக்குமுறைகளுக்குள்ளான சமூகத்தினர் சார்பாக திராவிடன் என்ற மாதப் பத்திரிகை சுன்னாகத்திலிருந்து வெளியாகியுள்ளது. இது 'யாழ்ப்பாணம், தாழ்த்தப்பட்டவர்களின் சங்கம், சுன்னாகம்' என்ற அமைப்பால் வெளியிடப்பட்டது.'சமன் செய்து சீர்தூக்குங் கோல் போலமைந்தொருபாற் கோடாமை சான்றோர்க்கணிகலம்' என்ற குறளை மேற்கோளாகவும் கொண்டு 1931 வரை திராவிடன் வெளியானது.

1930இல் யோவேல் போலை ஆசிரியராகக் கொண்டு மாதந்தோறும் வெளியான ஜனதர்மபோதினி அக்காலத்தில் முன்னெடுக்கப்பட்ட சாதியக் கொடுமைகளுக்கு எதிரான போராட்டத்தின் முக்கிய பதிவாக அமைந்துள்ளது. ஜனதர்ம போதினி ஏறத்தாழ ஒராண்டில் பத்து இதழ்களே வெளியாகின.

1930இல் ஈழகேசரி வார இதழ் உதயமானது. "நமது நாடு அடிமைப் படுகுழியிலாழ்ந்து. அன்னியர் வயப்பட்டு, அறிவிழந்து, மொழிவளங்குன்றி, சமயமிழந்து சாதிப்பேய்க் கோட்பட்டுச் சன்மார்க்க நெறியிழந்து, உன்மத்தராய். மாக்களாய், உண்டுறங்கி வாழ்தலே கண்ட காட்சியெனக் கொண்டாடும் இக்காலத்




தில் எத்தனை பத்திரிகைகள் தோன்றினும் மிகையாகாது" என்று முதலிதழில் குறிப்பிட்டு ஈழகேசரி வெளிவரத் தொடங்கியது. 1930-1958 காலத்தை யாழ்ப்பாணப் பதிப்புத்துறை வரலாற்றில் ஈழகேசரிக் காலம் என்றே அழைக்கலாம். சிறுகதைகள், தொடர் கதைகள், கவிதைகள், சிறுவர் பகுதி என நவீன இலக்கியம் சார்ந்த எழுச்சிக்கு ஈழகேசரி வழிவகுத்தது.

செய்யுள் இலக்கியம் ஏட்டுச் சுவடிப் பாரம்பரியத்தில் வளர்ச்சியடைந்த ஒன்றாக இருந்தது. அச்சியந்திரங்களின் வருகையுடன் உரைநடை இலக்கியங்கள் உருவாகலாயின. ஆயினும் சிறுகதை, நாவல் போன்ற இலக்கிய வடிவங்கள் தமிழுக்குப் புதியவை. யாழ்ப்பாணத்தில் சிறுகதை, நாவல் முயற்சிகள் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே தொடங்கிய போதும் இருபதாம் நூற்றாண்டிலேயே பரவலாகத் தொடங்கின.

ஈழகேசரியூடாகப் பெருமளவு நவீன இலக்கிய எழுத்தாளர்கள் உருவாகினர். ஈழத்தின் முதல் வசன கவிதை எனக் கருதப்படும் வரதரின் "ஓர் இரவினிலே" 1943இல் ஈழகேசரியில் வெளியானது. யாழ்ப்பாணத்தின் முதல் இலக்கிய சஞ்சிகையாகக் பரவலாகக் குறிப்பிடப்ப டும் மறுமலர்ச்சி ஈழகேசரியில் எழுதத் தொடங்கிய குழுவினராலேயே தொடங்கப்பட்டது. யாழ்ப்பாணத்தின் சஞ்சிகை வரலாறு பாடசாலைச் சஞ்சிகை வெளியீடுகளிலேயே தொடங் குகிறது. 1872 இல் யாழ்ப்பாணக் கல்லூரியின் *The Jaffna College Miscellany* வெளிவரத் தொடங்கியது. 1898இல் விக்ரோறியாக் கல்லூரியும் 1900இல் மத்திய கல்லூரியும் 1904 இல் பரியோவான் கல்லூரியும் 1911இல் இந்துக் கல்லூரியும் கல்லூரிச் சஞ்சிகைகளை ஆரம்பித்தன. *The Ceylon Law review* (1901), *The Christian Review* (1904) ஆகிய சஞ்சிகைகளின் ஆசிரியராக ஐசக் தம்பையா இருந்தார்.

ஆய்விதழ் எனக் கருதக்கூடிய சஞ்சிகையான ஞாயிறு 1933 இல் கலா நிலையத்தால் தொடங்கப்பட்டது. கலையாக்கம் கருதிய வெளியீடு என்ற குறிப்புடன் வெளியான ஞாயிறு இதழ்களில் இலக்கியம், இலக்கணம், சொல்லாராய்ச்சி, வரலாறு, அறிவியல் தொடர்பான கட்டுரைகள் இடம்பெற்றன.

கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், தொடர் கதைகள், நூல் அறிமுகங்கள் எனத் தற்கால நவீன இலக்கிய சஞ்சிகை போல வெளிவந்த இதழ் கலாநிதி (1942) ஆகும். அவ்வகையில் இது மறுமலர்ச்சிக்கு முந்திய இலக்கிய இதழாகக் கருதப்படலாம். ஆயினும் இதன் பிந்தைய இதழ்கள் கட்டுரைகளை மட்டுமே கொண்டிருந்தன. ஆரிய திராவிட பாஷா பிவிருத்திச் சங்கத்தால் கலையாக்கங் கருதிய மும்மாத இதழாக வெளியிடப்பட்டது.

1946இல் தொடங்கிய மறுமலர்ச்சி யாழ்ப்பாணத்தைத் தாண்டியும் குறிப்பிடத்தக்க செல்வாக்குச் செலுத்திய இதழாக அமைந்தது. 194648 காலத்தில் 23 இதழ்கள் வெளியாகின.

மறுமலர்ச்சியின் ஆசிரியர்களுள் ஒருவரான வரதர் பின்னர் ஆனந்தன், தேன்மொழி, புதினம், வெள்ளி, அறிவுக் களஞ்சியம் போன்ற பல்வேறு இதழ்களை யாழ்ப்பாணத்தில் காலத்துக்குக் காலம் வெளியிட்டார். இவற்றின் தேன்மொழி (1955) ஈழத்தின் முதலாவது கவிதைச் சஞ்சிகையும் ஆகும்.

சிற்பி சி. சரவணபவனை ஆசிரியராகக் கொண்டு 1958-1966 காலப்பகுதியில் எழுபதுக்கும் அதிகமான இதழ்கள் வெளிவந்த கலைச்செல்வியும் 1960களில் தொடர்ந்து வெளிவந்த விவேகியும் குறிப்பிடத்தக்க சஞ்சிகைகள். 1940களிலிருந்து ஐக்கிய தீபம், வைத்தியன் (1949), விஞ்ஞானி (1953) போன்ற துறைசார் சஞ்சிகைகளும் வெளியாகத் தொடங்கின.. சமயச் சஞ்சிகைகளும் காலத்துக்குக் காலம் வெளிவரத் தொடங்கின. 1966இல் டொமினிக் ஜீவா மல்லிகை இதழைத் தொடங்கினார். ஒரு கலை இலக்கிய இதழ் முழுநேரச் செயற்பாடாக வெளிவந்த முதற் சந்தர்ப்பமாக அது அமைந்தது. அலை, வசந்தம், தாயகம் எனப் பல்வேறு குறிப்பிடத்தக்க கலை, இலக்கிய இதழ்கள் அவ்வப்போது வெளிவரத் தொடங்கின.

1958இல் ஈழகேசரி தடைப்பட்டது. 1959இல் ஈழநாடு வார இதழாகத் தொடங்கப்பட்டு 1961இல் நாளிதழானது. 1930-1958 இனை ஈழகேசரிக் காலம் என்றால் 1959-1981 இனை ஈழநாடு காலம் எனலாம். உதயதாரகை, இந்து சாதனம், பாதுகாவலன் போன்ற சமய இதழ்கள் தொடர்ந்தும் வெளிவந்தன. தீவகஜோதி, யாழ்ப்பாடி, தமிழ் மணி, நாவலன் எனப் பல பத்திரிகைகள் காலத்துக்குக் காலம் தோன்றி மறைந்தன. இவை ஈழகேசரி, ஈழநாடு அளவுக்குத் தாக்கம் செலுத்தியவை அல்ல.

யாழ்ப்பாண நூல் பதிப்பில் தொடர்ந்தும் சமய நூல்கள், செய்யுள் நூல்கள் வெளியாகி வந்தன. பாடநூல்கள் மிகப் பெருமளவில் பதிப்பிக்கப்பட்டன. பரராச சேகரம் போன்ற சுவடிப் பதிப்புக்களும் தொடர்ந்து நடைபெற்று வந்தன. 1950இன் பின்னர் சிறுகதை, நாவல், கவிதைத் தொகுப்புக்களும் வெளியாகத் தொடங்கின. இலக்கியக் கட்டுரைகள், சிறுவர் இலக்கியங்கள், பொது அறிவு நூல்கள் போன்றவையும் வெளிவந்தன. விழாக்களின் போதான விழா மலர்கள், ஆண்டு மலர்கள், ஆளுமைகளின் மணி விழா போன்ற கொண்டாட்ட மலர்கள், இறப்பின் பின்னர் வெளியிடப்படும் கல்வெட்டு எனப்படும் நினைவு மலர்கள் என மலர்கள் வெளியிடும் பாரம்பரியமும் யாழ்ப்பாணத்தில் நன்கு வேரூன்றியது. ஆவணக் காப்பகங்கள் இல்லாத பின்னணியில் இந்த மலர்ப் பதிப்புக்கள் குறிப்பிடத்தக்க ஆவணமாக்கச் செயற்பாடாகவும் உருவானது. ■



# சினிமாவாகும் நாவல்

ஆரதி

**பொ**ல்லாதவன், ஆடுகளம், விசாரணை, வட சென்னை, அசுரன் என வித்தியாசமான வெற்றிப் படங்களைத் தந்த வெற்றிமாறன், இப்பொழுது வாடிவாசலைத் தரும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். வாடிவாசல், நவீன இலக்கியத்துக்கு முன்னோடிக் களமாக இருந்த "எழுத்து" சிற்றிதழின் ஆசிரியர் சி.சு. செல்லப்பாவின் புகழ்பெற்ற நாவல். தமிழில் இது ஒரு கிளாஸிக் நாவல். பல பதிப்புகள் கண்டது. அண்மையில் காலச்சுவடு வெளியீடாக செம்பதிப்பில் வெளிவந்திருக்கிறது. இதையே திரைப்படமாக உருமாற்றுகிறார் வெற்றிமாறன். இதற்காக செல்லப்பாவின் மகனிடம் உரிமை வாங்கப்பட்டுள்ளது. ஆனாலும் நாவலின் பதிப்புரிமை இப்பொழுது காலச்சுவட்டிடம் இருப்பதால் அங்கும் பேசப்பட்டுள்ளது.




வாடிவாசல் என்பது ஜல்லிக் கட்டுக் காளைகளைத் திறந்து விடும் வாசற்களம். ஆனால், இந்தப் படத்தில் காளையைக் கொண்டு வந்து ஜல்லிக்கட்டுக்காக விடுபவனின் மனசுக்கும், அதை அடக்குபவர்களது மனங்களுக்கும் இடையிலான வேறுபாட்டைக் காட்டுவதையே தான் கவனத்தில் குவித்திருப்பதாகச் சொல்கிறார் வெற்றிமாறன். ஒரு சினிமாவுக்கு எது எவ்வளவு முக்கியமானதோ, அதுவே வெற்றிகரமான திரைமொழியாகும். இதைக் கவனத்தில் கொண்டே ஏற்கனவே பூமணியின் "வெக்கை" என்ற நாவலை "அசுரனாக" மாற்றி வெற்றியடைந்தவர் வெற்றிமாறன்.




வாடிவாசலின் கதை என்பது தமிழர்களின் பாரம்பரிய வீரவிளையாட்டுகளில் ஒன்றான ஜல்லிக்கட்டைப் பற்றியதே. இந்த ஜல்லிக்கட்டுக்கு இந்தியாவில் விதிக்கப்பட்டிருந்த தடையை 2017 இல் நடந்த மெரினா எழுச்சி முடிவுக்குக் கொண்டு வந்தது. அதற்குப் பிறகு இப்போது ஜல்லிக்கட்டு வெற்றிகரமாக நடக்கிறது. மெரினா எழுச்சி உலகம் முழுவதிலும் உள்ள தமிழர்களிடம் பெருங்கவனத்தை ஈர்த்திருந்தது உங்களுக்கு நினைவிருக்கும். வாடிவாசல் வரும்போது இதெல்லாம் அதற்கான ஈர்ப்பையும் மதிப்பையும் கூடுதலாக உண்டாக்கும் என எதிர்பார்க்கலாம்.






தமிழர்களின் இன்னொரு விளையாட்டான கோழிச் சண்டையை மையமாக வைத்து சமகால வாழ்வோடு வெற்றிமாறன் உருவாக்கிய "ஆடுகளம்" பெரிய வெற்றியைப் பெற்றது. இந்தப் படத்துக்கு சிறந்த இயக்குநர் மற்றும் சிறந்த திரைக்கதையாசிரியர் விருதுகளோடு, ஆறு தேசிய விருதுகள் கிடைத்தன. வெற்றிமாறனின் "விசாரணை" படத்துக்கும் தேசிய விருது கிடைத்தது. யாழ்ப்பாணத்திரைப்பட விழாவில் இந்தப் படம் காட்சிப்படுத்தப்பட்டது. வெற்றிமாறன் அப்பொழுது யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார். வெற்றிமாறன் தயாரிப்பில் உருவான "காக்கா முட்டை" என்ற இன்னொரு படத்துக்கு சிறந்த சிறுவர் படத்திற்கான தேசிய விருதையும் பெற்றவர் அவர். இப்படி விருதுகளைப் பெற்றாலும், விருதுகளுக்காகவே படம் எடுக்கிறேன் என்றில்லாமல் வெகுஜனப் பரப்புக்கும் ஏற்றவகையில் படங்களைத் தருவதே வெற்றிமாறனி[..]ன வெற்றி.

> இது நாவல்கள் படமாகும் காலம் போலும். ஏற்கனவே வாசித்திருந்த கதைகளாக இருந்தாலும் திரையில் அவை இன்னொரு கோணத்தில் இன்னொரு தோற்றத்திலேயே காணக் கிடைக்கும்.

இப்பொழுது வாடிவாசலில் சூர்யா நடிக்கப்போகிறார் என்ற அறிவிப்பு வெளியாகியுள்ளது. அநேகமாக வெற்றிமாறனின் படங்களில் தனுஷுக்கே கூடுதல் வாய்ப்பிருந்திருக்கிறது. இந்தப் படத்தில் அதைச் சூர்யா எடுத்திருக்கிறார்.

இது நாவல்கள் படமாகும் காலம் போலும். ஏற்கனவே சு. வெங்கடேசனின் 'காவல் கோட்டம்' அரவானாகியுள்ளது. 'வெக்கை' அசுரனானது. தற்போது மணிரத்தினத்தின் இயக்கத்தில் கல்கியின் 'பொன்னியின் செல்வன்' திரைக்காவியமாகிறது. 'வாடிவாசலைத்' தொடர்ந்து அஜினபி... பால்சக்கரியாவின் கதைகள் என்று நாவல்களும் கதைகளும் திரையை ஆளும் செய்திகள் வந்திருக்கின்றன. ஈழத்து எழுத்தாளர் தாமரைச்செல்வியின் உயிர்வாசம் என்ற நாவலையும் திரைப்படமாக்கலாம் என்று தமிழகச் சினிமா வட்டாரங்களில் விவாதிக்கப்படுவதாகத் தகவல். ஏற்கனவே வாசித்திருந்த கதைகளாக இருந்தாலும் திரையில் அவை இன்னொரு கோணத்தில் இன்னொரு தோற்றத்திலேயே காணக் கிடைக்கும்.

முன்பும் இந்த மாதிரி நாவல்களும் சிறந்த சிறுகதைகளும் வெற்றிகரமான சினிமாக்களாக்கப்பட்டுள்ளன. புதுமைப்பித்தனின் "சிற்றன்னை" சிறுகதை மகேந்திரனால் "உதிரிப்பூக்க"ளாகியது. தமிழ்ச் சினிமாவின் முதன்மை அடையாளங்களில் ஒன்று "உதிரிப்பூக்கள்". அந்தக் கதையை இன்னொரு பரி மாணத்தில் தந்தார் மகேந்திரன். உமா சந்திரனின் 'ஒரு ஊதாப்பூ கண்சிமிட்டுகிறது' அதே பெயரிலேயே சினிமாவாகி வெற்றியடைந்தது. இதில் கமல்ஹாசன், சுஜாதா, விஜயகுமார் நடித்திருந்தனர். 'சில நேரங்களில் சில மனிதர்கள்', 'ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்', 'உன்னைப்போல் ஒருவன்', 'புதுச் செருப்புக் கடிக்கும்', 'யாருக்காக அழுதான்', ஊருக்கு நூறுபேர் என்று தன்னுடைய படங்களைத் தானே எடுத்தார் ஜெயகாந்தன். இதில் சில நேரங்களில் சில மனிதர்கள், ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள் என்ற இரண்டு படங்களையும் பீம்சிங் இயக்கினார். ஊருக்கு நூறு பேரை பீம்சிங்கின் மகன் பீ. லெனின் இயக்கினார். மற்றப்படங்களின் இயக்குநர் ஜெயகாந்தனே.

வங்க, மலையாள, சிங்கள சினிமாக்கள் அநேகமாக நாவல்கள், சிறுகதைகளை மையமாகக் கொண்டு உருவாக்கப்படுவதுண்டு. தமிழிலும் அப்படி நடந்திருந்தாலும் அது ஒரு வலுவான அளவுக்குத் தொடரவில்லை. ஆனால், இப்போது ராம், கார்த்திக் சுப்புராஜ், வசந்தபாலன், பா.ரஞ்சித், வெற்றிமாறன், மிஷ்கின், தாமிரா என இன்றைய இயக்குநர்கள் நாவல்களையும் சிறுகதைகளையும் திரைவடிவமாக்குவதில் ஆர்வம் கொண்டிருக்கிறார்கள். வெகுஜனரசனையோடு இதை இணைப்பதில் வெற்றியும் பெற்றிருக்கின்றனர். இது தமிழ்ச் சினிமாவையும் அதனுடைய பார்வையாளர் பரப்பையும் நல்லதொரு முறையில் இணைக்கும் என எதிர்பார்க்கலாம்.

## யார்க்கும் அஞ்சேன்...

\- கம்பநேசன்

உண்மைதனை உரைப்பவரை ஊர்த்துரோகி என்று
உண்டேப்பம் விட்டதனில் உச்சாகம் கொள்வோம்

கருத்தொருவன் சொல வந்தால் காதில் கொள்வோம்
நெருப்பெடுத்து நேர்மை என்றோர் பேரும் வைப்போம்

கைக்கூலி பெற்றிருப்பான் கற்பே இல்லான்
திக்கில்லான் தின்ன வழி இல்லான் என்போம்

வயிறதனை நிரப்புகிறான் வசதி துய்த்தான்
மயிர் இவனை மழுங்கடிப்போம் மாய்ப்போம் என்போம்

ஊர்மானம் பெரிதெமக்கு உயிர்கூடக் கொடுப்போம்
பேர் கூடிப் பெரிய சவால் விட்டெழுந்தோம் நன்றி

எண்ணி ஒரு கருத்திட்டேன் ஏற்றகத்தில் னொண்டு
நண்ணி அது சிந்தித்தால் நலங்கொள்வீர் சொன்னேன்

விண்ணதிர நீர் முழங்கி வீறு கொண்டு என்ன
என் கருத்தை உரைத்தேன் நான் எதற்கும் அஞ்சேன்









# வித்துவான் பதில்கள்!

**1**

**இலங்கை அணிக்கு லசித் மலிங்கவின் தலைமைத்துவம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

க.மோகன்ராஜ், தெல்லிப்பழை.

தலைமைத்துவம் என்றால் என்ன? தான் முன்னுதாரணமாக இருந்து செய்து காட்ட வேண்டும். மலிங்கவினால் பெருமளவில் விக்கெட்டுகளை வீழ்த்த முடிய வில்லை. பெருந்தொகையான ஓட்டங்களை விட்டுக் கொடுக்கிறார். தன்னை நோக்கி வருகின்ற பிடிகளை ஓடிச்சென்று பிடிக்க முயல்கிறார் இல்லை பிடிகளைத் தவறவிட்டு விடுவேனோ என்று பயப்படுவது போல உள்ளது. ஒரே திசையில் தொடர்ந்து நான்கு ஓட்டங்கள் பெறப்பட்டாலும் களத்தடுப்பாளரை அந்த இடத்துக்கு நகர்த்துகிறாரில்லை.

பந்து வீச்சாளர்களை எப்படிப் பயன்படுத்துவது என்பதும் தெரிய வில்லை. தொடர்ந்து அடி விழுபவர்களுக்கு மீண்டும் மீண்டும் வாய்ப்பு வழங்குகிறார். ஓட்டங்களை கட்டுப்படுத்துபவர்களுக்கு குறைந்த பந்துப் பரிமாற்றங்களே வழங்குகிறார். அணி உருப்பட அவரது ஓய்வுக் காலத்தைத்தான் பார்த்துக்கொண்டிருக்க வேண்டும் போல் உள்ளது.

**2**

**"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கி"என்று ஏதோ திருக்குறள், சிறுவயதில் படித்த ஞாபகம் இந்தக் குறளின் பொருள் என்ன?**

வீ.ஜமுனா, அரசடி.

துப்பாக்கி வைத்திருக்கும் ஒருவர் கைத்துப்பாக்கி வைத்திருக்கும் இன்னொருவருடன் தான் சண்டைக்குப் போக வேண்டும் என்று கூறுகிறதோ?(!)

**3**

**அடிக்கடி தலைவலி வருகிறதே என்ன மருந்து சொல்கிறீர்கள்?**

க.தேவகி உடுவில்

ஒன்று கண்ணாடியை மாற்றிப்பாருங்கள்
இல்லையேல் மாமியை மாற்றிப்பாருங்கள்



**4**

**வித்துவான் அவர்களே உண்மையான பதிலைக் கூறுங்கள் பரமார்த்தகுரு. மட்டி. மடையன், பேதை. மிலேச்சன். மூடன் இவர்கள் அரசியலில் பிரவேசித்தால் எப்படி இருக்கும்?**

சிவமணி, நீர்வேலி வடக்கு.

அட நீங்கள் எந்த யுகத்தில் இருக்கிறீர்கள்? அவர்கள் எப்பவோ அரசியலிற் பிரவேசித்துவிட்டார்கள். எழுது எழுதுதென்று எழுதி விக்கி வாசித்தபோதும் சட்டக் கருத்துக்களை சுமந்திருந்து அதிரடித்தனத்தையும் சேர்த்துக் கொண்டு பேசுபேசென்று பேசியபோதும் கூட, நீங்கள் அவர்களை அறிந்து கொள்ள வில்லையா?

நீங்களும் கேள்விகள் கேட்கலாம்...

எழுதி அனுப்புங்கள்


**வித்துவான் பதில்கள்**
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

# உடல் எடை குறையவில்லையா?

## 4 வாரத்தில் 10 கிலோ எடை குறைய பாரம்பரிய பானம்

**தேவையான பொருள்கள்**

**சுக்குப்பொடி**
**மஞ்சள் தூள்**
**கருஞ்சீரகம்**
**எலுமிச்சை சாறு**
**தேன் (தேவைப்பட்டால்)**



**செய்முறை**

ஒரு டம்ளர் வெதுவெதுப்பான நீரை எடுத்து, அதில் முக்கால் ஸ்பூனிலிருந்து ஒரு ஸ்பூன் வரை சுக்குப் பொடியை (காய்ந்த இஞ்சி) சேர்த்துக் கொள்ளுங்கள். அதனுடன் இரண்டு சிட்டிகை மஞ்சள் தூளையும், அத்தோடு ஒரு ஸ்பூன் கருஞ்சீரகத்தையும் போட்டு கலக்குங்கள். கருஞ்சீரகத்தை தூளாக்கியும் சேர்க்கலாம்.

இந்த கலவையை நன்கு கலக்குங்கள். அதன்பின் அந்த நீரில் ஒரு எலுமிச்சம்பழத்தின் பாதிச் சாறு பிழிந்து விட்டு கலக்கி வெது வெதுப்பாக இருக்கும் போதே அருந்துங்கள்.

இந்தப் பானத்தை காலையில் வெறும் வயிற்றில் அருந்தலாம். ஒரு நாளைக்கு இரண்டு முறை அருந்தினால் நல்லது. ஆறவிட்டு அருந்தக் கூடாது. சூடாறிய பின்னர் அருந்தினால் பெரிதாக பலன் கிடைக்காது. தேன் சேர்க்காமல் குடிப்பது எடையை வேகமாகக் குறைக்க உதவும்.

தொடர்ந்து 15 நாட்கள் வரையில் இந்தப் பானத்தை தினமும் இரவு வேளையில் குடித்து வர, குறைந்தபட்சம் 10 கிலோ வரையில் உங்களால் உடல் எடையைக் குறைத்து விட முடியும்.

# சொக்லேட் லாவா கேக்





**தேவையான பொருட்கள் :**

| | |
|---|---|
| டார்க் சொக்லேட் - | 50கிராம் |
| மைதா | 20 கிராம் |
| முட்டை | 2 முழுதாக +1 மஞ்சள் க |
| உப்பு | ஒரு சிட்டிகை |
| கோக்கோ பவுடர் | 10 கிராம் |
| வெண்ணெய் | 80 கிராம் |
| மாவாக்கிய சீனி | 90 கிராம் |
| வனிலா எஸன்ஸ் | 1/2 தேக்கரண்டி |

**செய்முறை**

முதலில் ஒரு பாத்திரத்தில் சிறிது தண்ணீர் ஊற்றி சூடாக்கவும். கொதிக்கும் தண்ணீரின் மீது படாமல் ஒரு பாத்திரம் வைத்து அதனுள், சாக்லேட் டைப் போட்டு உருக விடவும். உருகியதும், அதனோடு வெண்ணெய் சேர்த்து அது வும் உருகியதும், ஆறுவதற்கு தனியே இறக்கி வைக்கவும்.

வேறொரு பாத்திரத்தில் முட்டை, வனிலா எசன்ஸ், மாவாக்கிய சீனி என்பவற்றைப் போட்டு 10 நிமிடங்களுக்கு நன்றாக அடிக்கவும். அதன் பின் ஆறிய சொக்லேட் கலவையை ஊற்றி மெதுவாக அடிக்கவும். பின்பு மைதா, கோக்கோ, உப்பு சேர்த்து நன்கு கலக்கவும். பேக் செய்வதற்கு உகந்த கிண்ணமொன்றை எடுத்து, அதில் வெண்ணெய் தடவிக் கொள்ளவும். அதன் மேல் நன்குபடுமாறு கோகோ பவுடர் தூவவும். அதற்குப் பிறகு கிண்ணத்தில் தயார் செய்து வைத்த கலவையை ஊற்றி 180 பாகை செல்சியஸில் 20 நிமிடத்திற்கு வாட்டி பேக் செய்து செய்து எடுத்து சூடாகப் பரிமாறவும்.

# கடவுளும், சாத்தானும்!

ராஜ் சிவா

துகள்களும், எதிர்த்துகள்களும் சேரும் போது, அவை ஒன்றையொன்று அழித்துக் கொள்கின்றன என்று முன்னைய பகுதிகளில் சொல்லியிருந்தேன். அப்போது பெரும் ஆற்றலுடன் கூடிய காமாக் கதிர்கள் ஒளியாக வெளியேறுகின்றன. இதேபோல, போட்டோன் துகள்களுக்கு அதிக ஆற்றலைக் கொடுத்தால், துகள்களும் (matter), எதிர்த்துகள்களும் (antimatter) உருவாகின்றன. இப்படி உருவாகும் நேர் மற்றும் எதிர்த் துகள்கள் இரண்டும் எதிரெதிர்த்திசைகளில் வெளியேறுகின்றன. பிக்பாங் கணத்தில் உருவான துகள்களும் எதிரெதிர்த் திசைகளில் பயணித்திருக்கலாம் அல்லவா? அப்படி, பிக்பாங் திசைக்கு, எதிர்த் திசையில் பயணித்த எதிர்த்துகள்கள் அங்கே ஒரு அண்டத்தையும் உருவாக்கியிருக்கலாம். துகள்களும், எதிர்த்துகள்களும் உருவானதும் எதிர்த்திசைகளில் வீசப்படுகின்றன என்பதை ஹாக்கிங் கூறிய கருத்தொன்றும் உறுதி செய்தது.

**உலகைக் கலங்க வைத்த ஹாக்கிங்**

1974ஆம் ஆண்டளவில் ஸ்டீவன் ஹாக்கிங், கருந்துளை பற்றி மிக முக்கியமான கருத்தொன்றை வெளியிட்டார். அதைப் பார்த்த இயற்பியலாளர்கள் அதிர்ந்து விட்டார்கள். சிலர், ஹாக்கிங்கை கேலியும் செய்தார்கள். கருந்துளையென்றால் கறுப்பாக இருக்கும். ஒளிகூட அதிலிருந்து தப்பிச் செல்ல முடியாது. தன் அதியீர்ப்பினால் ஒளியை உள்ளிழுப்பதால், அது கரிய நிறத்துடன் காணப்படுகிறது என்ற கருந்துளை பற்றிய முடிவுகளுடனேயே அதுவரை வானியற்பியல் இருந்து வந்தது. அந்தக் கருத்துகளையெல்லாம் உடைத்தெறிந்தார் ஹாக்கிங். ஐன்ஸ்டைனின் சார்புக் கொள்கையையும், குவாண்டம் இயற்பியல் கொள்கைகளையும் ஒன்றிணைத்துப் புதியதொரு கணிதச் சமன்பாட்டை உருவாக்கினார். அந்தச் சமன்பாட்டின்படி, "கருந்துளைகள் கதிர்வீச்சுகளை வெளிவிடுவதால், அவை கறுப்பாகவே இருக்க முடியாது. கதிர்வீச்சினால் ஒளிர்ந்தபடியே காணப்படுகின்றன" என்று அறிவித்தார். 'இதென்ன புதுக் கதை? ஒளியே வெளிவர முடியாது என்னும் போது, எப்படிக் கதிர்கள் வெளிவர முடியும்? அதன் ஈர்ப்பிலிருந்துதான் எதுவுமே தப்ப முடியாதே!' என்று அறிவியல் உலகமே கலங்கிப் போனது. ஆனால், ஸ்டீபன் ஹாக்கிங் சொன்னவை அனைத்தும் சரியானவைதான் என்று ஒவ்வொருவராகப் பின்னர் சம்மதிக்க ஆரம்பித்தார்கள். ஹாக்கிங் வெளியிட்ட அந்தக் கோட்பாட்டையே 'ஹாக்கிங் கதிர்வீச்சு' (Hawking radiation) என்கிறார்கள்.

**அடுத்த அதிர்ச்சி**

இந்தக் கோட்பாட்டிலிருந்து கருந்துளை பற்றி இன்னுமொரு அதிர்ச்சிக் கருத்தையும் ஹாக்கிங் முன்வைத்தார். "கருந்துளைகள், அனைத்தையும் தன்னுள்ளே இழுத்துக் கொள்கின்றன. அதற்கு அருகே வரும் உடுக்கள், கோள்கள் அனைத்தையும் விழுங்கி ஏப்பம் விடுகின்றன. இப்படி ஒவ்வொரு பொருளாக அவை உள்ளிழுத்துக் கொள்வதால், மெல்ல மெல்லப் பெரிதாகி இராட்சச நிலையை அடைகின்றன. கருந்துளைகள் அளவில் எப்போதும் பெரிதாகிக்கொண்டே போகின்றன". இப்படித்தான் 1974ஆம் ஆண்டுவரை அறிஞர்கள் நம்பியிருந்தார்கள். அதற்கும் மண்ணை அள்ளிப் போட்டார் ஹாக்கிங். கருந்துளைகள் கதிர்வீச்சுகளைத் தொடர்ந்து வெளிவிடுவதால், அவை மெல்ல மெல்லச் சுருங்க ஆரம்பிக்கின்றன. கடைசியில் அவை இல்லாமலே அழிந்து போய்விடுகின்றன என்று ஹாக்கிங்கின் கோட்பாடு நிரூபித்தது. கருந்துளை பற்றி அவர் சொன்ன கருத்துகள் அனைத்துமே அதிர்ச்சி ரகம். ஆனால், அவர் கூறியவை உண்மையே என்று ஒத்துக் கொண்டது அறிவியல் உலகம். உயிருடன் இருக்கும்வரை அவருக்கு எந்தவொரு நோபல் பரிசும் கிடைக்கவில்லை. ஹாக்கிங் கதிர்வீச்சு உண்மை என்று நிரூபிக்கப்பட்டால், அவருக்கு நோபல் பரிசு அறிவிக்கப்படலாம். சமீபத்தில் படம் பிடிக்கப்பட்ட கருந்துளையில் ஹாக்கிங் கதிர்வீச்சு வெளிவருகிறதாவென முயற்சித்தும் கண்டுபிடிக்க முடியவில்லை. அந்த அளவுக்கு இன்னும் முன்னேறவில்லை. அதற்கு இன்னும் காலங்கள் தேவைப்படலாம். இத்தனை கண்டுபிடிப்புகளையும் எந்தவொரு அசைவும் இல்லாமல், கண்ணசைவும், கன்ன அசைவும் மட்டுமே கொண்ட ஒரு மனிதனால் செய்ய முடிந்தது என்பது ஆச்சரியமில்லையா?

**பிக்பாங் கணத்தில் நடந்தது என்ன?**

"அதுசரி, ஹாக்கிங் கதிர்வீச்சுக்கும், நாம் இப்போது பார்த்துக் கொண்டிருக்கும் எதிர்த்துகள்களுக்கும் என்ன சம்மந்தம்?" என்றுதானே சிந்திக்கிறீர்கள். சொல்கிறேன். கருந்துளை அதிக ஈர்ப்பைக் கொண்டது. அந்த ஈர்ப்பினால் கவரப்படும் பொருட்கள், நூடில்ஸ் போன்று நீட்டப்பட்டு அதனுள்ளே செல்கின்றன. அப்படிச் செல்லும்போது, துகள்களாக அவை உடைக்கப்படுகின்றன. உடைக்கப்படும் போது அங்கு துகள்களும், எதிர்த்துகளும் உருவாகின்றன. இவை, கருந்துளையில் நிகழ்வெல்லையில் (Event horizon) நடைபெறுகின்றன. அதாவது, கருந்துளையில் மேல் விளிம்பான நிகழ்வெல்லையில், துகள்களாகவும், எதிர்த்துகள்களாகவும் பிரிவடைகின்றன. இப்படிப் பிரிவடையும்போது, எதிர் எதிர்த்திசையில் அவை விலகுகின்றன. எதிர்த்துகள்கள் கருந்துளைக்கு உள்ளேயும், துகள்கள் வெளியேயுமாக வீசப்படுகின்றன. இதனாலேயே கருந்துளைக்கான கதிர்வீச்சும் உருவாகின்றது. ஹாக்கிங்கின் கதிர்வீச்சுக் கொள்கையின்படி, நேர் மற்றும் எதிர்த்துகள்கள் உருவாகி, எதிரெதிர்த் திசைகளில் செல்கின்றன என்பது உறுதியாகின்றது. இதுபோலவே பிக்பாங் கணத்திலும் நடந்திருக்கலாம். "எதிர்த் துகள்கள் இருப்பதாகக் கோட்பாடுகள் கூறுகின்றனவே, அவற்றை எப்போதாவது நம்வசப்படுத்தி இருக்கிறோமா? துகள்கள்போல அவற்றைக் கையாண்டிருக்கிறோமா?" என்னும் கேள்விகள் இங்கு முக்கியமானவை. ஆம், அவற்றை நாம் கைப்பற்றியிருக்கிறோம். சொல்லப்போனால், அவற்றை உருவாக்குவதற்கான ஃபக்டரியே இருக்கிறது. "என்ன ஃபக்டரியா?" என்று ஆச்சரியப்படுகிறீர்களா?




பிக்பாங் ஆரம்பக் கணத்தில் அதிகளவில் ஒளியும், ஆற்றலும் இருந்தன. அந்த ஆற்றலிலிருந்து துகள்களும், எதிர்த்துகள்களும் தோன்றின. பேரண்ட வெடிப்பினால், ஒரு சமச்சீர் (Symetry) அமைப்புடனே துகள்கள் தோன்றியிருக்க வேண்டும். துகள்கள் எவ்வளவு உருவாகினவோ, அதேயளவு எதிர்த் துகள்களும் அப்போது உருவாகியிருக்கும். ஆனால், உருவாகியதில் 4வீத துகள்கள் மட்டும் தப்பிக் கொண்டிருக்கின்றன. அப்படியெனில், அதேயளவான 4வீத எதிர்த்துகள்களும் தப்பியிருக்க வேண்டும். அப்படி அவை தப்பியிருக்கும் பட்சத்தில், எங்கே போயின? என்னும் கேள்விக்கு, 'எஞ்சிய எதிர்த்துகள்கள் அனைத்தும் எதிர்த்திசை நோக்கி வீசப்பட்டிருக்கலாம்' என்கிறார்கள். எதிர்த்திசைக்கு வீசப்பட்ட எதிர்த்துகள்கள், அங்கேயொரு எதிர் அண்டத்தையும் உருவாக்கியிருக்கலாம். அந்த எதிர் அண்டத்தில், எமது அண்டத்தில் உள்ளவை போலவே அனைத்தும் அமைந்திருக்கும். ஒரு கண்ணாடி பிம்பம்போல. எதிர்த்துகள்களால் அமைக்கப்பட்ட பொருட்களென்பதால், அவையெல்லாம் எதிராக இயங்குபவை என்று சிலர் நினைக்கலாம். ஆனால், எமது அண்டத்துக்கும், எதிர் அண்டத்துக்கும் எந்த வித்தியாசமும் இருக்காது. எலெக்ட்ரோன், புரோட்டோன், நியூட்ரோன் ஆகியவற்றால் உருவான அணுக்களைக் கொண்டு எமது அண்டத்தில் பொருட்கள் அமைக்கப்பட்டிருப்பதுபோல, எதிர் எலெக்ட்ரோன், எதிர் புரோட்டோன், எதிர் நியூட்ரோன் ஆகியவற்றால் உருவான எதிர் அணுக்களைக்கொண்டு எதிர் அண்டத்தில் பொருட்கள் உருவாகியிருக்கும். அணுக்களால் உருவான ஒரு மேசைக்கும், எதிர் அணுக்களால் உருவான ஒரு மேசைக்கும் எந்த வித்தியாசமும் கிடையாது. சாதாரணமான மேசை எப்படி இருக்குமோ, அப்படியே தான் அந்த மேசையும் காணப்படும். அந்த எதிர் மேசையில், அன்டி மனிதர்கள் உட்காருவார்கள். ஆனால், எந்தக் காரணம் கொண்டும் எம்மால் அதில் உட்கார முடியாது. காரணம், நாம் (நேர்) அணுக்களால் உருவானவர்கள். எதிர் அணுக்களுடன் சிறிய தொடர்பு வந்தாலே போதும். அங்கு பெரிய வெடிப்புடன் ஆற்றல் வெளிப்பட்டுக் காணாமல் போவோம்.

**நம்பமுடியாத ஆற்றல்**

அப்போது ஏற்படும் வெடிப்பு ஆயிரம் அணுகுண்டுகளின் வெடிப்புக்களுக்குச் சமமானதாக இருக்கும். ஒரு கிராம் அளவுள்ள எதிர்த்துகள்களை ஒன்றாக்கிச் கொழும்பில் போட்டால் போதும், ஒரு நொடியில் முழுக் கொழும்பும் இல்லாது அழிந்து போகும். இங்குதான் ஐன்ஸ்டைனின் $E=MC^2$ என்னும் சமன்பாட்டின் விளைவும் வெளிப்படுகிறது. இதில் E என்பது ஆற்றலையும், M என்பது எடையையும், C என்பது ஒளியின் வேகத்தையும் குறிக்கிறது. சிறிய அளவு எடைகொண்ட துகள்களானாலும் அவை வெளிப்படுத்தும் ஆற்றல் மிகப்பெரியதாக இருக்கும். காரணம் எடையை, ஒளியின் வேகத்தின் வர்க்கத்துடன் பெருக்குவதால் வருவதே அதன் ஆற்றலாகிறது. அதாவது, அதன் எடையுடன் கூடவே 17 பூச்சியங்களை இணைத்து வரும் தொகை. அந்த ஆற்றல் எவ்வளவு பெரியது என்று எண்ணிப் பாருங்கள். நம்பவே முடியாத அளவானது. தானோஸின் பெருவிரல் சொடுக்கில் எல்லாமே அழிவது போல, கொழும்பையும் இல்லாமல் செய்துவிடும். எதிர்த்துகள்களின் எடை மேலும் அதிகரிக்க, வெளிப்படும் ஆற்றலும் பல மடங்காக அதிகரிக்கும். பிக்பாங்கின் ஆற்றலால் துகள்களும், எதிர்த்துகள்களும் உருவாகியது போன்ற அதியாற்றல் கணங்களை மனிதனாலும் உருவாக்க முடிந்தது. அதற்கெனவே அமைக்கப்பட்டதுதான், சுவிஸ் நாட்டில் உள்ள 'மாபெரும் துகள்மோதி' (Large Hadron Collider). சுருக்கமாக LHC எனப்படும். இந்தத் துகள்மோதியினூடாக, எலெக்ட்ரோன் நீக்கப்பட்ட ஹைட்ரஜன் அணுக்களை 99வீத ஒளிவேகத்தில், இரு திசைகளிலும் அனுப்புவார்கள். 27 கிலோமீற்றர் நீளமான வட்டப்பாதையில் மிகவேகத்துடன் ஓடிவரும் ஹைட்ரஜன் துகள்கள், ஒன்றுடன் ஒன்று மோதுவதால், அங்கொரு பெருவெடிப்பே நிகழ்கிறது. அப்போது பலவிதத் துகள்கள் வெளிப்பட்டுச் சிதறுகின்றன. அவற்றில் எதிர்த்துகள்களும் தோன்றுகின்றன. இந்த எதிர்த் துகள்களைச் சமீப காலமாக நாம் கைப்பற்ற ஆரம்பித்திருக்கிறோம். ஆனால், அது அவ்வளவு சுலபமான காரியமல்ல. சில நானோ நொடிகளே உயிர் வாழக்கூடிய அந்த எதிர்த்துகள்களைக் கைப்பற்றுவது என்பது, கொரோனாவுக்கு தடுப்பூசி கண்டுபிடிப்பதை விடக் கடினமானது. பூமியில் இருக்கும் எதனுடன் சேர்ந்தாலும் இல்லாமல் அழிந்துபோகும் துகள்கள் அவை. எதனுள் அவற்றைப் பிடித்து வைத்திருப்பது? அதற்கான பாத்திரங்கள் எவை? எந்தப் பாத்திரங்களாக இருந்தாலும், அவற்றை (நேர்த்)துகள்களால் மட்டும்தானே உருவாக்க முடியும். அதில் எப்படி எதிர்த்துகள்களைச் சேர்ப்பது? இத்தனை கடினங்களுக்கு மத்தியிலும் அவற்றைக் கைப்பற்றுகின்றனர் அறிவியலாளர்கள். கொரோனாவுக்கு மருந்து கண்டுபிடிக்கவில்லை என்று அறிவியலை நோக்கிக் கேலி பேசுபவர்கள், அதை என்ன விதத்தில் கைப்பற்றுகிறார்கள் என்று தெரிந்துகொண்டால், திகைத்தே போவார்கள். எதிர்த்துகள்களைக் கைப்பற்றும் ஃபக்டரி பற்றி அடுத்த பகுதியில் சொல்கிறேன்.


(தொடரும்)

# யாழ். மாநகர சபையின் வரலாறு

## (1906 - 1949)

பாகம் 13

ந.பரமேஸ்வரன்



09.05.1936 அன்று செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு யாழ்ப்பாண புதிய நகரமண்டபக் கட்டிடம் ஆளுநர் எட்வேர்ட் ஸ்ரப்ஸ் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. சபாநாயகர் வைத்திலிங்கம் துரைசாமியும் கலந்து கொண்டார்.

1937 .1818.00 ரூபா செலவில் சப்பல் வீதி தார் வீதியாக மாற்றப்பட்டது. 41368.00 ரூபா செலவில் புதிய நகரமண்டபம் கட்டி முடிக்கப்பட்டது. 500 புதிய வாளி மலசலகூடங்கள் அமைக்கப்பட்டன. நகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசம் முழுவதற்கும் மின்சாரம் வழங்குவதற்கு 2.90.000 ரூபா அரசாங்கத்தால் கடனாக வழங்கப்பட்டது. யாழ்ப்பாண நூலகத்திற்கு 1474.00 ரூபா செலவிடப்பட்டது; உத்தியோகத்தர்களின் சம்பளம் உட்பட.

(Jane Russel எழுதிய Communal Politics Under Donoughmore Costitution என்ற நூலில் இருந்து ஒரு பகுதி.

1937ம் ஆண்டு உள்ளூராட்சி அமைச்சர் பண்டாரநாயக்க யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து யாழ்ப்பாணத்திற்கு மாநகர அந்தஸ்து வழங்குவதற்கு முயற்சித்தார். யாழ்ப்பாண வெள்ளாளர்கள் யாழ்ப்பாணத்திற்கு மாநகர அந்தஸ்து வழங்குவதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். வெள்ளாளர் அல்லாத ஒருவரை உறுப்பினராக நியமித்த போது வெள்ளாளர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். பின்னர் சிங்களவர் ஒருவரை உறுப்பினராக நியமித்தார் பண்டாரநாயக்க.

**1939ம் ஆண்டுக்கு வழங்கப்பட்ட சந்தைகளின் குத்தகைத் தொகையும் அதை எடுத்தவர்களின் விபரமும்**

| | |
|---|---|
| சின்னக்கடை சந்தை சவரிமுத்து | ரூ.2610.00 |
| பெரியகடை மீன் சந்தை- V. சின்னத்துரை | 3150.00 |
| பஸ் நிலையம் - N.அப்பச்சி | 9321.00 |
| முத்திரச்சந்தை சிவசிதம்பரம் | 190.00 |
| சிவியாதெரு சந்தை -இராமு செல்லையா | 125.00 |
| செங்குந்தர் சந்தை - அப்பச்சி | 1910.00 |
| நாவாந்துறை சந்தை -நாவாந்துறை சென் நீக்கிலஸ் தேவாலயம் | 40.00 |
| தட்டாதெரு சந்தை- செல்லப்பா இராசையா கொழும்புத்துறை | 56.00 |

20.8.1938 சனிக்கிழமை தலைவர் சாம் சபாபதி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நகரமண்டபத்தை இனிமேல் சினிமா திரையரங்குகளுக்கோ நாடகக் கம்பனிகளுக்கோ வாடகைக்கு விடுவதில்லை என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

December 1938.Jaffna UDC Gazette முதலாவது இதழ் வெளியிடப்பட்டது. செயலாளர் பதஞ்சலி இதனைத் தயாரித்திருந்தார். இதில் இலங்கையிலுள்ள உள்ளூராட்சி நிறுவனங்கள் பற்றிய விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. 10.12.1938 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு அந்த ஆண்டின் கடைசிக்கூட்டம் நடைபெற்றது; கூட்டத்தில் கலந்து கொண்டோர். தலைவர் சாம் சபாபதி, உபதலைவர்K.V. சின்னத்துரை R.A.M.துரையப்பா மாகாண பொறியியலாளர், வடமாகாணம், V.நடராஜா சுகாதார வைத்திய அதிகாரி S.பதஞ்சலி செயலாளர், S.M.அபூபக்கர், R.R.நல்லையா, V.A.துரையப்பா, C.பொன்னம்பலம், K.ஐயாத்துரை, M.ஜேக்கப். இந்தக் கடைசிக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1939ம் ஆண்டிற்குரிய டீசல், ஒயில் என்பவற்றை வழங்குவதற்கு ஷெல் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

வரி வசூலிப்பவர்களுக்கு வருடத்திற்கு இரண்டு சீருடைகளும், மூன்று வருடங்களுக்கொரு முறை ஹெல்மட்டும் வழங்குவது எனதீர்மானிக்கப்பட்டது. மருத்துவமாதுJ.L.G. பெர்னாண்டோவுக்கு வருடத்திலொரு முறை நாத்தாண்டியாவிலுள்ள அவரது பெற்றோரை பார்க்கச்செல்வதற்கு புகையிரத டிக்கெட் வழங்குவது.

எட்டாம் வட்டாரம் தவிர்ந்த ஏனைய வட்டாரங்களுக்கு தலா 400 ஒதுக்கப்பட்டது. வீதிகள் திருத்துவதற்கு ஒதுக்கப்பட்ட நிதி விபரம் வருமாறு.


திட்டிமறவர்குல வீதி 250.00 இரண்டாம் வட்டாரம்
கொய்யாத்தோட்ட வீதி 500.00 மூன்றாம் வட்டாரம்
அத்திக்காடு வீதி 800.00 நான்காம் வட்டாரம்
செட்டித்தெரு, றக்கா வீதி, பண்டாரக்குள வீதி 1200.00 ஐந்தாம் வட்டாரம்
அத்தியடி வீதி 800.00 ஆறாம் வட்டாரம்
கந்தசாமி கோயில்கலட்டி அம்மன் கோயில் வீதி1000.00 ஏழாம் வட்டாரம்
கோணாந்தோட்டம் முதல் கொட்டடி வரை வீதியொன்று திறப்பதற்கு 700.00 எட்டாம் வட்டாரம்.

உதவிச் சாரதிகளுக்கான வருடாந்த சம்பளம் 480.00 மீற்றர் மானி வாசிப்பவர்களுக்கும் ஆளிப்பலகை இயக்குநர்களுமான(switch board operators) வருடாந்த சம்பளம் 300.00

இராசதுரை - ஏவலாள்பியோன் சம்பளம் 180.00

சகல ஊழியர்களினதும் வருடாந்த சம்பள அதிகரிப்பு(increment)விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன.

யாழ்ப்பாண உள்ளூராட்சி சபையில் அங்கத்தவர்களாக இருந்தவர்களின் புகைப்படங்களை வைத்திருப்போர் அவற்றை மின்னஞ்சல் மூலம் parames35@gmail.com என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தால் இந்த ஆவணம் பூரணமான ஒன்றாக அமையும்.



# இந்திய வியாபாரம்

பொக்கிசன்

ஆனந்தன் அடிக்கடி இந்தியாவுக்குப் போய் வாறவன். இந்தியா பிசினஸ் செய்யிற ஆக்கள் தங்கடை செலவிலை கூட்டிக்கொண்டு போறவை. 500 ரூபா காசும் குடுக்கிறவை. நான் ஆனந்தனிடம் கேட்டன்.

"இந்திய பிசினஸ் செய்யிறதெண்டா எவ்வளவு முதல் போட வேண்டும்?"

" 1500 ரூபா முதல் போட்டால், சகல செலவும் தள்ளி 1000 ரூபா, 1500 ரூபா மிஞ்சும்" எண்டான்.

என்னிடம் 500 ரூபா இருந்தது. அம்மாவிடம் 1000 ரூபா வாங்கினேன். ராஜா Emergency Certificate எடுத்தேன் (இந்தியாவுக்கு மட்டும் செல்லுபடியாகும் கடவுசீட்டு.) காங்கேசன்துறை புகையிரத நிலையத்தில் மதுரைக்கு ரிக்கெற் எடுத்தேன் (இலங்கையின் எந்தப் புகையிரத நிலையத்திலிருந்தும் இந்தியாவின் எந்தவொரு புகையிரத நிலையத்துக்கும் கப்பல் கட்டணத்தையும் சேர்த்து ரிக்கெற் எடுக்கக் கூடிய வசதி 1984ஆம் ஆண்டு வரை இருந்தது).

3 மீற்றர் ஜெலோ லைன் டிரௌசர் துணி, 15 மீற்றர் வெள்ளை பொலியெஸ்டர், 3 டோர்ச், ஒரு கேஸ் சன்லைட், 3 குடை எல்லாம் வாங்கி பார்சல் பண்ணியாயிற்று. பஸ்ஸில்தான் தலைமன்னாருக்குப் போக வேணும். புகையிரதத்தில் போவதென்றால் அது சிரமம் .வவுனியாவில் இறங்கி பிறகு மன்னாருக்கு ரெயின் ஏற வேணும். கப்பல் கட்டணம் தலைமன்னாரிலிருந்து 150 ரூபா தான்ள upper deck ன்றால் 300 ரூபா. என்ன செய்வது பஸ்சிலே சாரத்துடன் புறப்பட்டேன், டிரௌசருடன் போனால் கஸ்டம்ஸ்காரரர் ,ரக்ஸ் அடிப்பாங்களெண்டு ஆக்கள் சொன்னவை. நான் ஒரு காலமும் சாரம் உடுக்கிறேல்லை. வீட்டிலையெண்டா வேட்டி, வெளிக்கிட்டா டிரௌசர். கொண்டக்டர் என்னைப் பார்த்து "தம்பி பொட்டும் போட்டிருக்கிறாய். இண்டைக்கு போறது கஷ்டம்" என்றார்.பஸ்ஸில் நான் மட்டும் தான் வயது குறைந்த ஆள் போலிருக்கிறது. நாலைஞ்சு இடத்தில செக்கிங். சிலவேளை செக்பொயின்றிலை இறக்கி கூட்டிக்கொண்டு போயிடுவான்கள். பஸ் மன்னாருக்கு வந்திட்டுது. தலைமன்னார் பஸ்ஸூம் நிக்குது; கொண்டக்டர் சொன்ன மாதிரி ஒண்டும் நடக்கேல்லை.



தலைமன்னார் பஸ்ஸிலை ஏறி திருக்கேதீஸ்வரம் மடத்துக்கு போனன்.கப்பலில் இந்தியாவுக்கு போகிற ஆக்களுக்கு முஸ்லிம் பொம்பிளை ஒரு ஆள் ரூம் குடுக்கிறவ. எல்லாரும் அங்கைதான் போய் தங்கிறவை. எனக்கு முஸ்லிம் வீட்டில் தங்க ஒரு மாதிரி இருந்தது. திருக்கேதீஸ்வரம் மடத்திலை கீரிமலை மடத்திலை இருந்த மாஸ்டரும் மனிசியும் தான் பொறுப்பாக இருக்கினம். என்னைக்கண்டவுடனை " வா,வா! எப்ப வந்தனீ? . என்ன இந்தியாவுக்கு போக வந்தனியோ?" எண்டு கேட்டினம்; நான் ஓமெண்டு சொன்னன். எனக்கு அறை ஒன்று தந்தினம். மறுநாள் காலை எழுந்து தலைமன்னார் துறையை நோக்கிப் புறப்பட்டேன்.

அங்க நிண்ட கப்பலுக்கு பெயர் ராமானுஜம்.சின்னக் கப்பல். 350 பேர் தான் பிரயாணம் செய்யலாம். சிலவேளை கப்பலில் இடமில்லாவிட்டால் தலைமன்னாரில் நிற்க வேண்டியும் வரும்.சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் தாயகம் திரும்பும் மலையகத் தமிழர்கள் புறம்பாக வரிசையில் நிக்கினம். முதலில் அவர்களை ஏற்றி விட்டுத்தான் மற்றவர்களை ஏற்றுவார்கள். ஏனென்றால் இந்தக் கப்பல் சேவை அவர்களுக்காகத்தான் ஆரம்பிக்கப்பட்டது. கப்பல் பிரயாணம் 3 மணித்தியாலம்தான்.

ராமேஸ்வரம் கோபுரம் தெரியுது . கப்பல் நங்கூரமிட்டு விட்டது. பஸ் நிக்குது. பஸ்ஸிலை ஸ்டேஷனுக்கு போய் மதுரைக்கு ட்ரெயின் எடுக்க வேண்டும். ராமேஸ்வரம் கோயிலுக்கு போகாமல் போவது கொஞ்சம் கவலையாகத்தான் கிடக்கு. என்ன செய்யிறது? ராமேஸ்வரம் தனித்தீவு. ட்ரெயின் போக்குவரத்து மட்டும் தான் (பாம்பன் பாலம் பின்னர் தான் அமைக்கப்பட்டது). மதுரையில் லொட்ஜுக்கு 10 ரூபா வாடகை. மறுநாள் காலையில் வியாபாரிகள் இருவர் வந்து நான் கொண்டு போன பொருள்களை வாங்கிச்சென்றனர். கடைக்குச்சென்று நாலுமுழ வேட்டி, பூவாளி சாரம், மூக்குப்பொடி என்பவற்றை கொள்வனவு செய்து கொண்டு வந்து வைத்து விட்டு மீனாட்சியம்மன் கோயிலுக்குச் சென்றேன்; மதியம் திருப்பரங்குன்றம் சென்று விட்டு வந்தன். மறுநாள் காலை கப்பல் பிரயாணம். ஒரு வெள்ளக்கார தம்பதிகளும், ஜப்பானிய பிக்கு ஒருவரும் எம்முடன் கப்பலில் தலைமன்னாருக்கு பயணமாகினர். நான் கிடைக்கப் போகும் 1500 ரூபா லாபத்தை எண்ணியபடியே பயணப்படத் தொடங்கினன்.



# முடங்காதீர்: முயலுங்கள்!



2015 ஆம் ஆண்டில் இடம்பெற்ற கொலைச் சம்பவம் தொடர்பில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர, கடந்த 8 ஆம் திகதி கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுக்குமத்தியில், அவர் நாடாளுமன்றத்துக்கு அவர், பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் நடைபெற்ற ஆளுங்கட்சி நாடாளுமன்றக்குழுக் கூட்டத்திலும் பங்கேற்றார். பிரேமலால் ஜயசேகர அந்தக் கூட்டத்துக்கு ஆளுங்கட்சி எம்.பிக்கள் கைதட்டி உற்சாக வரவேற்பளித்தனர். கூட்டத்தின் முடிவில் பிரேமலால் ஜயசேகரவிடம் ஆளும் கட்சி எம்.பிகள் சுக நலம் விசாரித்தனர். மேன்முறையீட்டில் நீதி கிடைக்கும், எனவும் ஆறுதல் கூறியுள்ளனர்.

பிரதமர் மஹிந்தவும் பிரேமலால் ஜயசேகரவிடம் "சிறைக்குள் இருக்கின்றோம் என எண்ணி முடங்கிவிடவேண்டாம், நாடாளுமன்ற அமர்வு நடைபெறும் நாட்களில் நிச்சயம் இங்கு வரலாம். அமர்வுகளில் பங்கேற்று, வாசிகசாலையை முழுமையாகப் பயன்படுத்தி பயன்பெறவும். என மஹிந்தர் ஆலோசனை வழங்கியுள்ளார் என அறியமுடிகின்றது.

அதேவேளை சிறைச்சாலைக்குள் பிரேமலால் ஜயசேகர தினமும் தியானத்தில் ஈடுபடுகிறார் எனவும் தகவல் வெளிவந்துள்ளது..

## அறிந்தும் அறியாமலும்

○ சூழியன்

# ரணில் மீது காதல்....



2015 இற்கு முன்னர் மஹிந்த ஆட்சியில் தெற்கு அரசியலில் பரபரப்புக்கும், விறுவிறுப்புக்கும் பஞ்சமில்லாத வகையில் அரசியல் சம்பவங்களை அரங்கேற்றியவர்தான் மேர்வின் சில்வா.

சண்டித்தனத்துக்குப் பேர்போன மேர்வின் , மனதில் என்ன தோன்றுகிறதே அதனை அப்படியே பொது வெளியில் கொட்டித் தீர்த்துவிடுவார். இதனால் உருவெடுத்த பிரச்சினைகள் ஏராளம். அதிலும் குறிப்பாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளராக பதவி வகித்த நவநீதம்பிள்ளை அம்மையாருக்கு திருமண அழைப்பை விடுத்து இடியப்பச் சிக்கலிலும் சிக்கி சின்னாபின்னமானார்.

சிங்கள தேசியவாதத்தை முன்னிலைப்படுத்தி அவர் அரசியல் செய்திருந்தாலும் அவரின் சிற்சில நடத்தை காரணமாக 2015 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் களமிறங்குவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அவருக்கு கதவடைப்பு செய்தது.

இதனால் கடுப்பான மேர்வின் சில்வா சிறிதுகாலம் செயற்பாட்டு அரசியலுக்கு 'குட்பை' கூறியிருந்தார். காலப்போக்கில் ராஜபக்சக்களை கடுமையாக விமர்சித்தபடியே 'ரீ என்ட்ரீ' கொடுத்தார். ஐக்கிய தேசியக்கட்சியுடனும் உறவை ஏற்படுத்திக்கொண்டார்.

2019 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சஜித்துக்கு ஆதரவாக பிரசாரம்செய்த மேர்வின் சில்வா, பொதுத்தேர்தலில் யானைச் சின்னத்தின் கீழ் போட்டியிட்டு மண் கவ்வினார். இருந்தாலும் தொடர்ந்தும் ஐக்கிய தேசியக் கட்சியுடனேயே இணைந்து, சஜித்தை சரமாரியாக விமர்சித்து வருகின்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் தொடர்பில் ரணிலுக்கு சார்பாக மேர்வின் சில்வா அறிவிப்புகளை விடுத்துவருகின்றார்.

ஐ.தே.கவின் தலைமைப்பதவியில் ரணில் விக்கிரமசிங்க நீடிக்க வேண்டும் என்பதே மேர்வின் சில்வாவின் எதிர்ப்பார்ப்பாகும்.

எல்லோரையும் விமர்சித்து - விளாசித்தள்ளும் மேர்வின் சில்வாவுக்கு ரணில்மீது மட்டும் ஏன் இவ்வளவு பிரியம்? என அவருக்கு நெருக்கமானவர்கள் மனதுக்குள்ளேயே கேட்டுக்கொள்கின்றனராம்.

எதுஎப்படியோ தனது மகனை மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட வைக்கவிரும்பும் மேர்வின், ரணிலின் ஆசியுடன் மொட்டுக் கட்சியின் உதவியை நாடலாம் என நம்பப்படுகின்றது. இதன்காரணமாகவே இப்படி ரணில் மீது 'லவ்வாம்'

# அன்று நல்லவர்; இன்று கெட்டவர்



அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டமூலத்துக்கு முடிவு கட்ட வேண்டும், மாகாணசபை முறைமைக்கு சமாதி கட்டவேண்டும் என்றெல்லாம் கொக்கரிக்கும் இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகரவுக்கு, ஆளுங்கட்சிக்குள்ளேயே கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

குறிப்பாக மொட்டுக் கட்சியின் முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள் சரத் வீரசேகரவின் கருத்து அரசாங்கத்தின் நிலைப்பாடு அல்லவென அடித்துக்கூறிவருகின்றனர்.

ஜெனிவா மாநாட்டில் பங்கேற்று புலம்பெயர் தமிழர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கடுமையாக விமர்சித்துமே சிங்கள மக்கள் மத்தியில் ஹீரோவானார் சரத் வீரசேகர.

2015 பொதுத்தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் மண்கவ்விய அவர், 2020 இல் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றதுடன் விருப்பு வாக்குகளில் மாவட்டத்தில் முதலிடம் பிடித்தார். ஜெனிவா மாநாட்டில் படையினருக்கு சார்பாக குரல் எழுப்பியதே அவரது இந்த வெற்றிக்கு காரணமா அமைந்தது. பல மாகாணசபை உறுப்பினர்கள் சரத் வீரசேகரவுக்கு ஆதரவு வெளியிட்டனர்.

முன்னரும் 13 ஐ சரத்வீரசேகர எதிர்த்தாலும் அது பெரிதாக பேசுபொருளாகவில்லை. ஆனால் தற்போது மாகாணசபை இராஜாங்க அமைச்சராக இருந்துகொண்டு அவர் வெளியிடும் கருத்துக்கள்தான் ஆளுங்கட்சியின் மாகாணசபை உறுப்பினர்களுக்கு தலைவலியை ஏற்படுத்தியுள்ளது.

13 ஆவது திருத்தச்சட்டமூலம் என்பது இரு நாடுகளுடன் சம்பந்தப்பட்ட விடயம். அதனை நீக்குவதானால் கடும் இராஜதந்திர நெருக்கடிகளையும் சந்திக்கவேண்டிவரும். எதற்காக சரத் வீரசேகரவுக்கு மாகாணசபைகள் அமைச்சில் இராஜாங்க அமைச்சு பதவி வழங்கப்பட்டது என்ற கேள்வியையும் சில ஆளுங்கட்சி உறுப்பினர்கள் எழுப்பி வருகின்றனர்.

# பல்டி மன்னர்கள் தயார்!

மலையகத்தை தளமாகக் கொண்டியங்கும் முக்கிய தொழிற்சங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர்கள் இருவர் கட்சித் தாவலுக்கு தயாராகிவிட்டனர் எனக் கூறப்படுகிறது.

இதற்கான பேரம் பேசும் படலம் ஆரம்பித்துவிட்டது எனவும், மாகாணசபைத் தேர்தலில் களமிறங்க வாய்ப்புக் கிட்டும் என்ற உத்தரவாதத்தின் அடிப்படையிலேயே 'பல்டி' இடம்பெறவுள்ளது எனவும் அறியமுடிகின்றது.

மேற்படி தொழிற்சங்கத்தில் நெடுநாளாக அங்கத்தவர்களாக இருக்கும் தமக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை என்று தமக்கு நெருக்கமானவர்களிடம் இவர்கள் கவலை வெளியிட்டுள்ளனராம். ஹற்றனில் வைத்து ஊடகங்கள் ஊடாக நிலைப்பாட்டை இவ்விருவரும் அறிவிப்பார்கள் எனக் கூறப்படுகிறது.

எனினும், தாவல் இடம்பெறுமானால் அது கட்சிக்கு பாதிப்பாக அமைந்துவிடும் என்பதால் சம்பந்தப்பட்ட தொழிற்சங்கத்தின் உறுப்பினர் ஒருவர் சமரச முயற்சியில் ஈடுபட்டுள்ளார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

எதுஎப்படியோ, அரசியலில் எதுவும் நடக்கலாம். இறுதிநேரத்தில் முடிவுகள் மாறலாம். அதுவரை பொறுத்திருந்து பார்ப்போம்!

இது இவ்வாறிருக்க அரசமைப்பின் '20' ஆவது திருத்தச்சட்டமூலத்துக்கு ஆதரவளித்து அரச தரப்பினருக்குத் தாவ தமிழ் முற்போக்கு கூட்டணி திட்டமிட்டுள்ளதாக வெளியான தகவலை அக்கூட்டணி நிராகரித்தாலும் ஆளுங்கட்சியுடன் இரகசியப் பேச்சுகள் தொடர்கின்றன என்று உள்ளக வட்டாரங்களில் பேச்சுக்கள் அடிபடுகின்றன.

ஆளுங்கட்சி கூட்டணியில் இணைந்தால் அது மாகாணசபைத் தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடுமாதலால் என்னசெய்வதென தெரியாமல் 'மதில்மேல் பூனையாக' தமிழ் முற்போக்கு கூட்டணி உறுப்பினர்கள் இருந்துவருகின்றனர் எனவும் கூறப்படுகின்றது.

தமிழ் முற்போக்கு கூட்டணியில் மூன்று கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. சிலவேளை அவற்றில் ஒரு கட்சியின் உறுப்பினர்கள் அரசுக்கு ஆதரவளிக்க வாய்ப்பிருப்பதாக கூறப்படுகின்றது. எது எப்படியோ இது தொடர்பில் இன்னமும் அதிகாரப்பூர்வமாக எவ்வித தகவலும் வெளியாகவில்லை.

# புதுப் பெடியளின்ட கூட்டணிக்கு...

## அவசரமா ஒரு கடுதாசி



எல்லாருக்கும் வணக்கம்

நான் நல்ல சுகம். உங்கடை சுகம் எப்பிடி எண்டு கேக்கத்தேவை இல்லை. எல்லாரும் சுகமாயிருப்பி யள்.
அது ஒரு பக்கம் இருக்கட்டும். இப்ப எங்களைச் சுத்தி நடக்கிறதுகளைப் பாத்தால் மனுசருக்கு விச ராக்கும் போலை கிடக்கு. சிங்கள அரசியல்வாதியள், பிக்குமார் , எங்கடை சனங்கள் எண்டு எல்லாரும் கதைக்கிற கதையளைக் கேட்டால் ... எங்கடை செருப்பை எடுத்து எங்களுக்கே அடிக்க வேணும்போலை கிடக்கு . அதுக்கை அவன் ஒருத்தன் "வெட்டுவன், சுடுவன், குத்துவன் " எண்டு தன்ரை பரவணிக் குணத்தையும் காட்ட வெளிக்கிடுறான். நாங்கள் இதை எல்லாம் பாத்து அனுபவிக்கிறதுக்கு என்ன கறுமத்தைச் செய்திட்டு வந்திருக்கிறமோ தெரியேல்லை.
1977 இலை தமிழ் அரசியல்வாதியள் யாழ்ப்பாணத்திலை வீராவேசமாப் பேசி, இரத்தப் பொட்டும் வைச்சதாலை கடைசியில அடிவாங்கினது நாங்கள் தான். கெக்கிராவையிலை சுருட் டுக்கடை வைச்சிருந்த அப்பு உடுத்த உடுப்போடை வந்தவர். அவங்கள் கலைக்கக் கலைக்க ஓடினதாலை விழுந்து மண்டையிலை காயம். மருந்து கட்ட அவகாசம் இல்லாமல் நடந்தும், ஓடியும் வவுனியாவுக்கு வந்து ஒரு தெரிஞ்ச ஆளின்ரை கடையிலை நிண்டு பிறகு ஊருக்கு பஸ்ஸிலை வந்து சேந்தினம். ஆச்சிதான் ஒரு கிழமையா ஒப்பாரி வைச்சு அழுதவா. அதுக்குப் பிறகு "எங்கடை ஊரிலை உள்ள பச்சைத் தண்ணியைக் குடிச்சிட்டுச் செத்தாலும் பரவாயில்லை." எண்டு சொல்லி அப்புவை நாங்கள் ஒருத்தரும் கெக்கராவைக்குத் திரும்பிப் போக விடேல்லை.
அப்பிடி அடிவாங்கின ஆக்களுக்குத்தான் தெரியும் அதின்ரை வேதனை. நாங்கள் கதைக்கிறதை என்ன விறுத்தத்திலையும் கதைக்கலாம். ஆனால் அதால பொது சனத்தை அடிவாங்கப் பண்ணப்பிடாது. விளங்கிச்சுதோ! அவன் ஒருத்தன் " உப்பிடிக் கதைச்சால் சுடுவம்" எண்டு நெத்திக்கு நேரை சொல்லுறான். "எட சண்டாளா! முன்னம் ஒருக்கா ஜனாதிபதி எலெச்சனிலை உன்னை நம்பித்தானே வோட்டை அள்ளிப் போட்டனாங்கள். நீ உன்ரை வாயாலை உதைச் சொல்லலாமோ?" எண்டு கேக்க வேணும்போலை கிடக்கு. அப்ப பார்லிமெண்டுக்குப் போறவையிட்டைச் சொல்லுங்கோ விளங்காத பாஷையிலை கதைக்க வேண்டாமாம் எண்டு. எங்கடை ஆக்கள் பாத்திரம் அறிஞ்சுதான் பிச்சையைப் போடுங்கோ எண்டு சொன்னவை. பிச்சைக்காரனுக்குப் பிச்சை போடுறதுக்காக அதைச் செல்லேல்லை.
ஒருத்தனுக்கு விளங்குமெண்டால் மட்டும் விசியத்தைச் சொல்லுங்கோ. இல்லாட்டி உண்மையெண்டாலும் கதையாதையுங்கோ எண்டதும் அதின்ரை மறு கருத்து. அப்ப வரலவாறு, சரித்திரம் எண்டு ஒரு மண்ணாங்கட்டியும் தெரியாதவையிட்டைப் போய் "நான் முன்னுக்கு வந்தனான். நீ கோவணத்தோடை வந்திறங்கேக்கை நான் முகங்கழுவிக் கொண்டு இஞ்சை நிக்கிறன் "எண்டு சொல்லலாமோ? "உந்தப் பாசை உவங்களுக்கு விளங்காது." எண்டு தம்பி சொன்னது தான் சரி.
என்ரை தலைக்கை கிடந்து இடிக்கிற அடுத்த பிரச்சினை, எங்கடை பெடிளின்ரை அரசியல். போன கிழமையிலை இரண்டு அமைப்புத் துவங்கிவிட் டாங்கள். அதிலை என்ரை பேரனும் ஒரு அமைப்பிலை இருக்கிறான் எண்டு கதைச்சாப்போலை ஆளைக் கூப்பிட்டு "எட மேனை. ஏற்கனவே எங்களுக்கை நாலைஞ்சு கட்சியள் இருக்கு. அது எங்களுக்குக் கூடிப்போச்சுது. அதைக் குறைக்க வேணும். அப்பதான் எங்கடை தமிழ்ச் சனத்துக்கு விமோசனம் எண்டு நினைச்சுக் கொண்டிருக்கு. ஏனடா இப்ப இரண்டு அமைப்பைத் துவங்கிப்போட்டு நிக்கிறியள்?" எண்டு கேட்டன். "அது இப்ப தேவையைப் பொறுத்து இரண்டாத் துவங்கி இருக்கிறம். பிறகு ஒண்டாச் சேருவம் எண்டு மறுமாழி சொல்லுறான்" எண்டால் பாருங்கோவன்.
அப்ப தம்பி எனக்கு நீங்கள் ஒரு உதவி செய்யுங்கோ. அவையிட்டை ஒருக்காச் சொல்லுங்கோ, தமிழ் சனத்துக்கு ஒரு இளைஞர் அமைப்புப் போதுமாம். இரண்டு கூடிப்போச் சாம் எண்டு.
நன்றி .

*தாங்கள் மேல் அதி பட்சமுள்ள*
*அப்பாவி அன்னமுத்து.*



# தமிழரசுக்கட்சியின் தோல்விக்கு காரணம் என்ன?

○ ந.பரமேஸ்வரன்


தமிழரசுக்கட்சி தொடங்கிய நாள் முதல், 1949 முதல் தமிழ் மக்களை ஏமாற்றியே வந்துள்ளது. தமிழ் மக்களும் வேறு தெரிவு இல்லாத படியால் தமிழரசுக்கட்சியை ஆதரித்து வந்துள்ளனர். தமிழரசுக்கட்சியின் செயற்பாடுகளால் அதிருப்தியுற்ற மக்கள் இப்போது வேறு தெரிவுகளை மேற்கொள்ள முனைகின்றனர் அல்லது வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் புறக்கணிக்கின்றனர் . நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள் இதை வெளிப்படையாக எடுத்துக்காட்டுகின்றன.
மலையக மக்களை நாடற்றவராக்கிய,இந்திய, பாகிஸ்தானிய பிரஜாவுரிமை சட்டத்துக்கு ஆதரவாக ஜி.ஜி.பொன்னம்பலம் வாக்களித்தமையாலேயே) செல்வநாயகம் தமிழ் காங்கிரசிலிருந்து பிரிந்து தமிழரசுக்கட்சியை ஆரம்பித்ததாக தமிழரசார் கூறி வருகின்றனர். சரி ,மலையக மக்கள் மீது அவ்வளவு பாசம் வைத்திருந்த தமிழரசுக்கட்சி 1965 ஆம் ஆண்டு சிறிமாசாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் மலையக மக்களை திருப்பியனுப்புவதற்கு எப்படி ஆதரவளித்தது? 1956 ஆம் ஆண்டு பண்டாரநாயக்கா தனிச்சிங்களச்சட்டத்தைக்கொண்டு வந்த போது தமிழர்சார் அரச உத்தியோகத்தர்களை சிங்களம் படிக்க வேண்டாமென வலியுறுத்தினர். ஆனால் இரும்பு மனிதன் என சுதந்திரன் பத்திரிகையால் வர்ணிக்கப் பட்ட டாக்டர் நாகநாதன் தனது மகள் லஷ்மி நாகநாதனுக்கு சிங்களம் படிப்பித்து மலேசியாவுக்கு தூதுவராக அனுப்பினார். அத்துடன் நாகநாதனுக்கு தமிழ் தெரியாது. வடமாகாண முன்னாள் முதலமைச்சரும் தற்போது நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகிப்பவருமான நீதியரசர் விக்னேஸ்வரன் இதைப் பகிரங்கமாக, யாழ்ப்பாண பொது நூலகத்தில் நடைபெற்ற முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் நினைவஞ்ச லிக் கூட்டத்தில் கூறியுள்ளார்.
தான் றோயல் கல்லூரி மாணவனாக இருந்த காலத்தில் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் டாக்டர் நாகநாதனை சிறப்பு விருந்தினராக அழைத்ததாகவும் அவருக்கு தமிழ் தெரியாது என்ற படியால் பின்னர் அமிர்தலிங்கத்தை அழைத்ததாகவும் விக்னேஸ்வரன் தனது உரையில் குறிப்பிட் டுள்ளார். நாகநாதனுக்கு மட்டுமல்ல ஈழத்துக்காந்தியின் சம்பந்தியான பார் குமரகுலசிங்கியின் குடும்ப மொழியும் ஆங்கிலம் தான். 1956ல் சுந்தரலிங்கம் தமிழ் ஈழக்கோரிக்கையை முன்வைத்த போது சுந்தரலிங்கம் கிளுவங்கதியால் வேலி போடப்போகிறாரா என தமிழரசுக் கட்சியினர் நக்கலடித்தனர். பின்னர் 1969 இல் ஊர்காவற்றுறை நவரத்தினம் தமிழ் ஈழக்கோரிக்கையை முன்வைத்த போதும் தமிழரசார் அவரை ஓரம் கட்டினர்; 1977 இல் வட்டுக் கோட்டையில் தமிழ் ஈழம் தான் முடிந்த முடிவு என தமிழர் விடுதலைக் கூட்டணி தீர்மானம் நிறைவேற்றியது.
1977ம் ஆண்டு பொதுத்தேர்தலில் தமிழ் ஈழத்துக்கு ஆணை தாருங்கள் ( அடுத்த தேர்தல் தமிழ் ஈழத்தில் தான்) என முழங்கிய தமிழர் விடுதலைக்கூட்டணி 1981 ஆம் ஆண்டு ஜே. ஆர் வழங்கிய எந்த வித அதிகாரங்களுமற்ற மாவட்ட சபையை ஏற்றுக்கொண்டது. கள்ள உறுதி எழுத்துவதற்குப்பெயர் பெற்ற, பெட்டர் நடராசா யாழ் மாவட்ட அபிவிருத்தி சபையின் தலைவராக நியமிக்கப்பட்டார்.
இந்த நிமிடம் வரை தமிழ் அரசியல் கைதிகள் சிறையில் வாடுவதற்குக்காரணமான பயங்கரவாத தடைச்சட்டம் நாடாளுமன்றில் கொண்டு வரப்பட்ட போது அதற்கு எதிர்ப்பு தெரிவிக்காமல் நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம் என வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் நாடகமாடி வெளிநடப்பு செய்தனர். ஜே.ஆரின் வேண்டுகோளை அல்லது மிரட்டலை ஏற்றே (புலிகளை வளர விட்டால் அது உங்களுக்கும் ஆபத்தாகவே முடியும் என ஜே.ஆர் அமிர்தலிங்கத்திடம் கூறியி ருந்தார்) தமிழர் கூட்டணியினர் பயங்கரவாதத்தடைச்சட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொள்ளாமல் வெளிநடப்புச்செய்தனர். பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு எதிர்ப்புத்தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் மைத்திரிபால சேனநாயக்கா தான். யுத்தம் நடைபெற்ற காலத்தில் சித்தார்த் தன் ஒருவரைத்தவிர ஏனைய தமிழ் அரசியல்வாதிகளின் குடும்பத்தினர் எவருமே போராட்டத்தில் பங்கேற்கவில்லை. தமிழர் விடுதலைக்கூட்டணியினர் தமிழ் நாட்டு அரசாங்கம் வழங்கிய

> **தமிழ் தேசிய கூட்டமைப்பு இனியாவது சுய விமர்சனம் செய்து கொண்டு அர்ப்பணிப் புடன் செயற்பட முன்வரா விட்டால் மாற்றுத் தலைமைகளின் செல்வாக்கு மேலும் அதிகரிப்பதைத் தடுக்கமுடியாமல் போய்விடும்.**

சொகுசு பங்க ளாவில் குடியிருந்ததுடன் அமிர்தலிங்கத்தின் மகனுக்கு மருத்துவக்கல்லூரியில் அனுமதியும் பெற்றுக்கொடுத்தார். ஏனையவர்கள் வெளிநாடுகளுக்கு பறந்து விட்டனர்.
2010-2015 காலப்பகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் எதுவும் செய்ய முடியவில்லை என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதே: ஆனால் 2015ம் ஆண்டு நல்லாட்சியைக்கொண்டு வந்த தமிழ் தேசியக்கூட்டமைப்பு இதயசுத்தியுடன் செயற்படவில்லை. தாங்கள் தான் மைத்திரியை பதவியில் அமர்த்தியதாக தம்பட்டம் அடித்த தமிழ் தேசிய கூட்டமைப்பு (நீ எங்கடை உப்பைத் திண்டு போட்டு என சுமந்திரன் வவுனியாவில் மைத்திரியை ஒருமையில் விளித்து உரையாற்றிய விடயம் அனைவர்க்கும் தெரிந்ததே) தமிழ் அரசியல் கைதிகள் விடயத்திலோ கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தை தரமுயர்த்தும் விடயத்திலோ அக்கறை காட்டவில்லை.
இதன் பிரதி பலிப்பே கடந்த தேர்தலில் மக்கள் மாற்று தெரிவுகளை மேற்கொள்ள முற்பட்டுள்ளனர். தமிழ் தேசிய கூட்டமைப்பு இனியாவது சுய விமர்சனம் செய்து கொண்டு அர்ப்பணிப்புடன் செயற் பட முன்வரா விட்டால் மாற்றுத்தலைமைகளின் செல்வாக்கு மேலும் அதிகரிப்பதைத் தடுக்கமுடியாமல் போய்விடும்.

# உயர்தரத்துக்கு பின்னான உயர்கல்வி

## கவனத்துடன் அணுக வேண்டியது காலக் கடமை



○இ.சர்வேஸ்வரா
விரிவுரையாளர்,கல்வியியல்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்




13

இந்தக் கட்டுரைத் தொடர் உயர்தரத்துக்குப் பின்னரான உயர்கல்வி தொடர்பில் சில அடிப்படையான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் வகையில் வாராந்தம் வெளி வருகின்றது. எமது பிரதேச இளையவர்களைப் பொருத்தமான தடத்தில் வழிப்படுத்துவதற்கான சிந்தனைக் கிளறல்களைப் பல மட்டங்களிலும் ஏற்படுத்துவதே இந்தக் கட்டுரையாளரின் நோக்கமாகும்.

கடந்த மூன்று வாரங்களாக, உயர்தரத்தில் விஞ்ஞானக் கல்வியை கற்க விருப்பிருந்தும் அதற்கு வாய்ப்பற்ற மாணவர்கள் தொடர்பான சில விடயங்கள் தொடர்பில் இக் கட்டுரையில் ஆராயப்பட்டவண்ணமுள்ளது. கடந்த வாரம் குடும்பச் சூழ்நிலை, விஞ்ஞானக் கல்வியைத் தெரிவு செய்வதில் கொண்டுள்ள வகிபாகம் குறித்துச் சில விடயங்கள் விமர்சன மற்றும் அவதானிப்பு நோக்கில் முன்வைக்கப்பட்டன. இவ்வாரத்துடன் இக் கருத்தியலை நிறைவு றுத்தும் வகையில் நிறைவாக சில முக்கியமான விடயங்கள் குறித்து அவதானத்தைச் செலுத்தலாம்.

## வடக்கின் விஞ்ஞானக் கல்வியை மேம்படுத்துவோம்



**விஞ்ஞானக் கல்வி மூலமான உயர்கல்வி வாய்ப்புக் குறித்த போதிய விழிப்புணர்வின்மை**

விஞ்ஞானக் கல்வியை புறக்கணிக்கும் பல மாணவர்கள் மத்தியில், விஞ்ஞானக் கல்வியை மையமாக கொண்டு மேலும் கற்கக்கூடிய உயர் கல்விக் கற்கைகள் குறித்து போதிய விழிப்புணர்வு இல்லாமை அவதானிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக வாய்ப்புக்கள், கல்வியியற் கல்லூரி வாய்ப்புக்கள் மற்றும் சில தனியார் துறை வாய்ப்புக்களைத் தவிர்த்து அவர்களிடம் விஞ்ஞானக் கல்வியை அடிப்படையாகக் கொண்ட மேலதிக உயர்கல்வி வாய்ப்புக்கள் குறித்து போதிய விழிப்புணர்வு நிலை காணப்படவில்லை என கல்வித்துறை சார்ந்த அதிகாரிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

குறிப்பாக பின்வரும் உயர்கல்விக் கற்கைகள் குறித்து எமது சமூக மாணவர்களிடம் போதிய விழிப்புணர்வு இல்லை என்றே கூறலாம்.

1. National Institute of Health Sciences நிறுவனத்தால் வழங்கப்படும் இணைமருத்துவத் துறை சார் கற்கைகள்.
2. விவசாயக் கல்லூரிகளின் டிப்ளோமாக் கற்கைகள்
3. விலங்குப் பரிபாலனப் பாடசாலையின் டிப்ளோமாக் கற்கைகள்
4. சமுத்தரப் பல்கலைக்கழகம்
5. University of Vocational Technology இன் கற்கைகள்
6. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கற்கை நெறிகள்
7. உயர் தொழில்நுட்பக் கற்கைகள் நிறுவனங்களின் கற்கைகள்
8. பல்கலைக்கழக கல்லூரிகளின் கற்கைநெறிகள்
9. அரை அரச வகிபாகம் கொண்ட உயர்கல்வி நிறுவனங்கள்
10. அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்கள்

மேற்குறிப்பிட்ட பல நிறுவனங்களில் இலவசமாக அல்லது குறைந்த கட்டணத்துடன் உயர் கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. அதனையும் தாண்டி சில நிறுவனங்களில் குறிப்பாக National Institute of Health Sciences நிறுவனத்தில் அரசாங்கத் தொழில் நியமனத்துடன் மாதாந்தம் 35,000 ரூபாவுக்கு குறையாத வேதனத்துடன் கல்வி கற்கும் பெருவாய்ப்புண்டு. இங்கு இருபதுக்கும் மேற்பட்ட சுகாதார கற்கைகள் வழங்கப்படுகின்றன. இக் கற்கைகளை பூர்த்தி செய்யும் பட்சத்தில் அரசாங்கத் துறையில் நிரந்தர பணியாட் தொகுதியினராக அதிக ஊதியத்துக்கு இணைந்து கொள்ள முடிவதுடன் பகுதி நேரமாக தனியார் துறை யிலும் பணியாற்ற முடியும். மிகுந்த வருமானச் செழிப் பைத் தரக்கூடிய இக் கற்கைகள் குறித்து எமது சமூகத்தில் போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண் டும்.

அத்துடன் இணைமருத்துவத் துறையில் தமிழ் பேசும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை குறைவு பெரும் சவாலாகவுள்ளது. பொது மக்களுக்கான இலவச சுகாதார சேவையை வினைத்திறனுடன் வழங்குவதற்கு இத் துறை சார்ந்த ஆளணியினரின் பங்களிப்பு அவசியமானது.

குறிப்பாக, வடக்கில் தாதிய சேவையில் தமிழ் பேசும் உத்தியோகத்தர்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதுடன் தாதிய சேவை வெற்றிடங்கள் பல நிரப்பப்படாமையினால் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை உள்ளிட்ட பல வைத்தியசாலைகள் பொது மக்களுக்கான மருத்துவ சேவை வழங்கலில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றன.

சில ஆண்டுகளுக்கு முன்னர் இந் நெருக்கடியை தீர்ப்பதற்காக விசேட அமைச்சரவை அனுமதியின் பிரகாரம் கலைத்துறைப் பட்டதாரிகள் தாதிய சேவைக்குள் உள்வாங்கப்பட்டிருப்பினும், பின்னர் தொழிற்சங்கங்களின் வலுவான எதிர்ப்பின் காரணமாக இத்தகைய உள்வாங்கல்கள் இடைநிறுத்தப்பட்டன அல்லது கைவிடப்பட்டன. அதனால் விஞ்ஞானத்துறை சார் மாணவர்களின் வருகைக்காக தாதிய பயிற்சிக் கல்லூரிகள் தவம்கிடக்கின்றன.

மேற்குறிப்பிட்ட உயர்கல்வி வாய்ப்புக்கள் குறித்து சிங்கள மற்றும் முஸ்லிம் மாணவர்கள் மிகுந்த விழிப்புடன் உள்ளார்கள். அவர்கள் இக் கற்கைகளைப் பெறுவதற்காக உயர்ந்த பட்ச தியாகங்களைப் புரியவும் தயாராகவுள்ளார்கள். ஆனால் எமது வடக்கு மாணவர்களைப் பொறுத்தவரையில் குறைந்த பட்ச தியாகத்துடன் பெறத்தக்க வாய்ப்புக்களையும் தவறவிடுகின்றார்கள்.

இதனை ஆதாரப்படுத்த யாழ்ப்பாணத்தை தளமாக கொண்டு இயங்கும் இத்தகைய உயர் கல்வி நிறுவ னங்களை நோக்கி தென்னிலங்கை மாணவர்கள் நகர்வதைக் குறிப்பிட முடியும். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் உயர் மேதாவி விலாசம் உடைய நிறுவனம் எனும் நிறுவனம் எனும் அடிப்படையில் தென்னிலங்கை மாணவர்களின் நகர்வைப் பெரிதுபடுத்தாது நகர்ந்து போனாலும் யாழ்ப்பாணத்தின் புறநகர்ப்பகுதியான குருநகரில் அமைந்துள்ள உயர் தொழில்நுட்ப கற்கைகள் நிறுவனத்தை நோக்கி தென்னிலங்கை மாணவர்கள் நூற்றுக்கணக்கில் நகர்வதைச் சாதரணமாக எடுத்துக்கொள்ள முடியாது. இது எமக்கான முன்னுதாரணமான விடயமாகவும், விழிப்படையச் செய்யும் விடயமாகவும் கொள்ளப்படவேண்டும்.

அதுபோன்று, யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் அமைந்துள்ள திறந்த பல்கலைக்கழக பிராந்திய நிலையத்தை எமது பகுதி மாணவர்கள் பயன் கொள்வது மிகவும் குறைந்த மட்டத்திலேயே உள்ளது.

திறந்த பல்கலைக்கழகம் ஓர் அரசாங்க பல்கலைக் கழகம் அதுவும் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் கீழான பல்கலைக்கழகம் என்பது தொடர்பில் கூட தெளிவற்றவர்களாகவே எமது சமூகத்தின் பல தரப்பினர் உள்ளார்கள். பல மட்டச் செயற்பாடுகள் மூலம் இவை குறித்தான விழிப்புணர்வு சமூகத்தில் ஏற்படுத்தப்படவேண்டும்.


**எதிர்காலத்தில் விஞ்ஞானக் கல்வியின் உயர்கல்வியை ஆங்கில மொழிமூலமாகத் தொடரவேண்டும் எனும் கருத்தற்ற அச்ச நிலை**

ஆங்கில மொழி குறித்த பெரும் அச்சவுணர்வு வடக்குக் கல்விப் புலத்தில் கனதியாகவுண்டு. இது ஒரு தேவையற்ற அச்சவுணர்வு.

ஆங்கிலம் என்பது ஒரு மொழி என்பதற்கு அப்பால், அது ஒரு கருவி என்பதை புரிந்துகொள்ள வேண்டும். அத்துடன் ஆங்கிலப் புலமை என்பது வேறு ஆங்கில அறிவு (English Literacy) என்பது வேறு என்பதில் தெளிவு கொள்ள வேண்டும். உயர்பட்டம் ஒன்றை ஆங்கிலம் மூலம் கற்பதற்கு ஆங்கிலப் புலமை வேண்டும் என எவராவது கருதினால் அல்லது எவரையாவது தவறாக வழிநடத்தினால் அது மிகப்பெரும் பாவத்துக்குரியதும் பரிதாபத்துக்குரியதுமான செயல்.

விஞ்ஞானக் கல்வியுடன் தொடர்புடைய உயர்கல்வியில், ஆங்கிலம் ஒரு கருவியே அன்றி வேறில்லை. அடிப்படை ஆங்கில அறிவுடன் கற்கையை ஆரம்பித்தால், காலப்போக்கில் ஆங்கில அறிவிலும் மேம்பாடடைவதுடன் உயர்கல்வியிலும் உன்னத நிலைகளை அடையலாம். எனவே ஆங்கிலத்தை விஞ்ஞானக்கல்விக்கான பெரும் எதிரியாகக் கருதாது களத்தில் இறங்குவோம். காலத்தை வெற்றி கொள்வோம்.

(தொடரும்)



சஞ்சீவி

## மாணவர் கழகம்

1. முழுப்பெயர்: ..................................................
2. முகவரி: ..................................................
..................................................
3. பிறந்த திகதி: ..................................................
4. கல்வி கற்கும் பாடசாலை: ..................................................
5. கற்கும் தரம்: ..................................................
6. தொலைபேசி இலக்கம்: ..................................................

.................................... ....................................
மாணவர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

அனுப்ப வேண்டிய முகவரி:

**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## மாணவர் கழகம்

- சஞ்சீவியில் பிரசுரமாகும் படைப்புகளில், மாணவர் கழகத்தில் அங்கத்துவம் வகிக்கும் மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- மாணவர்கள் தமது படைப்புக்களை அனுப்பும்போது தமது அங்கத்துவ இலக்கத்தை தவறாது குறிப்பிட்டு அனுப்பவும்.
- மாணவர் கழக அங்கத்தவர்களுக்கு எதிர்பாராத பரிசுகளும் சிறப்புச் சலுகை களும் வழங்கப்படவுள்ளன. (இது தொடர்பான விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்)

78

**பெயர்:** பி.ஹேசாஜினி
**முகவரி:** குப்பிளான் தெற்கு, ஏழாலை.
**பி. திகதி:** 2015.08.13
**பாடசாலை:** உரும்பிராய் கிட்ஸ் பார்க்

82

**பெயர்:** ஆரபி பதிதரன்
**முகவரி:** இல. 30/2, செட்டிவளவு வீதி, இணுவில் மேற்கு.
**பி. திகதி:** 2012.08.25
**பாடசாலை:** யா/ இணுவில் மத்திய கல்லூரி.

81

**பெயர்:** முகுந்தன் விகாசினி
**முகவரி:** 31, பொன்னப்பா வீதி, வண்ணை, யாழ்ப்பாணம்.
**பி. திகதி:** 2012.05.24
**பாடசாலை:** யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.

83

**பெயர்:** லாரணி தவபாக்கியராஜா,
**முகவரி:** 155, அச்சுவேலி, வடக்கு, அச்சுவேலி.
**பி. திகதி:** 2009.02.03
**பாடசாலை:** யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

## போதைக்கு அடிபணியும் அடிமைகள்



போதையை தீ எனக்கொள் என் தோழா
போதையின் விளைவுகளைப் பார் என் தோழா

போதையால் நொந்த வேந்தர்கள் எவ்வளவு
பாதையை இழந்த சாம்ராஜ்ஜியம்கள் எவ்வளவு
பாதையில் இறந்த உயிர்கள் எவ்வளவு
வாதத்தில் தவறிய வார்த்தைகள் எவ்வளவு

வார்த்தை மாறிய புலவர்கள் எவ்வளவு
நூல்களை மறந்த கவிஞர்கள் எவ்வளவு
ராகம் பிந்திய பாடல்கள் எவ்வளவு
நாகம் தீண்டிய நாடோடிகள் எவ்வளவு

காதலை இழந்த காதலர்கள் எவ்வளவு
மாதரை இகழ்ந்த இளைஞர்கள் எவ்வளவு
சங்கினை முழக்கிய சுடலைகள் எவ்வளவு
கல்வியை இழந்த சீடர்கள் எவ்வளவு

தன் மகனைப் பிரிந்த தகப்பன்மார் எவ்வளவு
தாயே வெறுத்த சேய்கள் எவ்வளவு
போதைக்கு அடிபணியும் அடிமைகள் எவ்வளவு
மேதைக்கு அடி தடுக்கும் தடுமாற்றங்கள் எவ்வளவு

நீ மதுவினைப் பருக பண்டே பழகியிருந்தாலும்
பாவிகளைப் பருகப்பண்ணாதே உன்னாலே

*எழுத்தாளர் புகழன்*

## ஐபோனும் நானும்



ஆச்சரியத்துடன் ஆரம்பிப்பதால் தான்
நீ என்னை அவமானப்படுத்துகிறாயா?
உன்னை சந்திக்கும் முன்
என் குடும்பத்தில் நிலவிய
சந்தோஷங்களும் நிம்மதிகளும்
எண்ணிடலங்காதவையே!
அவற்றை மன(ற)க்க காரணம் நீ
உன்னில் நான் கொண்ட மோகம்
அதனால் நான் பெற்ற சாபம்
உன் மாய உலகை அறிய
தோன்றிய ஆர்வம்
அதனால் இன்று என் நிலைமை பாவம்.
மாயாஜல உலகே நிரந்தரமென
நினைத்த என் வெகுளித்தனம்
நீயிருந்தால் போதுமென்றது என் வயது
விரல்களினால் உனை இறுகப்
பிடித்தும் என் பெற்றார்
மனங்கள் போர்களங்களாகின
முகங்களில் புன்னகை புதைக்கப்பட்டு
தீசொற்களால் வையப்படுகிறேன்
'தொலைப்பேசி'எனும் நாமத்தினால்
பெரும் தொல்லையானதுடன்
உன் செல்லப் பெயர் பேசி என்பதாலோ
உன்னுடன் சேர்ந்த என்னையும்
அனைவரும் பேசியே தீர்க்கின்றனர்
போதும் மனமே! போதும் உலகே!
மனித உற்பத்தியால்
நான் படும் காயங்கள்
உணர்ந்தேன். தேவை முடிந்ததும்
நீயும் நானும் தெரியாதவர்களாய்
வாழ்வோம்!

*இயற்கையின் காதலி*

## வாழ்க்கையை வகையிடல்

உண்மையில்
முதல்முதலாய் முழுவதுமாய்
முக்கோணியாய் தான் என்னை
உணர்ந்தேன்.....

முன்னேறலாம் என்று
முட்டிமோதி
ஐங்கோணியானேன்.....

எனினும்
முட்கள் குத்துவதாய் பலர்
குடைச்சல் கொடுப்பதால்
எல்லைகள் சுருக்கி என்னை
வட்டமாக்கிக் கொண்டேன்.....

வட்டம் ஆனேன் சிலசமயம்
கோளமும் ஆனேன்..... .

வளைந்து போகிறாய்
அதிகமாய் என்று
வகைவகையாய் வரும்
விமர்சனங்கள்
ஆரைச்சிறைக்குள் அடைபட்டு
அமுங்கிப்போன என்னை
அடிக்கடி இருசுறாக்கம் செய்தும்
அலுத்துப் போகவில்லை
அவைகளுக்கு.....

எனக்கான உறவுகளுக்காய் என்
பரப்புகளை அதிகரித்தாலும்
எல்லோர் மனதிலும்
இன்றும் நான்
தெரியாக் கணியம் தான்.....

சிலசமயம்
முறைமையில்லாப்
பின்னமும் கூட.....

வளைகோடாய் வாழ்வதை என்
வரைபாய்க் கொண்ட
வாழ்க்கையில்
அவ்வப்போது தான்
புரிந்து தொலைக்கின்றது
நான் இன்னும்
நேர்கோடாய் வாழவேயில்லை
என்பது.....

*Nilavan*
*Ilavalai*



# அன்னை திரேசாவும் ட்ரம்பும்!




○ ஆர்.பிரகாஷ்

அன்னை திரேசா என்றவுடன் அனைவரினதும் நினைவுக்கு சட்டென வருவது அவரின் புன்சிரிப்பும் சகிப்புத் தன்மையும்தான். இந்தியாவின் கொல்கத்தா புறநகர்ப் பகுதிகளில் வாழ்ந்த ஆதரவற்றவர்களையும் துன்ப துயரங்களால் பாதிக்கப்பட்டவர்களையும் மனக் கிலேசமுற்றவர்களை யும் அரவணைத்து ஓர் அன்னையைப்போல அவர் பாதுகாத்தார்.

எவரும் நெருங்கிப் பார்க்கக்கூட விரும்பாத தொழுநோயாளர்களையும் தொட்டுத் தூக்கி அன்பு செலுத்தினார். ஒரு தடவை அன்னை திரேசா வர்த்தகர் ஒருவரிடம் ஆதரவற்றவர்களுக்காக கையேந்தி நின்றார். இதையடுத்து கோபமடைந்த அந்த வர்த்தகர் அன்னை திரேசாவின் கைகளில் காறி உமிழ்ந்தார். அப்போது அன்னை திரேசா "இது எனக்கானது. என்னை நம்பியுள்ள அநாதைகளுக்கு ஏதேனும் தாருங்கள்" என்று மறு கையை நீட்ட அந்த வர்த்தகர் தன் தவறை உணர்ந்து தாராள குணம் காட்டினார் என்கின்றது வரலாறு. இத்தகைய தெய்வப் பிறவியான அன்னை திரேசாவுக்கு வழங்கப்பட்ட உலக அமைதிக்கான நோபல் விருதை தற்போது அமெரிக்க அதிபர் ட்ரம்புக்கு வழங்க வேண்டும் என்று வால்பிடிக்கத் தொடங்கியுள்ளனர் சிலர்.

### வடகொரியா - அமெரிக்கா

அமைதிக்கான விருதைப் பெறும் அளவுக்கு அதிபர் ட்ரம்ப் என்ன சாதித்துவிட்டார்? அமெரிக்காவுக்கும் வடகொரியாவுக்கும் ஆகாது என்பது அனைவருக்கும் தெரிந்ததே. ஒபாமா காலத்தில் நீறுபூத்த நெருப்பாக இருந்த இந்தப் பகைமை ட்ரம்பின் காலத்தில் சுடர்விட்டுப் பிரகாசித்தது. 'வடகொரியா தவிடுபொடியாக்கப்படும்' என்றெல்லாம் மிரட்டினார் ட்ரம்ப். எனினும் வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் வளைந்து கொடுக்காததை அடுத்து அவருடன் மூன்று சுற்றுப் பேச்சுக்களை நடத்தினார். மூன்றிலும் தோல்வியே எஞ்சியது.

### மெக்சிக்கோ எல்லைச்சுவர்

அமெரிக்க அதிபராகப் பொறுப்பேற்ற சில நாள்களில் மெக்சிக்கோவுடனான எல்லையை மதில் அமைத்து மூடுமாறு ட்ரம்ப் உத்தரவிட்டார். பல பில்லியன் டொலர் செலவில் அமெரிக்க - மெக்சிக்கோ எல்லையில் தற்போது சுவர் எழுப்பப்பட்டுள்ளது. போதைப்பொருள் கடத்தல்களைக் கட்டுப்படுத்தத்தான் இந்தத்திட்டம் என்று ட்ரம்ப் தெரிவித்தாலும் அமெரிக்காவுக்குள் போதைப்பொருள் இன்னமும் குறைந்தபாடில்லை.

### விரட்டப்பட்ட அகதிகள்

ட்ரம்புக்கும் அகதிகளுக்கும் முற்பிறப்பில் என்ன பிரச்சினையோ யார் அறிவர். அகதிகள் எண்டால் ட்ரம்புக்கு தொடுகிலும் ஆகாது. அகதிகள் வேண்டத்தகாதவர்கள், தீண்டத்தகாதவர்கள் என்று ட்ரம்ப் வெளிப்படையாகவே விமர்சித்துள்ளார். அதுமட்டுமல்ல ஆபிரிக்காவில் இருந்தும் மத்திய கிழக்கில் இருந்தும் அமெரிக்காவுக்குள் தஞ்சம் அடையும் அகதிகளை திருப்பி அனுப்புவதில் ட்ரம்ப் அரசு கடினமான கொள்கையைக் கடைப்பிடிக்கின்றது. மட்டுமல்லாமல் அகதிகள் பெரியளவில் தோன்றக்கூடிய யேமன், சிரியா, ஈராக், எகிப்து, பலஸ்தீனம், ஆப்கானிஸ்தான், சூடான் என பல நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு பயணத்தடையையும் ட்ரம்ப் விதித்துள்ளார். அது இன்றுவரை நடைமுறையிலும் உள்ளது.

### இஸ்ரேல் பலஸ்தீனம்

'அமைதியின் தூதுவரான' ட்ரம்ப் பார்த்த ஆகப்பெரிய வேலை இஸ்ரேல் பலஸ்தீன விவகாரம்தான். பலஸ்தீனத்தின் பகுதிகளை இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ளது என்பது அனைவரும் அறிந்ததே. அவ்வாறு இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள பலஸ்தீனத்தின் புராதன நகரங்களில் ஜெருசலேம் தன்னிகரற்ற சிறப்பைக் கொண்டது. இந்த நகரத்தை தனது தலைநகராக அறிவிக்க வேண்டும் என்பது இஸ்ரேலின் பல தசாப்த பேரவா. அந்த அவாவுக்கு உயிர்கொடுத்தவர் ட்ரம்ப்தான். ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநகராக அறிவித்து பலஸ்தீனத்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் பல தசாப்தங்களாக கொளுந்துவிட்டு எரிந்த பகையுணர்வை மேலும் பற்றியெரிய வைத்தவர் இதே ட்ரம்ப்தான். இஸ்ரேல் பலஸ்தீன எல்லைப்பகுதிகான காசா, மேற்குக்கரை போன்ற இடங்களில் ஒவ்வொருநாளும் தாக்குதல்களும் குண்டுச் சப்தங்களும் கேட்கின்றன என்றால் அதன் காரணகர்த்தா ட்ரம்ப் என்னும் அமைதி விரும்பியே. மேற்குறிப்பிட்ட சகிப்புத்தன்மைக்காகவும், அமைதி முயற்சிகளுக்காகவும்தானோ என்னமோ அமைதிக்கான நோபல் பரிசுக்கு ட்ரம்பின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஒன்றுமட்டும் உண்மை அன்னை திரேசா தற்போது உயிருடன் இருந்திருந்தால் கட்டாயம் தனக்குக் கிடைத்த நோபலை தானாகவே திரும்பக் கையளித்திருப்பார்.



# வருவாரா மாட்டாரா?

○ ஆர்.லயனல்



ஐ.பி.எல் தொடர் நடக்குமா? நடக்காதா என்று இருந்த சந்தேகத்தை விட பெரிய சந்தேகமாக உள்ளது அந்தத் தொடரில் ரெய்னா விளையாடுவாரா இல்லையா என்பதுதான்.

ஐ.பி.எல் தொடர் இந்த வருடம் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறவுள்ளது. இதற்காக அணிகள் அனைத்தும் அங்கு முகாமிட்டுள்ளன. சென்னை அணியின் உபதலைவரான ரெய்னா தனிப்பட்ட காரணங்களுக்காக தொடரில் இருந்து விலகினார். நிர்வாகத்துடன் கருத்துமுரண்பாடு ஏற்பட்டு அவர் விலகினார் என்று சொல்லப்பட்டபோதிலும் பின்னர் ரெய்னா, அணி நிர்வாகத்தினர் அதை மறுத்தனர். மீண்டும் ஐக்கிய அரபு இராச்சியத்துக்குச் சென்று அணியுடன் இணையவுள்ளோம் என ரெய்னா தெரிவித்திருந்தார். எனினும் இது தொடர்பில் சென்னை அணி உத்தியோகபூர்வமாக எந்தத் தகவலையும் வெளியிடவில்லை. ஆனால் மறுமுனையில் ரெய்னாவின் பயிற்சி தொடர்ந்துகொண்டே உள்ளது. ரெய்னா பயிற்சியில் ஈடுபடும் காணொலிகளைப் பார்த்து 'அவர் ஐ.பி.எல்லில் விளையாடுவது உறுதி' என்றவாறாக நம்பிக்கை தெரிவிக்கின்றனர் சென்னை அணியின் ரசிகர்கள்.




# ரொனால்டோ 100!

போர்த்துக்கல் அணிக்காக 100 கோல்களைப் பதிவுசெய்துள்ளார் கால்பந்தாட்ட உலகின் முடிசூடா மன்னனாக விளங்கும் ரொனால்டோ. ஐரோப்பியக் கால்பந்துக் கூட்டமைப்பின் சார்பில் நஷனல் லீக் தொடர் நடைபெற்று வருகின்றது. அண்மையில் இடம்பெற்ற ஆட்டத்தில் போர்த்துக்கல் சுவீடனை 2:0 என்று வீழ்த்தியது. இரண்டு கோல்களையும் ரொனால்டோ பதிவுசெய்தார். இதையடுத்து அவர் சர்வதேச அரங்கில் தன்னால் பதிவுசெய்யப்பட்ட கோல்களின் எண்ணிக்கையை 100ஆக உயர்த்தினார்.

இந்த மைல்கல்லை எட்டிய முதல் ஐரோப்பிய வீரர் என்ற பெருமையை ரொனால்டோ தற்போது பெற்றுள்ளார். உலக அளவில் ஈரான் வீரர் அலி டாய் 109 கோல்களுடன் உள்ளார். அடுத்த சில வாரங்களில் இந்தச் சாதனை ரொனால்டோவால் தவிடுபொடியாகும் என்பதில் வியப்பில்லை. ரொனால்டோ என்றாலே சாதனைகள் தானே..

# என்றும் பார்சா!!




பார்சிலோனாவில் இருந்து மெஸ்ஸி விலகவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில், அந்தக் கழகத்தை விட்டு ஒருபோதும் வெளியேறப்போவதில்லை என்று மெஸ்ஸி தற்போது தெரிவித்துள்ளாராம். அண்மையில் நடைபெற்ற ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் போட்டியில் பார்சிலோனா அணி பெயர்ன் மூனிச் அணியிடம் படுதோல்வியடைந்து வெளியேறியது. தனிப்பட்ட ரீதியில் மெஸ்ஸிக்கும் அது பெரும் தோல்வியாக அமைந்தது. இதையடுத்து அணியின் பயிற்சியாளரை நீக்கியது நிர்வாகம். அணித் தலைவரான மெஸ்ஸிக்கும் நிர்வாகத்துக்கும் இடையிலான கருத்து முரண்பாடுகள்தான் இவ்வாறான பெரும் தோல்விக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. மெஸ்ஸி பார்சிலோனாவை விட்டு வெளியேறவுள்ளார். மன்செஸ்டர் யுனைற்ரெட் அல்லது மன்செஸ்டர் சிற்றி மெஸ்ஸியை வாங்கவுள்ளன என்றெல்லாம் தெரிவிக்கப்பட்டது. ஆனால் பார்சிலோனா கழகத்தில் இருந்து வெளியேறும் எண்ணமில்லை என்று வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார் அவர். பார்சிலோனாவை விட்டு மெஸ்ஸி வெளியேறவுள்ளார் என்று தகவல்கள் வெளிவருவது புதிதா என்ன?.